
சத்தியச்சித்தர்கள்



வேம்பத்தூர் கிருஷ்ணன்

அலைகள்
பப்ளிகேஷன்ஸ்

சத்தியச் சித்தர்கள்

ஆசிரியர்
வாரியார் விருது பெற்ற
'ஆன்மிக ரத்னா'
சுடர்மணிக்கவிஞர்
வேம்பத்தூர் கிருஷ்ணன்

அலங்கார் பப்ளிகேஷன்ஸ்
321, என்.எஸ்.கே. சாலை (ஆற்காடு ரோடு)
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
போன் : 472 97 46

சத்தியச் சித்தர்கள்

உரிமை : ஆசிரியருக்கே
ஆசிரியர் : வேம்பத்தூர் கிருஷ்ணன்
பதிப்பு : 1999
வெளியீடு எண். : 22
விலை : 75/-
அளவு : கிரெளன் 1/8
பக்கங்கள்: : 288
எழுத்தளவு : 12 புள்ளிகள்

வெளியீட்டோர்
அலங்கார் பப்ளிகேஷன்ஸ்
321, ஆற்காடு சாலை,
சென்னை - 600 024.
போன் : 472 97 46

கணிப்பொறி
குமார் லேசர் பிரிண்ட்ஸ்,
வடபழனி, சென்னை - 600 026.

அச்சிட்டோர் :
அலங்கார் ஆப்செட் பிரஸ்,
321, என்.எஸ்.கே. சாலை (ஆற்காடு ரோடு)
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

6 - 3

ச





உ

சிவமயம்

அருள் வாழ்த்து

ஒன்றேகுலம்
ஒருவனே தேவன்!

யாம்பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்!

திருமூலர் மிஷன் - திருமூலர் அருளாட்சி மன்றம்

(பதிவு எண் : 491/97)

9, மகாராஜா சூர்யா சாலை, ஆழ்வார்பேட்டை,
சென்னை - 18 ✆ : 4337947

வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

நிறுவனர் - தலைவர்

புண்ணிய பூமி என்றும் புனித பூமி என்றும் நாவலந் தீவு என்றும் போற்றப் பெறும், கலை, நாகரிகம், தத்துவம் ஆகியவற்றின் தாயகமாம் நம்நாடு.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றியது. ''மூத்த குடிமக்கள்'' எனப் போற்றப் பெறும் தமிழ் மக்களின் மூத்த முனிவர்கள் சித்தர்கள்.

உலகில் கிடைத்ததற்கரிய மனிதப் பிறவி எடுத்தநமக்கு, உண்ண, உடுக்க, பேச, நடக்க வழிகாட்டுகிறாள் தாய்!

நன்னெறி கற்க பள்ளிக்கு வழி காட்டுகிறார் தந்தை! அறிவுக்கு வழி காட்டுகிறார் ஆசிரியர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இறை அருள் பெற வழிகாட்டுகிறார்கள் - திருவருள் பெற்ற ஞான குருவாம் சித்தர்கள்.!

யார் சித்தர்கள்? சித்தம் தெளிந்தவர்கள், சித்தி பெற்றவர்கள் சித்தர்கள்

''பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்(டு)
இதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற் றெனதுயான் மாற்றிவிட் டாங்கே
இதமுற் றவர்கள் சிவ சித்தர் தாமே''

- திருமூலர்

''சிந்தையிலே களங்கமற்றோர்
சித்தரா வார்''

- அகத்தியர்

சிந்தை தெளிந் திருப்பவனே அவனே சித்தன்!
செகமெல்லாம் சிவனென்றே அறிந்தோன் சித்தன்''

- வான்மீகர் சூத்திரம்

தமிழன்னையின் தவப்புதல்வர்களில் தலையான வர்கள். சித்தர் பெருமக்கள்! தமிழுக்கு மகுடமாக விளங்குபவை அவர்தம் மணிமொழிகள்.

அருள் மொழிகளையும் அவர்தம் மந்திரப் பாடல்களையும் இனிதினும் இனிதான அவர்தம் வரலாறுகளையும் - தத்துவங்களையும் ரத்தினச் சுருக்கமாக- ஆற்றல் மிக்கவரும் அருளாளருமாகிய **தமிழ்மாமணி** திருவாளர் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் **''சத்தியச் சித்தர்கள்''** என்னும் இந்நூலிலே தந்துள்ளார். அவர்தம் தமிழ்ப்பற்றும், இறைத் தொண்டும் தொடர்வதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவருளை சிந்தித்திருக்கின்றோம் செழித்தோங்க வாழ்த்துகின்றோம்

- ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான்



முன்னுரை

எவ்வளவு பிழிந்தாலும்
சாறோடு திகழும்
சூரியப்பழம்!

- ஞானபாரதி வலம்புரிஜான்

திருமிகு வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் வேறுமாதிரியான எழுத்தாளர். எதை எழுதினாலும் நுண்மாண் நுழைபுல உள்ளத்தோடு, எடுத்துக் கொண்ட பொருளுக்கு நியாயம் செய்வதில் நிமிர்ந்து தெரிகிறவர். அப்படிப்பட்டவரின் அருமையான எழுதுகோலிலிருந்து ஆற்றொழுக்காக வழிந்ததுதான் **"சத்தியச் சித்தர்கள்"** என்கிற இந்த புத்தகப் பெட்டகம்.

சித்தர்களைப் பற்றி இதுவரை திருமிகு. மீ. ப. சோமு அவர்கள் முதற்கொண்டு சீரங்கம் சித்தர் வரை பலரும் எழுதியிருந்தபோதிலும், அப்புத்தகங்களில் காணப்படாத பல அரிய உண்மைகள் இந்த நூலில் அகப்படுகின்றன என்பது பாராட்டத்தக்கது.

சிவ வாக்கியர், காகபுசுண்டர் போன்றோரது பாடல்களைப் பற்றிய கருத்து விளக்கம் கருதத்தக்கதாக இருக்கிறது. திருமந்திரம் பற்றி புத்தக அளவினைக் கருத்தில் கொண்டு வேம்பத்தூராரால் விரிவாக எழுத இயலவில்லை. இல்லாவிட்டால் எவ்வளவு பிழிந்தாலும்

சாறோடு திகழ்கிற சூரியப்பழமாகச் சுடர்விடுகிறவர் திரு மிகு. வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள்.

பதிப்பாளர் (அலங்கார் பப்ளிகேஷன்ஸ்) திருமிகு. மாரிமுத்து அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இடைவெளி இல்லாத உண்மையான கல்விமான். வியர்வையால் விதியை எழுதுகின்ற திருமிகு. மாரிமுத்து அவர்கள் இந்நாளில் வெளிச்சத்தைப் பார்க்க வைக்கும் பல்வேறு புத்தகங்களில் "சத்தியச் சித்தர்கள்" சரித்திரம் படைக்க வேண்டும் என்று திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

என்றென்றும் அன்புடன்,
வலம்புரிஜான்

இந்த நூல் எதற்காக?

''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்!''
''யாதும் ஊரே யாவரும் கேளிர்!''

ஆலயப்பிரவேச விடுதலைப் போராட்ட காலத்திலே எழுந்த, வீராவேசத் தொடர் என்றே நினைத்து வந்தேன். இந்தச் ''**சத்தியச்சித்தர்கள்**'' நூலைப் பதிப்பிக்கத் தொடங்கியவுடன்தான், இத்தொடர்களுக்கு வயது எட்டாயிரம் ஆண்டுகள் என்று புரிந்து கொண்டேன்.

''**தமிழ்தான் உலகின் முதல்மொழி**'' என மேலைநாட்டு மொழியாராய்ச்சியாளர்களின் ஏகோபித்த தீர்ப்புக்கு, திருமூலச் சித்தரின் தொடர்களும்'' ஆதாரமோ! 32 ஆண்டுகளுக்கு முன்பே சித்தரிலக்கிய செந்தமிழ் நூல்களை வெளியிட்ட, முத்தமிழ் வித்தகர் **ஸ்ரீ அரு.இராமனாதன்** அவர்களது **பிரேமாபிரசுர** அச்சகத்திலே, அந்தநாளிலே வண்ணப் பதிவாளன் நான்.

படங்களை அச்சிடும் போதே அதற்கான விஷய ஃபாரத்தையும் படிப்பதுண்டு; அப்படி ஏற்பட்ட தமிழார்வத்தால், நாமும் ஒரு பதிப்பாளன் ஆக வேண்டுமெனத் தீர்மானித்தேன். காலச்சுழலிலே ''அலங்கார் பிரஸ் '' தொடங்கி... அதன் பரிணாம வளர்ச்சியாக பதிப்பக முதலாளியானேன். ஞானச் சித்தராகிய எனது பெருமதிப்பிற்குறிய **ஸ்ரீ வலம்புரிஜான்** அவர்களது பல உயர் நூல்களைப் பதிப்பிக்கும் பேறு பெற்றேன். இலக்கியச் சேவையிலே... எனது பங்கினை நிரந்தரமாக்கிக் கொண்டேன்!

அன்பு நண்பர் கவிஞர் **ஸ்ரீ வேம்பத்தூர் கிருஷ்ணன்** அவர்கள் முப்பதாண்டு கால ஆருயிர் நண்பர். திரைப்பட உலகின் சில ஜாம்பவான் களிலே அவரும் ஒருவர். மூன்று தலைமுறை சினிமா கலைஞர்களோடு ஈடுபாடு கொண்டு, இன்றும் T.V.தொடர்களை எழுதிக் கொண்டிருப்பவர்.

நாற்பத்தைந்து ஆண்டு கால சினிமா டைரக்டர், கதாசிரியர், பாடலாசிரியரான அவர், இன்றும் ''நடராஜா சர்வீஸ்''தான். அவரைப் போலவே அவரது வாகனமாகிய சைக்கிளும் ஆதி காலத்தது! எளிமையை விரும்பிப் போற்றும் சித்தர்களின் இனிய குணமும், இந்த ஆண்டு மே-மாதம் வெளியான அவரது ''சித்தர் மணிமாலை''யும் என்னைக் கவர்ந்தன! அதன் எதிரொலிதான் இந்தச் **சத்தியச் சித்தர்கள்.**

மே-முதல், நவம்பர் 1998-முடிய அவரது முழு கவனமும் இந்நூலில் இருந்ததை பலமுறை நான் அர்த்த ராத்திரியில் அவர் இருப்பிடம் போய்க்

கண்டிருக்கிறேன். தெலுகு தேசச் சித்தரான ஸ்ரீ வீரபிரம்மத்தை கோடிட்டுக் காட்டினேன், காவியமே எழுதி விட்டார். அவரால் நானும், என்னால் அவரும் ஏராள இலக்கியப்பலன் பெற்றோம்.

சத் சித் ஆனந்தம். இது கடவுட் தத்துவம். ''சத்'' - உள்ளது; ''சித்'' - பேரறிவு; ''ஆனந்தம்'' - அழியாபேரின்பம். இந்தச் சச்சிதானந்தமே... அருஉருவான கடவுளின் நிறைவடிவாகும். சூரியனை அதன் ஒளிக்கதிர்களால் அறிவதைப்போல, சச்சிதானந்தக் கடவுளையும் அவனருளால்தான் உணரமுடியும். அப்படிக் கடவுளைக் கண்டு உணர்ந்தவர்களே சித்தர்கள். இறவாப் பெருநெறி கண்ட அந்தப் பெருமக்களிலே... தேவரும் கந்தர்வர்களும் கூட விரும்பி வந்து பூமியிலே வாழ்ந்த வரலாறு உண்டு.

ஆயகலை அறுபத்தி நான்கிலே, சமுதாயத்திற்கு அத்தியாவசியமான பதினெட்டுக் கலைகளை **பதினெட்டுவகைச் சித்தர்கள்** பாதுகாத்து வளர்த்தனர். அந்தப் பதினென் வகைச் சித்தர்களே... காலத்தால் மருவி, **''பதினெட்டுச் சித்தர்கள்''** எனப்பெயர் பெற்றனர்.

மண்ணியல், விண்ணியல் மாமலைச் சாரமும், எண்ணிலாத்தாவர மாமர இயல்புகள், ஆருடம் ஜோதிடம் அனைத்துயிர்த் தத்துவம், மூலிகை வேர் இலைச் சாகா மருத்துவம், முத்தமிழ் வித்தகம் சத்திய மகத்துவம்... இப்படியாக... வாழ்வியல் முறை அனைத்திற்கும் தீர்வு தந்த சத்தியச் சித்தர்களை, இருபதாம் நூற்றாண்டின் நவீன வாழ்வியல் ஏனோ மறந்து விட்டது! மீண்டும் நமது இளைய தலைமுறைக்கு சித்தர் பெருமையைச் சொல்வதற்காகவே இந்நூலைப் பதிப்பிக்கத் துணிந்தேன்! வியாபார ரீதியிலே இந்நூல் வெற்றி பெறவேண்டும், பெற்றாலும், அல்லது... நான் ''பாடம்'' கற்றாலும்... இதை ஓர் சாதனையென்றே நான் பெரிதும் போற்றுவேன்!

பகலிரவு பாராமல் பாடுபட்டு எழுதியுள்ள சுடர்மணிக் கவிஞருக்கும், முழுமனதோடு எங்கள் முயற்சிகளைப் பாராட்டியுள்ள நம்காலச் சித்தர் **ஸ்ரீ வலம்புரிஜான்** அவர்களுக்கும் அருள் வாழ்த்துத் தந்துள்ள குருமகா சன்னிதானம் **ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமார சுவாமித் தம்பிராம் சுவாமிகளுக்கும்** மற்றும், இந்நூலின் உருவாக்கத்திலே பங்குபெற்ற நிறுவனங்களுக்கும், பிரமுகர்களுக்கும் இதயம் நிறைந்த எனது வணக்கம் உரித்தாகுக.

அன்பன்

K.V. மாரி முத்து

(V.M.முத்து)

அலங்கார் பப்ளிகேஷன்

அலங்கார் ஆஃப்செட்பிரஸ்

ஆற்காடு சாலை, சென்னை - 24.

நான் கண்ட ஞானச் சித்தர்கள்



1933-வேப்பத்தூர் ஆ-முத்தையா பிள்ளை - மீனாட்சியம்மாள் எட்டாவது மகனாகப் பிறந்தேன்; ஆறுவயதிலேயே பர்மா (மியான்மர்)வுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, உலக II யுத்தத்தால் (1939) ஆரம்பக் கல்வியைக்கூட ஒழுங்காகப் பெறாமல், வளர்ந்து இந்தியா வந்து, பிறந்த ஊரின் மகிமையாலும், பலநூறு - சிறந்த நூல்களின் புலமையாலும், உயர்ந்த இலக்கியவாதிகளின் தொடர்பாலும், நட்பாலும் நானும் ஒரு எழுத்தாளன் ஆனேன். கோயிலும், சினிமாவும் எனது மூச்சும் பேச்சுமாக ஆனது.

1950-முதல் நாளது தேதிவரை நானொரு சினிமாக்காரன். அதோடு... ஆதீன மடாலய அருளாஸ்ரமங்களின் ஆச்சார்யர்கள், அடிகளார்கள் - ஜீயர்கள், சித்தர்கள் - ஆதீனகர்த்தர்கள், ஞானமா பக்தர்கள் - பாபாக்கள் அனந்தர்கள் மடாதிபதிகள்... முதலானவர்களோடு இடையறாத தொடர்புடையவன்.

''ஒரிஜினல், டூபளிகேட்'' எனப்பாராமல், அவரவர் கூறும் நல்லதை மட்டும் ஏற்று, அவர்களையே தூண்டித் துருவிக் கேள்விகேட்டும் பத்திரிகையாளனாகவும் விளங்குவதால், நானொரு முழுமையான **ஆத்திக - நாத்திக எழுத்தாளன்** என்பதைப் பெருமையுடன் அறிவிக்கிறேன்.

எனது ஏகலைவ சிஷ்ய இதயத்திலே, பூரணமாக நிறைந்த இரு துரோண குருமார் உண்டு! ஒன்று, காஞ்சிப் பூரணர் **ஸ்ரீலஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்**, அடுத்தவர், ''அருள்மொழி அரசு'' **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.**

மேற்படி இரு சித்தர்களோடும் பலபத்து ஆண்டுகள் தொடர்ந்து நான் பெற்ற நேரடி நல்லாசிகளாலும், என்னை ஆளாக்கிய சினிமா உலகிலே நான் கண்டசில சித்தர்களாலும்தான், என்னால் இந்தச் ''**சத்தியச் சித்தர்**''களை நினைக்க முடிந்தது! ''சினிமாக்காரனாக இருந்து கொண்டே, வேம்பத்தூர் கிருஷ்னன் பக்தி நூல் ''சுடர்மணிமாலை''யைத் தொடர்ந்து வெளியிடுவது விந்தைதான்'' எனப்பலர் சொல்லக் கேட்டு மனம் நொந்திருக்கிறேன்!

டி-ஆர்-மகாலிங்கம், ரஞ்சனில் தொடங்கி, எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி, எஸ்.எஸ்.ஆர் என்று தொடர்ந்து கமலஹாசன், விஜயகாந்த், கார்த்திக், பிரபு, பாண்டியன் வரை மூன்று தலைமுறை நடிக, நடிகையரோடு சுமார் எண்பது திரைப்படங்களிலே இணைந்து பணிபுரிந்து ''பாடம்'' சொல்லி இயக்கிய (துணை) டைரக்டர், வசனகர்த்தா, பாடலாசிரியர் நான்.

சினிமா, நாடக முழு ஈடுபாடு உள்ள எல்லோரும் சித்தர்களே! ஆம் ஹரிஜனும் ஐயங்காரும் இங்கு சரிசமமாகி ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் தெளிவு பெறுவர். நாடகமும் சினிமாவும்தான் கல்வியறிவே இல்லாமல் வளர்ந்துவிட்ட இடைக்காலத் தமிழகத்தை, திருநிறை நாடாகத் திகழவைத்தன! அதன் எதிரொலிதான், கலைஞர்கள் கையிலே தமிழகம்!

தமிழக முன்னாள் முதல்வர் **ஸ்ரீ அண்ணாதுரையின்** வேலைக்காரி, சொர்க்கவாசல் படங்களை... நாலுமுறை டிவியில் தொடர்ந்து போட்டால் போதும், ''சூமந்திரக்காளி'' போலிச் சாமியாரெல்லாம் காலியாகிவிடுவர். ''சிவபெருமான் கிருபை வேண்டும்'' என்பன போன்ற **பாபநாசம் சிவன்** பாடல்களைப் படங்களிலே பாடியே... கோடீஸ்வரராக மின்னிய **M.K. தியாகராஜ பாகவரின்** 'ஹரிதாஸ்' படத்தைப் பார்த்த - பார்க்கும் - இளையதலைமுறை... ஒருக்காலும் மாதா பிதாக்களை மதியாமல், அனாதைகளாக்கி முதியோர் இல்லம் அனுப்பாது!

தேசபக்தியை ''**தியாகபூமி**'' படமாகத் தந்து பாரதமக்களை வீறுகொண்டு எழவைத்த டைரக்டர் **K. சுப்பிரமண்ய அய்யரையும்**, அதை எழுதிய பேராசிரியர் ''**கல்கி**''யையும் மறப்பவர்கள் தமிழர்களே அல்ல! உடுமலை **நாராயணகவி**, கவியரசர் **கண்ணதாசனும்**, பட்டுக்கோட்டை **கல்யாண சுந்தரமும்** எழுதித் தந்த தத்துவச் சினிமாப் பாடல்களால் எத்தனையோ ஆயிரம் பேர், உத்தமர்களாக மாறியுள்ளனர்!

கள்ளச் சாராயத்தை வீழ்த்தக் கோடிக் கணக்கிலே பணத்தை வீணடிப்பானேன், **கலைவாணர் N.S. கிருஷ்ணனின் ''நல்லதம்பி''** படத்தை நாடுமுழுதும் ஓடிஓடிக் காட்டுங்கள், கள்ளச்சாராயம் என்ன, குடிப்பதையே கூட விட்டு விடுவர் நமது தமிழ்ப் பெருங்குடிமக்கள்!

என்ன என்ன இனிக்கும் வகையிலே எழுபது வயதிலும் ''சிக்'' எனத் திகழ்ந்த M.G.R. போல் ஓர் சித்தர் ஏது! ''இணையற்ற நடிகர் திலகம் எங்கள் **சிவாஜி கணேசன்**'' என்று சொல்வதில்தான் எத்தனை சுகம்!

''கண்ணகி யார்?'' என்றால் P.U. சின்னப்பாவுடன் நடித்த **கண்ணம்மா**தான்! நந்தனார்? **தண்டபாணி தேசிகர்**, ஔவையார் **K.B. சுந்தராம்பாள்** அகத்தியர்? **சீர்காழி கோவிந்தராஜன்**, பக்தமீரா? நமது ''பாரத ரத்னா'' இசையரசி **M.S. சுப்புலட்சுமி** தான்!

தேசிய தெய்விகக் கலைஞர்கள் **ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளும், விஸ்வநாததாஸும், C.V.V.பந்துலு M.R, M.K. ராதாக்கள், M.N. நம்பியார், பிரேம் நஸீர், சிவகுமார், செந்தாமரை, S.V. ராமதாஸ், வெண்ணிற ஆடைமூர்த்தி**, பிறவி நடிகர் **S.V. சுப்பையா**, தேரோட்டி மகனைக் காட்டிய **S.V.சகஸ்ரநாமம்**, ''கப்பலோட்டிய தமிழ''னைத்தந்த **B.R.பந்துலு**... அதற்கு வசனம் எழுதிய காவியச் சித்தர் **S.D.சுந்தரம்**, நாடகங்களைப் படப்பாடமாக்கிய **A.P.நாகராஜன்**, இப்படியாக நீண்டு கொண்டே போகும் தமிழ்த் திரையுலகச் சித்தர் பட்டியல்...!

1979-ல் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) பாடல் எழுதி, டைரக்டராக (துணை)வும் பணியாற்றிய... **தேவிதரிசனம்**'' பட சூட்டிங், காஷ்மீர் மாநில தலைநகரமான ஸ்ரீ நகரில், கடல் போன்று நூற்றுக்கணக்கான படகு வீடுகள் மிதக்கின்ற **தால்ஏரி** யின் எதிரே உள்ள நட்சத்திர ஓட்டலிலே டைரக்டர் K. சங்கர், K.R.விஜயா, லதா, சரத்பாபு, S.V.சுப்பையா மற்றும் குழுவினர் தங்கியிருந்தோம்.

காஷ்மீர் குளிரிலே நடுங்கியபடி கம்பளியில் சுருண்டு கிடக்கும் அதிகாலை 5-மணிக்கு, தால் ஏரிக் கரையிலே, வெற்றுடம்போடு சித்தர் S.V.சுப்பையா தியானத்திலே மணிக்கணக்காக மூழ்கி இருப்பார்! அவருக்கு சீன் இல்லாத நாட்களிலே... சங்கராச்சாரிய மலைக்கோயில்,க்ஷீரபவானி ஆலயம், மார்த்தாண்ட் சூரியன் கோயில் (மத வெறியால் தகர்ந்து கிடக்கிறது) ஆகிய இடங்களிலே போய் தனிமைத் தியானத்திலே சமாதியாகி விடுவார் அந்தச் சினிமாச் சித்தர்.

''குருவே தெய்வம்'' என்றொரு படம் (1969) எடுத்தார் S.V.சுப்பையா, நானும் அதில் பணிபுரிந்தேன் பட விஷயமாகப் பேச காரனோடை அவரது தோட்ட வீட்டுக்குச் சென்றேன். 1965-ல் இந்த வீட்டைத் தேடிவந்து முகாமிட்டார் காஞ்சி மஹாபெரியவர். ஒரு சினிமாக்காரன் வீடாகவே அது இல்லை. ஏதோ ஒரு மகரிஷி ஆஸ்ரமம் போலவே இருந்தது. பூஜை அறையிலே... காஞ்சிப் பெரியவரும், SVS க்கு உபதேசம் தந்த ஐந்தருவிச் சித்தர் ஸ்ரீ சங்கரானந்தாவும் காட்சியளித்தனர். (பெரிய ஓவியங்கள்) எனக்கும் அவருக்கும் உள்ள ஆத்மார்த்த நட்பு அவரது முடிவு (29-1-1980) வரை நீடித்தது. காரனோடையிலிருந்து திருப்பதித் திருமலைக்கு அடிக்கடி நடந்தே போய்த் திரும்புவார். அப்படி ஒரு யாத்திரையின் பூர்த்தியிலே என்னை வரச் சொன்னார் வீட்டுக்கு.

''நானும் எனது நட்பும் என் அன்பும் என்றும் இருந்து கொண்டே இருக்க வேண்டுகின்றேன், ஸ்ரீ மான் வேம்பத்தூர் கிருஷ்ணனுக்கு மங்கலம்'' என்று ''ஞானத் தாழிசை'' எனும் சித்தர் நூலிலே எழுதி

கையொப்பமிட்டு தேதியும் (23-3-1974) போட்டு அதை எண்ணிடம் கொடுத்தபடி...

''வேம்பத்தூர் ஐயா! ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் பூரண நல்லாசியோடு 1970-முதல் சுடர்மணி மாலைகளை வெளியிட்டு வருகிறீர்கள், உங்களது இலக்கியச் சேவையிலே சித்தர் நெறியும் இடம்பெற வேணும், இந்த **''ஞானத்தாழிசை''** நிச்சயம் உங்களுக்கு உதவும்...'' என்றார். உடனே எனது மனத்திரையிலே ஒரு காட்சி ''ரீ-ப்ளே'' ஆனது. உலகப்புகழ் பெற்ற ஜெமினி ஸ்டுடியோவின் நிரந்தரக் கலைஞர், கதாசிரியர், கவிஞர், காந்தியச் சித்தர் **ஸ்ரீ கொத்த மங்கலம் சுப்பு** அவர்கள் 17-7-1973 அன்று...

''வேதப் பணிபுரியும் வேம்பத்தூர் கிருஷ்ணனுக்கு
காதல் மிகுந்த எந்தன் காணிக்கை...''

என எழுதித் தேதியுடன் கையொப்பமிட்டு, திருவள்ளுவரின் **''ஞானவெட்டியான்''** எனும் பழம் பெரும் சித்தர் இலக்கியத்தை எனக்குப் பரிசளித்தார்!

''இந்தநூல் எனக்கெதற்கு...?'' என்றேன்

''எதிர்காலத்திலே இந்தப் பொக்கிஷம் நிச்சம் உங்களுக்குப் பயன்படும்'' என்றார். (1964 - ''மீனாட்சிகல்யாணம்'' படத்திலே கொத்தமங்கலம் சுப்புவும் நானும் ஒன்றாகப் பணியாற்றினோம்) இதுபோல எனக்குச் **''சுடர்மணிக்கவிஞர்''** எனும் விருந்தினை வழங்கிய **கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாருடன்** ஓர் சம்பவம் அடியேனுக்கு உண்டு. (ஆரம்ப காலத்தில் கவியோகியும் சினிமாகாரர்தான்). சினிமாக்கார மூன்று சித்தர்களின் திருவாக்குகள் அப்படியே பலித்தன.

வடபழனிச் சித்தர்களுக்காக அடியேன் எழுதிய **''சித்தர் மணிமாலை''** (மே-1998) சிங்கப்பூருக்காக **''தமிழ் மகுடம்''** (நவம்-1998) ஆகிய இரு நூல்களுக்கும், மூன்று சித்தர்களும் எனக்கு வழங்கிய சித்தர் இலக்கியங்கள் பெரிதும் பயன்பட்டன.

1950-க்கு மேல் தமிழகத்துப் பிரபல பத்திரிகை அனைத்திலுமே கவிதை, கட்டுரை கதைகள்! - நூல்களாக... திருப்பதி தெய்வம், விலங்கொடித்தவீரர்கள், கர்ஜனை, (கவிதை நூல்) கோயில் நாடு, **ஆலயமணிகள்,** கணபதிமணிமாலை தொடங்கி... பலப்பல மணி மாலைகள்... இப்படியாக முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள எனக்கு, இந்தச் **''சத்தியச்சித்தர்கள்''** ஒரு இமாலய சாதனையாகும்.

சினிமாக்காரனாக... காலணா கைச் செலவு இல்லாமல் இமயமுதல் குமரி வரை, இலங்கை, சிங்கப்பூர்,மலேஷிய நாடுகளிலே பல முறை ஆலய

வலம் வந்துள்ளேன். ஒவ்வொரு கோயிலிலும் ஏதேனும் ஒரு சித்தரின் ஈடுபாடு இருப்பதைக் கண்டேன் குறிப்பெடுத்துக் கொண்டேன்.

ராஜரிஷி படத்திற்கு (1985) ஊட்டி சென்றபோது காந்தல் பகுதியிலே (ஃபிங்கர் போஸ்ட்) உள்ள காசி விஸ்வநாத பால தண்டாயுதபாணி கோயில் சென்றேன். அந்த ஆலயத்து மூலவேர்கள் ஐந்து சித்தர்கள்.

உத்திரபிரதேச மாநில கோரக்பூரிலே உள்ள பிரமாண்டமான பளிங்குப் பேராலயம் **கோபக்நாதர்** எனும் சித்தர் கோயில். சிவன், பெருமாள், அம்பாள் எல்லாம் சைடில் தான். பிரதான மூலவர் சித்தர்தான். மாதக் கணக்கிலே (1997-98) நான் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) நாள்தோறும் சென்று வழிபட்ட சித்தராலயம் அது.

பிறர் வாழ்வதற்காகத் தன்னை வருத்திக் கொள்பவர்கள் சித்தர்கள், பலர் சிந்தித்துச் சிறப்புடன் சிரித்தபடி வாழ்வதற்காக... நலமிழந்து ராப்பகல் பாராமல் பாடுபடுபவர்கள் உண்மையான சினிமாக்காரர்கள்.

ஜெமினி **S.S.**வாசன், **L.V.**பிரஸாத், **A.V.M.**செட்டியார், மாடன் தியேட்டர் **T.R.**சுந்தரம், பட்சிராஜா **ஸ்ரீ ராமுலு நாயுடு... ஜூபிடர் முகைதீன், சோமு**... போன்ற சான்றோர்கள் போட்டிருந்த ராஜபாட்டையை மீண்டும், வெறும் ஒற்றையடிப் பாதையாக்கி விடவேண்டாமென்று இளையதலைமுறை சினிமாக்காரர்களை, ஐம்பதாண்டு சினிமா சர்வீசன் என்ற உரிமையிலே வேண்டுகிறேன்!

உண்மையை, அன்பை, ஒழுக்கத்தை, பக்தியை, குடும்ப பாசத்தைப் போதித்த அந்நாளையப் வெள்ளி விழா, பொன்விழாப் படங்களெல்லாம் காய்ந்த ஊறுகாய் ஆகிவிட்டன! நன்மைகளை, நாணயத்தை, கற்பை, கடமைகளை, சேவைகளையெல்லாம் தலைகீழாக்கிக் காட்டி, அதுவே சரியெனும் போதையையும் ஊட்டிவரும்... பிரம்மாண்டப் பெரும் பான்மைப் படங்களை, காணக் கண்கூசி, வீட்டுக்குள்ளேயே இருந்தவரை குடும்பங்களிலே ஓரளவு நெறி முறை இருந்தது! அதையும் சின்னா பின்னமாக்கிச் சீரழித்துவிட்டன! இன்றய சின்னத்திரைகள்!

24-மணிநேரமும் திரைப்படமா? கள்ளக்கடத்தல், கற்பழிப்பு, டிஸ்யூம் டிஸ்யூம், டூயட், பெட்ரூம்! பம்பரம்! ஆம்லட்! அடப்பாவிகளா! சமூதாயத்திலே கல்வி, தொழில், உழைப்பு, சேமிப்பு, தன்மானம், ஒழுக்கம், கூட்டுக் குடும்பம்... தாய்ப்பாசம், குருவணக்கம் இவை அனைத்தையுமே இல்லாமல் செய்வதற்கென்றே கலிபுருஷன் "TV"யாக அவதாரம் செய்துள்ளானா? எதிர்காலத் தமிழகத்தின் முடிவுதான் என்ன?

சித்தர்களின் எளிமைக்கும், சிந்தனையின் வலிமைக்கும், சத்தியத்தால் இணையும் சர்வமத ஒருமைக்கும் உடனடியாக ஓரளவேனும்

வழியமைத்துக் கொடுத்தால்தான், எதிர்கால மானுடம் தன்னை ''மனிதர்''எனக் கூறிக் கொள்ள முடியும்!

பூகம்பம், வெள்ளம் முதலான இயற்கையின் உற்பாதங்களை, ஓரிரண்டு அறிவுள்ள ஊர்வன பறப்பனவெல்லாம் முன் கூட்டியே அறிந்துணர்ந்து தற்காத்துக் கொள்கின்றன! ஆனால்... ராடர், ஏவுகணை, ரோவர், ராக்கெட், இண்டர்நெட் பேஜர் கம்யூட்டர்களை ஏராளமாகத் துணைகொண்ட ஆறறிவு மானுடம் மட்டுமே நூற்றுக்கணக்கிலே... ஆயிரக்கணக்கிலே... ''குபீர் குபீர்'' எனச் செத்துக் கொண்டிருக்கிறான் விபரீத விபத்துக்களால்!

ஈ, எறும்புகள் பஞ்சத்தால் சாவதில்லை, பறவைகள், மீன்கள் பட்டினியால், எயிட்ஸால் மடிவதில்லை! போர்வெறி, மதவெறி, பாலியல் வெறி, பசிப்பிணிகளால் நாள்தோறும் மானுடப் பிணமலைகள் குவிகிறதே! எண்ணிப் பாருங்கள்! நாம் முன்னேறி விட்டோமா? எழுதவும் பேசவும் மட்டுமே, நீதி நேர்மை, அன்பு அஹிம்சைகளை... பயன்படுத்தினால் போதுமா?

'டமால் டுமீல்''கள் சர்வ சாதாரணமாகி விட்டன! கோட்டையைப் பிடிப்பதற்கும் கொடிகளை நடுவதற்கும், வாழும் வீட்டையே அழித்துக் கொள்ளுகிற விபரீதம் சரிதானா? ஏ மானுடமே! நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்? எதை அடையப் போகிறாய்? இருபத்தோராம் நூற்றாண்டிலே... என்ன ஆகப் போகிறாய்???

''பத்து விட்டருக்கு, ஏழரைதானே இருக்கிற'':தெனக் கேட்டால், ''நாங்கள் எத்தனை பேருக்கு பங்கு தர வேண்டும் தெரியுமா?'' என எதிர்க் கேள்வி பிறக்கிறது! ''பர்த்சர்ட்டிபிகெட்'' வாங்கப் போனால்,'' அர்ஜெண்டா, ஆர்டினரியா?'' என நாணய தர நிர்ணய எதிர் வினாக்கள்! இந்த இரண்டில் மட்டும்தானா, இல்லை! எல்லாவற்றிலுமே இப்படித்தான் என மாறிவருவது ஆறறிவுத் தன்மான அரிதான பிறவியான மானுடத்துக்கு ஏற்புடையதா?

மருந்திலே கலப்படம் செய்தால், நமது பிள்ளையும் ஒரு நாள் அதற்கு பலியாகும் என்பதை நாம் உணர வேண்டாமா? காசுக்காக கடவுளையே விலைபேசி உருக்கலாமா? பத்துக்கு இருபதடி ஒரு வீட்டின் மாத வாடகையே ஆயிர ரூபாயாக இருக்கும் போது, நாலு ஏக்கர் கோயில் மனைகளின் வாடகை வருடத்திற்கு இருபத்தெட்டு ரூபாயாக இருப்பது தகுமா? தர்மமா? இதெல்லாம் - சட்டுபுட்டென்னு மானுடக் ''கதை''யை முடிக்கும் சதியா? சாதிப் பூசலும் சமயச் சண்டையும் மானுடத்தை விழுங்கப் போகும் விதியா? ஆதித் தமிழே! அத்தமிழின் நாடே! **''ஜாதி இரண்டொழிய வேறில்லை...''** என்ற ஔவைக் கல்வியையெல்லாம் எங்கே தொலைத்தாய்!

தாய்மொழிக் கல்வியற்ற ஆரம்பப் பள்ளிகள்! ''மம்மி, டாடி'' என மாதா பிதாக்களை ''காலிங்'' செய்யும் மழலையர்! ஆறுவயதிலேயே நூறுவகை புத்தக நோட்டுகளைச் சுமக்கும் பொதிமாட்டுச் சாதனை! மூன்று வயதிலேயே டியூஷனும்! ''ட்டை'' சாக்ஸ்! ஸூ, பெல்ட்! பேட்ஜ், ஸாப்னர், ஹாட்பேக்'' இதெல்லாம் அத்யாவசிய கல்விச் சின்னங்களாம்!

எதையோ கொடுத்து, என்னவோ படித்து, எப்படியோ நடித்து... ஏதாகவோ திரிந்து... ஐயஹோ! கொடுமை! உலக நாடுகளுக்கெல்லாம் ஞானபானுவாக விளங்கிய அழகுத் தாய்நாடே! என்னுயிர்த் தமிழ்நாடே! நீ போகும் பாதை சரிதானா?

ரோடிலும், போர்டுகளிலும், கோயில் இருட்டிலும் தமிழ் ஒலித்தால் போதுமா? பிஞ்சு நெஞ்சங்களிலே கொஞ்சு தமிழ் வேண்டாமா? ஐந்திலே வளையாத ஐம்பதுகளின் மொழியறிவைத் தான்... **''வாலைப்பலம், கோலிக்கரி, ஏலைப்பயள்''** என்றெல்லாம் காதாறக் கேட்கிறோமே! தமிழிலே இருந்த எண்களின் வடிவைத்தான் வெள்ளையனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டோம்! எழுத்துக்களான ''அ'' னா, ஆ வன்னாக்களையும் காணாமல் செய்து விடக் கங்கணம் கட்டலாமா?

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும்'' என்றாளே ஓர் தமிழ் மூதாட்டி. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கி என்ன பயன்? ''அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு'' ஏராள இலக்கண இலக்கியங்களைக் கொண்ட தமிழும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு நஞ்சாகி வருகிறது போலும்! அஞ்ச வேண்டிய அபாயநிலை! அகத்தியர் முதலான தமிழ்தந்த சித்தர்களை அறிய வேண்டிய அவசர நிலை!!

நெஞ்சத்தால் நினைவால் எளிமையும் தமிழுமாக நாம் நீடூழி வாழ வேண்டும் என்று, சற்று நினைத்தாவது பார்க்க, தமிழ்த்திருமக்கள் ஒரு சிலரையாவது - இந்நூல் தூண்டுமேயானால் கேட்காமலேயே ''கலைமாமணி'' விருதினைப் பெற்ற களிப்படைவேன்.

திருமூலர் அருளாட்சி மன்றத்து சுவாமிக்கும்
தெய்விகச் சித்தர்ஸ்ரீ வலம்புரி ஜானுக்கும்
அலங்கார் பப்ளிகேஷன் அன்பர்மாரி முத்துக்கும்
அனைவர்க்கும், இந்நூலின் ஆசிரியன் என்வணக்கம்.

சுடர்மணிப் பதிப்பகம்
9, பஜனை கோயில் தெரு
சூளைமேடு, சென்னை - 600 94.

''சுடர்மணிக்கவிஞர்''
வேம்பத்தூர் கிருஷ்ணன்
16-01-1999

"சத்தியச் சித்தர்கள்"

எது என்ன எவர் எதில்?

(பொருளடக்கம்)

❖ ❖ ❖

சித்தர் - யார்? சிந்தித்துப் பார்!



சித்தர் என்பவர் யார் என்பதை அறியுமுன், சித்தர்களின் தத்துவம், அவர்களது கொள்கை என்ன என்பதை ஒரிருவரிகளில் பார்ப்போம்.

புராண இதிகாசங்களிலே உள்ள ''வெளிக்கவர்ச்சி'' அம்சங்களை மட்டுமே... பல முறை படித்து... ரசித்து முடிந்தபிறகு ''சீச்சீபுராணங்கள் ஆபாசம்'' என்று பிழைப்புக்காகப் பிலாக்கணம் பாடிய, வெளி வேடதாரிகளின் நடிப்பிலே ஏமாந்த நமது சமீபகாலச் சமுதாயம்,... தேச விடுதலைக்குப் பிறகு... ''புதுமையேவருக'' எனும் பீதியின் அடிப்படையிலே அனைத்துப்புராண இதிகாச வரலாறுகளையும் இளைய தலைமுறையின் கவனத்திலே படாதபடி மூடி மறைத்து ஒளித்து விட்டது!

அதன் விளைவுகள்தான் இன்று **''மாதா பிதா குரு தெய்வம்''** எனும் இல்லற தர்ம இலக்கணம் புரியாமல், **''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று''** என்பதற்கு அர்த்தமும் தெரியாமல், நமது சந்ததிகளிலே பெரும்பாலானவை ''பிஞ்சி''லேயே பழுத்து வெம்பிக் கருகி வீணாகி உதிர்ந்து விடுகின்றன!.

வேத இதிகாச புராணங்களின் உட்கருத்துகளே, ''மெய்ஞானம்'' ஆகும். ''ஆட்டம்பாம்'', ''கம்ப்யூட்டர்,'' ''ராடார்'' முதலான அனைத்திற்கும் நமது மெய்ஞானமே வித்தாகும் என்று, இன்றைய நவீன விஞ்ஞானத்து வித்தகர்களே ஒப்புக் கொள்ளுகின்றார்கள்.

கல்வி, மருத்துவம், வானியல், புவியியல், ஜோதிடம் முதலான அனைத்திலும் மெய்ஞான, விஞ்ஞானபூர்வ அறிவுச் சுரங்கங்களாக விளங்குபவை, நமது சித்தர்கள் தந்த இலக்கியங்கள்.

சித்தர்களின் இலக்கியம் பற்றி, பேரறிஞர் திருவாளர் **மீ.ப.சோம சுந்தரம்** அவர்கள் ரத்னச் சுருக்கமாக இப்படிக் கூறுகிறார்.

''மனிதனை மனிதனாக்குவதற்கு, சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றியமையாமல் உள்ளன; அந்தப் பயிற்சிகளை மனிதருக்கு வழங்கி மனிதர்களை மனிதர்களாக்கி, பிறகு - அவர்களை வானவர்களாகவும் உயர்த்துகின்ற உயர்ந்த நோக்கிலே எழுந்தவையே சித்தர் இலக்கியங்கள்.'' என்கிறார்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால், முதலிலே பிறருக்கு உதவும் மனோபாவம் வேண்டும். **''சரியை''** என்ற பொதுச் சேவையிலும், **''கிரியை''** எனும் இறைவழிபாட்டிலும், **''யோகம்''** ஆகிய மனோவசியப் பயிற்சியிலும், **''ஞானம்''** எனப்படும்

மனக்கண்ணால் எதையும் பார்த்துத் தெளியும் தியான மனோ பலமும் சித்தர் தத்துவத்தின் ஆதார ஜீவ நாடிகள்.

''என்கடன் பணி செய்து கிடப்பதே'' எனும் திருநாவுக்கு அரசரின் (அப்பர்) கோட்பாட்டிலே... கல்வி, மருத்துவம், தத்துவம், பக்தி, உண்மை, அன்பு, ஒழுக்கம் முதலான அனைத்தையும் கட்டிக் காத்தது, இன்றும் ஓரளவு காத்து வருவது, சித்தர் தத்துவமே.

அரிதினும் அரிதான அனைவர்க்கும் பொதுவான சித்தர்களின் தத்துவ இலக்கியங்களை நாலுபேர் **''ஒன்றை''**ச் சுமந்து போகும் காட்டு வழியைத் தவிர, வேறெங்காவது பார்க்க முடிகிறதா? கேட்க முடிகிறதா? வாழ்வுக்காக வந்த சித்தர் பாடல்களை நாமின்று சா...க்காகப் பயன்படுத்துவது நியாயந்தானா?

சித்தர்களின் சிரஞ்சீவித் தத்துவத்தைத்தான் இப்படிச் சீரழித்து வருகிறோம் என்றால், சித்தர்களை விட்டு வைத்தோமா? ''பித்தர்கள், பேயர்கள்'' எனப்பழித்து, அவர்களது எளிமைத் தோற்றம் கண்டு முகம் சுளித்து, வைரக்கிரீடச்சன்யாசிகளையும், ''வா வா'' எனக்கையுயர்த்தி விபூதி பொழியும் **''சூமந்த்ரக்காளி''** வித்தைக்காரர்களிடமும் மயங்கி ஏமாந்து, பொருளையும் இழந்து, பகுத்தறிவுப் புகழையும் இழந்து தீவிர மன நோய்க்கும் ஆளாகி வருகிறோம்!

இலக்கியச் செல்வர் பேராசிரியர் ஸ்ரீ **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்**, சித்தர்கள் யார்? என்பதை இரண்டே வரிகளிலே இப்படிக் கூறுகிறார்...

கடவுளைக் காண முயல்பவன் பக்தன்.

கடவுளைக் கண்டு தெளிந்தவன் சித்தன்.

தமிழ் மொழியின் ஆதி முதல் இலக்கண நூல் ''அகத்தியம்'' ஆகும். அதை ஆக்கியவர் முழு முதல் சித்தராகிய **அகத்தியர்.** ''முதற்சங்ககால அகத்தியரா?, மூவேந்தர் கால அகத்தியரா?'' என்பதெல்லாம் வீணாண ஆராய்ச்சிகள்! அகத்தியரின் சகதோழராக விளங்கிய **திருமூலர்** இந்த மண்ணிலே மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த சித்தர். சித்தர்கள் என்றும் சிரஞ்சிவிகள் என்பதை நாம் ஒப்புக் கொண்டு நம்பினால்தான், உண்மையான பக்தர்கள் ஆக முடியும்.

சித்தர்கள் வெறும் மனிதர்கள் அல்ல! மஹான்கள்! மகநீயர்கள்! அட்டமா சித்திகள் எனும் அபூர்வ சக்திகளைப் பாடுபட்டுப் பெற்று. மாவீர ஹனுமானைப் போல் சிரஞ்சீவியாகவும், மஹாபாரத பீஷ்மரைப் போல மரணத்தை விரும்பிப் பெறவல்ல மஹாத்மாக்களாகவும் விளங்கினார்கள்.

''ஆறுவகை சித்தர்'' என்பது ஆன்றோர் தீர்ப்பு.

1. நினைவுகளைச் சமனம் செய்து நேர் வழியில் சிந்தித்து, தூங்காமல் தூங்கி உள்மனக் கனவிலே இறைவனைக் கண்டு அவனருளைப் பெற்றவர் *"கனவுச் சித்தர்"*.

2. குருவருளைத் தேடிப் பெற்று, பல வருடம் அவருக்குச் சேவை செய்து, ஆசானிடம் முறையான கல்வியைக் கற்று, உபதேசம் பெற்றுத் தேர்ந்து, முடிவிலே குருமஹானிடம் மந்த்ரோபதேசம் பெறுகின்ற ஞானியர் *"மந்திரச் சித்தர்"*

3. கடவுளே கதியெனும் சரணாகதித் தத்துவத்தால், அவன்தரும் சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி ... வாழ்ந்து காட்டி முடிவிலே இறைவனது பெருங்கருணைக்கு உரியவர்... *"கிருபாசித்தர்"*

4. பூர்வஜன்ம புண்ணியத்தால், சிரத்தாபக்தியுடன் கூடிய புனிதாலய தரிசனத்தால்...யோகமஹாசாதனைகள் அனைத்தையும் "புதையல்" போல உடனடியாகப் பெற்றுவிடுபவர் *"திடீர் சித்தர்"*

5. கருவிலேயே திருவுடையாராகத் தோன்றி, பூவுக்கு முன்பே காய்க்கும் சில அபூர்வத் தாவரங்களைப் போல, சிறு வயது முதற்கொண்டே பாடுபட்டுப் பலன் கண்டு, அட்டமா சித்திகள் கைவரப் பெற்று அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்துலவும் ஜீவன்முக்தர்கள் ... *"நித்தியசித்தர்"*

6. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற யோகியருக்கான தகுதியனைத்தையும் படிப்படியாகக்

கற்றுத் தேர்ந்து, பூரண ஞானப் பொலிவுடன் திகழ்வோர் *"சாதனா சித்தர்"*

சித்தர்களின் இலக்கணத்தைத் திருமூலர் தனது திருமந்திரத்திலே இப்படிப் பாடி இருக்கிறார்.

"பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு
இதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற்று எனதுயான் மாற்றிவிட்டாங்கே
திதமுற்றோர் சிவசித்தர்தாமே"

முக்திகள் நான்கு வகையாம்.

1. இறைவனது உலகிலே வாழும் முழுத்தகுதி *"சாலோபம்"*
2. இறைவனது அருகில் இருக்கும் பெருமை *"சாமீபம்"*
3. இறைவனைப் போலவே உருவமேற்கும் சக்தி *"சாரூபம்"*
4. இறைவனோடு இரண்டறக் கலந்து ஐக்கியமாவது. *"சாயுஜ்யம்".*

மேற்காணும் நான்கு அம்சங்களையும் குறைவறப் பெற்றவர்களான அகத்தியர், திருமூலர் முதலான பதினெட்டுச் சித்தர்களும், மருத்துவ மகா மேதைகளாகத்

திகழ்ந்த ஒன்பது சித்தர்களும் ஆதி காலத்திலே இருந்ததாக அந்நாளைய பழம்பெரும் மருத்துவச் சுவடிகள் குறிப்பிடுகின்றன. சித்தர்களின் மருத்துவ முறைகளைத் தெளிவுபடுத்தும் சுமார் மூன்று லட்சம் பாடல்கள் உண்டாம். உலகம் தோன்றிய முதல், என்று முடியுமோ அன்று (பிரளய காலம்) வரை... உலகிலே தோன்றிய- தோன்றியுள்ள - தோன்றப் போகும்-அனைத்து ஜீவராசிகள்... விலங்குகள்... மானுடர்... முதலான வற்றிற்கு ஏற்பட்ட, ஏற்படும், ஏற்படப்போகும் நோய்களை அந்தந்த நோய்களுக்கான மருந்துகள், செய்முறை, அனுபானம் முதலான சகல விபரங்களுடன் அந்த ஒன்பது சித்தர்களின் பாடல்களில் உள்ளதாம்.

பஞ்சலோகங்களையும் பஸ்பங்களாக மாற்றும் விதம், உலோகங்களை இரசவாத வித்தையால் பொன்னாக்கும் முறை. 64-நச்சு வகை மூலிகை, 120 வகை உப்புகள்.. ஆயிரக்கணக்கான கடைச் சரக்கு மூலிகைகள், வேர், பட்டை, இலைகள் முதலான விபரம் அனைத்தும் அவற்றுள் உண்டாம்.

மலர் விமானத்திலே மக்களை ஏற்றிக் கொண்டு, புலர் காலைப் பொழுதிலே பூமியை வலம் வந்த சித்த மருத்துவ மகத்துவமெல்லாம் கூறும் எத்தனையோ மருத்துவ, மனோதத்துவ நூல்களை காலத்தின் மாறுபாட்டால், நமது முன்னோரது கவனத்தின் அலட்சியத்தால் இழந்து விட்டோம். அழிந்து போன சில மருத்துவ நூல்களின் பெயர்களை அடியில் காண்போம்.

(வேளூர் கும்பாபிஷேக மலரில் (1970)ல் **"முத்தமிழ்க் காவலர்" ஸ்ரீ கி.அ.பெ. விஸ்வநாதம்** அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து)



அகத்தியர் பன்னிரு காண்டம் - போகர்

எண்ணாயிரம் - கோரக்கர்

மூலிகைப்பயன் ஆயிரம் - கொங்கணவர்

மூவாயிரத்து நூறு - மச்சமுனி

ஏழுகாண்டம் - சிவவாக்கியர்

ஐந்து காண்டம் - காசிபர் வண்ணம்

உரோம முனி - வடுகம்

இராம தேவர் - சந்தப்பா

நந்தீசர் - சந்தம்

சங்குமாமுனி - கலித்துறை

திருமந்திரம் எண்ணாயிரம் - திருமூலர்

ஏழுகாண்டம் - பஞ்சலி

நிகண்டு - சட்டமுனி

இரண்டாயிரத்து எழுநூறு - சட்டமுனி

போகர் - எழுநூறு

மேற்காணும் சித்த இலக்கியங்கள் அழிந்த காரணத்தை முத்தமிழ்க் காவலரே கூறுகிறார்..படியுங்கள்.

'இந்தத் தவற்றை நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் செய்யவில்லை; அவர்கள், தாங்கள் கண்ட அருமையான முறைகளைச் சுவடிகளில் எழுதி வைத்தனர். ஆனால் பாவம்..அச்சுப் பொறிகள் இன்மையாலும், ஓலைகளிலே எழுதிக் குவிக்க வேண்டி இருந்தமையாலும், விரிந்த சொற்களில் உள்ள பரந்த முறைகளை, சொற்களை குறைத்துக் கவிதையாய் அமைத்துச் சுவடிகளாக்கி வைத்துப் போயினர். அவை...தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தமை யாலும், ஆங்கில ஆட்சியின் அக்கறைக் குறைவி னாலும், காலத்தால் பாழ்பட்டும், கடற்கோள்களின் சீற்றத்தால் அழிவுக்குள்ளாகியும், கரையான்களால் தின்னப்பட்டும் பல சுவடிகள் அழிந்து போயின. இவை அனைத்திற்கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. இவற்றையுங்கூட, 'பழஞ்சுவடிகளை ஆற்றில் விடுவது பதினெட்டாம் பெருக்கில் புண்ணியம்' என்று ஒரு கொள்கை பரப்பப் பட்டதால், அந்தப் புண்ணியத்திற்கு ஆசைப்பட்டு மீதமிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர் ஆற்றிலே அள்ளிப் போட்டு விட்டு அமைதி அடைந்தனர்!'

ஆற்றிலே அள்ளிப் போட்டு அமைதி அடைந்தோர், சமாதி யாகி விட்டனர். ஆனால் அவர்களது இந்நாளைய சந்ததியினர், சாதாரண ஒரு தலைவலிக்குக்கூட நவீன

மிஷனில் **"ஸ்கேனிங்"** செய்ய ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவார்கள்.

எஞ்சிய சில அரிதான நூல்களிலிருந்து கிடைத்த குறிப்புகளாக...காலம் மூன்றிலும் நாலாயிரத்து நாநூற்று நாற்பத்தெட்டு நோய்கள் என்று புள்ளி விவரம் கிடைத்துள்ளது. ஆனால் அந்த அரிதான சுவடித் தகவல்கள் ஆராயப்பட்டனவா? பத்தில் ஒரு பங்காவது பாதுகாக்கப்பட்டதா? மாதிரிக்கு ஒன்றிரண்டாவது மருத்துவப் பள்ளி, கல்லூரிகளில் பாடமாக்கப்பட்டதா? எல்லாமே கேள்விகளாகத்தான் உள்ளன!!

கல்வியும் மருத்துவமும் காசுக்கு என்றில்லாமல், குருமுகமாகப் பெற வேண்டிய சிரஞ்சீவிச் செல்வங்கள். ஆனால் இன்றைய நிலை என்ன? மருத்துவக் கல்லூரி "ஸீட்" ஒன்றுக்கு ஏழெட்டு லட்சமாம்! அதற்கும் இடைத் தரகர்களாம்!! கல்வியும், மருத்துவமும் தெய்விகத் திருப் பணிகளுக்குச் சமமானவை, அல்லலைத் தீர்க்கின்ற கல்வியிலும், ஆரோக்கியம் சேர்க்கின்ற மருத்துவத்திலும் நல்லறச் செயல்பாடு இருந்தால் தான் நாடு செழிக்கும், வீடு கொழிக்கும்!

எப்படித்தான் முடியப் போகிறதோ இன்றைய எதிர்கால நவீன நாகரீக மானுட சமுதாயம்!

சித்தர்களை மறந்ததால் சமுதாயம் சீரழிந்து வருகிறது; ஓரளவேனும் நிவாரணம் தேவையானால், அட்டமா சித்தி பெற்று, ஆண்டவனுக்கும் சமமான சித்தர்கள் சொன்ன வழிக்கு, நாம் உடனே திரும்பியாக வேண்டும்!

'அட்டமாசித்திகள்'

"அட்டமாசித்தி" எனும் எட்டுச் சாதனைகள் என்னென்ன? இதோ சிறு விளக்கம்.

1. *அணிமா* - அணுவுக்கும் அணுவாக மிகச் சிறிய துகளாகத் தனது உடம்பினை மாற்றிக் கொள்ளும் பேராற்றல்.

2. *மஹிமா* - எண் சாண் உடம்பை இமயமலை அளவுக்குக் கூடப் பெரிதாக வளர்த்துக் கொள்ளும் வல்லமை.

3. *கரிமா* - ஐம்ப்துகிலோ உடம்மை, ஆயிரம்கிலோ காங்கிரீட் மேனியாக, கனமாக ஆக்கிக்கொள்ளும் அற்புதம்.

4. *லகிமா* - வெங்காயச் சருகுபோல தேகத்தை இலகுவாக்கி, காற்றிலும் மெல்லியதாகத் தம்மை மாற்றிக்கொண்டு ககனத்திலே - வானத்திலே-மிதக்கும், பறக்கும் மகத்துவம்.

5. *பிரார்த்தியம்* - அனைத்திற்கும் அதிபதி ஆதல். காண்பவர்க்கெல்லாம் தலைவனாகக் காட்சியளிக்கும் வானவர் நிலை.

6. *பிரகாமியம்* - தனது உயிரை (ஆத்மாவை) கூடுவிட்டு வேறு ஒரு கூடு மாற்றி, ஆடிப்பாடி முடிந்தபின்னால்,

மீண்டும் தனது உடம்புக்குள் தானே திரும்பும் பரகாயப் பிரவேசம்.

7. ***ஈசத்துவம்*** - அனைத்துமாக விளங்கும் ஆண்டவனைப் போல, நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றலையும், அருளிச் செயல் புரியும் அதீத சக்தியையும் கைவரப் பெறும் மெய்த்தவமேனிலை.

8. ***வாசித்துவம்*** - சிங்கம்புலி முதலான கொடிய வனவிலங்குகளைக் கூட, தனது ஒரே பார்வையால் பணிந்து வணங்கச் செய்யும் வசியமாசக்தி கொண்ட திருவருட் கூர்மையைப் பெறுவது.

இப்படியான எட்டுச் சித்துகளையும், கைவரப் பெற்றும், எதுவுமே அறியாத பித்தர் போல் உலவும் சித்தர்களின் சாதனைப்பட்டியலை, நாம் அறிந்த சரித்திர காலத்துச் சித்தராக வாழ்ந்த **ஸ்ரீ தாயுமான சுவாமிகள்** பல பாட்டுக்களாகப் பாடியுள்ளார்கள்.

அதிலே ஒன்று... இதோ...

"உக்ரமிகு சக்ரதரன் என்னநிற் பீர்கையில்
உமிழ்ந்து அமிழும் ஆச மனமா
ஒரேழு கடலையும் பருகவல்லீர், இந்ரன்
உலகும் அயி ராவதமுமே
கைக்கு எளிய பந்தாய் எடுத்துவிளையாடுவீர்
ககனவட் டத்தை யெல்லாம்

கடுகிடை இருத்தியே அஷ்டகுல வெற்பையும்
காட்டுவீர் சித்தர் கணமே''

ஆசைகளைத் துறந்து, அன்பிலே மிதந்து, பாசத்தை, சேவைகளை உலக மக்கள் அனைவருக்குமாகப் பகிர்ந்து அளித்து... சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளைக் களைந்து... மூட நம்பிக்கைகளை ஓட ஓட விரட்டி, நாடெல்லாம் சுற்றி நடமாடி அனைத்துயிர்க்கும் நன்மையே செய்தவர்கள், செய்பவர்கள் சித்தர்கள்.

ஆதிநாளைய பதினெண் சித்தர் பாடல்களும், மருத்துவச் சித்தர் ஒன்பதின்மரின் பாசுரங்களும், வழி வழியாக வந்த ஔவையார், நக்கீரர், காரைக்கால் அம்மையார், மாணிக்கவாசகர், அருணகிரி நாதர், தாயுமான சுவாமிகள், ராமலிங்க் சுவாமிகள் முதலான வர்களின் பாடல்களெல்லாம் பாமரர்க்கு எளிமை யாகவும், பண்டிதர்களுக்கு வலிமையாகவும், ஞானி களுக்கு இனிமையாகவும், சித்தர்களுக்குச் சுத்தமாகவும், இப்படியாக... விரும்புவோர் விரும்பும் பொருளை-கருத்தை-தரவல்ல கற்பகத் தருபோன்ற அற்புத இலக்கியக் களஞ்சியங்களாகும்.

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாடல்களைக்கூட பார்க்காமல் எடுத்தோதும் பேராசிரியர்கள், ஐந்து வயதுக்குழந்தைக்கு ''ஆனா ஆவன்னா'' வை நிதானமாக உரக்கச் சொல்லிப் புரியச் செய்வது போல, எழுத்தறிவே இல்லாத பட்டிக்காட்டுப்

பாமர்க்கும் கேள்வி ஞானத்தால் புலமையைத்தருகின்ற எளிமையான பாடல்களை சூடிக் களித்துக் கொடுத் தவர்கள் சித்தர் பெருமக்கள்.

''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'', ''யாதும் ஊரே யாவரும் கேளிர், ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனும் அகில உலக ஒருமைப்பாட்டு அம்சங்களே, சித்தர்களின் முழுமையை, அவர்தம் பெருமையை உணர்த்துவதாகும்.

சுவரைவைத்துச் சித்திரம் எழுதியவர்கள் சித்தர்கள். ஆம்! அரிதான மனிதப்பிறவியின் அற்புதமான வரப்பிரசாதம் உடம்பு. ஒவ்வொரு தனிமனித ஆரோக்கியமும் தான், ஒட்டுமொத்த உலக வளமாகும் என்பதை ஆணித்தரமாகப் பாடிச் சாதித்தவர்கள் சித்த மஹாத்மாக்கள்.

தமிழக சித்த மருத்துவமானது, பல்லாயிர ஆண்டுகட்கும் முற்பட்டது; சித்தர்களின் வயதோ, எண்ணி முடியாததாகும்! ஓர் உதாரணம்: ஒரு பிரம்மாவின் ஆயுள் 4,320,000 மனித ஆண்டுகளாம்! மூன்றரைக் கோடி பிரம்மாக்களின் முடிவுவரை 18 சித்தருள் ஒருவரான உரோமரிஷி வாழ்ந்ததாக வரலாறு! (எத்தனைதான் மிகையாக இருந்தாலும் பலநூறு ஆண்டு கள் வாழ்ந்தார் - வாழ்கிறார் - என்பது சர்வ நிச்சயம்).

நரை, திரை, மூப்பு வராமலும், மரணமிலாப் பெருவாழ்வு பெறவும் உதவுகின்ற சஞ்சீவினி முறையே,

சித்த மருத்துவமாகும். வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் இதிகாசகால சித்த மருத்துவ மகத்துவமும் கண்டவர்.

பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு ஆகியவற்றின் அரூபக் கலவைதான் மனித உடல்; அதே பஞ்சபூதப் படைப்புகளான புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், விதைகளாலும், நவரத்தினங்களோடு, மற்றும் சில உலோகங்களாலும், திரிகடுகம் முதலான மூலிகைக் கடைச் சரக்குகளாலும், பால், தேன், நெய்களிலும், தென்னை, புன்னை, வேம்பு ஆகியவற்றின் எண்ணைகளைக் கொண்டும் காலப் பிரமாணக் கணக்கில் தயாரிக்கப் படுபவை சித்த மருந்துகள்.

திருவாவடுதுறை, பழனிமலை, கஞ்சமலை, கழுகுமலை, நவகோடி சித்தர்புரம் முதலான ஊர்கள், சித்த மருத்துவ ஆதிக்ஷேத்திரங்களாகும்!

"மிகக் கொடிய நோய்களையும், அறவே தீர்க்கும் பற்பம் (பஸ்பம்) செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பது போல மற்ற மருத்துவத்தில் இல்லையென" நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள், மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள் - நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் - **க. அன்பழகன்**, M.A. 20.3.1975.

நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கண முதல் நூலான தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களான... பதிற்றுப்பத்து, கலித்தொகை, புறநாநூறு, திருக்குறள்

மற்றும் சங்கமருவிய கால... சிலப்பதிகாரம், நற்றிணை, நாலடியார்... கம்பராமர்யணம் முதலான பலவற்றுள் சித்த மருத்துவச் சிறப்புகளும், செய்முறைகளும் உள்ளன.

சித்த மருத்துவர்கள் சகலகலா மேதைகளாக விளங்கியுள்ளதை ''**சித்தநாடி நூல்**'' சொல்லும் கீழ் காணும் பாடலால் உணரலாம்.

ஜோதிடம், பஞ்சபட்சி, துலங்கிய சரநூல் மார்க்கம்
கோதறு வகாரவித்தை, குறுமுனி ஓதுபாடல்
தீதிலாக் கக்கிடங்கள், செப்பிய கன்ம காண்டம்
ஈதெல்லாம் கற்றுணர்ந்தோர், இவர்களே வைத்தியராவர்.

மாறாத இளமைக்கு காயகல்பமும், ஏராள ஆண்டு வாழ ''இரசமணி'' களும், தீராத வியாதிகளைப் போக்கும் பஸ்பங்களுமாக சித்தமருத்துவம், அன்று நாடனைத்தும் சிறப்புற்று விளங்கியது.

இருபதாம் நூற்றாண்டில் நவீன மேல்நாட்டு மருத்துவ முறைப்பெருக்கத்தால், சித்த மஹா வைத்தியம், சற்றுப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது; தற்போது மீண்டும் சித்தர் பெருமக்களின் மருத்துவ மகத்துவம், உலகெங்கும் உணரப்படுகின்றது.

''ஆங்கில மருத்துவ முறையில் தீர்வுகாண முடியாத எய்ட்ஸ் நோயை, சித்த மருத்துவம் சீர் செய்கிறது. வைரஸ் கிருமிகள் குறைகிறது. சித்த மருந்தால் நோயாளி எடை 39, கிலோவிலிருந்து 50-கிலோவாக உயர்ந்தது! சித்த மருத்துவத்தால் எய்ட்ஸ் நோயை முற்றிலுமாக குணப்படுத்த முடியும்.''

- தினமணிச்செய்தி 6.9.1998

கி.பி.330- காலகட்டத்திலேயே ''**சுஸ்ருதர்**'' எனும் சித்த மருத்துவர், விபத்தினால் உருக்குலைந்த முகம், கை கால்களை சீர்செய்து முன் போலவே (பிளாஸ்டிக் சர்ஜரி) செய்துள்ளார்.

127 - அறுவை சிகிச்சை (ஆபரேஷன்) முறைகள் அன்றே சித்த மருத்துவத்திலே கையாளப்பட்டுள்ளன.

அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்கள் 96 - மருத்துவத் தத்துவம் பற்றிப் பாடியுள்ளனர். கி.பி.4-ம் நூற்றாண்டிலேயே சூரியஒளிக்கதிர் சிகிச்சை நம் நாட்டிலே நடந்துள்ளது.

24 - ஆத்மசக்திகள், 72,000 - ரத்தக்குழாய்கள், 13,000 - நரம்புகள், வாயுக்கள் 10, மொத்தவியாதி 4448 என்பதும், காயகல்பம், சாவாக்கலைத் தத்துவம் பற்றியெல்லாம் சித்த நூல்கள் பேசுகின்றன.

மனித உடம்பின் ஒவ்வொரு பாகத்தையும், அணு அணுவாக ஆராய்ந்து, அனுபவ பூர்வமாக அறிந்து, அதற்கான ஆரோக்கிய வழிமுறைகளைத் தெளிவாக உலகத்துக்கு அறிவித்திருக்கிறார்கள் நமது முன்னோர்.

நாள் ஒன்றுக்கு 21600 - தடவை சுவாசிக்கிறோம். அமாவாசை பௌர்ணமிகளில் சுவாசம் வேறுபடுகிறது. இடது நாசியின் மூச்சு **சந்திரகலை**, வலது **சூர்யகலை**... இரண்டும் இணைந்த நடு மூச்சு ''**சுழுத்தி**'' எனப்படும். இம்மூன்று நிலை மூச்சுகளின் தெளிவான பலா பலன்களை அழியாத பாடல்களாகத் தந்துள்ளனர்.

யோனிபேதம் (பிறப்புவகை) 84 - லட்சம்; நாடிகள் பத்து, தேகத்தின் ஆதார நிலை ஆறு; வாயுக்கள் பத்து. பிறப்புவகை ஐந்து எனத் தொடங்கி, நாடி நரம்பு, ரத்தம், சதை இப்படியாக நமது ''**பாடி**'' யை ''பார்ட் பார்ட்'' ஆக ''**ஸ்கேன்**'' செய்து பாடல்கள் மூலம் திரைப்படங்களைப் போலவே **"பளிச்"** என வழங்கியுள்ளனர்.

எந்த நாளிலே கணவனும் மனைவியும், எங்கு கூடினால், எப்படிக் கூடினால், எந்த நேரத்தில் கூடினால், என்ன குழந்தை, எந்த ராசியில் எவ்வாறு பிறக்கும், எப்படிப் பிறக்கும், அந்தக் குழந்தையின் ஆயுள் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் கூட மிகமிகத் துல்லியமாகக் கணித்துப் பாடி வைத்துள்ளனர்!

''பட்டினத்தார் பாட்டும், அருணகிரியார் புலம்பலும் பெண்மையைக் கேவலப்படுத்துவன'' என்ற முட்டாள்தனத்தை, இனியேனும், அவ்வாறு கருதும் சிலர் மாற்றிக் கொள்வார்களாக.

எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானமாவதைப் போல், உலகிலே அனைத்திற்கும் மேலான மதிப்புடையது மனித உடல் தான் என்பதையும், நூறு நூறு ஆண்டுகள், அதைப் புனித உடலாக வளர்க்கலாம், வாழலாம் என்பதையும் தெளிவான, இலக்கணத்துடன் விளக்கி இருப்பவர்கள் சித்தர் பெருமக்கள்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்(து) ஓம்புகின்றேனே''

என்கிறது திருமூலரின் திருமந்திர சாசனம். மூவாயிரம் திருமந்திரப் பாடலுள், 800 பாடல்கள் மருத்துவம் பற்றியது என்பதை 'சித்தமருத்துவத்திலும் சீர்திருத்த இறைவழிபாட்டு மகத்துவத்திலும் முழு ஈடுபாடுகொண்ட ''லக்ஷ்மண'' ''ஞானி'' யிடம் ஆதார பூர்வமாகக் கேட்டு அறிந்து பெருமிதம் அடைந்தேன்.

தன்னை முதலில் தான் அறிந்து, தன்னுள் இருக்கும் இறைவனைத் தெளிவாக அறிந்ததால் தான்



''உள்ளம் பெரும் கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு
வாய் கோபுரவாசல்
தேள்ளத் தெளிந்தார்க்கு
ஜீவன் சிவலிங்கம்'' என்றார் போலும்.

திருமந்திரத்தை அருளிய திருமூலதேவர், காலத்தால் மூத்தவர் மட்டுமல்ல, உயிர்கள் அனைத் திடமும் கொண்ட ஒரே கருணையால் உயர்ந்தவர்! அவரைப் பற்றிய சில விவரங்களை... சென்னை திருமூலர் அருளாட்சி மன்றத்தின் தலைவர், வித்துவான் **ஸ்ரீமத் முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்** தொகுத்து, அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) எழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ள **''திருமூலர்''** நூலில் இருந்து சிலவரிகளை இங்கே பார்ப்போம்.

திருமந்திரத்
திருமூலர்



திருமூலர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்; இவரது இயற்பெயர் **சுந்தரநாதர்**. தமிழகத்தில் பொதிகை மலையில் அகத்தியரின் தமிழ்ச் சங்கத்திலே உலகப் பொது நூல்களைக் கற்றார். பின், கயிலைக் குருகுலம்சென்று, ஞான நூல்களான அருமறைகள், ஆகமங்களை நந்தியெம்பெருமானிடம் பெற்றார். நந்தி அருளால் 'நாதன்' என்ற பட்டம் பெற்று, சுந்தரநாதர் ஆகித் தவம் செய்தார். கயிலையில் இவருடன் பாடங்கேட்டவர்கள்: சனகர் - சனந்தனர் - சானாதனர் - சனற்குமாரர் - பதஞ்சலி - வியாக்கிரபாதர் - சிவயோக மாமுனிவர் ஆகிய ஏழுபேருடன், தானும் உடனிருந்து கற்றதாக அகச் சான்றுகளுடன் கூறுகிறார்.

பதஞ்சலி - வியாக்கிர பாதருடன் இவர் தில்லைக்கு வந்து திருக்கூத்து தரிசனம் செய்தார். மீண்டும் கயிலை சென்றார். பதஞ்சலி வியாக்கிர பாதர் இருவரும் தில்லையிலே ஆசிரமங்கள் அமைத்துத் தங்கிவிட்டனர். தில்லைக் கோபுரத்தில் - திருமூலர்சிலையைக் காணலாம்.

இரண்டாவது முறையாக அகத்தியரைக் காண பொதிகை நோக்கி வருகிறார். '**குறு முனிபால் உற்ற தொரு**

கேண்மையினால் உடன் சில நாள் உறைதற்கு, நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக் கொண்டார்' என்கிறார் சேக்கிழார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றினைப் **'பெரியபுராணம்'** எனப்பாடி, சிரஞ்சீவி ஆனவர் **சேக்கிழார்** பெருமான். பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், விளங்குபவர் இறைவன். இதனை மணிவாசகர் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!, என்கிறார் **திருவாசம்** என்கிற மெய்ஞான விஞ்ஞான தனது காவியத்திலே!

''உலகில் முதலில் தோன்றியநாடு தமிழ்நாடு. முதலில் தோன்றிய மனிதன் தமிழர். முதலில் தோன்றிய மொழி - தமிழ்மொழி!'' என்று மேலை நாட்டவரான **சர்ஜான் மார்ஷல்**, மற்றும் ஸ்பெயின் தேசத்தவரான **ரெவரண்டு ஈராஸ் பாதிரியாரும்** கூறினர்.

நம் இந்திய நாட்டின் முதல் பிரதமர் **நேருவும்**, தன் மகளுக்குக் கடிதங்கள் (Letters to the Daughter) என்ற நூலில், ''நம் இந்திய நாட்டை - வடக்கிலிருந்து படிக்கப் பழகி விட்டோம். **தெற்கிலிருந்து படித்தால்தான், நம் தேசத்தின் பழமையும் - நாகரிகப் பெருமையும் தெரியும்**'' என்று கூறி உள்ளார்.

உலகின் நாகரிகத் தொட்டில்களுள் பழமையானது. 'அரப்பா, மோகிஞ்சதாரோ' எனும் இடங்களாகும். அவை

பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை. (5000 கி.மு.) தொன்மையான தமிழ்நாகரிகத்தை வெளிப்படுத்து வதுடன், ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னரே இருந்ததென்றும், அக்கட்டிடங்களில் காணப்பட்ட உருவ எழுத்துக்கள் தமிழை ஒத்திருக்கின்றன என்றும் அது கற்காலத்துக்கும், செப்புக்காலத்துக்கும் (Neo Lithie Age Coper Age) இடைப்பட்ட காலம் என்றும் தமிழருக்கே உரிய மூக்கு அணிகளும் 'தாலி முதலிய கழுத்து அணிகளும் அக்கட்டிடங்களில் காணப்பட்டன என்றும் அங்குள்ள எழுத்துக்கள் தமிழையே ஒத்திருக்கின்றன என்றும் கூறியுள்ளனர்.

பிற்காலத்தில் நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ரெவரண்டு ஹீராஸ் பாதிரியாரை அவர்தம் முதிர்ந்த வயதிலே அழைத்துப் பாராட்டியது. அப்போது அவரிடம் கையெழுத்து வாங்கிய மாணவரிடம்,**I am a Dravidian Comming from Spain** ('நானொரு தமிழன் - ஸ்பெயின் தேசத்திலிருந்து வருகின்றேன்) என்று எழுதிக் கையெழுத்துப் போட்டு உள்ளார்.

நிலங்களையும் மலைகளையும் ஆராய்ந்த மேனாட்டு விஞ்ஞானிகள், குமரிக்கண்டம் பகுதியே உலகில் முதலில் தோன்றிய பகுதி என்றும். குமரியில் உள்ள **''மருத்துவா மலை''**யே உலகில் மிகப்பழைய மலை என்றும் கூறுகின்றனர்.

உலக மொழிகளை ஆராய்ந்த 'கால்டு வெல்' அவர்களும் **"உலகின் மூத்த மொழியாக தமிழே இருக்க**

முடியும். ஏனெனில் தமிழ்ச் சொற்கள் உலக மொழிகள் அனைத்திலும் உள்ளன" என்கிறார். அவர்தம் கருத்தமைந்த தமிழ்ப்பாடல்.

"உலகில் உதித்த முதல் மனிதன் ஓதும் மொழியாய்ச் சிறப்புற்றாய், உலகில் மொழிகள் பலவிற்கும் அன்னையாகி இளமை நலம், நிலவும் தமிழே எம்முயிரே நெஞ்சத்தினிக்கும் முக்கனியே, குலவும் வாழ்வின் உயிரசத்தே கொஞ்சும் தமிழே வாழியவே!"

தேசியமஹாகவியும் தெய்வத்தமிழ்ச் சித்தருமாகிய, ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் பாடுகிறார்



"யாமறிந்த மொழிகளிலே...
தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்...
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்"

சத்தியக் கவிஞரின் சாகாவரம் பெற்ற தமிழுக்கான முத்திரைக் கவிதையிது.

"உலகில் முதன்முதலில் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு; அவர்கள் வாய் திறந்து முதன் முதலில் பேசிய மொழி தமிழ்மொழி" முத்தமிழ்க் காவலர், அமரர் ஸ்ரீ கி.ஆ.பெ.விஸ்வநாதம் அவர்களின் தீர்ப்பு இது.

அனைத்துலகுக்கும் மூத்த முது மொழியாக விளங்குவது தமிழ் தான் என்பதை மேலை நாட்டு மொழி அறிஞர்களான திருவாளர்கள்... கால்டுவெல், ரைஸ் டேவிஸ், மாக்ஸ் முல்லர், பெஸ்கி பாதிரியார், ஹீராஸ் பாதிரியார்... முதலான பலப்பல மொழியாராச்சி நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்போதைய **இமயமலை கடலாகவும், குமரிக்கடல் நிலமாகவும்** இருந்ததற்கான ஆதாரங்கள் புராண இதிகாசங்களோடு, சங்கமருவிய காலத்து வரலாற்றுக் காப்பியமான சிலப்பதிகாரத்திலும் இதோ...,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள.."

- "காடுகாண்காதை"

நவீனயுக இன்றய விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சியின் சான்றுகளாக, நேபாள நாட்டின் தரைவழிப் பாதையிலே மலையின் குறுக்கு வெட்டுப் பகுதியிலே, மிகப்பெரிய மீன் எலும்புகளும், கிளிஞ்சல் கூடுகளும், இமயமலைத் தொடரின் சிகரங்களிலே பல்லாயிர வருடங்களுக்கு முந்தைய கடற்பாசிப் படிவங்களும், ராட்சத வடிவ கடல்வாழ் உயிரின எலும்புக் கூடுகளும்... உள்ளங்கை நெல்லிக்கனிச் சாட்சிகளாக இன்றும் காணக்கிடக்கின்றன.

கடல் மலையானதும், மலை கடலான விபரமும் தொன்மைத் தமிழ் வரலாற்றுக்கு அவசியமாகிறது. இரண்டு சங்கங்களை கடல் விழுங்கிய விபரம் இதோ.

ஆதித்தமிழ் இலக்கண மகுடமாக விளங்குவது **''இறையனார் களவியலுரை''** ஈஸ்வரனே இதன் கர்த்தா என்றும்... ''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று ஈஸ்வரனிடமே வாதிட்ட, இடைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்புலவர் **நக்கீரர்** பெருமானுக்கும் இதில் பங்குண்டு என்றும் சொல்லப்படுகிறது. அந்தத் தொன்மையான இறையனார் களவியலுரையிலே உள்ள விபரப்படி...

முதற் தமிழ்ச்சங்கம்

குமரிமுனைக்குத் தெற்கே... இருந்த ஆதித் தென்மதுரையிலே, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உருவானது முதல் தமிழ்ச் சங்கம்.

ஆதித் தென் மதுரையை **காய்சினவழுதி** முதலாக **கடுங்கோன் பாண்டியன்** வரை 89 மன்னர்கள் ஆண்டு... மொழியை ஆதரித்து வளர்த்தனர்.

முதல் தமிழ்ச் சங்கத்து முன்னிலைப் புலவர்களாக... திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளும், தேவர் தம் குறை தீர்த்த ஆறுமுகப் பெருமானும் இருந்திருக்கின்றனர்.

அகத்தியர் முதலாக 549 புலவர்களில் தொடங்கி, காலச் சுழலிலே... 4449 புலவர்கள் ஏராளமான

இலக்கியங்களைப் படைத்திருக்கிறார்கள். முதல் இலக்கண நூலாகிய **அகத்தியம்** காட்டிய நெறியிலே பரிபாடல், முதுநாரை, முது குருகு, களரியாவிரை முதலான நூல்களோடு, 4440 ஆண்டுகள் தழைத்திருந்த முதற் தமிழ்ச் சங்கத்தை கடல் கொண்டது.

இரண்டாம் தமிழ்ச்சங்கம்

தென்மதுரையை அடுத்து உருவான கபாட புரத்திலே... முதல் மன்னனாக **வெண்டேர் செழியன்** எனும் பாண்டியனில் தொடங்கி, **முடத்திருமாறன்** வரையிலே 59 பாண்டியராஜாக்களின் பராமரிப்பிலே இடைத்தமிழ்ச் சங்கம் நிலைத்திருந்தது.

அகத்தியர், தொல்காப்பியர், வெள்ளுர் காப்பியன், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, சிறுபாண்ட ரங்கன், திரையன்மாறன், துவரைக்கோன், கீரந்தை... முதலான 59 புலவர்களோடு தொடங்கி, காலச்சுழலிலே மூவாயிரத்துக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்களால்... கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை, அகவல் எனப் பலப்பல இலக்கியங்களை உருவாக்கி, மொழி வளர்த்த இடைச்சங்க கபாடபுரமும், 3700 ஆண்டுகள் நிலைத்திருந்து, திடீரென்று பொங்கியெழுந்த கடலிலே நாடும், சங்கமும் கரைந்து மறைந்தன.

மூன்றாம் தமிழ்ச்சங்கம்

மூன்றாவவது தமிழ்ச்சங்கம் தற்போது **''மதுரை''** என அழைக்கப்படுகின்ற நான்மடக் கூடல் திருநகரிலே

ஏற்பட்டது. அப்போதைய அதன் பெயர் **''உத்தர மதுரை''** ஆகும்.

முடத்திருமாறன்... முதலாக **உக்கிரப் பெருவழுதி** வரையிலான 49 - பாண்டிய மன்னர்கள் உத்தர மதுரையின் ராஜாக்களாகத் திகழ்ந்தனர்.

மூன்றாவது சங்கத்திலே, சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்கிழார், மருதளிள நாகனார், இளந்திருமாறன், நல்லந்துவனார், கணக்காயர் மகனார், நக்கீரர்... முதலான 49 புலவர்கள் இருந்து தமிழ் வளர்க்கத் தொடங்கி... காலச் சுழலிலே மொத்தம் 449 புலவர்கள் உருவாக்கிய இலக்கியங் களிலே... அகநானூறு, புறநானூறு, ஐங்குறுனூறு, பதிற்றுப் பத்து, நற்றிணை நானூறு, நெடுந்தொகை நானூறு, குறந்தொகை நானூறு, எழுபது பரிபாடல், நூற்றைம்பது கலி முதலான பல்லாயிரக்கணக்கான தமிழ் இலக்கியச் செல்வங்களெல்லாம். காலப் புயலாலும், இருமுறை ஏற்பட்ட கடற்குமுறலாலும் அழிந்தவை போக, இன்று நமக்கு எஞ்சிய நூல்கள் மிக சிலவேயாகும்.

இப்போதுள்ள நான்காம் தமிழ்ச்சங்கம்...!

மாவீர சேது சமஸ்தான வாரிசுகளான **ஸ்ரீ பாஸ்கர சேதுபதி**களின் பேராதரவுடன், 1901-செப்டம்பர் 15-ல் மதுரை சேதுபதி பள்ளியில் நான்காம் தமிழ் சங்கத்தை தொடங்கினார் **ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்**. சீரழிந்து கிடந்த சங்க நூல்கள் செப்பனிடப்பட்டன! ஆனால்...

1920-லே அரிய பல இலக்கியச் சுவடிகளை - ஆய்வு நூல்களை - தீயிலே பறி கொடுத்துவிட்டு 98 வயதுக் கிழவியாக தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறது இன்றைய மதுரை தமிழ் சங்கம். (இந்த ஆண்டு (1998) தமிழ்ச் சங்கப் பொருளாதாரம் ஓரளவு உயர்ந்ததாம்!).

இடைச்சங்கத்திலே எஞ்சிய ஒரே இலக்கணமான தொல்காப்பியம், கடைச்சங்கத்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெென்கீழ்கணக்கு முதலானவையே...! அந்த நூல்களின் பட்டியல் பாட்டு இதோ...

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ டகம்புறமென்ற
இத்திறத்த எட்டுத் தொகை.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலைகடாத் தொடும் பத்து.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி, மாமூலம்
இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பனவும்
கைந் நிலையும் ஆம் கீழ்க் கணக்கு.

ஆழி சூழ் உலகத்து மூத்த முதுமொழியாகிய தமிழின் தொன்மைக்குச் சாட்சியங்களாக சங்க நூல்களோடு, **திருமூலரின் திருமந்திரமும் உண்டு.**

திருமந்திரத் திருமூலரும், தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரும் நண்பர்கள்! பொதிகை மலையிலே முருகனருட் தமிழ்ச் சங்கத்திலே ஒரு சாலை மாணாக்கர்கள்; பாடம் கேட்ட பருவத்திலே திருமூலரின் பெயர், **சுந்தரநாதர்.**

சிவாகமம் சிறப்பதற்காக வடகயிலைக்கு சுந்தரநாதரை (திருமூலரை) அனுப்பியதே அகத்தியர் தான். சிவகணத்தின் சேனாதிபதியும், சித்தர்களுள் முதல் வருமான நந்தியம் பெருமானிடம் ஆகமப்பாடம் கேட்டு தட்சிணத்திற்குத் திரும்பிய சுந்தரநாதன், அட்டமா சித்திகளையும் பெற்று, ஆயகலைகளையும் கற்று.. சிவ மஹா யோகியாகத் திருத்தலம் பலவற்றைத் தரிசித்தபடி திருவாவடு துறையில் உள்ள சாத்தனூர் கிராமத்தை அடைந்தார்.

வயல் வெளியிலே ஆவினம் மேய்க்கும் குலத்தவரான (இடையர்) **''மூலன்''** என்பவர் திடீரென மரணம் அடைகிறார். ஆவினம் (மாடுகள்) கதறின! அவற்றின் துயரைத் தீர்ப்பதற்க்க... கூடுவிட்டுக் கூடு பாய்கிறார் சுந்தரநாதர். மேய்ப்பவன் எழுந்ததும். துள்ளி மகிழ்ந்தன ஆவினம். அந்திப் பொழுதிலே ஆவினத்தை அதனதன் இடத்திலே விட்டு விட்டு, தனது கூட்டைத்

தேடினார் சுந்தரநாதர். இறையருளால் திருமேனி மறைந்து விடவே... மூலனின் உடம்போடு மூவாயிரம் ஆண்டுகள் பூமியிலே இருந்து, ஆண்டுக்கு ஒன்றாக **''தமிழ் மூவாயிரத்தை''** (திருமந்திரத்தை) உருவாக்கினார். அது முதல் சுந்தரநாதர், திருமூலர் ஆனார்.

18.03.1996 - முதல் 13 வாரங்கள் சென்னைத் தொலைக் காட்சியில் ஒளிப்பரப்பான (T.V. தொடர்) **''அறுபத்து மூவருலா''** வின் கதை. வசனம், பாடல்களை அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) எழுதியிருந்தேன். அத்தொடரிலே அறுபத்து மூவருள் முதல்வராக திருமூலரைத்தான் எழுதினேன். அந்த ஆராய்ச்சியிலே கிடைத்த அற்புதங்கள் ஏராளம்! இதிகாச புராணங்களிலே புரியாத பல புதிர்களுக்குத் திருமூலர் வரலாற்றிலே விடைகண்டு வியந்தேன்.

திருமூலர், மஹா பாரதச் சண்டை முடிந்து கி.மு. 3100-ல் பொதியமலை புறப்பட்டார் என்பதை புராண வரலாறு கூறுகிறது.

சைவ சமயத்துப் பன்னிரு திருமறைகளிலே, முதல் திருமுறையாக இடம் பெறவேண்டிய திருமந்திரம், பத்தாம் திருமுறையாகத் தடம் புரண்டதற்குக் காரணம் உண்டு! (திருமூலர் காலம் கி.மு.6000 என்பது ஆராய்ச்சியாளர் முடிவு)

ஆதியிலே தோன்றி, காலச்சூழலால் திருவா வடுதுறை ஆலயத்துள் மறைந்து கிடந்த திருமந்திரச்

சுவடிகளை, ஏழாம் நூற்றாண்டு (திருஞான சம்பந்தர் கி.பி.601-650) வந்து தான் மீட்டிருக்கிறார்.

சித்தர் பெருமானாகவும், சிவமகா யோகியாகவும், பக்திப் பயிர் வளர்த்த நாயன்மார்களுள் முதல்வராகவும் விளங்கும் திருமூலரின் பெருமையும் அவரது திருமந்திரத்தின் அருமையும் அளவடற்கரியதாகும்.

"என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே!"

தெய்வத் திருத்தமிழைப் பாடும் பெருமிதத்தை மேலேகண்டபடி பாடியுள்ளார் திருமூலர்.



"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என் றுணர்."

அருந்தமிழ்ச் செல்வியான ஔவை மூதாட்டியின் திருமொழிப்பாட்டு இது.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

என்று திருமூலரை, அறுபத்து மூவரைத் தொகுத்துப் பாடிய நம்பியாரூரர் போற்றுகிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளில் யோக நெறிக்கும், அதன் வழியாக அடைய வேண்டிய ஞான நெறிக்கும் முதலிடம் தருகிறது. திருமூலர் அருளிய திருமந்திரம், இறைவழிபாட்டில் பொறியடக்கமும், மன ஒருமைப்பாடும் இன்றியமை யாதன. ஆதலால், பிராணாயாமம் முதல், இருக்கை வகை, அட்டாங்க யோக வகை முதலியவற்றைத் திருமந்திரம் ஆதார பூர்வமாக விரித்துரைக்கின்றது.

இருவினைப் பற்றுகளையும் அறவே நீக்கி, ஐம்புலன்களையும் அறிவால் அடக்கி, எவ்வுயிர்க்கும் அருளுடையவராய் வாழும் பெரியோர் அருளிய வார்த்தைகளே 'மந்திரம்' ஆகும். இத்தகு பெரியோரும் அட்டாவதானச் சித்தருமாகிய திருமூலர் என்னும் சிவயோகியின் திருவாக்கில் மலர்ந்த தமிழ் மந்த்ரத் தந்திரம் தான் திருமந்திரம்.

'தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே' - /0/

என ஆகமத்தை மூவாயிரம் பாடல்களாக ஒன்பது தந்திரமாகத் திருமூலர் மொழிந்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

பாயிரத்தில் - கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு முதலியனவும்.

முதல் தந்திரத்தில் - உபதேசம், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை முதலியனவும்,

இரண்டாம் தந்திரத்தில் - அட்ட வீரட்டம். இலிங்க புராணம், பஞ்ச கிருத்தியம், கர்ப்பக் கிரியை, சிவநிந்தை, குருநிந்தை முதலியனவும்,

மூன்றாம் தந்திரத்தில் - அட்டாங்க யோகம், அட்டமாசித்தி முதலியனவும்,

நாலாந் தந்திரத்தில் - திரு அம்பலச்சக்கரம், நவகுண்டம், வயிரவி மந்திரம் முதலியனவும்,

ஐந்தாந் தந்திரத்தில் - சரியை, கிரியை, யோகம், ஞானம், சத்திநிபாதம் முதலியனவும்,

ஆறாந் தந்திரத்தில் - குரு தரிசனம், திருநீறு, துறவு, தவவேடம், ஞான வேடம் முதலியனவும்,

ஏழாந் தந்திரத்தில் - ஆறாதாரம், சிவபூஜை, குரு பூஜை, சமாதிக் கிரியை, பசு இலக்கணம் முதலியவும்,

எட்டாந் தந்திரத்தில் - அவஸ்தைகள், வாய்மை, அவா அறுத்தல், பத்தி, முத்தி முதலியனவும்,

ஒன்பதாந் தந்திரத்தில் - பஞ்சாட்சரம், சிவதரிசனம், சூனிய சம்பாஷணை, தோத்திரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

மனப்பாடஞ் செய்யச் சில மந்திரங்கள்!

திருமந்திரப் பாடல்கள்

1. *யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை*
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே - 252

2. *அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்*
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே - 270

3. *'நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்*
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே - 1445

4. *எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்*
கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே - 603

சுவரை வைத்துத்தான் சித்திரம் அதுபோல உடம்பை வைத்துத்தான் உலகையும், அண்டங்களையும் அளந்து கண்டு... புவியியல், வானியல்... அனைத்தையும் கவிகளாகப்பாடி வைத்தனர் நமது முன்னோர்களான

முனிவர்களும், தன்னலமில்லாத சித்தர் பெருமக்களும், முன்னால் முளைத்த காதுகளைவிட, பின்னால் முளைக்கும் கொம்புக்கு எப்படிப்பலம் அதிகமோ, அதுபோல... ஆதிமுதல் சித்தரான அகத்தியரைவிட அவரது மாணவர் திருமூலரின் திருமந்திரம் வழக்கிலே புடைத்து நிற்கிறது!

சீடனின் பெருமை குருவின் மகிமைதானே. அனைவர்க்கும் குருவாகி, ஆதித்தமிழின் இலக்கணமான ''அகத்திய''த்தின் கர்த்தாவாகிய அகத்தியச் சித்தரின் வாழ்வு, கடல்போன்றது! அதிலே சில துளிகள்.

புண்ணியபூமி நம் நாடு

இந்தியச் சமுதாயம், ரிஷிஞானத்தில் ஊறித் திளைத்த நித்திய கற்பகம்.

இந்தியா புண்ணியபூமி, இந்துதருமம் மனித சமுதாயத்திற்கு அமரத்தன்மையளிப்பது.

இந்தியா, உலகின் கலங்கரை விளக்கு. அந்த விளக்கொளியைக் கண்டே மானிடக் கப்பல் அமைதித் துறை சேர முடியும், அதன் ஒளியைத் தூண்டிப் பரப்ப, எக்காலத்திலும் வேத ரிஷிகளும், ஞானச் சித்தர்களும் இங்கே விளங்குகிறார்கள்.

மனித சமுதாயம் புது மலர்ச்சி பெற முன்னிற்பது, பரம யோகியரின் சக்தியே.

– கவியோகி, மகரிஷி, சுத்தானந்த பாரதியார்



ஆதிச் சித்தர் ஸ்ரீ அகத்தியர்

நள்ளிரவு நேரத்திலே, நீலவானத்திலே எத்தனை லட்சம் நட்சத்திரங்களைப் பார்க்கிறோம்? அசுவினி முதலான 27 - நட்சத்திரங்களின் அணிவகுப்பு; ஸப்தரிஷி (ஏழு ரிஷிகள்) மண்டலம், துருவ நட்சத்திரம், சுக்கிர வெள்ளி, இப்படிப் பற்பல சிரஞ்சீவி ஒளியாளர் வரிசையிலே.... வானத்தின் தென்பகுதியிலே அகஸ்திய நட்சத்திரத்தையும் கண்டு சொல்லியிருக்கிறார்கள் நமது முன்னோர்கள்.

வரம் பெறுவதற்கு எல்லோர்க்கும் உரிமையுண்டு! அதை துஷ்பிரயோகம் செய்வதற்கு தேவலோகத்தவர் முதலாக யாருக்குமே அதிகாரமில்லை! அந்த இறைவனின் - இயற்கையின் - நியதியை மீறிய அசுரர்களை அழிப்பதற்காக அக்கினிதேவனின் அம்சமாக... **மித்ராவருணர் - ஊர்வசி** இருவருக்கும் பிள்ளையாக அவதரித்தவர் **அகஸ்திய முனிவர்.**

முத்தமிழின் வித்தாகிய முதற் தமிழ்ச் சங்கத்தின் இலக்கணப்புலவர்! மூவுலக இந்திராதி தேவ மாநுட, கந்தர்வர்களுக்கெல்லாம், குருவாகத்திகழ்ந்தவர்!

எரிகோளமாகிய சூரியனிடமே தமிழ்ப்பாடம் கேட்டவர். இந்திரனால் சபிக்கப்பட்ட தேவநர்த்தகி ரம்பையானவள், அகத்தியரால் நற்கதி பெற்றாள்.

இமவான் மகளான பார்வதிக்கும் ஈஸ்வரனுக்கும் நடந்த திருமணத்தின் போது, கூடிநின்ற கோடானுகோடி தேவமானுடர்களின் பாரத்தால் வடபகுதி தாழ்ந்து... தென்பகுதி உயர்ந்தது! ஈஸ்வரனின் கட்டளையை ஏற்று, இமயத்திலிருந்து பொதிகை வந்து தென்பகுதியில் நின்று பூமியின் சமன் காத்த புனிதர். பொதிகையிலே தமிழ் வளர்த்த புண்ணியர் (பொதிகை மலைப்பகுதி என்பது, குற்றால அருவி மலையும் - தாமிரபரணி நதி பாயும் தமிழகப் பகுதியுமாம்)

அஸ்வமேதயாகம் எனும் ''வியாபார''த்தின் லாபமாக வந்த இந்திரபதவியை, **நகுஷன்** எனும் சந்திரவம்ச மன்னன் துஷ்பிரயோகம் செய்தான். ஸப்த (ஏழு) ரிஷிகளை தனது பல்லக்கைச் சுமக்க வைத்து ''ஸர்ப்ப; ஸர்ப்ப'' (போ! வேகமாக போ!) எனச் சீறினான். பல்லக்கை அகத்தியரும் சுமந்து வந்தார். நகுஷனின் வார்த்தையையே சற்று மாற்றி **''ஸர்ப்போ பவ''** என சபித்து அவனை மலைப்பாம்பாக்கி வனத்திலே அலையவிட்ட மாமுனிவர் அகத்தியர்.

பேயாக மரத்திலே தொங்கிய பித்ருக்களை சந்தித்த அகத்தியர், அவர்களை சொர்க்கம் சேர்ப்பதற்காக, திருமண முடிவை எடுக்கிறார். அதே சமயம் விதர்ப்ப தேச

அரசனும் ''புத்'' எனும் நரகத்தை அடையாமலிருக்க பிள்ளைவரம் வேண்டுகிறான் அகத்தியரிடம். மன்னனுக்கு முனிவர் உதவினார்; முனிவருக்குத் தனது மகள் **லோபாமுத்திரையை** அவளது பூரணசம்மதத்துடன் தாரைவார்த்துத் தந்தான் ராஜா. அரண்மனையிலே வாழ்ந்த இளவரசி, ஆஸ்ரமத்திலே ரிஷிபத்தினியாக இல்லறத்தை நடத்தி வந்தாள், அப்போது...

சக்ரவர்த்தியின் திருமகள், சன்யாசினியாகியும்... நகை ஆசை விடவில்லை, மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்ய, முடிமன்னர் மூவரிடம் மாதவ அகத்தியர்! யாசிக்கப்புறப்பட்டார். இந்த இடத்திலே ஒன்றைச் சிந்திக் வேண்டும்! கடலில் நடந்தவர், காவிரி நதியைப் பூமிக்குக் கொணர்ந்தவர் அடங்காத ஆணவ மலையாக இருந்த விந்தியத்தை அடக்கியவர்! அயோத்தி சக்ரவர்த்தி ராமஜெயத்துக்கு ''**ஆதித்ய ஹிருதயம்**'' தந்தவர். ஓம் எனும் பிரணப் பொருளை முருகப் பெருமானின் உபதேசத்தால் அறிந்தவர்... காவிரிப் பூம்பட்டினத்து இந்திரவிழாவையே தனது மாதவ மந்திரத்தால் கோலாகலமாக நடத்திய, அகத்திய முனிவரின் சக்தி மகத்துவங்கள் ஆயிரமாயிரம் உண்டு! ஆனால்... இத்தனை சக்திகளையும் கொண்ட சத்தியச் சித்தர், மனைவிக்கு ஒரு சில நகைகளை மன்னரிடம் யாசிப்பானேன்? அது தான் சத்தியம். வான மண்டல ஈர்ப்பின் சக்தியால் அந்தரத்திலே பூமிப்பந்து சுழல்கிறதே அந்த தரும நெறிப்படி... இவ்வுலகிலே மகரிஷிகளுக்கும்,

சித்தர்களுக்கும் மாபெரிய யோகியருக்கும் உள்ள சக்தியனைத்தும் சமுதாய, சகல ஜீவ நலனுக்காகவே பயன் படுத்தப்பட வேண்டும்! இறைவனின் பிரதிநிதிகள் சித்தர்கள்! தனக்கென எதையும் சேர்த்துக் கொள்ளவோ, ''லஞ்சம்'' பெறவோ விரும்பாத உத்தமச் சித்தர்களே சிரஞ்சீவிகள்.

யுகயுகமாக வாழும் அகத்தியர், அதனால்தான் தன் மனைவி லோபாமுத்திரைக்கு நகையைப் பெற, முடிமன்னர் பலரிடமும் சென்றார். நீதி தவறாத மன்னர்களின் கஜானா வருவாய், செலவுக்கு சரியாகும் நேர்மை கண்டு... **இல்லவன், வாதாபி** எனும் இரு அரக்கர்களிடம் சென்றார். அரக்கர் இருவரும் பல முனிவர்களை, விருந்தும் பரிசும் தருவதாக ஏமாற்றி, அவர்களைச் சாப்பிட்டு ஏப்பமிட்டவர்கள்! உணவாக மாறித் தன்னுள் புகுந்து விட்ட வாதாபியை அகத்தியர் ''ஜீரணம்'' செய்ததுகண்ட இல்லவன் அவரைப்பணிந்து அள்ளிக் கொடுத்தான் செல்வத்தை. மனைவிக்குச் சில நகைகளை மட்டுமே எடுத்துப் புறப்பட்டார் அகத்தியர்.

மரத்தைத் தாங்கும் வேர்கள் வெளியே தெரிவதில்லை, மாடமாளிகை மகோன்னத கூடகோபுர அஸ்திவாரங்களைப் பார்க்க முடிவதில்லை என்பதற்காக இல்லையென்றாகிவிடுமா? ஆழிசூழ் உலகத்தின் அடித்தளங்கள் சித்தர்கள்! சித்தருள் முதல்வர் குறுமுனி அகத்தியர்! முத்தமிழின் வித்தகரது தத்துவப்பாடல் ஒன்று...! பதினென் சித்தர்களின் **"ஞானக்கோவை"** யிலே

''அகத்தியர்ஞானம்'' (பாடல்கள்) ஏராளம் உண்டு. மாதிரிக்கு இதோ ஒன்று.....

சக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலஉயிர் சீவனுக்கும் அதுதா னாச்சு
புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவ ருண்டு
பக்தியினால் மனம் அடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தைவிடார் பரம ஞானி
சுத்தியே அலைவதில்லை சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந்தானே!

-அகத்தியர் (ஞானம் - 9)

அகத்தியரை அடுத்து நாம் காணப் போவது வேத வியாசரை.

நால்வேதங்களையும் வகுத்துத் தொகுத்தவர்! வேதக் கருத்துக்களை, உபநிஷத்துக்களின் தத்துவங்களை எல்லாம், பாமர மக்களும் புரிந்து கொள்வதற்காகவே பதினெட்டுப் புராணங்களையும் படைத்து வைத்தார் வியாச பகவான்!

பதினெட்டுப்புராணங்களின் சுருக்கத்தை அறிந்த பிறகு, அதைப் படைத்தவரை அறிவோம்.

பதினெட்டுப் புராணங்கள்



வேத இதி காசங்கள் சொன்னால் சுகம்
விநாயகர் அகவலைச் சொன்னால் நலம்
மாபாரதம் கீதை வாழ்வில் வளம்
மக்கள்செல் வம்பதி ணென் புராணம்.

தேவார, திருவாசக திவ்யப் பிரபந்தங்களை... என்று நம் குழந்தைகள் பள்ளியிலே சொல்ல மறந்தனவோ, அன்றே நமது ஆன்மிக வாழ்வின் அடித்தளம் ஆட்டம் கண்டது!

விநாயகர் பற்றி பார்கவமுனிவரும், முத்கல மகரிஷியும், வேத வியாசரும், ஔவை, நக்கீரர், மெய் கண்டார், திருமாளிகைத் தேவர், ஆதி சங்கரர் எல்லாம் எழுதிய சிரஞ்சீவி இலக்கியங்களான சாத்திர, தோத்திர பாஷ்யங்களையெல்லாம், ஆன்மிகத்தை வளர்க்கவே பொதுமக்களால் ஏற்படுத்தப்பட்ட மடாலயங்களிலே கூட தற்போது காணமுடியாத கொடுமைக்கு ஆளாயிருக்கிறது நமது தமிழர் சமுதாயம்!

ஆலயங்களையும், அறவழி காட்டும் பக்தி இலக்கிய, தலபுராணங்களையெல்லாம் நீக்கிவிட்டால்,

இந்தியாவில் வெறும் குட்டிச் சுவர்களும், முழுமூட முட்டாள் தனமானமோகவெறிகளுமே மிஞ்சும்! இதை மடாலயப் பெருந்தலைகளும், அறநிலையத் துறை யினரும் அவசியம் உணர்ந்தாக வேண்டும்!

சுவாமி **விவேகானந்தர்** கூறுகிறார்... ''மக்கள் பெருக்கமோ, மனித ஆற்றல்களோ! மாளிகைச் செல்வமோ, மதாபிமான மற்ற கல்வியோ, பேச்சுவன்மையோ... எதுவுமே நிலையானதன்று! தூய்மை, ஆன்மிக இறையுணர்வே நிலையானது...! நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாரதியனே! தியானம் செய்.''

தியானமும் யோகமும் செய்வதை ஏதோ மாய மந்திர ''குறளி வித்தை'' என்றே இளைய தலைமுறை, கருதத் தொடங்கிவிட்ட கொடுமை மாற்றப்பட வேண்டும்!

மனித வாழ்வுக்குப் பிரதானமாகியது, சுவாசச் சீரமைப்புதான்! நிறைந்த ஆரோக்கியத்திற்கும், நீண்ட ஆயுளுக்கும் தியானம் உதவும் என்பதை, மேலை நாட்டவர் உணர்ந்து செயல்படுகின்றனர் ஆனாம் நாம்?

தியானத்தால், தெளிவான யோகத்தால் தெய்வநிலைக்கு உயர்ந்து நிதர்சனங்களைக் கூறி, நிலையான பாடல்களைப் பாடிவைத்த சித்தர் இலக்கியங்களையெல்லாம குப்பையிலே ''கடாசி'' விட்டோம்! ஆரம்ப மேல்நிலைப்பள்ளிகளிலேயே...'' "ஓரம்போ'' க்களை மனப்பாடம் செய்தபடி! தொப்புளில் ஆம்லட்டும், தொடையிலே பம்பரமும் விடுகிற

'இலக்கிய'ப் படக்காட்சி விமர்சனங்களுமாகத் தொடங்கி... பூதாகார வளர்ச்சி பெற்று, அதிரடி அராஜக... ''டமால், டுமில்'' களாகி, பிஞ்சிலேயே வெம்பி உதிரும், ''எயிட்ஸ்'' கூடுகளாக இளையதலைமுறை நாறிச் சீரழியும் இழிநிலைகள் மாறவேண்டுமானால், மீண்டும் நாம் புராணகால எளிமைக்கு, பூரண பக்தி வழியின் வலிமைக்குத் திரும்பியாக வேண்டும்.

ஜெர்மனி நாட்டிலே நமது தமிழ் மொழியின் (பக்தி) இலக்கியத்திறனாய்வு நடக்கிறது! ரஷ்யாவிலே நமது இதிகாசமாகிய மஹாபாரதம், மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளிலே பாடமாக உள்ளது! சிங்கப்பூர் பள்ளிகளிலே பக்தியும் ஓர் பாடம்! அமெரிக்காவிலே... **'ஹரே ராம ஹரே கிருஷ்ண**'' பேரின்ப அலைகளிலே மக்கள் நீந்தித் திளைக்கின்றனர்! ஆனால் ஞானத்திற்கே தாயகமாகிய பாரத நாட்டிலே, குறிப்பாக நமது தொன்மைத் தமிழகத்திலே, சராசரிப் பாமரனின் நிலையென்ன? **இனாம் பெறுவதற்காக; அடிக்கடி கைகளை ஏந்தும் கேவலங்களைத் தவிர** அவன் - அவள் - கண்ட சுகநலன் என்ன? என்ன?? என்ன???

இனாம் பெறுவது அவமானம்

''ஏற்பது இகழ்ச்சி'' எனும் ஆத்திச் சூடியைப் படித்து உணர்ந்து...'' **சீச்சீ! இனாம் வேண்டாம், நானென்ன பிச்சைக்காரனா?** உழைப்புக்குக் கூலி வேண்டும் உண்மைக்கு வாழ்வு வேண்டும்'' என்று தன்மானத்தோடு ஒவ்வொரு மனிதனும் சொன்னால்தான், உண்மையான

சுகம் வரும். அதுவே தமிழர்கள் காணும் உண்மையான மானாபிமானமுள்ள சுதந்திரமும் ஆகும்.

இதற்காகவாவது நமது இதிகாச புராண ஆகம, சாத்திர, தோத்திர, பக்தி இலக்கியங்களை ஒரே ஒருமுறை புரட்டிப் படித்துப் பாருங்களேன்!

அரசியல், சமயம், ஆயகலை, கல்வி, செய்தொழில் இலக்கியம் முதலான அனைத்துக்கும் தீர்வு கண்டு, புனிதப் பிறவியான மனித வாழ்வுக்கு இன்றியமையாத நோய்களை மீண்டும் வராமல் தீர்க்கின்ற, எளியமுறை இயற்கை மருத்துவத்தை, இயல்பான உணவிலே உள்ள சத்து, அசத்துக்களை எடுத்துக் கூறி, ஆரோக்ய வாழ்வுக்கு அடித்தளமாக அமைந்தவை நமது புராணங்கள்.

அண்ட சராசர அமைப்புகள், விண்வெளிக் கோள்களின் செயல்பாடுகள், தேவ மாநுட வம்சாவளி, மன் வந்திரங்களின் மகத்துவம், மனிதகுல வரலாறு எனும் ஐந்து இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டவை நமது புராணங்கள்!

ஒவ்வொரு புராணமும், உபபுராணமும் அதைச் சார்ந்த இதிகாச நாயகர்களின் வரலாறுகளும் பற்பல பேருண்மைகளைக் கொண்டிருக்கின்றன.

தல புராணங்களையும், பக்தி இலக்கிய தேவாரதிவ்யப் பிரபந்தங்களையும் என்று நாம் அவ நம்பிக்கையோடு புரட்டத் தொடங்கினோமோ, அன்றே

நமது சமுதாயச் சன்மார்க்க அமைதியான இனிய வாழ்விலே, சீரழிவு தொடங்கி விட்டது!

சூதாட்டம், சுரண்டல் லாட்டரி,கொலை, களவு, கள்ளக்கடத்தல், திருட்டு சாராயம், பகிரங்கலஞ்சம், பாலியல் வியாபாரம், பதுக்கல், கலப்படம்... பொய் வழக்கு... முதலான சமுதாய **விஷ**(ய)**ங்களோடு**... இன்று தோழமை பூண்டு வாழப் பெரும்பாலும் பழகி விட்டோமே!

''கடவுளே இல்லை'' எனும் தீவிரப் பகுத்தறிவுப் பிரதாபங்களால்... சர்வ துறைகளிலும் அரசியல் உட்பட, வேலியே பயிரைமேயும் விபரீத விபத்துக்களையல்லாமல் வேறெதைக் கண்டோம்? புத்தியில் நிதானத்தை இழந்தோம்! போதுமென்ற பண்பை இழந்தோம், சத்தியம், உண்மை நேர்மைகளையெல்லாம். புராணங்களைப் போலவே... செல்லரிக்கவிட்டு விட்டோம்.

செல்லரித்தவைபோக உள்ள... ஒருசில ''சிறு...'' பகுதிகளையாவது... உருப்படியாகப் பாதுகாக்க வேண்டுமேன்றால், முதியவர்கள் மீண்டும் முழு நம்பிக்கையோடு புராண வழிக்குத் திரும்பி, தடுமாறித் திரிகின்ற இளையதலைமுறைக்கு நிலையான புராணப் புனித வழியைக் காட்டுவார்களாக.

அரிதான இலக்கியப் பொக்கிஷங்களான பதினெட்டுப் புராணங்களையும், அவற்றின் சாரங் களையும் ஓரிருவரிகளிலே அறிவோமா.

1.பிரம்ம புராணம்

படைப்புக்கு அதிபதிகளான பிரம்மாக்களின் காலவரிசை, அவர்களது படைப்பின் பெருமை; கோத்திர மூலவர்களான ஏழு ரிஷிகள், எட்டு வஸுக்கள், பதினோறு ருத்திரர்கள், பன்னிரு சூரியர்கள், பற்றிய முழுவிபரங்களும், பதிநான்கு மன்வந்த்ரங்களுக்கான ஆதாரபூர்வ - அறிவு பூர்வ - விளக்கங்களும் இதிலே உள்ளன.

பகீரதனின் மாதவத்தால் பூமிக்குவந்த கங்கையின் புனிதம், க்ஷேத்ராடான தீர்த்த யாத்ரைகளின் பலா பலன்கள், சிவபெருமானுக்கான சகஸ்ர நாமம், சிவசக்தி, பூஜைகளுக்கான காரண காரியங்கள், சர்வபாப நிவர்த்தியைத் தருகின்ற **''பாரம்பர ஸ்தோத்திரம்''** ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் சுபத்ரா தேவியரின் பெருமை களும்,ஒரிசா மாநிலத்திலே உள்ள ஜகந் நாதபுரியின் ஆதிமகத்துவம், அருள் அறப் பெருமைகள், ஈஸ்வரன் மேல் சிரத்தா பக்தியுள்ள பாகவதப் பெருமக்களின் புனித வரலாறுகளுமாக 244 - அத்தியாயங்களும், 13 - ஆயிரம் ஸ்லோகங்களுடனும் விளங்குவது **பிரம்மபுராணம்.**

2. பத்ம புராணம்

ஐந்தாவது வேதமெனக் கூறப்படும் பகவத் கீதையின் 18 அத்தியாயங்களுக்கும் கதையமைப்பு முறையிலே, எளிய நடையிலே தத்துவ விளக்கமும்,

இருபதுக்கும் மேற்பட்ட கீதைகளிலே,சிவகீதை,ராமகீதை, இரண்டையும் கொண்டு, ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் 1008 நாம மகிமையும், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் 108 பெயர் விளக்கமும், பாகவத புராணத்தின் மகிமை, பக்தியின் அருமை பெருமைகளையும் பத்மபுராணத்திலே விரிவாகக் காணலாம்.

''அஸ்வமேதயாகம்'' என்றால் என்ன? எப்படி? அதைச் செய்தால் என்னென்ன பலன் என்பதோடு, சர்வரோக நிவாரணியான துளசி, மற்றும் கற்பூர தத்துவ விளக்கமும்,. புனிதப் பிறவியான பெண்ஜன்மாவின் இனிய கடமை என்னென்ன என்பதையும், வாலி, சுக்கிரீவன், ஆஞ்சநேயர், பிரகலாதர் முதலான சாதனையாளர்களின் முற்பிறவிச் சரிதங்களும், கோபமே உருவான துர்வாச முனிவரால், தருமம் மூன்று பிறவிகள் எடுத்த அதிசயமும், வைணவ திவ்ய தேசயாத்திரைகளின் பலன்களோடு, ''பாதாள, உத்தர, புஷ்கர '' சுவர்க்க, சிருஷ்டி என ஐந்து காண்டங்களாக... 628 - அத்தியாயங்களும், 5,500 பாடல்களுமாக; சுழலும் உலக கோளம் பற்றிய சகல விஞ்ஞான விபரங்களுடனும், வீட்டுக்கு வீடு தவறாமல், துளசிச் செடியை வளர்க்க வேண்டிய அவசியத்தையும் விளக்குவது **பத்மபுராணம்.**

3. விஷ்ணுபுராணம்

''பூர்வம், உத்தரம்'' என இருபாகங்களைக் கொண்ட விஷ்ணு புராணத்திலே, இதுவரை சுழல்

முறையிலே வந்துள்ள இருபத்திஎட்டு துவாபரயுகங்கள், அந்தந்தயுகத்திலே வேதங்களை... வகுத்துத் தொகுத்த **இருபத்தி எட்டு வியாசர்கள்**, அரத்த சாஸ்திர விபரம், ஹம்சகீதையின் சாரம், முதலானவற்றோடு, நடனம், நாடகம், காவிய இசைகளின் குறிப்புகள், மருத்துவத் தந்தையான தன்வந்திரியின் வரலாறு, எதிர் காலத்திலே வரப்போகும் பாரதவர்ஷ மன்னர்கள், மதியூக மந்திரிகள், ஏற்படும் ஆட்சிகள் பற்றிய தீர்க்கமான அறிவிப்பு, அபாய எச்சரிக்கைகள் இன்றும் பொருந்துவனவாம்.

ஜீவன் முக்தர்களான ஜடபரதர், யாக்ஞுவல்கியர், பிரகலாதன், நிதாகர் முதலான இறையருட் செல்வர்களின் வரலாறுகளோடு 23-ஆயிரம் பாடல்களாக மலர்ந்துள்ள **விஷ்ணுபுராண**மானது. பக்தியுள்ள பாகவதப் பெரு மக்களுக்கு, திருப்பதி லட்டுவாகத் தித்திப்பதாகும்.

4. சிவ (சைவ) புராணம்

பரமன், உயிர், பந்தம் ஆகியவற்றைக் குறிக்கின்ற **பதி, பசு, பாச** ங்களை... அடிப்படையாகக் கொண்டது **சைவம்**. பாசுபதம், மகாவிரதம், சைவம், கபாலிகம், வாமம், பைரவம், ஐக்யவாதம் எனும் கிளைகளோடு, ஆதிநாளிலே உலக முழுதும் படர்ந்து கிடந்த ஆலமரம்தான் **சிவசைவமதம்**- அம்மாபெரு விருக்ஷத்தின் மகத்துவத்தை விளக்குவது இது.

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென் னாட்டுடைய ஸ்ரீ சிவபெருமானின் தத்துவாதீத முழுமையான திருவிளையாடல்களை அருமையாக விளக்குவது ''சைவபுராணம்'' எனப் போற்றப்படும் சிவபுராண மாகும். சைவ சமயத்தின் பிரதான புராணமாகிய இதிலே, ஸ்ரீராம மந்த்ரமும், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமமும் இடம் பெற்றுள்ளது.

அன்புச்சிவத்தின் ஐம்முகத்தத்துவ விளக்கம்; பஞ்சாட்சரமந்திரத்தின் மகத்துவம், ருத்ராட்சம் மற்றும் விபூதிகளின் பெருமை; பன்னிரு ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களின் புராண, இதிகாச ஆதிவரலாறும், அற்புதமஹிமைகளோடு, மகாயாக வேள்வியில் மட்டுமே செய்யப்படுகின்ற பிரம்ம பூஜையின் தாத்பர்யம், உமா மகேஸ்வரி தாட்சாயணியாகி, பார்வதியாக மீண்டும் அவதரித்ததற்கான காரண காரிய விளக்கங்களோடு, சர்வேஸ்வரனின் ஆயிரத்தெட்டு திருப்பெயர்களின் தொகுப்பு, பிரதோஷ மகத்துவம், சரப மூர்த்தியாக அன்புச்சிவம் அவதரித்தகாரண, காரியங்களுடன், ஒரு லட்சம் கிரந்தங்களைக் கொண்டிருந்த ஆதிச்**சிவபுராணம்,** தற்போது 459 - அத்தியாயமும், 24 - ஆயிரம் பாடல்களோடும் விளங்குகிறது.

5. பாகவத புராணம்

ஸ்ரீமந் நாராயணனின் இருபத்து மூன்று அவதாரம் பற்றிய சகல விபரங்களோடு, பூர்ணாவதாரமாகிய ஸ்ரீ

கிருஷ்ணாவதாரத்தின் தனித்தன்மையைத் தத்துவ ரீதியிலே சுவைபடத்தருவது பாகவத புராணம்.

மகாவிஷ்ணுவின் விஸ்வரூபம் ஏன், எப்படி, எதற்காக என்கின்ற விபரங்களோடு, பிரகலாதன், ஜடபரதன், துருவன், கஜேந்திரன் முதலான மனோபல மிக்க பக்தசிரோ மணிகளின் ஆதாரப்பூர்வ வரலாறு களையும் கொண்டது.

பக்தி, ஞானம் வைராக்கியங்களுக்கான விளக்கங் களோடு, 335 - அத்தியாயங்களையும் 18 - ஆயிரம் சுலோகங்களையும் கொண்ட **பாகவதபுராண**மானது, சத்தியத்தை நம்பும் உத்தமர்க்குத் தித்திப்பதாகும்.

6. பவிஷ்ய புராணம்

''பவிஷ்யோத்தரபுராணம்'' எனச் சான்றோரால் போற்றப்படுகின்ற இந்த பவிஷ்ய புராணத்திலே, தீயின் தெளிவான விளக்கம், சூரிய வழிபாடு செய்த பாரதியர்கள் மேற்கு நாடுகளிலே ஆதிகாலத்திலேயே வசித்ததற்கான குறிப்புகளையும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மகன் சாம்பனது வரலாற்றையும் கொண்ட இந்தப் புனிதப் புராணமானது, **''தீர்க்க தரிசன பக்தி இலக்கியம்''** என ஆராய்ச்சியாளர்களால் போற்றப்படுவதாகும்.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால், ஓலைச்சுவடிகளிலே மகரிஷிகளால் எழுதப்பெற்ற இந்தப்

புராணத்திலே... கால அளவைக் கணக்குகளோடு, எதிர்காலத்திலே, - அதாவது, இன்றய நாம் காணும் சமுதாய நடைமுறை, உடைவகை, மனையியல், கலைவகை, அரசியல், வியாபார அராஜகங்கள், 'சன்மார்க்க நிலையங்கள்' எனும் போர்வையிலே, துன்மார்க்கர் போடும் போலித்துறவறப் பொல்லாமை, ஆலய வழிபாடு, அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளிலே நடைபெறும் ஆடம்பர விளம்பர அயோக்ய ''ஜபர்தஸ்து'' களின் அனைத்து விபரங்களும் மிகத் தெளிவாக அன்றே குறிப்பிடப்பட்டுள்ளன!

குருமரியாதை இருக்காது! குலப் பெண்டிர் சோரம்போவர்! படித்தவன் எப்படியும் பிழைப்பான்! ''ஏனோதானோ'' பிராமண வியாபாரத்தனம், போலிச் சன்யாசிகள் பொலிவுடன் திகழ்வர்! காலித்தனங்க ளெல்லாம் அரசு கட்டிலிலே ஏறிப் புரளும்! ஆலயச் சொத்துக்களை அறங்காவல் குழுவே ஏப்பமிடும்...! என்பன போன்ற, நாமின்று நடைமுறையிலே காணும் பெரும்பான்மைக் கொடுமைகளை... அன்றே, படம் பிடித்து எழுதிக் காட்டியுள்ளனர் பவிஷ்ய புராணத்திலே.

வெள்ளைக்காரன் இந்தியாவை ஆளப்போவது (1947 - வரை சுமார் 200 ஆண்டுகள் ஆண்டனர்). இந்தி, ஆங்கிலம் முதலான பல மொழித் தோற்றங்கள் பற்றிய முழுவிபரங்களோடு, கலியுகத்தின் பிற்பகுதியிலே... சமுதாய மறுமலர்ச்சிக்காக பாரத நாட்டிலே... ஆதிசங்கரர்,

இராமாநுஜர், மத்வர், கபீர்தாஸர், இராமதாஸர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், வள்ளலார், காந்தியார், திரு.வி.க, பாரதியார் போன்ற தீவிர ஞானாசார்யர்களின் தோற்றமும், அதனால் ஏற்படும் மாற்றமும் பற்றி யெல்லாம் விரிவாகச் சொல்லும் **பவிஷ்யபுராணம்**, 585 - அத்தியாயங்களும், 14,500 - சுலோகங்களையும் கொண்டதாகும்.

7. நாரத (நாரதிய) புராணம்

மூவுலகங்களுக்கும் ''நியூஸ் ரிப்போர்ட்டர்'' (செய்திச்சேவையர்) ஆகவும், கலகங்களின் மொத்த விற்பனை மானேஜராகவும் விளங்குபவர் நாரதமகரிஷி. பிரம்ம தேவரின் மானஸ புத்திரராகிய இவர் செய்யும் கலகங்களால் ஏற்படும் முடிவனைத்தும் நலமாகவே விடியும், என்பது ''இறையருள்'' எனப்படும் இயற்கையின் தீர்ப்பு.

பதினெட்டுப் புராணங்களின் தத்துவ விமர்சனத்தோடு, மும்மூர்த்தி அம்சமான தத்தாத்திரேயர், கணபதியர்களின் தோத்திரங்களையும் கொண்ட நாரதபுராணமானது, கோவர்தன கிரியான யாதவ மலையின் ஸ்ரீ கிருஷ்ண லீலா மகத்துவங்களையும் கொண்டதாகும்.

மானுட வாழ்வுக்கான அத்யாவசியப் படிப்பினை கள், தாத்பர்யம், முதலான அனைத்தையும் (சுருக் கெழுத்து) ''ஸார்ட்ஹாண்டில்'' தருவது இந்தப் புராணம்.

தேவாதி தேவர்களும், மாநுட அசுரர்களும், கானகத்து விலங்குகள், ஊர்வன, பறப்பன முதலான அனைத்து உயிர்களுக்கும், எல்லாத் தாவர மற்றும் விருட்சங்களுக்குமான நெறிமுறைகள் - வளரும், வாழும் இலக்கணக் குறிப்புகளைக் கொண்டதோடு, மந்த்ர யந்த்ர நன்மை தீமைகள், மாநுடம் கடைப்பிடிக்க வேண்டிய கர்மானுஷ்டான விதிமுறைகள், க்ஷேத்ராடானம், விரதப்பலன்கள், சிரார்த்தம், திதிகளின் விளக்கங்கள், யாகத்திலே தரப்படும் (தீயிலே போடப்படும்) அவிஸ், தேவலோகத்திலே உள்ள தேவர்களுக்குப் போய்ச் சேரும் விதம் முதலான பற்பல அற்புதங்களுக்கு விரிவுரையாக இருப்பது இந்த நாரதபுராணமாகும்.

கோட்டானிடம் நாரதர் சங்கீதம் பயின்ற வினோதமும், ருக்மாங்கதனின் வரலாற்று மகிமையோடும் விளங்கும் நாரதியபுராணமாகிய **நாரதபுராணம்,** 207 - அத்தியாயங்களும், 25,000 - சுலோகங்களையும் கொண்டதாகும்.

8. அக்கினி புராணம்

நெருப்புக் கடவுளான அக்கினி பகவானின் தீர்க்க தரிசனப் புராணமிது. பூலோக வசிஷ்ட முனிவருக்கு, தேவலோக அக்கினி பகவானே கூறிய நேரடிப் புராணத்தின் நினைவுக் குறிப்புகளின் தொகுப்பு இது.

தனுர் வேதம், கந்தர்வ வேதம், ஆயுர் வேதம், யமகீதை, சாந்திமந்திரம், சர்வஜீவ வசிய மந்திரம்,

முதலானவற்றோடு செயல்வடிவத்திற்கான இயலிசை நாடகக் குறிப்புகளையும், கொண்டது.

நாடிகளின் தத்துவம், சர்வரோகங்களுக்குமான நிவாரண மந்திர மகத்துவம், ரண சிகிச்சை முறைகள், தேகப்பயிற்சியின் அவசியம் பற்றிய விளக்கம், முதலானவற்றோடு, ஆலய மூலவிக்ரஹங்களை அமைக்க - வடிக்க - வேண்டிய மூலப்பொருள் மற்றும் ஆகமமுறைகள், விக்ரஹப்பிரதிஷ்டை, கும்பாபிஷேக நடை முறைகள், சிற்பிகளுக்கான அத்யாவசிய அடிப்படை இலக்கணம், ஹோம-யாக-குண்டடங் களுக்கான வாஸ்து சாஸ்திர (கட்டிடங்களை அமைக்கும்) வழிமுறைகளும் அக்கினி புராணத்திலே உண்டு.

பிரதான வித்தைகள் பதினெட்டின் தத்துவார்த்த விளக்கங்களோடு, கவிச்சக்ரவர்த்தியின் இதிகாசநாயகன் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் வரலாற்றுத் தத்துவத்தோடு பொலிகின்ற **அக்கினி புராணம்**, 383 - அத்தியாயங் களாக, 15,000 - பாட்ல்களோடு விளங்குவதாகும்.

9.மார்க்கண்டேய புராணம்

''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' எனும் பொது நீதிக்கு இலக்கணமாக விளங்கியவர், என்றும் பதினாறு வயதினரான மார்க்கண்டேய மகிரிஷி.

அந்த சிரஞ்சீவி மாமுனிவர் சிரத்தாபக்தியோடு தொகுத்தளித்த புராணக் காவியம் இது.

தேவாசுரர்களைப் பற்றிய தெளிவான விளக்கமும், **தேவகுரு பிரகஸ்பதி, அசுரகுரு சுக்கிராச்சாரியர்**களின் வரலாறு, ஆதிபராசக்தியின் பற்பல அவதாரங்கள், அனுக்கிரகங்கள், ஸ்ரீமகாவிஷ்ணு, பூமியிலே மானுட அவதாரங்களை ஏன் மேற்கொண்டார்? எனும் கேள்விக்கான தீர்க்கமான விடையையும் கொண்டது இந்தப் புராணம்.

மது போதையால் பலராமருக்கு ஏற்பட்ட பிரம்ம ஹத்திதோஷம், கிருஷ்ணார்ஜுனர்களின் அகால மரணத்திற்கான காரணகாரியம். **"பாஞ்சாலி ஏன் ஐவருக்குப் பத்தினியானாள்?"** எனும் கேள்விக்கு, தத்துவ மேற்கோளுடன் உத்தமமான பதில்களோடு விளங்கும் மார்க்கண்டேய புராணம், சுமார் ஒன்பது ஆயிரம் பாடல்களைக் கொண்டதாகும்.

10. சூர்யபுராணம்

நாரத முனிவருக்கு மனு உபதேசித்த இந்தச் சூர்யபுராணம், உலகத்தை உவமை காட்டி, பிரம்மத்தை விளக்குவதிலிருந்து தொடங்குவதாகும்.

''புராணப்புதையல்'' எனக் கூறும் வகையிலே, ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, சிவகுமாரப் பிள்ளையார் ஆன விதம், கிருஷ்ணரின் சகோதரியை கோபாவேச முனிவரான துர்வாசர் மணந்த காரணத்தோடு, ஸ்ரீ மஹாலெட்சுமி விரும்பாத இடங்களின் பட்டியலையும் கொண்டது.

ஜெயதேவரின் **''கீத கோவிந்தம்''** நூலுக்கு மூல இலக்கணமாக விளங்கும் இந்தச் சூரிய புராணத்திலே, சொப்பனங் களின் பலன், க்ஷேத்ராடான பயன், முதலாவையும் உண்டு. 575 - அத்தியாயங்களோடு, 18,000- சுலோகங் களோடு விளங்குகிறது **சூர்யபுராணம்.**

11. இலிங்கபுராணம்

ஸ்ரீ பரமேஸ்வரனுக்கான அரு, உரு, அருவுருவ நிலைகள், திருவண்ணாமலை அருணாசலர். அவரது திருவுருவத்தத்துவம். சிவசக்தியரின் அர்த்தநாரீஸ்வர ஏகவடிவமாகிய இலிங்கவிளக்கம், சைவசமயத்தின் பிரதான கோட்பாடுகளான பதி, பசு, பாச விளக்கமும், சிவதீக்ஷை, சைவ சமய விரதங்கள், பஞ்சாக்ஷர மகிமை, சிவயோக தியானங்களின் பலாபலன்களோடு, ஸ்ரீ ருத்ரமந்திரத்தையும் தெளிவாகத் தருவது சிவபுராணம்.

எட்டுவித சிவமூர்த்தங்களின் தத்துவ உருவ அமைப்பு விளக்கம். சிவபெருமானது திரிபுர(முப்புற) தகனத்திற்கான காரிய காரணங்கள், நந்தியின் அருமை, பஞ்சாட்சர பாராயண மகிமைகளோடு விளங்கும் **லிங்கபுராணம்**, 163 - அத்தியாயங்களையும், 11- ஆயிரம் சுலோகங்களையும் கொண்டதாகும்.

12. வராக புராணம்

பூமாதேவியிடம் ஸ்ரீமந்நாராயணனே கூறிய பெருமையைப் பெற்றது இந்த வாரக புராணம்.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களிலே, வராக அவதாரத்திற்கான அவசியத்தை, முக்யத்துவத்தை ஆதாரங்களோடு விளக்குகிறது இந்தப்புராணம்.

தேவ அபசாரங்களான முப்பத்தி இரண்டுக்கும் விளக்கமும், நந்தியம் பெருமானின் திருமண விபரம், அகஸ்தியகீதை, பித்ருகீதை, ருத்ரகீதை, சிவகீதை முதலானவற்றோடு, பூமியிலே காடுகள் இருக்கவேண்டிய அவசியம், **காடுகளை அழித்தால் - அழிப்பதால் - மானுடத்திற்கு ஏற்படும் சீரழிவு**களை விளக்குவதோடு, உலக ஆரோக்கியத்திற்கு, ஒவ்வொரு வீட்டிலும் மரங்களை வளர்க்க வேண்டிய அவசியத்தை தெள்ளத் தெளிவாக எடுத்துச்சொல்வதோடு, நாத்திகவாதங்களும் அதன் விளைவாக வந்த விதண்டாவாதங்களும் பூமியிலே தோன்றிய விதம், அதன் கதி ஆகியவற்றை விமர்சிக்கும் **வராகபுராணம்**, 218 - அத்தியாயங்களையும், 24 - ஆயிரம் பாடல் களையும் கொண்டதாகும்.

13. கந்த (ஸ்கந்த) புராணம்

பதினெட்டுப் புராணங்களின் மொத்தப் பாடல் தொகை நான்கு லட்சமாகும். நாலில் ஒரு பங்கு -லட்சம்-

பாடல்களைக் கொண்டு, மிகப்பெரிய புராண இலக்கிய மாகத் திகழ்வது கந்தபுராணம்.

1194 - அத்தியாயங்களும், 11-லட்சம் சுலோகங் களையும், காசிக்காண்டம், பிரமோத்தரகாண்டம், மாகேஸ்வர..., வைஷ்ணவ..., பிரம்ம..., நாகர..., ப்ரபாச காண்டம் முதலான ஏழு காண்டங்களோடு விளங்கும் கந்தபுராணத்திலே, இதிகாசங்களிலேகூடக் காணக் கிடைக்காத பல அறிவியல், விஞ்ஞான அற்புதமான குறிப்புகள் நிறைந்துள்ளன.

காஞ்சிபுரத்துக் குமரகோட்டத்திலே, **கச்சியப்ப சிவாசார்யர்** தமிழிலே பாடிய ஆறுகாண்ட, கந்தபுராணம், 81-ஆயிரம் பாடல்களைக் கொண்டது. ஏழாவது காண்டத்தை, **குகனேரியப்ப முதலியார்** தமிழிலே பாடினார்.

அண்ட சராசரங்கள் அனைத்திற்குமான ஏழுகோடி மந்த்ரங்களும், **''சரவணபவ''** எனும் ஆறெழுத்துள் ஒடுக்கம் என்பதைத் தெளிவாக்கும் ஸ்கந்த புராணத்திலே... பாரதத்துப் பூமி நூல் விளக்கமும், முக்கடலும் ஒன்றாகித் தவழுகின்ற தமிழகத்தின் தெற்கெல்லையான கன்னியாகுமரியின் பெருமை மகத்துவங்களையும், ஆதிக் கேரள அருள் தரும் ஆலய விளக்கங்களையும் கொண்ட - கந்தபுராணத்திலே, ஸ்ரீமுருகப் பெருமானின் முழுவரலாறு, படைவீடுகளிலே அவர் நடத்திய திருவிளையாடல்கள், தட்சயக்ஞ வரலாறு,

சிவசக்தி பூஜாமகாத்மியம், சூதகீதை, மாநுட முக்தியின் விளக்கங்களையும் கொண்டது. ஸ்ரீஆதிசங்கரரின் வேதாந்த பாஷ்யத்திற்கு மூல இலக்கணமாகவும் விளங்குவது இந்தக் **கந்தபுராண**மே.

14. வாமன புராணம்

சிதம்பர நடராஜருக்கும் ஆருத்ரா தரிசனத்திற்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பை, ஸ்ரீவைஷ்ணவ புராணமாகிய வாமன புராணத்திலே மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதால், சைவ வைணவபேதாபேதச் சச்சரவெல்லாம், இடைக்காலத்திலே ஏற்பட்ட வாயாடி வம்பர்களின் ''சில்மிஷம்'' என்பதை நாமெல்லாம் உணர்வோமாக.

வாமன புராணத்திலே, நூற்றியெட்டு திவ்ய தேசங்களிலும் ஸ்ரீமந்நாராயணன் எந்தெந்தப் பெயரோடு, எப்படிப்பட்ட திருக்கோலங்களிலே எழுந்தருளி சேவை சாதிக்கிறார், என்கிற முழுவிபரமும், அண்டசராசர ஏகவடிவ திரிவிக்ரமத்திருமால், மூன்றடியுள்ள குள்ள வாமனனாக உருவெடுத்து வந்த அவதாரத்தின் காரணமும், மூவுலகையும் ஈரடியால் அளந்து, மாபலி மன்னனை ஆட்கொண்ட விபரமும், கம்சன், சிசுபாலன், ராவணன் முதலான மாவீரர்களை, ஏன், எதற்காக, எப்படிப் பகவான் வதம் செய்தார் என்ற விளக்கமும், பன்னிரு ராசிகளின் சக்கர விமர்சனமும், ராசிகளால்

மாநுடத்திற்கு ஏற்படும் மகத்துவங்களையும் தெளிவாக விவரிக்கின்ற வாமன புராணத்திலே... **மாத விலக்கின்போது பெண்கள் ஏன் ''ஒதுங்கி''யிருக்க வேண்டும்**, என்பதற்கு ரதி மன்மத மேற்கோள் கதையுடன் மாதர்களின் தேகாரோக்ய படிப்பினையும் தரப்படுகிறது.

95- அத்யாயங்களையும் 2400 - பாடல்களையும் கொண்டது இந்த **வாமன புராணம்.**

15. கூர்ம புராணம்

அமுதத்தைப் பெறுவதற்காக மந்த்ரகிரியால் தேவாசுரர்கள், பாற்கடலைக் கடைந்தபோது, மலையின் சுழலைத் - மத்தைத் - தாங்கும் மாபெரும் கூர்மமாய் (ஆமையாய்) அவதரித்துத்துயர் தீர்த்த, திருமாலே கூறிய பெருமையைப் பெறுவது இந்தக் கூர்மபுராணமாகும்.

யுகம்தோறும் அவதரித்த இருபத்தி எட்டு வேத வியாசர்களையும், அத்தனைமுறை தொகுக்கப் பெற்ற நான்கு வேதங்களையும்... புராணங்களின் ஆதாரக் காரிய காரண வரலாற்றுக் குறிப்புகளையும் கொண்டு விளங்கும் இதிலே, பிரயாகையின் பெருமை, சிவசக்தி ஒன்றானது எப்படி, சக்திசிவ வழிபாடு, பலன்களோடு, வியாசகீதை, ஈஸ்வரகீதைகள், மாயச் சீதையை, இராவணன் ஏமாந்து போய் வேதவதியாக சிறையெடுத்த குறிப்பும், பக்தி யுள்ள பெண்மணிகள் சுமங்கலியர்களாகவே நிறைவாழ்வைப் பெறுகின்ற எளிய வழிமுறைகளையும் கூறுகின்ற

கூர்மபுராணம், 99 - அத்தியாயங்களையும், 5246 - பாடல்களையும் கொண்டு விளங்குவதாகும்.

16. மச்சபுராணம்

''ஓம்'' எனும் பிரணவத்தின் ஒலி விளக்கம், ஒளிக்கதிர்களான வேதங்களுக்கு, அசுரர்களால் ஏற்பட்ட விபத்திலிருந்து அவற்றை மீட்பதற்காக, ஸ்ரீமந் நாராயணன் எடுத்த முதல் திரு அவதாரம் மச்ச (மீன்) ரூபமாகும்.

அவதார கோலத்திலேயே மனுவுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு உபதேசித்த வரலாற்றுச்சாரமே, இந்த மச்சபுராணம்.

நாடாளும் மாமன்னர் மற்றும் மந்திரிகளுக்கான அறிவுரைகள், அமைச்சரவை எப்படி அமையவேண்டும், ஆளுனர் எப்படி நடுநிலையோடு செயல்பட வேண்டும், இமைப்பொழுதும் சேராமல் அராஜகத்தை அரசு நிர்வாகம் அழிக்கும் முறை, மன்னனின் உரிமை, மந்திரிகளின் கடமை... இப்படிப்பலப்பல இன்றைக்கும் பொருந்தும் - பொருந்த வேண்டிய - ராஜரீக அரசியலமைப்புச் சாசனமாக விளங்குவது மச்சபுராண்ம்.

பார்வதி தேவியின் திருமணம், கௌரிமாதாவின் 108 - நாமாவளி, தேவ குருவாகிய பிரகஸ்பதி, அரக்கர்களை ஏமாற்றுவதற்காக நாத்திகவாதத்தை ஏற்படுத்திய ஓரங்க நாடக விளக்கம், காலம் சென்ற முன்னோர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய முதற்கடன்

(பித்ருகர்மா), சிரார்த்த முறை, அவற்றைச் செயல்படுத்தும் விதம்; தான தர்மங்களின் பலாபலன்கள்; தானம் பெறுகிறவர்கள் எப்படி இருந்து தானம் பெற்று, அதை எப்படிச் செலவு செய்யவேண்டும் என்கிற விதிமுறைகள், குளக்கரையிலே - ஐயர் முன்னிலையிலே நாம் இறைக்கின்ற எள்ளுந் தண்ணீரும், எந்த வடிவிலே வானுலகில் இருக்கும் நமது முன்னோர்க்குப் போய்ச் சேருகிறது என்கிற விவரங்களையும் தெளிவாகக் கொண்ட **மச்சபுராணம்**, 292 - அத்தியாயங்களும், 1400 - பாடல்களையும் கொண்டதாகும்.

17. கருட புராணம்

''பெரிய திருவடி'' என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம் போற்றி வணங்குகின்ற கருடாழ்வாரை முன்னிலைப் படுத்தி, வைகுந்தவாசனாகிய ஸ்ரீ பரவாஸுதேவனே சொன்ன புராணம் இது.

ஆசாரகாண்டம், பிரேதகாண்டம், பிரம்மகாண்டம், ஆகிய மூன்று காண்டங்களையும், 318 - அத்தியாயங் களையும், 19,000 பாடல்களையும் கொண்ட கருட புராணம், காலத்தால் அழிந்தவைபோக 11 ஆயிரம் பாடல்களோடு இன்று விளங்குவதாகும்.

தேவாசுர மானுடர்களுக்கு ஏற்படும் 4448 - வியாதிகளுக்குமான அபூர்வ மூலிகை மருந்து வகைகள், அவைகளைச் செய்யும் முறை, வழங்கும் விதம், சாப்பிட

வேண்டிய காலம், அனுபானம், பத்தியம் முதலான அனைத்து விபரங்களோடு, ராஜநாகம் முதல், நட்டுவாக்களி, தேள், பாம்புக் கடிகளுக்கான விஷ முறிவு மூலிகை மருந்துகளின் விபரமும் கொண்டது.

பூலோகத்துக்கும் எமலோகத்துக்கும் தூரம் ''எண்ணூறு யோசனை'' என்ற துல்லிதமான கணக்கும், யமலோக முழுவர்ணனை, தர்மராஜா தர்பார், சித்திரகுப்த, அஷ்டதிக் பாலர்களின் விவரம், இடம். சொர்க்கத்தின் சுகபோகம், நரகத்தின் விதம்யாவும், கூறி... அனைத்து உலகங்களின் சட்ட ஒழுங்கு (பாப - புண்ணிய) நிர்வாக தலைமைச் செயலகமாக விளங்கும் யமலோகத்தை, சகல இலாகா விபரமுடன் விளக்கும் கருட புராணத்தை **''தேவருலக காவல் துறையின் சாசனம்''** என்றே கூறலாம்.

பில்லி சூனியத்தை இல்லாமலாக்கும் சுதர்சன மந்த்ரமும், ஸ்ரீஹரியின் 1008 அர்ச்சனை நாமாக்களோடு, நவரத்ன ஆபரணங்கள், அழகுக்கு மட்டுமல்ல, ஊழ்வினை தீர்வதற்கும், உடற்பிணி போவதற்கும் ஒன்பது ரத்தினங்களும் மானிடர்க்கு எப்படியெல்லாம் உதவுகிறது என்பதையெல்லாம் மிகத் தெளிவாக விளக்கும் **கருட புராணமானது**. கடந்த, நிகழ், எதிர்காலங்களைக் காட்டும் புனிதக் கண்ணாடி போன்றதாகும்.

18. பிரமாண்ட புராணம்

நாம் வாழுகின்ற இந்த மண்ணுலகைப் பேரழிவிலிருந்து ஒரு லட்சத்து அறுபத்தி எட்டாயிரம் முனிவர்கள், பத்துத் திசைகளிலுமிருந்து... பகலிரவு பாராமல் தவம் புரிந்து தியான பலத்தால் காத்து வருகின்றனர் என்பதை, இந்தப் புராணம் மெஞ்ஞான, விஞ்ஞான, ஆதாரபூர்வ அடிப்படை உண்மைகளோடு விளக்குகின்றது.

காட்டிலே ரிஷிகள் புரியும் யாகத்தாலும், யக்ஞத்தாலும் நாட்டுக்குப்பலன் எப்படி வந்து சேருகிறது என்பதையும், ராஜகோபுர, ஐந்து பிராகார, ஏழு பிராகாரங்களைக் கொண்ட மாபெரும் ஆலயங்களின் பூர்விகம் என்ன? என்பதையும், தியானச் சித்தர்களான மகரிஷிகள் யோகம் செய்த இடங்ளே பிற்காலத்துப் பெரும் க்ஷேத்திரங்கள் ஆனவரலாற்றையும், பக்தி யோகம், தவம், தியானம், யாகம், வேள்வி குடமுழுக்கு ஆகியவற்றிற்கான முழுவிளக்கம், செயல் முறைகளோடு.

லட்சுமி, கணபதி பூஜா முறைகள், யாக்ஞவல்கியர், பரசுராமர்களின் வரலாறு, ஸ்ரீகிருஷ்ண சகஸ்ரநாமம், ஸ்ரீராமச்சந்திரனோடு ருத்திரமூர்த்தியான சிவபெருமான் போர் புரிந்து நடத்திய திருவிளையாடல்கள், ஆதி பராசக்தியாகிய ஸ்ரீசக்ரநாயகியான, அன்னை ஸ்ரீலலி தாம்பிகை, அதர்மப்புயலாகச்சுழன்று, சர்வ லோகங்

களையும் துவம்சம்செய்து வந்த பண்டாசுரனை எப்படி வதைத்து ஆட்கொண்டாள் என்கிற விபரத்தையெல்லாம் கொண்ட **பிரமாண்ட புராண**மானது. நான்குபாகம், 146 - அத்யாயம், 12,000 பாடல்களைக் கொண்டதாகும்.

புராணங்களைச் சொன்னால் சுகம்!

மேலே கண்ட பதினெட்டுப் புராணங்களிலே... பாதிக்குமேல்... ஜெர்மானிய, ஆங்கில, பிரெஞ்ச், லத்தீன் மொழிகளிலே மொழி மாற்றம் செய்யப்பட்டு, நவீனயுக அணுவிஞ்ஞான ஆட்டம்பாம், ஸ்புட்னிக், ராடர்களாக, இண்டர்நெட், கம்ப்யூட்டர்களாக மலர்ந்து வருகின்றன என்பதை இந்தியத் தமிழர்களாகிய நாம் இனியேனும் முழுமையாக உணர்வோமாக!

புராணங்களைச் ''சொன்னால் சுகம்'' என்பதற் காகத்தான் மன்னாதி மன்னர்களும், நமது முன்னோர் களும் ஒவ்வொரு கோயிலிலும் மண்டபங்கள் கட்டி, புராணங்களைச் சொல்வதை தார்மிகச் சட்டமாகவே ஆக்கி, அதற்கென மான்யங்களையும் விட்டிருந்தனர். அந்தப் பொற்காலம் மீண்டும் தோன்றுமா தமிழகத்தில்?

ஆரம்பப் பள்ளிகளிலே அறநெறிப் பாடமும், இறை வழிபாடும், ஆத்திச்சூடி, நல்வழிகள் அற்றுப்போனதால் தான், நமது இந்தியத் தமிழர் சமுதாயம் இன்று துருப்பிடித்து இற்றுப் போய்கொண்டிருக்கிறது!

அளவுக்கு மீறிப் போன பகுத்து அறியும் ஆர்வவெறியிலே புதையுண்டு போன நமது, புராணப் பொக்கிஷங்களை மீண்டும் தமிழ் மக்கள் பாடுபட்டுத்தேடி அடைந்து பலன்பெற்றே ஆக வேண்டும்.

புராணங்கள் சத்தியமானவை, சாஸ்வதமானவை என்பதை ஆயிரமாயிரம் மேற்கோள்களைத் தந்து, நமக்கு அறிவைத் தர முயற்சித்திருக்கிறார், முக்தியடைந்த ஸ்ரீ காஞ்சிமாமுனிவர். அவற்றுள் ஒரிரு விஷயத்தை ''சாம்பிள்'' பார்க்கலாமா...

அந்தநாள் அறிவாளர்!

''வேதம்'' என்றால் ''அறிவு'' என்று பொருள். அக்காலத்து அறிவாளிகளான முனிவர்களும் ரிஷிகளும் அறிந்த உண்மைகளெல்லாம் வேதத்திலே... அடங்கியிருக்கின்றன.

அக்காலத்திலே ரெயிலோ, தந்தியோ, சினிமாவோ இல்லை! அந்தக் காரணத்தால் அவர்கள் ஒன்றும் தெரியாதவர்களென்று எண்ணக் கூடாது! அவர்கள் எழுதியுள்ள நூல்களைக் கண்டு, இக்காலத்திலும் நாம் வியப்பை அடைகிறோம். அக்காலத்தவர்கள் எவ்வளவு பெரியவர்கள், எவ்வளவு கீர்த்திவாய்ந்த அறிவாளிகள், எவ்வளவு ஞானிகள் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

- பண்டித ஜவஹர்லால் நேரு (கடிதங்கள்)

பொய்யல்ல நமது புராணங்கள்



"இப்போதும் அனேக யோகிகள், சித்தபுருஷர்கள் இருக்கிறார்கள், ஐஸில் கிடந்தாலும் நெருப்பில் கிடந்தாலும், அது அவர்களது சரீரத்தை பாதிப்பதில்லை. மழையை வரப் பண்ணுகிறார்கள். பெய்கிற மழையை நிறுத்தவும் செய்கிறார்கள் இப்படிப்பலர் அதீந்திரியமான சக்தியோடு இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நமக்குத்தான் எதிலும் நம்பிக்கையில்லை.

''புராணத்திலே காச்யபரிஷிக்கு கத்ரு என்ற பத்தினி அவர்களுக்கு **ஒரு பாம்பு குழந்தையாகப் பிறந்தது**'' என்று புராணம் சொன்னால், ''அபத்தம்'' என்று சிலர் சிரிக்கிறார்கள். ஆனால் 1958-ம் ஆண்டிலே, ஓர் மார்வாடிப் பெண்ணுக்கு **குழந்தையாக ஒரு பாம்பு** பிறந்த செய்தியை பேப்பரில் படித்து அதை மட்டும் நம்புகிறோம்.

''ராட்சதர்கள் பனைமர உயரம் இருந்தனர்'' என்று புராணங்கள் கூறினால் அது பொய்! ஆனால் 16 அடி உயர மனித எலும்புக் கூடுகள், பனிமலைக்குள்ளே மூடிக்கிடந்ததை கண்டு பிடிக்கப்பட்ட் இன்றைய உண்மைகள் கூறும் தன்னை என்ன?

நான்கு யுகங்களிலும் மனித உடம்பு பற்றி புராண ''சார்ட்'' டைப் பாருங்கள்.

கிருதயுகத்திலே எலும்புகள் உள்ளவரை ஒருவருக்கு ஆயுள் இருக்கும் தியான, யோக தெய்வ சக்திகளை மிகுதியாகக் கொண்டிருந்த அவர்களுக்கு ''**அஸ்தி கத பிராணர்**'' எனப் பெயர்.

திரேதாயுகத்திலே... மாமிசம் அழுகிப் போகும் வரை உயிர் இருந்தது! ''**மாம்ச கத பிராணர்**'' களான அவர்கள், யாக யக்ஞங்களைச் செய்வதிலே வல்லவர் களாக இருந்தனர்.

த்வாபரயுகத்திலே மக்கள் ''**ருத்ரகத பிராணர்**'' கள் எனப்பட்டனர். இவர்கள், ரத்தம் வற்றும் வரை உயிரோடு இருந்தவர்கள். பூஜை செய்வதிலே வல்லவர்கள்.

கலியுகத்திலே (இப்போது) வாழுகிற நாமெல்லாம் ''**அன்ன கத பிராணர்**'' கள். சோறு சாப்பிடும் வரைதான் நமக்கு உயிர், நமக்கு தியானம் செய்யும் சக்தியோ, யாகம் செய்யும் தகுதியோ, சிரத்தையுடன் பூஜை செய்யும் யோக்யதையோ இல்லாமல் போய்விட்டது! ''கிருஷ்ணா ராமா'' என்று சொல்லத்தான் தெரியும்.

ஐயாயிரம் வருஷத்துக்கு முந்தி கலியுக ஆரம்பத்திலே வியாசர், புராணங்களைக் கொடுத்தார் என்பது சாஸ்திரங்களில் சொல்லியுள்ள விஷயம், அதற்கு முன்பே புராணம் உண்டு. ஏற்கனவே இருந்த வேதங்களை

வியாசர் பல சாகைகளாகப் பிரித்துக் கொடுத்தது போலவே, இந்தப் புராணங்களையும் தாமே விரிவாக எழுதிக் கொடுத்திருக்கிறார்''

நமக்கு நாமே எதிரிகள்!

நவநாகரீகத்திலே எவரெஸ்ட் உயரத்தையும் தாண்டி ஆட்டம் போட்ட மேலை நாட்டு மக்கள் எல்லாம்கூட, **''ஹரே ராம! ஹரே கிருஷ்ண''** என சிரத்தா பக்தியோடு சொல்லிச் சுகம் பெறும்போது, சிவராம ஸ்ரீ கிருஷ்ண தேசத்தவராகிய நாம், நம்முள் பெரும்பான்மை, நமது மதாசாரத்திற்கே... எதிரிடையாகச் செயல்படும் கொடுமைகளை எப்படி விமர்சிப்பது? இவர்களை யார் வந்து வெல்வது? சுழலும் உலகம் உருண்டை தானே! மீண்டும் புராண - பக்திவழிப் - பொற்காலத்திற்கு நம்மவர்கள் பூரணமாக ஆட்படப்பிரார்த்திப்போமாக.

ஆதிக்கும் ஆதியிலே அனேகநூறு யுகங்களுக்கு முன்னே, பதிணெண் புராணங்களையும், ஜோதிச் சுடர்வடிவான அன்புச்சிவம், நந்திக்குச் சொல்ல, நந்தியம் பெருமான் அதை சனத்குமாரருக்குச் சொல்ல, அவரிடமிருந்து, அப்போதைய வியாச மகரிஷி அறிந்துணர்ந்து, எளிய நடையில் அழகாகத் தொகுத்து வைத்ததே இப்போதைய புராணங்கள்.

கிருதயுகத்திலே பிரம்மதேவரால் நூறு கோடிப் பாடல்களாக உருவாகி, திரேதாயுகத்திலே ஞான முனிவர்களால் ஒரு கோடிப் பாடல்களாக மாற்றிய

மைக்கப்பெற்று, துவாபரயுகத்திலே, மகாபாரத வியாசரால் **நான்கு லட்சத்து எட்டாயிரம் பாடல்கள்** கொண்டதாக, நாம்காணும் இன்றைய பதினெட்டுப் புராணங்களும் தொகுக்கப்பட்டன.

ஐந்தாவது வேதமெனக் கொண்டாடப்படுகின்ற மகாபாரதத்தைத் தொகுத்துப் பாடியவரும், பாடல்களைச் சுவடியிலே எழுதிட ஸ்ரீவிநாயகப் பெருமானே உதவிடும் பேறுபெற்றவரும், மகாபாரத இதிகாசத்திலே ஆரம்பத்திலே வரும் **சந்தனு மகாராஜா** முதல், இறுதி மன்னனாகிய **ஜனமேஜயன்** வரை வாழ்ந்த, ஏழு தலை முறை ராஜாக்களோடு, எல்லாம்வல்ல பகவான் ஸ்ரீ கிருஷ்ணரோடு, இணையிலா தேவவிரதமா மனிதரான பீஷ்மரோடு, ''யுதிஷ்டிரர்'' எனப்படும் தருமரோடு, தருமத்தின் பிம்பமான விதுரரோடு, தாய்க்குலத்துக் கற்பரசி காந்தாரியோடு, வீரத்தின் வடிவான காண்டீப (அர்ஜுனன்) னோடு, பாரதப் போரின் ''தீப்பொறி'' யாகிய பாஞ்சாலியோடு... இன்னும்... திருதாஷ்டிர... துரியோதன, கர்ண, சகுனியரோடெல்லாம்... கலந்து உறவு கொண்டு, வீரத்தைத் தாலாட்டியும், விவேகத்தைப் பாராட்டியும், துரோகத்தைச் சீறியும் சினந்தும் வாழ்ந்தவரும்... மகாபாரத பிரதானர்கள் யாவரும் மறைந்த பின்பும், நிறைந்த ஆயுளோடு சிரஞ்சீவித்வத்துடன் வாழ்ந்தவர் - இன்றும் வாழ்பவர் - ஆயிரக் கணக்கான ஆண்டுகள்! ஏழு தலை முறை ராஜ வம்சங்கள்! யுகயுகாந்திரங்களைக் கண்ட, கணித்த **வியாசபகவானது** வரலாறு காலமழை போன்றது. அதிலே சிலதுளிகளை அடியேன் காட்ட விழைகின்றேன்.

பாரத இதிகாச மூலவர்
வேதவியாசர்



துவாபரயுக ஆரம்பத்திலே, மகா தபஸ்வியான **பராசரமுனி**வருக்கும்,யமுனா நதியிலே படகோட்டிய செம்படவ குலப் பெண்ணாகிய **சத்தியவதி**க்கும் பிறந்த உத்தமபுத்திரர்தான் **வேதவியாசர்.**

''வியாசர்'' என்பது பொதுப்பெயராகும். ஒவ்வொரு நான்கு யுக முடிவிலே தோன்றும் பிரளயத்தை அடுத்து உருவாகும், ஒவ்வொரு துவாபரயுகத்திலும் ஒவ்வொரு வியாசர்கள் அவதரித்து... வேத இதிகாச தரும சாஸ்திரங்களை... மாநுட வாழ்வுக்கான பொதுச் சட்டதிட்ட சாசனங்களை உருவாக்குவது அந்தந்தகால வியாசர் களுக்கான பொதுப்பணியாகும்!

தேவாசுர மாநுடர்கள், அவற்றை மீறும்போது தான்... பாணாசுர, மஹிஷாசுர, சூரபத்ம, நரகாசுர, கம்ச, இரண்யாட்ச... ராவண, சிசுபால, துரியாதனாதியர்களின் வதங்கள் நிகழுகின்றன.

நம் வாழும் இந்தக் கலியுகத்துக்கு முன்னதான துவாபரயுகத்து வியாசரின் வாழ்வுக் குறிப்புத்தானிது.

ஞானியர் மட்டுமே அறியக் கூடிய வானவெளிக் கோள்களின் புனிதச் சங்கமப் புண்ணிய காலத்திலே, எந்த ஒரு ஆண்மகன் தனது ''**உயிர்த்துளி**''களை பந்தமோடு அணைக்கும் ஓர் பெண்ணிடம் இயல்பான வழியிலே தானம் செய்கிறானோ, அந்த விநாடியிலேயே துளிகள் கருவாகி, துரிதமாக உருவாகி ''**ரிஷிப் பிண்டம் ராத்தங்காது**'' எனும் பொன் மொழிக் கேற்ப உடனே பிறக்கும் குழந்தையானது, வேத இதிகாச, புராண வரலாற்று மாவீர, மகத்துவச் சித்தர்களாகிறார்கள்!.

திருமணமான ஆணும் பெண்ணும் சாந்தி முகூர்த்தத்திலே சந்திக்கும் முதலிரவானது, இரு உடம்புகள் கட்டிப்புரளும் காமவெறிக் கூத்தல்ல! சுப முகூர்த்தம் முடிந்து, ஆண்டுக் கணக்கிலேகூட சில, புதுமணமக்கள் காத்திருப்பர். சாந்தி முகூர்த்த நல்ல நேரத்திற்கு! அவளும் அவனும் இணைய வேண்டிய காலக்கணக்கை, நாளை... நாழிகையை துல்லியமாக நமது முன்னோர்கள் மணமக்களின் நிச்சயதார்த்தத்தின் போதே கணித்து விடுவார்கள்! ஜோதிடம், ஜாதகம் ராசி நட்சத்திரப் பொருத்தம் என்பதெல்லாம் சத்தியமானவை! சூரிய சந்திரர்கள் உள்ளவரை சாஸ்வதமானவை! **ஜோதிடம் பொய்யல்ல!** காசுக்காக "லோ லோ" என அலைந்து, கண்டபடி உளறும் பல **ஜோதிடர்கள்தான் பொய்யர்கள்!**

வியாச மகரிஷியின் ''திடீர்'' பிறப்பை நியாயப் படுத்தி உண்மையான தத்துவத்தைச் சொல்வதற்கு, இத்தகைய ஓர் ஆழமான அடித்தளம் அவசியமாகிறது!

மகா தபஸ்வியான பராசர முனிவர் யமுனா நதியைப் படகிலே கடக்கும் வேளையிலே... வானியல் கோள்களின், வசந்த காலச் சுப சங்கமப் புனித வேளை நெருங்குவதை அறிகிறார், நடு ஆற்றிலே படகைச் செலுத்திக் கொண்டிருந்த செம்படவப் பெண்ணைப் பார்க்கிறார். அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள். எண்ணமும் இதயமும் ஒன்றானது! யமுனா நதியின் நடுமணற்திட்டிலே. காரணக்கருவியான செம்படவச் சத்தியவதியை காந்தர்வமணம் செய்து... அவளது கன்னித் தன்மையைப் புண்ணியப்படுத்தினார் பராசரர்.

யமுனைத்தீவிலே துவாபரயுக வியாசரைப் பெற்ற சத்திய வதிக்குத் தனது தபோபலத்தையெல்லாம் தாரை வார்த்து மீண்டும் அவளைக் கன்னியாக்கிவிட்டு, கானகம் புகுந்தார் பராசரர் கடுந்தவம் புரிவதற்கு!

அவதார மூர்த்தியான துவைபாயனர் (வியாசர்) ஞானமேவடிவமாக வளர்ந்தார். காலத்தின் நியதிப்படி தாயைப் பிரிந்து தவத்திற்குப் புறப்படும் போது சத்தியவதியிடம் ''அம்மா! இதயத்தால் நீங்கள் எப்போது அழைத்தாலும் (நினைத்தால்) அப்போதே வந்து உங்கள் அருகில் இருப்பேன்'' என்று பத்திரி நாதம் சென்று தவத்திலே மூழ்கிவிடுகிறார்.

குருவம்சத்து அரசனாகிய **சந்தனு மகாராஜா,** தனது அஸ்தினாபுரத்தை ஆண்டு வந்த காலகட்டத்திலே... **கங்காதேவி**யைக் காணும் பேறு பெறுகிறான்! அவளையே

மணப்பதாக சபதமும் செய்கிறான். அவனது பூர்வ ஜன்ம புண்ணியத்தால். எண்ணம் செயலாகிறது! தேவவிரதனை - **பீஷ்மரை** - மகனாக அடைகிறான். கங்கா புத்திரனான பீஷ்மன், சுக்ராச்சார்யரிடம் ராஜ நீதியையும், நாரதரிடம் பக்தி சூத்திரங்களையும், மார்க்கண்டேயரிடம் ''யதி'' தர்மத்தையும் (துறவிகளின் தர்மம்) பிரம்மரிஷி வசிஷ்டரிடம் ஞானத்தையும், அவதாரபுருஷரான பரசுராமரிடம் வில்வித்தையையும், பிரம்மாவின் மானச புத்திரரான சனத்குமாரரிடம் ஆன்மஞானவிதங்களையும் பாடம் கேட்டுப் பயின்று... அனைத்திலும் திறன் பெற்று விளங்கினார் அன்னை கங்கையின் திருவருளால்.

மாவீரனும் மகாமேதையுமான தனது மகன் பீஷ்மரை சந்தனுவிடம் தந்துவிட்டு, கங்கா தேவி நதியோடு சங்கமமாகிவிடுகிறாள். மனைவியைப் பிரிந்த சந்தனு மன்னனின் சிற்றின்ப தாகம் அவனைப் பித்தனாக்குகிறது! செம்படவப் பெண்ணான சத்தியவதியை சிற்றன்னையாக்கிய பீஷ்மர், அவளது பிள்ளைகள் சந்ததி அரசோச்சுவதற்காக **''நான் என்றென்றும் பிரம்மச்சர்ய விரதமிருப்பேன்''** எனும் யாருமே செய்யாத - செய்ய முடியாத- சபதத்தை ஏற்கிறார்.

பட்டத்தரசியான சத்தியவதி, **சித்ராங்கதன், விசித்திரவீரியன்** எனும் இருபிள்ளைகளைப் பெற்று வளர்த்துப் பெரியவர்கள் ஆக்கி மணமுடிக்கிறாள். இருவருக்குமே சந்ததி ஏற்படுவதில்லை! வம்சம் தழைக்க மூத்த மகன் வியாசரை நினைக்கிறாள் சத்தியவதி! விசித்திரவீரியன் மனைவிக்கு **திருதாஷ்டிரன், பாண்டு**

என்ற இருவரையும்; **விதுரர்** எனும் தவச் செல்வரை அரண்ம்மனைத்தாதிக்கும் தந்து மறைகிறார் வியாச முனிவர். திருதராஷ்டிரன் காந்தாரி, பிள்ளைகள்தான்.. **துரியோதனனும்** தொண்ணுற்றி ஒன்பதின் மரும். பாண்டுவின் மக்களாக **தருமர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்.**

காலச் சுழலிலே பங்காளியர் இரு குடும்பமும், விளையாட்டாகச் சூதாடி, பகையாளிகள் ஆகின்றனர்! மண்ணாசையால் பற்பல சிக்கல்களைச் சந்திக்கிறது அஸ்தினாபுரத்து அரச குடும்பம்! பகைமூட்டம் தீயாகிக் கொழுந்து விட்டு எரிகிறது! துரியோதனனின் பேராசைத் தீக்குச் **சகுனி** எண்ணை வார்க்கிறான்! பீஷ்மர், கிருபர் முதலான ஞானியர் செஞ்சோற்றுக் கடனுக்காக மௌனிகளாகிறார்கள்! பாஞ்சாலதேசத்துப் பைங்கிளி, பலர் அறிய துச்சாதனனால், துகில் உரியப்படுகிறாள்! பாபத்தீ படபடவென்று வெடித்துப் படர்கிறது! குருவம்சத்தின் பெரும்புகழ், கோரமாகச் சரிவதைப் பொருக்கமுடியாத சத்தியவதியும், அவளது இருமரு மகள்களும் வனம் சென்று வியாசரால் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்ரமத்திலே தங்கியிருந்து, வாழ்வின் பிற்பகுதியை தியானத்திலே செலவிடுகின்றனர்.

சகுனி மாமனின் துணையோடு சூதாட்டத்திலே பாண்டவரைவென்று... அவர்களைக் கட்டிய துணியோடு காட்டிற்கு அனுப்புகிறான் துரியாதனன்!

இந்த நேரத்திலே, வம்சத்தின் முழுமுதல் அம்சமான வியாசமகரிஷி ஹஸ்தினாபுரம் வந்தார்! பாண்டவருக்கும் கௌரவர்களுக்கும் பாட்டனாராகிய அவர், தரும நியாயங்களை துரியோதனின் பேரவையிலே எடுத்துச் சொன்னார்! **விதியை மாற்ற குலமுதல்வரான வியாசராலும் முடியவில்லை!** பங்காளிப்போர், குருக்ஷேத்திரக் களத்திலே நடை பெற்றது; பார்த்தனுக்குச் சாரதியாக இருந்த ஸ்ரீ கிருஷ்ணர், பூபாரத்தை - பாண்டவர் கௌரவர்களைக் கா்ரணமாக வைத்துத் தீர்த்துக் கொண்டார்!

துரியோதனன் முதலான நூற்றுவரும் மாண்டு, பாண்டுவின் மக்கள் அஸ்தினாபுர அரியணை ஏறியதும் மீண்டும் வந்தார் வியாசர்.

தனது மூத்த மகன் துரியோதனனைக் கொன்ற பீமனை... ஆசீர் வதிப்பதற்கு பதிலாக உணர்ச்சி வெறியால், அவனைப் பொடிப் பொடியாகச் சிதைத்து விடுவார் எனஉணர்ந்த மாமாய ஸ்ரீகிருஷ்ணன், ஓர் இரும்புச் சிலையை ''இதோ பீமன்'' என்று திருதராஷ்டிரர் முன் நிறுத்த... அச்சிலையை... ஆவேசமுடன் திருதராஷ்டிரன் பொடிப் பொடியாக்கியதும் ஸ்ரீ கிருஷ்ண லீலையால் பீமன் பிழைத்தது போல, காந்தாரியிடம் ஆசிபெற வந்த பாண்டவர் ஐவரையும், தன்னை மறந்து அவள் சபிக்கப் போகும் சரியான நேரத்திலே அங்கு வந்த வேதவியாசர்... ''மகளே காந்தாரி! நடந்தது அனைத்தும் கடந்தவை! பாண்டவர்கள்தான் இனி உன் மைந்தர்கள்'' எனக் கூறி அந்தப் பத்தினித் தாயின் புனிதம் காத்தார்.

''அண்ணன் தம்பி, மாமன் மருமகன், பிதாமகர், குருமகான் முதல்ான அனைவரையும் கொன்று குவித்ததால் வந்த இந்த அரசபோகம் எனக்கு வேண்டாம்" என்று விரக்தியால் கதறிய தருமரிடம் வந்த வியாசர்...''யுதிஷ்டிரா! உன்னை நம்பித் தன்னுயிரை ஈந்து, இந்த மணிமுடியை உனக்களித்த லட்சோப லட்ச அஸ்தினாபுரத்துச் க்ஷத்திரிய மாவீரர்களுக்கு நீ செலுத்தும் மரியாதை இது தானா? க்ஷத்திரியனுக்குப் போர் ஒரு வீர விளையாட்டு! விளையாட்டிலே நீயும் உன் தம்பிகளும் தருமத்தைத் துணைகொண்டு ஜெயித்தீர்கள்! தருமத்தின் தீர்ப்புக்கு நீ தடைபோடலாமா?" எனப்பல நீதிகளைச் சொல்லி தனது (குரு) வம்சத்தை வாழவைத்தபின் கானகம் சென்றார் கடுந்தவம் புரிய.

காலச் சுழலால் வயோதிக நிலைகண்டு, திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி ஆகியோர் வனம் சென்று, வியாசரால் ஆசிரமவாசிகளாகி வாழ்ந்தபோது... குருக்ஷேத்திரத்திலே மாண்டு போன தனது குலத்தவர்களைக் காண விரும்பினர் மூவரும். பாண்டவர்களையும் வரவழைத்த வியாசர், ஒரு நாள் நள்ளிரவிலே கங்கை நதியின் நடுவில் சென்று நின்றபடி போரிலே மடிந்து, வீர·சொர்க்கம் கண்டிருந்த பீஷ்மர், கர்ணன், அபிமன்யு, துரியோதனன் அவனது தம்பிமார் மற்றும் அனைவரையும் தனது தபோபலத்தால் பெயர் கூவி அழைத்து நதிக்கரையோரம் நிற்கவைத்தார்.

பாண்டவர் குடும்பமும், கௌரவர் குடும்பமும் முழுமைத்துவம் பெற்ற திருக்காட்சியை, கங்கா தேவியுடன் யாவரும் கண்டு பரவசம் கொண்டனர். ''துவாபரயுக முடிவிலே நீங்கள் எல்லோரும் நிரந்தர பந்தபாசத்துடன் சொர்க்கத்திலே நிலைத் திருப்பீர்கள்'' என்று கூறி விட்டு வியாச மகரிஷி பத்திரி நாதம் சென்று குகையிலே அமர்ந்து மீளாத்தவம் செய்யப் போகும் வேளையிலே... பிரம்ம தேவரே அவரிடம் வந்து, ''வியாசரே! உங்களது குருகுல சரிதத்தை; குருக்ஷேத்திர மகத்துவத்தை முழுவதுவாக உடனிருந்து அறிந்து அனுபவித்த தாங்கள், இந்தப் படிப்பினை தருகின்ற இதிகாசத்தை உலகுக்குப் பாடித்தர வேண்டும்'' எனக் கேட்டார்.

''யான்செய்த தவமனைத்தின் பலனாக, ஞான திருஷ்டியால் ஆதிமுதல் அந்தம் வரையிலான குருகுலச் சரிதையை கண்டுணர்ந்து என்னால் - பாடமுடியும்; ஆனால் பாடுவதை நிறுத்தி... அதைச் சுவடியிலே எழுதும்போது ஞான திருஷ்டித் தொடர் விடுபட்டுப் போகுமே...'' என்று வியாசர் கூற...' உங்களுக்கு ஈடுகொடுத்து எழுதக் கூடிய ஒருவரை ஏற்பாடு செய்துள்ளேன்'' என்று கைகூப்பிப் பிரார்த்தித்தவுடன் ஸ்ரீ கணேசப் பெருமான் பிரசன்னமானார்.

ஆனைமுக அண்ணல் எழுத, அன்புமய வியாசர் பாட மகாபாரதம் பூர்த்திபெற்றது. மஹாபாரத இதிகாச ஆரம்ப ராஜாவான சந்தனு முதல், அர்ஜுனனின் பேரனாகிய பரீக்ஷித் சக்ரவத்தியின் பிள்ளையாகிய

ஜனமேஜயன் வரையில் ஏழு தலை முறையோடு குல முதல்வராக விளங்கிய வியாசரை ஆசி கூறி வாழ்த்திய பின், பத்திரிநாத வியாச குகையிலிருந்து ஸ்ரீ விநாயக மூர்த்தி விடைபெற்றார்.

அந்த மகா பாரதத்தை, நம் காலத்து வியாசராக விளங்கிய **சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சார்யர்** அவர்கள் ''**வியாசர் விருந்து**'' என்ற பெயரிலே வழங்கியுள்ளார் (1956).

1970-ல் அந்த மகானை சந்தித்து பத்து நிமிடம் அவரோடு அளவளாவும் பேறு பெற்றேன் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) **"விலங்கொடித்த வீரர்கள்"** ''எனும் காந்தி மலரை எழுதி, முதற் பிரதியை ராஜாஜியிடம் வழங்கினேன். அவர் அன்று என்னிடம் தெரிவித்த நாட்டு நிலைபற்றிய நடுநிலை. விமர்சன கருத்துக்கள், 14, 10, 1970 தேதியிட்ட **நவசக்தி** நாளிதழில் பிரதானச் செய்தியாக வந்துள்ளது.

''முனிவர்களும் ஞானிகளும் தங்களுடைய இதயங்களைக் கடைந்தெடுத்த அமுதத்தைத் தர நிற்கிறார்கள். தெய்வப் பிரசாதமாகிய முனிவர் களுடைய அறிவும் அருளும் பெற்றுப் பயனடை வோமாக.

நம்முடைய இதயத்துக்குள் தினமும் குரு க்ஷேத்திரம் நடைபெறுகிறது. நல்ல எண்ணங்கள் ஒருபுறம் நிற்க, பாப எண்ணங்கள் மற்றொருபக்கம் நம்மை இழுத்துச் செல்லுகின்றன.

நமது இதிகாசங்களை வெறும் ஈசாப் கதைகளாகச் செய்து விடுவது, எனக்குச் சம்மதம் இல்லை; நாம் அறிவு பெறுவதற்காகவும், உள்ளத்தில் அழுக்கைப் போக்கிக் கொள்வதற்காகவும் புராணங்களும், நம்முடைய புனித நதிகளும் உயிர்கொண்டு ஓடுகின்றன அவற்றில் குளிப்போமாக..."

"வியாசர் விருந்து" முன்னுரையிலே ஸ்ரீராஜாஜி எழுதியவற்றுள் சில வரிகள் இவை. அந்த ''விருந்தை'' நாமெல்லாம், நமது வாரிசெல்லாம் ''உண்ண'' வேண்டும், அதன் ஆதி கர்த்தாவான சத்தியச்சித்தர் வியாசரைத் தவறாமல் எண்ண வேண்டும். பழம் பெரும் சித்தர் பலரைச் சில வரிகளிலே அடுத்துப் பார்ப்போம்.

ஆயுதமா? சித்தாடலா?

ஆதிசங்கரர், ராமானுஜர், ஏசுநாதர், புத்த பகவான், நபிகள் நாயகம், ராமலிங்க அடிகள், சிவானந்த பரமஹம்சர் போன்ற மகான்கள், பன்னிரண்டு அங்குல சுவாசத்தை உள்ளடக்கி, அட்டமா சித்திகளைப்பெற்று, பூரண நிலை கண்டவர்கள். தங்கள் கொள்கை - நன்மை களை - உலக மக்களிடையே பரப்புவதற்காக மட்டுமே, அட்டமா சித்திகளைச் செய்து காட்டினர்.

சுயநலத்தை முன்னிட்டோ, தற்பெருமைக்காகவோ சித்தாடல் செய்யவில்லை அவர்கள். ஆயுத பலத்தால் - பேரரசர்களால் கூட அடக்க முடியாத அரக்கனாகிய "அங்குலிமாலன்" என்பவனை, புத்தர் தனது யோக சித்தியால் திருத்தி உண்மையான பிட்சுவாக்கினார்.

- சுவாமி சங்கரானந்தா

(மாணிக்கவாசகரின் ஞானத்தாழிசை நூல் விளக்க உரையிலிருந்து)

உரோம ரிஷி

உருவாக, அருவாக, உருவருவாக எதுவாக வேண்டுமானாலும் மாறக்கூடிய அட்டமா சித்திபெற்ற பதிணெண் சித்தர்களிலே உரோம ரிஷியும் ஒருவர்.

போகர் போன்ற வித்தகச் சித்தர்கள் சீனா, ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு ககன மார்க்கமாய் சென்று வந்தது போல, இவர் மூலிகை தேடி, ரோமாபுரிக்குச் சென்று மீண்டதால் ஏற்பட்ட காரணப் பெயர் இது.

புசுண்ட மாமுனிவரின் தவச் செல்வர் இவர். தேகமனைத்தும் மயிர்கால் உடையவர். இவரது தேகத்திலிருந்து ஒரு ரோமம் உதிர்ந்தால் ஒரு பிரம்மனின் ஆயுள் முடிவாம். அப்படி மூன்றரைக்கோடி பிரம்மாக்களின் முடிவுக்குப் பிறகுதான் இவருக்கு முடிவு.

கல்பகல்ப கோடி ஆண்டு கண்டவர்! காலகாலனை எதிர்த்து வென்றவர்.

"மூடாமல் சிறுது மனப்பாடம் பண்ணி
முழுவதுமே வந்ததுபோல் பிரசங்கித்து
வீடேது உடலேது யோகம் ஏதென
வீண்பேச்சுச் சொல்லியல்லோ மாண்டு போனார்
காடேறி மலையேறி நதிகளாடிக்
காய்கிழங்கு சருகு தின்று காமத்தீயால்
சூடேறி மாண்டவர்கள் கோடா கோடி
சொரூப முத்தி பெற்றவர்கள் சுருக்கமாச்சே"

- உரோமரிஷி ஞானம்

போக(ர்)நாதர்

காலாங்கி நாதருக்கு மாணவர், கடல் ஏழைத் தாண்டி சஞ்சீவி மூலிகையைக் கண்டு பிடித்தவர். போகர் ஏழாயிரம், நிகண்டு பதினேழாயிரம், யோகம் ஏழுநூறு முதலான இவர் செய்த மருத்துவ நூல்கள் மகத்தானவை!

பழனியிலே சித்தர்களின் சங்கமத்தைக் கூட்டியவர், பார் முழுதும் விண்ணிலே அட்டமா சித்திகளால் பறந்து புகழ் ஈட்டியவர். இடைக்காடர், கருவூர்த்தேவர், மச்சமுனி, நந்தீசர், புலிப்பாணிச் சித்தருடன் ஏராளச்சீடர்களாம் இவருக்கு.

சிங்கத்துக்கும், புலிக்கும் பூனைக்கும் கூட மந்த்ரோபதேசம் தந்தவர் இந்த போகநாதர்!


எண்பத்தோறு சித்தருடன் இரவுபகல் பாடுபட்டு... தென்பழனி மூவரை... நவபாஷாணத்தால் (ஒன்பது விதபச்சிலை மூலிகைச் சாறுகள்) உருவாக்கம் செய்தவர்.

சித்தமருத்துவத்தின் பெரும்புகழில், இவருக்குப் பெரும்பங்கு உண்டு.

காயகல்பத்தின் ஆதி கர்த்தர்! கற்பகோடி காலம் இருந்தவர், அற்புதமான மாயமந்த்ர மகத்துவங்களின் உருவகமானவர்.

தென்பழனிக் கோயிலிலே தனிச் சன்னதி உண்டு. பழனிமலை ஆலயத்திற்குச் செல்வோர், போகர் சன்னதிக்கும் சென்று தேகாரோக்ய, திவ்யசுகங்களைப் பிரார்த்தித்துப் பெறலாம்.

காவியச் சிலுவைச் சித்தர்!



மனிதனைத் தெய்வமாக்கும் மந்த்ரங்களாகத் திகழ்வது **ஏசுநாதரின்** "மலைப்பிரசங்கம்". புனிதமிகு அந்தச் சாசனத்தை, நமது கவியரசர் **கண்ணதாசன்** அவர்கள், எளிய தமிழில் இனியமுறையிலே பாடுகிறார் "**ஏசுகாவிய**"த்திலே.

"சொல்வது மட்டுமல்ல உப்தேசங்கள்
சொல்பவனும் நடப்பதுதான் உயர்நியாயங்கள்
நல்லவற்றைப் பிறர்கேட்கச் சொல்லிவிட்டு
நான் மட்டும் மறந்துவிட்டால் நியாயமென்ன?
எல்லோர்க்கும் கிடைப்பதில்லை மோட்சலோகம்,
இயம்புவதைக் கடைப்பிடிப்போன், நேரே செல்வான்.
சொல்லுகிறேன் கேளுங்கள் அதன்பின் நானும்
சொன்னபடி வாழுகிறேன் என்றார்" ஏசு.

சிவ வாக்கியச் சித்தரின் அருளற வேட்கை வெறிபோல, தவயோக ஏசுவின் உள்ளக்குமுறலை, காவிய வரிகளாகத் தருகிறார் நமது கவியரசு.

ஒருவன் தன்னை மதத்தில் சேர்க்க ஓடியாடி அலைகின்றீர்!
ஓடிவந்த மனிதனுக்கு உண்மை என்ன சொல்கிறீர்?
இருமடங்கு நரகந்தன்னில் இட்டுக்கொண்டு சேர்க்கிறீர்,
இந்த வேலை செய்துகொண்டு, என்ன வேதம் படிக்கிறீர்?

பதினெண் சித்தர் தம் சாதனை முழுதுமே பார்க்க முடிகிறது ஏசுவிடம், எதையும் தருகிற இறையருட் செல்வர் ஏசுவும் **சத்தியச்சித்தர்** தான்.

பாம்பாட்டிச் சித்தர்

கானகத்து விலங்குகளை வேட்டையாடிக் களித்த வால்மிகி...நாரத முனிவரால், "**மராமரா**" ஞானம் பெற்று, இராமாயணத்தை எழுதியது போல...

பாம்புகளைப்பிடித்துப் பழக்கி படமெடுத்து அதை ஆடவைத்து பிழைத்த இந்தச் சித்தருக்கு, நவரத்னப் பாம்பு ஒன்று கிடைத்தது. அது ஆடாத நிலைகண்டு வெகுண்டார். அப்போது அங்குவந்த **சட்டைமுனி** எனும் மாதவச் சித்தர் அவருக்கு ஞான உபதேசம் செய்து... அவரைப் **பாம்பாட்டிச் சித்த**ராக்கினார்.

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து பாண்டிய நாட்டிலே சித்த ஞானம் பெற்றவர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, ஒரு நாட்டின் நலனைப் பாடுபட்டுக் காத்தவர்.

ஆடி ஆடிச் செத்தபாம்பை மீண்டும் படமெடுத்து ஆடவைத்த சுத்தஞானி.

சித்தர் ஆருடமும், வைத்தியமாமணி நூல்களையும் சத்தியஞானக் கோவையாகப் பாடியவர்.

மதாச் சாரங்களிலே இடைக்காலத்திலே ஏற்பட்டு நிலைத்துவிட்ட சில "மேதை"களையும், சாதிச் சண்டைகளையும், சமயப் பூசல்களையும், நீதிக்கு ஒவ்வாத நித்யகண்ட வேடதாரிகளையும் ஓட ஓடச்சாடியவர்.

ஊரைத்திருத்துமுன் உன்னைத் திருத்திக் கொள்! வீடு திருந்தினால் வீதி திருந்தும், வீதி சுத்தமானால், ஊர் பவித்ரமாகும்! ஊர்களின் நலனே உலகத்து ஆரோக்கியம் என அகிலஉலக சமதர்ம நீதிகளைப் பாம்பை முன்வைத்துப் பாடிப்புகழ் பெற்றார் பாம்பாட்டிச் சித்தர்.

"ஓங்காரக் கம்பத்தின் உச்சிமேலே
உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்
ஆங்காரக் கோபத்தை அறுத்து விட்டே
ஆனந்த வெள்ளத்தைத் தேக்கிக் கொண்டே
தூங்காமல் தூங்கியே சுகம் அடைந்து
தொந்தோம் தொந்தோம் என்று ஆடுபாம்பே"

-பாம்பாட்டிச்சித்தர்

"ஓம்" என்பதைப் புரிவோமா!

"ஓம்" என்பதற்கு "ஆம்" "பரம் பொருள்" என்பது பொருள். இந்த இருபதாம் நூற்றாண்டிலும், பரம்பொருள் இருக்கிறது. அவனே நேற்றும், இன்றும் நாளையுமாக என்றும் இருப்பவன். அவன் நிலையானவன்! சிருஷ்டி நிலையானது!

"நான் சாதகன், அவன் பகவான்; இந்த சிருஷ்டி பூஜைப் பொருள், அவனது வழிபாட்டுக்கு உதவுவது" இத்தகைய பாவனை நமது உள்ளத்தில் நிரம்பும்போது தான் "ஓம்" என்பதை நாம் புரிந்தவர்களாவோம்.

- ஆச்சார்ய வினோபாபாவே

கோரக்கர்

யுகயுகாந்திரமாக வாழ்ந்திருந்த அட்டமாசித்தி பெற்ற ''மச்சேந்திரர்'' எனும் முனிவருக்குச் சீடர் இவர்.

முதுமைக்கும், உடம்பின் தளர்ச்சிக்கும், மோகதாகத்தீர்வுக்கும் எது காரணம் என ஆராய்ந்து... உடம்பினை என்றும் இளமையாய், அழகனாய் இருக்க உதவும் காயகல்பத்தைக் கண்டு பிடித்தவர்.

எல்லாம் வல்ல காயகல்பம் கண்டதுமே ''நான்'' என்ற எண்ணம் வந்ததுமே. ஞானேஷ்வரக் குழந்தையிடம்'' புலிப்பாடம்'' கேட்டு, தன் மனத்து ஆணவத்தைக் கொன்று, புதுப்பிறவிகண்டவர்.

சில நோய்களைத் தீர்க்கும் நலந்தரும் மருந்துக்கு கஞ்சாவும் ஓர் உயிர்ச் சரக்கு என்பதைக் கண்டறிந்தவர்.

காலமெல்லாம் சித்த வைத்திய ஆய்வு செய்து ''**கொரக்பூர் வைப்பு**'' எனும் மருத்துவ இலக்கியத்தை எழுதியவர்.

("U.P" யில் உள்ள கோரக்பூரிலே சுமார் 50 ஏக்கர் பரப்பளவு மிகப் பெரிய பளிங்குப் பேராலயம்! அதன் மூலவர், "கோபக்நாதர்" என்கிற இளம் சித்தர்! இவரது குருவின் பெயரும் மச்சேந்திர முனிவர்! இந்த கோரக்கர், அந்த கோபக் நாதராக இருக்கலாமோ? - வே.கி)

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்?
பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து பெண்ணைத்
தாய்போல் நினைத்துத் தவமுடிப்ப தெக்காலம்.''

-பத்ரகிரியார் (மெய்ஞானப்புலம்பல்)

தேரையர்

மக்களுக்கு மருத்துவச் சேவை செய்வதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டவர்.

திருடிப் பொருள் சேர்த்து ஸ்ரீரங்க நாதருக்கு ஆலயம் கட்டிய திருமங்கை ஆழ்வாரைப் போல... குருவிடமே குருடராக நடித்து, சித்த மருத்துவ மகத்துவ நுணுக்கத்தை உணர்ந்தவர்.

திருக்கோஷ்டியூர் நம்பியிடம் பதினெட்டு முறை அலைந்து பெற்ற அரிய திருமந்திரத்தை... ஊரைக் கூட்டி உபதேசித்து ''யானொருவன் நரகம் புகினும், ஊரனைத்தும் சொர்க்கம் பெறுமே'' என்ற பகவத் இராமானுஜரின் பாகவத காருண்யம் போல, நீர்க்குறி, நெய்க்குறி சாத்திரத்தின் ரகஸ்யம் அறிந்து அதை அனைவருக்கும் பொது வாக்கியதால், குருநாதர் தந்த சாபத்தால் உடல் சிதறிப் போனவர்.

ஞானதிருஷ்டியால் அவர் கூறி வைத்தபடி... அவர் தந்த சாத்திரத்தால் செளபாக்யம் பெற்ற ஊர் மக்கள், சிதறிய தேரையரின் அவயங்களை ஒன்றாகக் கூட்டி வைத்து, கூட்டு வழிபாட்டால் அவரது உயிரை மீட்டனர்.

ஊரார் வாழ்வதற்காக தன்னை அழித்துக் கொள்ளத் துணிந்த தேரையர், சித்தருட் ஜீவகாருண்ய சிரஞ்சீவிச் சித்தராகிறார்.

கொங்கணச் சித்தர்

ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அற்புதச் சித்தரிவர்.

போகரின் பிரதான மாணவர், பெண்ணின் சபலமுள்ள தனது குருநாதருக்காக, உலோகப் பதுமையையே பெண்ணாக்கிக் குருவுக்குக் காணிக்கை தந்தவர்.

திருமழிசை ஆழ்வாருடன் வாதப்போர் புரிந்து; ஆழ்வாரின் பெருமை அறிந்து அவருடன் நட்புக் கொண்ட நல்லறச் சித்தர்.

கொங்கணர் கடைக்காண்டம், திரிகாண்டம், குணவாகடம், கொங்கணர் ஐநூற்றிரண்டு, தலைக் காண்டம், நடுக்காண்டம் ஞானம், குளிகை என்று சித்த மருத்துவ நன்நூல் பலவற்றைப் பாடியருளியவர்.

இந்திரனுக்கே மருத்துவம் செய்ய வானுலகம் போய் வந்த இணையிலா மாநுடச் சித்தர்.

தானெனும் புலமைச் செருக்கால் **''கொக்கென நினைத்தனையோ கொங்கணவா''** என்று ஓர் பத்தினிப் பெண்ணிடம் தனது அவசர புத்திக்குப் பாடம் கற்றவர்!

அந்தகனாக நடித்துப் பாடம் கேட்ட சீடனை, ''ஆகாது குருத்துரோகம்'' என எச்சரித்துத் திருத்திய பெருங்கருணைச் சித்தர்.

''வாலைக்கும்மி''யாகத் தத்துவம் பல பாடிய வித்தகச் சித்தர் இந்தக் கொங்கணர்.

கத்தி பெரிதோ உறைபெரிதோ - இவள்
கண்கள் பெரிதோ முகம்பெரிதோ
சக்திபெரிதோ சிவம் பெரிதோ - நீதான்
சற்றே சொல்லடி வாலைப்பெண்ணே!

ஆரியபட்டரை அறிவோமா?

அண்டசராசர அனைத்து விண்வெளி இயக்கங்களையும் விஞ்ஞானரீதியிலே இரண்டாயிர வருஷங்களுக்கு முன்பே கண்டு தெளிந்தவர்கள் நமது முன்னோர்.

கி.பி. 476-ல் பிறந்த **ஆரியபட்டர்** எனும் பிரம்மத்தை உணர்ந்த பாரதத்து வானியல் விஞ்ஞான மேதை, செய்து வைத்த **வானசாஸ்திரம்** இன்றும் சிரஞ்சீவியாகப் பேசுகிறது.

பூமிக் கோளமானது, அந்தரத்திலே சுழல்கிறது (2000 வருடத்திற்குமுன் சொன்னது) சூரியன் முதலான ஒவ்வொரு கிரஹங்களின் அமைப்பு, பகல் இரவுக்கான காரணகாரியம், கிரஹங்களின் நிலை, சுழற்சியின் வேகம் முதலானவற்றோடு காலங்களின் அளவினையும் தந்துள்ளனர் இதோ விபரம்.

''கல்பம்'' என்பது 14-மன்வந்ரங்களும், ஆறு மகா யுகங்களுமாகும்.

ஒரு மன்வந்ரம் - 71 மகாயுகங்கள், ஒரு மகாயுகம் - 43,20,000 வருடங்களைக் கொண்டது. ஒரு மகாயுகத்திலே - கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்குயுகங்கள்.

கிருதயுகம் - 17,28,000 வருடங்கள் ★திரேதாயுகம் - 12,90,000 ★துவாபரயுகம் - 8,64,000 ★கலியுகம் - 4,32,000 வருடங்களைக் கொண்டது.

(1975 நமது பாரத விஞ்ஞானியர் தயாரித்த முதல் ராக்கெட்டிற்கு ''ஆர்யபட்டா'' எனப் பெயர் சூட்டி, ஆதி முதல் விஞ்ஞானியை நினைவு கூர்ந்தோம்.)

ஔவைச் சித்தர்

திருக்குறளும் ஆத்திச் சூடியும் தமிழ்த்தாயின் இருவிழிகளாகும்.

தமிழுக்கு ''விழிகளைக்'' கொடுத்த நூலாசிரியர் களின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு முறை அனைத்துமே...'' பெரும்பாலும், ''இதுபோல் பிறந்திருக்க**லாம்**, இப்படியாக வளர்ந்திருக்க**லாம்**, இங்கே போயிருக் க**லாம்**, அங்கே வந்திருக்க**லாம்**, இதைப் பாடி யிருக்க**லாம்**'' என்று ''லாம் லாம்'' களிலேயே.. இன்றுவரை அவர்களின் வரலாறு தொடர்வது தமிழபிமானியர்க்குத் தலைக்குனிவே!

கிழக்காசிய, அமெரிக்க, ஐரோப்பிய, தென்னாப் பிரிக்க நாடுகளிலே, மொரீஷியஸ், ஜாவா, சுமித்ரா, அந்தமான் தீவுகளிலே... வாழ்கின்ற தமிழர்களுக்கு உள்ள தமிழ்ப்பற்று - ஆர்வம் - சிரத்தை - சிந்தனைகள் செய்திறன் முதலானவை, தமிழ்நாட்டிலே வாழும் பெரும் பான்மையான இந்தியத் தமிழருக்கு இல்லையென்பதை வெட்கத்தை விட்டுச் சொல்லியே ஆக வேண்டும்!

ஆத்திச் சூடியின் ஔவையை, ஜெமினியின் ''**ஔவையார்**'' திரைப்படக் கதாநாயகி என்றே இன்றைய இளைய தலைமுறை கருதுகிறது! **''லாம் லாம்''** என்று சொல்லி - எழுதி நழுவுவதைவிட, ''இது தான் ஔவையின் வரலாறு, என்று அடித்துச் சொல்லித் திரைப்படமாகவே எடுத்துக் காட்டிய பட உலக மேதை

ஜெமினி ஸ்டூடியோ அதிபர், அமரர் ஸ்ரீ S.S. **வாசன்** அவர்களை வாழ்த்தி வணங்குவோமாக.

சித்தர் ஔவை, பக்த ஔவை, சங்ககால ஔவை, மூவேந்தர் சரித்திர கால ஔவை... இப்படி நாலைந்து ஔவையார்களாம். இப்படி ஒரு புரளி! **''ஔவா''** என்றால் 'தெலுங்கில்' ''பாட்டி'' எனப்பொருள். தமிழிலிருந்து பிரிந்ததுதானே தெலுகு. ஆகவே நாலைந்து ஔவா (ஔவை)க்களும் வெவ்வேறுதானா? யார் இதைத்தீர்மானிப்பது? குழந்தைகளுக்கு ஔவையாரை... அவரது அற்புதத் தமிழ் இலக்கியங்களை எப்படி அறிமுகம் செய்வது? **பாவம் தமிழ்!**

ஆதி பகவத் தம்பதிகளுக்கு மகளாக ஔவை பிறந்தாளாம்! ஆனாதையாகக் காட்டிலே வளர்ந்த அவள், ஆனைமுக கணபதியின் திருவருளால், சுமையாக... பாரமாக இருந்த இளமையெழிலை உடனே விடுத்து முதுமை அடைந்தாளாம்!

ஊரூராய்ச் சுற்றி கூழுக்குப்பாடி, பாலுக்கும்பாடி.. ஆண்டி முதல் அரசர்வரையாவருக்கும் அன்னையாக விளங்கி நீதி நெறிகளை... நியதி முறைகளை... ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், அருந்தமிழ் மாலை, நல்வழி, மூதுரை, அசதிக் கோவை, கல்வியொழுக்கம், பந்தனந்தாதி, தரிசனப்பத்து... முதலான பலப்பல அறிவொளி நூல்களாகக் கொடுத்ததோடு...

இல்லறத்தை அடுத்த நல்லறத்தார்கட்கு ஞானக்குறள், வைத்தியநிகண்டு, விநாயகர் அகவல் முதலான தியான யோக, ஞானத் தெளிவினைத்தரும் சித்தர் இலக்கியங்ளையும் வழங்கியுள்ளார்.

சர்வேஸ்வரன் முதல் சண்முக கணபதியர் வரை, சக்கர வர்த்திகளான மூவேந்தர் முதல், சேரிவாழ் முனுசாமி, மாடசாமி, காத்தாயி, மூக்காயிகளுக்கும் நடுவராக இருந்து நல்வழிகாட்டிய - ஞானத்தை ஊட்டிய - ஔவைப்பாட்டியின் உண்மை வரலாற்றை, உயர்வான அவரது நன் நூல்களை தமிழர் ஒவ்வொருவரும் அறிந்தே தீர வேண்டும். பிள்ளைகளுக்குத் தெரிந்தே ஆக வேண்டும்.

பதினெட்டுச் சித்தர்களோடு இந்தப் பாட்டியையும் ''சித்தர்தான்'' என்று கொண்டாடுவதற்கு ''**விநாயகர் அகவல்**'' ஒன்று போதும்; சித்த மகத்துவத் தத்துவத் தகவல் அனைத்தையும் கொண்டது விநாயகர் அகவல்!

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தியதுபோல, விநாயகர் அகவலின் ஒவ்வொரு வரியிலும், வார்த்தையிலும் - எழுத்திலும் - வெவ்வேறு தத்துவங்களைப்பதித்து வைத்துள்ள நமது தமிழ் மூதாட்டி... திருக்குறள் போலவே... ''**ஔவைக்குறள்**'' பாடி இருக்கிறார்! போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஈற்றடியாலான புனித இலக்கியம் அது.

"முத்திக்கு அவ்வையார் சொல்
முன்னூற்றுப் பத்தையுமே
சித்தத்தில் வைத்துத் தெளி."

சோழச் சக்கரவர்த்தியின் திருமண நாள். காவிய மலைகளாகக் குவிந்தன வாழ்த்துக்கள்! ஔவையின் வாழ்த்துச் செய்தி என்ன தெரியுமா? ''**வரப்புயர**'' என்னும் ஒரே வரி மட்டுமே. சோழ மன்னன், தனது அவைப்புலவர் **ஒட்டக் கூத்தரைப்** பார்த்து விழித்தான்.

''வாழ்த்துக்களின் மணி மகுடம் அது! இதோ அதன் விளக்கம்'' என்று கூத்தபிரான் விளக்கினார்.

"வரப்புயர" நீருயரும்!
நீருயர நெல்லுயரும்!
நெல்லுயர குடி உயரும்!
குடிஉயரக் கோலுயரும்!
கோலுயரக் "கோ" உயரும்."



''சோழமன்னா! எல்லாவளமும் நிறைந்து, ஏகச் சக்ராதிபதியாக நீ விளங்க வேண்டும் என்பதை ஔவையார் ஒரே சொல்லால் சொல்லி ''வரப்புயர'' என்றிருக்கிறார் என்றார்.

ஔவை அப்போதிருந்த பாண்டிய நாட்டுத் திசை நோக்கி வணங்கி, ஆனந்தக் கண்ணீர் ததும்ப பரவசம் பெற்றானாம் சோழமன்னன்.

இதுபோல நூற்றுக்கணக்கான சம்பவங்களைக் கொண்டது ஔவைச் சித்தரின் வரலாறு. அட்டமா சித்திகள் என்ன, அதற்கும் மேலாகவே கற்றவர்!

தெளிந்தவர்! கற்பித்தவர் நம் ஔவையார். அடுத்து அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் ''**மாதர் குலச்சித்தர்கள்**'' நூலிலே... தமிழ் மூதாட்டியின் வரலாற்றையும், அமுதத் தமிழுக்கும், அன்னை நாட்டுக்கும் பாடுபட்ட தாய்க்குலச் சித்தர்களின் வீர, விவேக மகத்துவங்களையும் காணலாம்.

சித்தர் தத்துவச் சிந்தனைக்கு நமக்கெல்லாம் வித்தாக அமைந்த மஹாமந்திரத் தொகுப்பாகிய, விநாயகர் அகவலிலிருந்து சிலவரிகள்...

''ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டிக்
கருவிக ளொடுக்குங் கருத்தறி வித்தே
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டிக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருத்தறி விக்க..."

ஔவையின் விநாயகர் அகவலை முழுவதுமாகச் சொல்லிக் கொண்டேயிருந்தால், மெல்லமெல்ல நாமும் சித்தராகிச் சத்தியம் காணலாம், சாகாமல் வாழலாம்,

பொய்யா மொழித் திருவள்ளுவர்!



''சாதி இரண்டொழியவேறில்லை'' எனும் தமிழ்மூதாட்டி ஔவையின் நீதிப்படி... ''ஆதி'' என்கிற தாய்க்கும், ''பகவன்'' எனும் தந்தைக்கும் மகனாகத் தோன்றினார் **திருவள்ளுவர்**'' என்பர் பலர்!

யார்பிள்ளை? என்ன குலம்? மனைவியின் பெயர் வாசுகிதானா? தொழில் நெசவுதானா? ஊர் திருமயிலையா, மாமதுரையா? என மோதிக் கொண்டிருக்கும் ''பேனா'' ச் சண்டைகள், வள்ளுவர் பிறந்து 2030 - ஆண்டுகள் கடந்த பின்னும் இன்னும் ஓய்ந்த பாடில்லை! எந்தப் பல்கலைக் கழகமாவது, பகுத்தறிவுத் திலகமாவது இதைத் தெளிவாக ஆய்ந்தபாடுமில்லை!!

வள்ளுவர் தமிழகத்திலே பிறந்தது உண்மை. நமது மூதாதையரோடு வாழ்ந்தது உண்மை! மாநுடத்தின் அல்லல்களை, வல்வினையை, ஆயிரமாயிரம் கவலைகளைத் தீர்ப்பதற்கென்றே சர்வலோக சமத்துவ நீதிக் களஞ்சியமாகத் திருக்குறளைப் பாடிக்கொடுத்தது உண்மையோ உண்மை.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

எனத் தொடங்கி அறம், பொருள், இன்பம் என்று மூன்று பகுதிகளாக பாமரர்க்கும், படித்தவர்க்கும், இல்லறத்தார்க்கும், துறவியர்க்கும், ஏனைய அனை வருக்குமான வாழ்வின் இலக்ணத்தை வகுத்துள்ளார் நமது பொய்யா மொழிப்புலவர்.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பால் கலந்த முதல்த் தமிழ்ப்பால் திருக்குறள்.

அறம் 38 - பொருள் 70 - காமம் 25 - ஆக 133 அதிகாரங்கள்; அதிகாரம் ஒன்றுக்கு 10 - ஆக மொத்தம் 1330 குறட்பாக்களை உடையது'' **வள்ளுவன் வாய்மொழி''**

நல்லதோர் துறவியாக, நாம் கண்ட சித்தராக 101 ஆண்டுகள் நம்மிடையே திகழ்ந்த ஸ்ரீ காஞ்சி மகா பெரியவர் கூறுகிறார்...

“வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்.” (குறள் 120)

''திருவள்ளுவர் காணும் வைசிய தருமத்தை ஒவ்வொருவரும் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால், இக்காலத்தில் மலிந்து கிடக்கும் கள்ள மார்க்கெட்டும், லஞ்சத்தொழிலும் அழிவதோடு, பஞ்சமும், கொடுமையும், பிணியும் நம்நாட்டை விட்டகலும்; மங்களம் பொங்கும்."

-வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு சிறப்புமலர் (1970)

அறுபதாண்டுக்கு மேலாக ஆண்டுக்கு ஒரு கண்டம், மாதமொரு நாடு, வாரம் ஒரு மாநிலம், நாளொரு ஊர், பொழுதொருமேடையாக... அருளுரையும் கதைகளும் காவியமும் தந்தருளி 88-வயதிலே மறைந்த **திரு முருக கிருபானந்தவாரியார்** சுவாமி கூறுகிறார்...

''கவியரசராகிய கம்பர் பெருமான், திருக்குறளைப் பொன்போல் எடுத்து அமைத்துத் தனது இராமாயணத்தை அலங்கரிக்கின்றார் என்றால், திருக்குறளின் பெருமையை அளவிட வல்லார் யாவர்?

திருக்குறளைத் தொட்டாலும் கை மணக்கும் படித்தால் கண் மணக்கும், கேட்டால் செவிமணக்கும் சொன்னால் வாய் மணக்கும், எண்ணினால் இதயம் மணக்கும் அத்தகைய தெய்வமணம் வீசும் சீரும் சிறப்பும் உடையது திருக்குறள்."

''சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து - முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண் பா.

-சங்கப்புலவர் கவுணியர்.

''திருக்குறளை உலகுக்கு அளித்த திருவள்ளுவர் ''தெய்வப்புலவர்''- என ஆன்றோர் போற்றினர். ''நான்முகன் அவதாரம்'' என்று கூட இவரைச் சொல்வதுண்டு.''

-தருமையாதீன கர்த்தர் ஸ்ரீ சுப்ரமண்யதேசிகர்

''வையத்து வாழும் இயல்பினைக் காட்டி, வாழ்வாங்கு வாழச்செய்து வானுரையும் தெய்வத்துள் சேர்த்து, வானோர்க்கும் உயர்ந்த உலகினை அடையும் வழிகாட்டும் அருள் நூலாகிய திருக்குறள், சமயச் சார்பற்ற நூல்!, ஆனாலும் சமயநெறி தழுவிய நூல். சார்புவேறு, தழுவுதல் வேறு. சார்பு என்பது ஒன்றில் பற்றும், பிறிதொன்றில் காழ்ப்பும் காட்டுவதேயாகும். அதனாலேயே சார்பின்றி வாழவேண்டும் என்பதை...

''சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.'' (-குறள் 359)

''வாழ்வியலை சார்புகளுக்குள் சிக்க வைத்து சழக்கு நெறியாக்கி உண்மையான சமயத்திற்குச் சமாதி கட்டிவிட்டனர். சமய எதிர்ப்பாளர்கள் சமயத்திற்குச் செய்த கேடுகளைவிட, சமயச்சார்பாளர்கள் செய்த கேடுகள் அளப்பில. அம்மம்மா, நினைத்தாலும் கொடுமை! வரலாறு இவர்களை மன்னிக்காது''

- தவத்திரு குன்றக்குடி அடிகளார்

''குறள்நெறிதான் தமிழ்மக்களின் வாழ்க்கை நெறி. குறட் கருத்துக்களைப் பரப்புவதிலும், சிறப்புகளை உணர்த்துவதிலும் இன்று, நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த (திருக்குறள்) நெறிகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து மேம்பாடுகாண்பதிலும் நாம் முன்னேற்றம் கண்டாக வேண்டும்.''

23.1.1970-முதல்வர், கலைஞர் ஸ்ரீ மு.கருணாநிதி

(சென்னையிலே ''வள்ளுவர் கோட்டம்'' உருவாக்கிய ஸ்ரீ கருணாநிதி, கன்னியாகுமரியல், 133-அடி உயரத் திருவள்ளுவர் சிலையை அமைக்கிறார்.)

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

என்று தேசிய, தெய்விகப் புலமைச் சித்தரான **மகாகவி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார்** பாடியிருக்கிறார்.

உலக நாடுகளிலே 86-தேசங்கள் தத்தமது தாய் மொழியிலே நமது திருக்குறளை மொழி பெயர்த்து, பாடமாக வைத்து, மக்கள் அதைப்படித்து, கருத்துக்களை கிரஹித்து, உழைத்து, பிழைத்து ''ஓஹோ'' வென வாழுகின்றனர்! ஆனால்... குறளுக்கு உரியவர்களாகிய நாம்...? குறள் கூறும் வழி நின்று **''ஏற்பது இகழ்ச்சி''** என்று இனாம் கேட்டு கை ஏந்தாமல், உழைத்துப் பிழைத்துத் தன்மானத்தமிழர்களாக நிறைவாழ்வு பெறுவோமாக.

சமயநெறியும், சன்மார்க்க முறையும், இல்லற நலமும், துறவறவளமும், களவு (காதல்) முறையும், அதனால்வரும் முறையான காமநுகர்வும், உயிர்களைக் கொல்லாமை, மதுபானம் குடியாமை! அரசியல் முறை, அமைச்சரின் கடன்! ஆன்ம நேய ஒருமைப்பாடு... இப்படியாக மனித சமுதாயத்தின் மகோன்னத வாழ்வுக்குத் தேவையான அனைத்து நீதிகளையும் கொண்ட திருக்குறளுக்குத் தமிழிலே மட்டும் 120-உரைகள் வந்துள்ளன.

''கடுகைத் துளைத்து ஏழ் கடலைப்புகுத்துவது போன்று **ஈற்றடியிலே நூற்றடிக் கருத்துக்களை** அறிவிக்கும் இலக்கியச் சித்தாடல் புரிந்துள்ளார் பொய்யா மொழிப்புலவரான நமது **திருவள்ளுவர்.**

ஸ்ரீ ராமாநுஜர்

சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்பூதூரிலே கி.பி. 4-4-1017. திருவாதிரையிலே, **கேசவ பெருமாள் காந்திமதி** அம்மையாருக்கும் பிறந்தவர். இவரது தாய் மாமன் பெரிய நம்பி, இவருக்கு இளையாழ்வார் என்று பெயர் சூட்டினார். ஸ்ரீ வைஷ்ணவ பரமாசார்யரான திருவரங்கத்து. ஸ்ரீ ஆளவந்தாரின் பிரதான சீடராக விளங்கியவர் ஸ்ரீ ராமாநுஜர்.

தனது பால்ய பருவத்தில் யாதவப் பிரகாசர் என்னும் அத்வைத் சந்நியாசினிடம் பாடம் கேட்டார். அவர் உபநிஷத்துக்கு விரோதமான கருத்துக்களை கூறுவதைக் கேட்டு மனம் நொந்து, அவருக்கே உண்மையான அர்த்தத்தை உபதேசித்த பின் அவரிடமிருந்து விலகி, காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு திருமஞ்சன தீர்த்தக் கைங்கர்யம் செய்து வந்தார். மனைவி பெயர் **தஞ்சம்மாள்**. ஸ்ரீரங்க ஆளவந்தாரால் **''ஆம் முதல்வன் இவன்''** என்ற விசேஷ அநுக்கிரகம் பெற்றார்.

இவர் சந்நியாச ஆச்ரமத்தை ஸ்வீகாரம் செய்து கொண்ட போது, இவருக்கு தேவப்பெருமாள் அளித்த பெயர் ''யதிராஜன்'' திருவரங்கன் அளித்தபேர் ''உடையவர்''. திருக்கோஷ்டியூர் நம்பியிடம் 18 முறை நடையாய் நடந்து, அவர் தந்த திரு மந்திரத்தை ''நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என அரிதான திருப்பொருளை அனைவர்க்கும் பொதுவாக்கிய வள்ளல் ஸ்ரீராமாநுஜர். திருக்கோஷ்டியூர் நம்பி இவருக்கு அளித்த பெயர் **''எம் பெருமானார்''**

ஸ்ரீ ரங்க ஆலயத்தை முற்றும் திருத்தியவர். ''கீதாபாஷ்யம், வேதாந்தசங்க்ரஹம்'' முதலான 10-வைணவ இலக்கியம் படைத்தவர். 120-ஆண்டுகள் வாழ்ந்து ''திருநாடு'' புறப்படுமுன் அவர் போட்ட ஆறுகட்டளை, வைணவச் சட்டமாகும்.

கி.பி.1137-ல் ''தானுகந்த, தானான திருமேனியானார்! ஆதிசேஷ அம்சமாக வந்தது, ஆளவந்தார் மனநிலையை விரல்களால் அறிந்தது, ''செல்லபிள்ளை'' யை (விக்ரஹத்தை) பாட்டால் டெல்லி அரண்மனையிலிருந்து வெளியே இழுத்தது முதலான அற்புதங்களால் ஸ்ரீ ராமாநுஜரும் சத்தியச் சித்தரே.

மஹாதேசிக மந்த்ரச் சித்தர்

ஏழுநூறு ஆண்டுகளுக்குமுன், திருப்பதிப் பெருமானின் பூஜாமணி அம்சமாக காஞ்சியில் (தூப்புல்) தோன்றியவர் இந்த வைணவச் சித்தர். இவரது பெற்றோர் **அநந்த சூரி - தோதா ரம்பாள்.**

திருஞானசம்பந்தரைப் போல பால்குடிக்கும் (5-வயது) பருவத்திலேயே... பக்தி இலக்கிய கதா காலட்க்ஷேப இலக்கணங்களைத் திருவருளால் அறிந்தவர்.

திருவஹீந்திரபுர கருடநதித் தீர்த்த மகத்துவத்தால், ஹயக்கிரீவ (குதிரைமுகப்பெருமாள்) தரிசனம் பெற்று, அட்டாவதானங்களும் கைவரப் பெற்று... மதாசார விரோதப்பலப்பல எதிரிகளால் ஏற்பட்ட மாயமந்த்ர பில்லி சூன்ய ஏவல்களையெல்லாம்... ஹயக்கிரீவ, மற்றும் கருடாழ்வார் அனுக்ரஹத்தோடு எதிர்த்துநின்று வெற்றி கண்ட இறையருட் சித்தர்.

சன்யாசிக்குறிய இலக்கணப்படி உஞ்சவிருத்தி செய்து வரும்காலத்தில் ஓர் நாள் ஒரு தனவந்தர் அரிசி பருப்போடு சில தங்கக்காசுகளையும் இவரது செம்பிலே போட்டு விட்டார் **''மனோவியாதிக்கான கிருமிகள்'' இவை''** என்றபடி தங்க நாணயங்களைப் புழுதியிலே வீசியெறிந்தவர்.

''பாதுகாஸகஸ்ரம்'' முதலான 120-க்கும் மேற்பட்ட பக்தி இலக்கியங்களைப் படைத்ததோடு, ஸ்ரீ இராமநுஜ சித்தாந்த வழிச் செம்மலாய்த் திகழ்ந்து, நூறு ஆண்டு வாழ்வாங்கு வாழ்ந்தவர், **ஸ்ரீ மந்நிகமாந்த மகா தேசிகன்.**

ஸ்ரீ மத்வச் சித்தர்!

எது இல்லாமல் யாரும் எங்கும் வாழமுடியாதோ அது காற்று. அந்த வாயு, ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பிராணன் என்பது வைணவ சித்தாந்தம், வாயுபுத்ர ஹநுமன், பீமன்... முதலான அவதார புருஷர்களோடு ஒருவராக... கர்நாடக உடுபி அருகே, பாஜகா, எனும் ஊரிலே. **மத்கேயபட்டர் வேதவதி** தம்பதியருக்கு அருந்தவப்புதல்வராகப் பிறந்த குழந்தைக்கு **வாசுதேவன்** எனப் பெயரிட்டனர்.

பாலப்பருவத்திலேயே... வீரத்திலும் ஞானத்திலும் முதிர்ந்த நிலை கண்டு... ஆலயச்சேவையிலும், அற்புதம் பல செய்த வாசுதேவ்ன், மத்வ சமய ஆச்சார்யரானார்.

தந்தையின் ஆலயப்பணிக்குக் கடனாகப் பொருள்தந்த ஒருவர், ''அவசரமாக கடனைத் திருப்பித்தா'' என்று வீட்டு வாசலில் நிற்க... வீட்டிலிருந்த புளியங் கொட்டைகளை... அள்ளி... பரவாசுதேவனைப் பிரார்த்தித்தபடி வழங்கினார் மத்வர். அனைத்தும் பொற்காசுகளாகக் கலகலத்தன!

அற்புதச் சித்தரானதும் பொற்பதப் புனிதயாத் திரையாக... பாரதமெங்கும் பவனி வந்தார். பத்திரிநாத் வியாசர் குகையிலே... வேத நாயகனை தரிசித்து ஆசிபெற்றார். இமயமலை கங்கோத்ரியில் இருக்கும் போது, அரபிக் கடலிலே மூழ்கிய ஒரு கப்பலை ஞான திருஷ்டியால் கண்டு, தியான பலத்தால் கப்பலையும் மக்களையும் காத்த வரலாறு சரித்திரப் பிரசித்தமாகும்.

வடதேசயாத்திரையிலே கங்காநதியைத் தாண்டிச் செல்ல, மத்வருக்கு அப்பகுதியின் அப்போதய மாமன்னர் தடைவிதித்தார்! கால்நடையாகவே கங்கை நீரிலே நடந்து, நட்டநடு கங்கைச் சுழலிலே கங்காதேவியின் திவ்ய தரிசனம் பெற்று ''**பூர்ணப் பிரக்ஞர்**'', ''**ஆனந்த தீர்த்தர்**'' என்கிற திருநாமங்களையும் பெற்றார் மத்வாச்சாரியர்.

தேவசிற்பி விஸ்வகர்மா உருவாக்கி, துவாரகையில் ஸ்ரீ ருக்மணிதேவி பூஜித்த ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹத்தை உடுபியில் ஸ்தாபிதம் செய்தார். மலைகளை நகர்த்தவும், மேகத்தை மழையாய் பொழியவைக்கவும், விதைகளை உடனே மரங்களாக்கவும், தபோபலத்தால் முடியும் என்பதை நிரூபித்த மகா தவஸ்ரீ மத்வச்சித்தர். தனது தபோநிதிகள் அனைத்தையும் உடுபி ஆலயமூலவரிடம் சேர்ப்பித்து, விட்டு, இமாலய பத்திரிநாதத்துக்கு எழுந்தருளி, பரந்தாமன் திருவடியிலே சாயுஜ்யமானார். **ஸ்ரீ மத்வாச்சார்ய மஹாமந்திரச் சித்தர்.**

பக்தனின் இலக்கணம்

சிக்கிமுக்கிக் கல்லானது பலயுகங்களாக நீருக்குள்ளிருந்தாலும், தன் குணத்தை இழந்துவிடாது. நீரினின்றும் வெளியே எடுத்து ஓர் உளியினால் அதைத் தட்டிப் பார். உடனே, பிரகாசமான நெருப்புப் பொறி ஒன்று உண்டாகும். அது போலவே உண்மைப் பக்தன், உலகத்தின் எல்லா அசுத்தங்களின் நடுவே வசித்தபோதிலும் நம்பிக்கையையும் கடவுளிடம் உள்ள அன்பையும் இழந்து விடுவதில்லை. கடவுளுடைய திருநாமத்தைக் கேட்டவுடனேயே பகவத் பக்தியினால் பரவச வெறிகொண்டவனாகின்றான்.

ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சர்

பகுத்தறிவாள பக்திச் சித்தர்!

தீண்டாமை என்ற நோய் இனியும் வேண்டாமே எனப் பாடுபட்டு வெற்றிகண்ட பகுத்தறிவுப் பக்திநெறிச் சித்தர் கேரளத்து **ஸ்ரீ நாராயண குரு.**

திருவனந்தபுரம் அருகே செம்பழத்தி கிராமம் **மாடனாசான் குட்டியம்மை** மகனாக 28.8.1854 பிறந்து பால்யத்திலேயே பக்தியுடன் ஞானமும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் பண்பாடும் கைவரப்பெற்றவர்.

ஓம் எனும் பிரணவ உச்சாடனமும், பூரண பிரமச்சரியமும், அதாடு தியானமும் உள்ள மனிதர்கள் எல்லாருமே அட்டமாசித்திகளை, அதீத சக்திகளை அடைய முடியும் என்பதைச் செயலால் நிரூபித்தவர்.

ஒரே மதத்து மக்கள் ''**சவர்ணர்**'' **அவர்ணர்**''(மேல் ஜாதி, கீழ்ஜாதி) எனப்பிரிக்கப்பட்டு கீழ்ஜாதி அவர்ணர்களுக்கு உயர்கல்வியோ, ஆலய நுழைவோ கிடையாத அவலநிலையை அறவே போக்கி, ஆங்காங்கே புதிய கோயில்களையும், கல்விக் கூடங்களையும் ஏற்படுத்தி சமதர்மத்தை, சகலர்க்கும் கல்வியை தார்மிகச் சட்டமாக்கியவர், ஸ்ரீ நாராயண குரு.

1916- முதல் சென்னை, காஞ்சி, ஈரோடு, சேலம், மதுரைகளிலும் மடங்களை நிறுவி, வைத்தியசாலைகளை ஏற்படுத்தி சனாதனத்தோடு, சமூக சேவையும் புரிந்த சத்தியச் சித்தரான ஸ்ரீ நாராயண குருவை, 1922-ல்

மகாகவி ரவீந்திரநாத்தாகூரும், 1925, மகாத்மாகாந்தி, வினோபா, ராஜாஜி முதலான தேசிய மகான்களும் சந்தித்து ஆசி பெற்றுள்ளனர்.

ஜாதிவெறியை, மதுவின் நெடியை, நோயின் பிடியை பாமரமக்களிடையை தீர்த்தவர், கேரளத்து வர்க் கலையில் சிவகிரிமலையிலே ஆஸ்ரமம் அமைத்து எல்லோர்க்கும் எல்லாம் பொது என்ற ஏகதர்மத்தை இறை வழிபாடாகக் கொண்டவர். தியாகையருக்குத் திருமலைத் திரைச்சீலை தானே திறந்து பெருமாளைக் கட்டியதுபோல, காஞ்சி எகாம்பரேஸ்வரரின் மூலஸ்தானக் கதவுகள் நாராயண குருவுக்காகத் தானாகத் திறந்த அற்புதமும், கையால் தொட்டு பைத்தியங்களைக் குணப்படுத்திய அதிசயங்களும், காக்காய் வலிப்பு நோய்களை கண்ணால் பார்த்தே தீர்த்த மகத்துவங்களையும் சமுதாயத்திற்காகச் செய்த அந்தச் சத்தியச்சித்தர் ஸ்ரீநாராயணகுரு, சிவகிரி மடத்திலே 20-9-1928-ல் மகா சமாதியானார்.

முதியோரும் இளைஞரும்

முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் மரியாதை, கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாகும். முதியவர்களுக்கு அவர்களது முதுமையின் காரணமாகக் கண்ணியமளிக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும் அவர்களது முதுமைப் பருவத்தில் மரியாதை செய்பவர்களைக் கடவுள் நியமிக்கிறார்.

- நபிகள் நாயகம்

சிவப் பிரபாகரச் சித்தர்

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே, கேரள நம்பூதிரி குடும்ப.. **நாராயணன்-லட்சுமி** தம்பதியருக்கு, புத்தாவது பிள்ளையாக பிறந்த ஆண் குழந்தை, ஐந்து வயதிலேயே தியான யோகஞான நிலை கண்டது. ராம லட்சுமணர்களை மாவீரர்களாக்க அழைக்க வந்த விஸ்வாமித்திரரைப்போல, தேவியருட் தவமுனிவர் ஒருவர் வந்து ஆறு வயது **சிவப்பிரபாகரனை** காரண காரியத்தோடு அழைத்துப் போனார்.

ககனமார்க்கமாக (வான்வழி) நேபாள இமாலய வனப்பகுதியிலே 45-ஆண்டுகள் ''**பிஞ்சும், கனியும்**'' தவமிருந்து அத்திரி முனிவரின் ஆசிபெற்றனர்.

சத் சித் ஆனந்த சதாசிவப் பரப்பிரம்ம அநுபூதி பெற்ற குருவும் சீடனும், தமிழகம் வந்து, சங்கர நாராயணன் கோயில் மூலவர்களுக்கு மா-சக்தி தருகிற யந்திரப் பிரதிஷ்டையை முடித்தனர். தபோபலம் அனைத்தையும் சீடனுக்குத் தாரை வார்த்து விட்டு மகா சமாதியானார் குருநாதர்.

மந்திரம், தந்திரம், மருத்துவும், ஜோதிடம், தியான யோக, மஹாயாக, மெய்ஞ்ஞான, விஞ்ஞான அற்புதங் களைப் புரிந்து வந்த **சிவபிரபாகரச் சித்தர்**...கந்தல் துணியைத் தங்கமாக்கியும், தங்கப்பாளங்களைக் கருநாகங்களாக்கியும் சித்தாடல் புரிந்தவர், பாவனாசம்

வன இலாகா அதிகாரிகளை ஆட்கொண்டு கூடு விட்டுக் கூடு பாய்ந்து, க்ஷண நேரத்தில், நாடுவிட்டு நாடு மாறி உலவிய பிரபாகரச்சித்தர், கேரள ஒச்சரம் கோயிலருகே உடற் கூட்டை விடுத்து, சூட்சும உடலுடன் பதினைந்து-தூல உடல்களிலே பிரவேசித்து, பற்பல அற்புதங்களைப் புரிந்து 727-வது தொடர்வயதிலே 1986-பந்தனம் திட்டா சித்தாஸ்ரமம் புலிப்பாறையிலே சச்சிதானந்தப் பெரு வெளியில் ஒளியாகி ஜீவன் முக்தரானார்.

ஞானிகள் யார்?

புல்லைத் தின்பதும், தழையையுண்பதும், வேப்பிலையையுண்பதும், குகையில் வசிப்பதும், நீருக்குள் இருப்பதும், வானில் பறப்பதும் சிறப்பு ஆகாது.

புல்லையுண்பவனையும், தழையையுண் பவனையும், வேப்பில்லையையுண்பவனையும், குகை யிலேயே வசிப்பவனையும் நீருக்குள் முழுகியிருப்ப வனையும், வானில் பறப்பவனையும் ஞானி என்று எண்ணாதே.

மாடு புல்லையே உண்ணுகின்றது;
ஆடு தழையையே உண்ணுகின்றது;
ஒட்டகம் வேப்பிலையையே உண்ணுகிறது:

விலங்குகள் குகையிலும், பெருச்சாளியும் நண்டும் வளைக்குள்ளும் வசிக்கின்றன. பறவைகள் வானில் பறக்கின்றன. இவைகள் ஞானிகள் ஆகா.

தன்னையுணர்ந்து, தன் தலைவனை மெய்யுணர்வினால் உணர்ந்து தானற்றவர்களே ஞானிகள் - சித்தர்கள் - எனவுணர்க.

-திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமி



கோதைச் சித்தர்
ஸ்ரீ ஆண்டாள்

"பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள்
மணிவண்ணா நின்
சேவடி செவ்வி திருக்காப்பு..."

என்று வைகுந்தநாதனுக்கே வாழ்த்துப்பாடிய ஸ்ரீவில்லிபுத்தூர் விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வாரின் பேரன்புத் திருமகள் "கோதை" என்கிற ஆண்டாள்.

தேனினும் இனிய திவ்யப்பிரபந்த ஆழ்வார் பெருமக்களின் அருளறச் செல்வியாகத் திகழ்ந்து, சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாய் சுப்ரபாதனின் திருவடிகளைத் தேடி நடந்து, திருப்பாவை முப்பதும் செப்பிய செழுஞ்சுடராய் திருவரங்கப் பெருமானுக்கு ஸ்ரீ வைணவத்தின் தமிழ்ச் சீதனமாய் இதிகாச காலமுதல் இன்றளவும் பொலிகின்றவள் ஸ்ரீஆண்டாள்!

மாதர் குல மணிவிளக்காய், இள மங்கையர் வாழ்வுக்கான இலக்கணம் வகுத்தளித்த வேதவல்லியாய் விளங்குபவள், பெரியாழ்வார் கண்டெடுத்த பூமா தேவியின் அம்சமான ஸ்ரீ கோதை நாச்சியார்.

மெய்ஞானம், விஞ்ஞானம், மேலான தவயோகம் அனைத் துமாக விளங்கும் ஆண்டாளின் திருப்பாவை யானது, மாநுட்ர்க்கு இன்றியமையாத திவ்யத்திருக் கோவையாகும்.

மழை எப்படிப் பொழிகிறது என்பதை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பிழையற்ற விஞ்ஞான மொழியிலே பாடி வைத்துள்ளார் பரமாத்மச் சித்தரான ஸ்ரீ ஆண்டாள்.

“ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகர்ந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்து
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

-திருப்பாவை (4)

தீவிர பக்தியோடும், திடமான உறுதியோடும் மாநுடம் திகழ்ந்தால், தெய்வத்தின் திருவிடத்தை - திருமாலின் இடப்புறத்தை - அடைவதும் சாத்தியமே என்பதைச் சரிதமாய்ச் செய்தவள் இந்தக் கோதைச் சித்தர்.

பட்டினத்துச் சித்தர்

''உண்டென்றிரு, தெய்வம் ஒன்றென்றிரு'' என்று பக்தியின் பூர்ணப் பரிணாமத்தை விளக்கி, பக்தியின் பெயரால் நித்தமொரு ''கட்சி'' மாறும் பகல் வேஷதாரிகளின் முகமூடியைக் கிழித்தவர்! அறிவிழந்து குடிப்பதும், வெறிமிகுந்துகளிப்பதும் மனிதனை விலங்காக மாற்றிவிடும்! தெய்வ நிலைக்கு மானுடம் உயரும் மார்க்கத்தை ''வேம்பின் சுவை''த் தமிழிலே சற்று வித்யாசமாகச் சொன்ன பட்டினத்தாரை ''சுடுகாட்டுப் பாட்டுக்காரன்'' என்று இடைக் காலச் சமுதாயம் ஒதுக்கி விட்டது! அதன்-பரிதாப விளைவுகள் தான், இன்று பூதாகாரமாகிவரும் ''வயாகரா'', ''வைரஸ்'', ''எயிட்ஸ்'' வளர்ச்சிப் பிரளயங்கள்!

காலம் கடந்து விடவில்லை! இல்லறத்தார்களை எச்சரித்து, நல்வழி காட்டும் பட்டினத்துச் சித்தரின் பாடல்களை இனியேனும் படித்துப் பயன் பெறுவோமாக. மரண பயம் போக்கி, மானுடத்தை வாழ்விக்கும் தத்துவப் பாடல்களின் சத்தியச்சித்தரான பட்டினத்தாரின் வரலாற்றுச் சுருக்கமாவது.......

ஒன்பதாம் நூற்றாண்டிலே காவிரிப் பூம்பட்டினத்திலே, நகரத்தார்வம்ச சிவநேசர் ஞானக்கலை தம்பதியர்க்கு, ஒரே பெண்ணுக்கு அடுத்த, ஒரே பிள்ளையாகப்பிறந்து, ''திருவெண்காடர்'' எனும் பெயரோடு, செல்வச் செருக்கிலே வளர்ந்தவர்.

பால்யத்திலேயே, தந்தையை இழந்தார். வாலிபரான வெண்காடருக்கு ''**சிவகலை**'' எனும் நங்கையை மணமுடித்தாள் அன்னை.

இல்லறம் தொடங்கிப் பல்லாண்டு கடந்தும் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்தது வெண்காடருக்கு.

இறைவன் கட்டளைப்படி ஆரேழு குழந்தைகட்குத் தந்தையான ஓர் பள்ளி ஆசிரியர், தனது இளைய மகனைத் திருவெண்காடருக்குத் தத்துக் கொடுத்து, தன் குடும்ப வறுமையைத் தீர்த்துக் கொண்டார்.

வெண்காடரின் அருமைமகன் **மருதவாணன்**, குலதர்மப்படி தந்தை கொடுத்த பொன்முடிகளோடு திரைகடலோடித் திரவியம் தேடிவந்தான். திரவிய மூட்டைகள் அனைத்தும் வரட்டிகளாகவும், அவலாகவும் இருப்பதைக் கண்டு ஊரார் நகைத்தனர்! பெற்றோர் திகைத்தனர். மூட்டையை அவிழ்த்தார் பிதா, அதற்கு முன்பாகவே, ஓர் சீட்டை எழுதி மாதாவிடம் கொடுத்தபடி வந்தவேலை முடிந்ததெனப் பிள்ளை மறைந்துவிட்டார்.

ஒவ்வொரு வரட்டியின் உள்ளேயும் மாணிக்கமும், அவலிலே கலந்துள்ள தங்கத்தூளையும் கண்ட தந்தை, ஆடினார், பாடினார், அன்பு மகனைத் தேடினார். ''எங்கே மகன்'' என்ற கணவரிடம், "இதோ அவன் தந்த சீட்டு'' எனத் தந்தாள் மனைவி!

''காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே'' என்ற ஒரே ஒரு வரி! சித்தம் தெளிந்தது! சிவஞானம்

பிறந்தது! வாணிபப்பேராசைச் சூறாவளியிலிருந்து விடுபட்டார் திருவெண்காடர்! ஆன்மிக வாழ்வுக்கு மனைவியை முறையோடு அனுப்பி விட்டு, அடாவடியாகச் சேர்த்துக் குவித்த செல்வமனைத்தையும் கணக்கராக இருந்த **சேந்தனார்** வசம் ஒப்படைத்து, ஊருக்குப் பொதுவாக்கியதும், கோவணாண்டியாக நிஷ்டையில் மூழ்கினார் திருவெண்காடராக இருந்த பட்டினத்தார்.

பிரபுவாக இருந்து திடீர் பிச்சைக்காரனான அவரிடம் வந்த அரசர், **''பரதேசியானதால் நீர் கண்ட பலன் என்ன?''** என்று கேட்க, **''நீர் நிற்க, நாம் இருக்க''** என்று கூறித் துறவிக்கு வேந்தனும் துரும்பு என்பதைச் சொல்லாமல் சொல்லிச் சிரித்தார்.

இரவு பகலாக எங்கோ திரிந்து, யார்யாரோ தந்த உணவை நாயோடு அருந்தி, தேரடியிலும், தெருக்கோடியிலும் பாடிப்பாடி நிஷ்டையில் மூழ்கும் தம்பியால் ''மானமே போகிறது'' என நினைத்த தமக்கை. நஞ்சிட்ட அப்பத்தைக் கொடுக்கிறார்.

''தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்றபடி அதைக் கூறையில் வீசிவிட்டு ஊரைவிட்டே வெளியேறினார். சித்தரின் சத்தியச் சொல்லால், பற்றி எரிந்தது பாவிமகள் வீடு!

ஊரூராய் நீதிகளைப் பாடித் திரிந்த பட்டினத்தார், தாயார் இறக்கப் போவதை ஞானத்தால் உணர்ந்து ஓடோடி வந்தார்! உயிர் பிரிந்த தாயின் உடலைத்தான் கண்டார். துறவியும் கதறினார் தாய்ப்பாசத்தால்!

''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று, பையலென்றபோதே பரிந்தெடுத்துச் -செய்ய இரு. கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை எப்பிறப்பில் காண்பேன் இனி...''

தாய்க்கடனைத் தீர்ப்பதற்கு உற்றார் உதவ மறுத்தனர்! சிற்றம்பலனைத் துதித்தபடி, கற்றறிந்த தாய்த்தமிழால் பெற்றதாயைப் பிடிசாம்பலாக்கினார் பட்டினத்தார்! இதோ அந்தப்பாடல்.



"முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென்னிலங்கையில்
அனை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.''

தாய்க்கடன் முடித்து மீண்டும் ஊருராய்ச் சென்று மாந்தரின் நோய்க்கடன் தீர்த்தபடி, திருத்தலயாத் திரைபுரிந்து, ஓர்நாள் வடமாநில மாகாளபுர நகர்க் கோடியிலே நிஷ்டையில் இருந்த போது, அரண்மனையில் கொள்ளையிட்ட திருடர்கள், ஒரு மாலையைப் பட்டினத்தார் மீது வீசிச் சென்றனர். ''இவன்தான் திருடன்'' என்று கழுவிலேற்றியது அரச கட்டளை. கழுமரம் பற்றி எரிந்தது. தீர்ப்பளித்த மன்னன் **பத்ரகிரி**, தனது தவரை உணர்ந்து மணிமுடி துறந்து பட்டினத்தாரின் சீடராகி திருவிடைமருதூர் ஆலய வாசலிலே வந்தமர்ந்து, பத்ரகிரிச் சித்தரானார்.

சிவபெருமான் திருவிளையாடலால் சீடர் முதலிலே முக்தியடைகிறார், ''நானென்ன பாவியா?'' எனக் கதறினார் பட்டினத்தார்.

''வெண்காட! கடன்தீர இன்னும் நீ பாடித்திரிக! பேய்க்கரும்பு இனிக்கும் ஊரிலே உனக்குப் பிறவா நிலை வந்தெய்தும்'' என ஈசனின் அசரீரி ஒலிக்கிறது.

சீர்காழி, திருவெண்காடு, சிதம்பரம், காஞ்சிபுரம் முதலான பலக்ஷேத்திரங்களிலே யாத்திரை புரிந்தபடி...'' கோயில் நான்மணிமாலை'', கோயில் திருஅகவல், ஏகம்ப மாலை, ஞானப்புலம்பல், பூரணமாலை, முறையீடு, உடற்கூற்று வண்ணம்!" முதலான அற்புதப்பாடல்களைப் பூர்த்தி செய்த நிலையிலே சென்னையை அடுத்த திருவொற்றியூர் வந்தார்! பேய்க்கரும்பு இனித்தது, பட்டினத்தாரின் பிறவிப்பிணி தணிந்தது!

கடற்கரை மணல்வெளியிலே பாடியபடி ஆடிய சிறுவர் களோடு தானும் ஓடினார். மீன்கூடையால் குழந்தைகள் அவரை மூடினர்! கவிழ்த்த கூடையை நிமிர்த்தியபோது பட்டினத்தார் சிவலிங்கமாகக் காட்சியளித்தார்.

சிவாம்சமான பட்டினத்தடிகளின் பாடல் அத்தனையும் சத்தானவை! சத்தியமானவை! சித்தரைப் பணிந்து அவரது தத்துவம் உணர்ந்தால் இத்தரை வாழ்வு என்றென்றும் இன்பமே.

பட்டினத்தார் போன்று உலகநலன் கருதி **''ஞானக்கோவை''** களாகப் பாடியருளிய சித்தர்களை மறந்தோம், ஜெகப்புகழை இழந்தோம்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பட்டினத்தார் காலத்திலே ''எக்ஸ்ரே''இருந்ததா?'' E.C.G. இருந்ததா, ''ஸ்கேனிங்'' இருந்ததா?.

சிறுதுளியிலிருந்து மானுட வளர்ச்சியைத் தொடங்கி, பிடிசாம்பல் ஆகும் வரை எப்படியெல்லாம் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார் பாடலிலே தெரியுமா!

இதோ பட்டினத்தாரின் அந்த உடற்கூற்று வண்ணம்.



''ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணிதம் மீது கலந்து

பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கமடம் இதென்று.
பார்வை மெய் வாய் செவி
கால் கைகளென்ற

உருவமும் ஆகி உயர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து, மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து.

மகளிர்கள் சேனை தரவணையாடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப...'' எனத் தொடர்ந்து...

வாலிபனாகி, ''ஜாலி''யில் மூழ்கி, இளமையும் தீய, முதுமையும் ஆக, காலுடன் கை விழி பல்செவிதேய, ஆடிநடந்து, ஓடி விழுந்து ஆவியிழந்து, தீயில் அழிந்து, நீறென (சாம்பல்) மாறும் , மாநுடனே நீ ஆறறிவோடு வாழ்ந்திட வேணும் என்று உபதேசம் தந்த, ஞான இமயத்தைப் போன்ற பட்டினத்துச் சித்தரைப் பாடிப்பணிவோம் பரவசம் பெறுவோம்.

"காலன் வருமுன்னே கண்பஞ் சடையுமுன்னே
பாலுன் கடைவாயில் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு"

தனிப்பெருங்கருணை!

1. அடக்கமாக வாழ்பவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுகிறான்.
2. தன்னைத் தான் வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவனைவிட மேலானவன்.
3. ஜீவகாருண்யமே நல்லொழுக்கத்தின் அடிப்படை.

- மகாவீரர்

ஆலந்தூர் சித்தர்!

இருநூறு ஆண்டுகளுக்கு முன், சோழநாட்டு தஞ்சை மாவட்ட தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள **காட்டுச்சேரி** நாட்டுக்கோட்டை செட்டியார் குடும்பத்திலே, பிறந்ததும் தாயை இழந்து, தாயினும் மேலாக வளர்த்த சிற்றன்னை **ஆனையாத்தாளின்** மடியிலே **மலையபெருமாள்** எனும் பெயரோடு வளர்ந்து, குலவழக்கப்படி திரைகடலோடி, தென்னாப்ரிக்காவில் திரவியம் தேடித் தாயகம் திரும்பினார், திருமுருகபக்தராக, அன்புத்தாயிடம் திரவியங்களை ஒப்படைத்ததும் உடுத்திய துணியோடு வீட்டைவிட்டு வெளியேறினார். (நகரத்தார் இனத்துச் சித்தரான பட்டினத்தார்போல).

ஆலந்தூர் மக்களுக்கு அடித்தது யோகம்! தொட்டதெல்லாம் பொன்னாச்சு, மலையபெருமாள் கைபட்டதெல்லாம் பலமடங்கை எட்டியது! கால்படிபால், ஏழுபடியாகியது! தனிமரம் தோப்பானது, கனியும் தானியமுமாக தோட்டமும் நஞ்சைகளும் பூத்துக் காய்த்துத் தழைத்துச் செழித்தன.

மடியிலே வந்தமர்ந்த ஓர் குரங்கின் சூட்சும உடலுள் இருந்த காளிமாதாவின் சக்தியை அறிந்த பெருமாள் சித்தர், இறுதிவரை அதைபோஷித்து ஆலயம் கட்டி அருள்மழை பொழிய வைத்தார்.

பரம ஏழையான 'பெரியுதம்பியா பிள்ளை'யின் லட்சியக் கனவான பலகாததூர சிதம்பர தரிசனத்தை, சில

நிமிடங்களிலே பூர்த்தி செய்தார். ஆலந்தூர் சித்தரால் சுப்பப்பிள்ளை எனும் பக்தர், கடல் தாண்டிப்போய் கோடீஸ்வரானார்!

தூல உடலைப் பூமியிலே கிடத்த வேண்டிய வேளையை அறிந்த சித்தர், சமாதிக்கான இடத்தேர்வு முடிந்ததும் சுப்பப்பிள்ளைக்கு செய்தி அனுப்பி, அவர் வந்ததும் சூட்சம உடம்போடு அவருக்கும் ஆலந்தூர் பக்தர்கட்கும் தேஜோமயமாகக் காட்சி கொடுத்து, கற்பூர ஜீவாலையாகக் காணாமல் போனார்! இது நடந்த நாள் 11-8-1852.

ஆலந்தூர் மலையபெருமாள் சித்தர் பீடம், இன்று மஹோன்னத சிவலிங்கப் பேராலயமாகத் திகழ்கிறது. சுத்தமான மனதோடு சித்தரின் சன்னதியிலே போய் நின்று கேட்டது நடக்கிறது. நினைத்தது கிடைக்கிறது.

"மன வசியத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். அதற்கான வழி உங்கள் சாஸ்திரங்களில் உள்ளது. அதைப் படியுங்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களின் உண்மை இயல்பைப் போதியுங்கள். உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் (self-conscious) செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும், எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்."

- சுவாமி விவேகானந்தர்



நவ கிரஹ
இடைக்காட்டு சித்தர்

பொதிய மலைக்கும் சித்தர்களுக்கும் அதிகமான தொடர்பு உண்டு. ஆதிச் சித்தரான அகத்திய முனிவரின் தியான பூமியல்லவா அது.

நதி மூலமும், ரிஷி மூலமும் அறியப்படக் கூடாதவை! அந்த ரிஷிகளில் ஒருவரான இடைக்காடரின் பூர்விகமும் அப்படியே.

ஆடு மாடுகளை மேய்க்கும் சிறுவனாகப் பொதியமலைச் சாரலிலே திரிந்த மாட்டுக்கார இடைக்காடனைத் தேடி வந்தது, அட்டமாசித்தித் திருவருள்!

கோவர்தன கிரியையே குடையாய்ப் பிடித்த மாமாய ஸ்ரீ கோவிந்தனைப் போல, புல்லாங்குழலை இசைத்தபடி மாடுகளை மேய்த்துத் திரிந்த இடைக்காடன், நவநாதச் சித்தர் ஒருவரின் திடீர் வருகையால், அவர் தந்தருளிய ஞான தானத்தால் இடைக்காட்டுச் சித்தரானார்.

மோன நிலையில் முத்தியுண் டாமென்று
கான மாய் ஊது குழலே...
எனதென்றும் யானென்றும் இல்லாதிருக்கவே
தனதாக ஊது குழலே...

என்று குழலோசையோடு எல்லா உலகுக்குமான பொது நீதிகளைப் பாடி ஆடியே பரவசம் பெற்ற இடைக்காட்டுச் சித்தரின் ஞான திருஷ்டிக்கு... உலகத்திலே ஏதோ ஒரு ஊனம் நிகழப்போவது புரிகிறது! கோளாறைச் சரிசெய்து பூலோகத்தைக் காக்க, மேலான ஒரு திட்டத்தைப் போட்டார் திடீர் சித்தர்.

அறுபதாண்டுக்கு ஒரு முறை பன்னிரண்டாண்டுப் பூமிப்பஞ்சம் வருவது - மகாமகம் போல- அந்நாளைய வாடிக்கை போலும்.

தனது தீர்க்க தரிசனத்தால் மழையின்றி, பஞ்சம் வரப் போவதை உணர்ந்த இடைக்காடர், தனது ஆசிரமத்து ஆடுமாடுகளுக்கு, எந்தப் பஞ்ச காலத்திலும் தழைத்திடக் கூடிய எருக்கின் இலைகளை உணவாகத் தந்து பழக்கப்படுத்துகிறார். பழக்கப்பட்டு விட்டால் பாம்பும் உணவுதானே! இலை தழை புல்பூண்டுக்ளைத் தின்ற ஆவினங்கள், எருக்கந்தழைகளை விருப்ப உணவாக்கிக் கொண்டு ஏராளப்பால் கறந்தன.

பஞ்சம் வெடித்தது! நாடாள்வோர் நெஞ்சம் துடித்தது! இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து யாரென்ன செய்யமுடியும்!

பூமிகள் உலர்ந்தன! புல்லும் நெல்லும் தீய்ந்தன! நேமநிஷ்டைகள் நிலைகுலைந்து ஓய்ந்தன! பஞ்சம் பசி பட்டினிகள் ஊரெங்கும் பரவலானது. விண்ணையும்

மண்ணையும் கண்ணெக்காக்கும் சூரிய சந்திரன் முதலான நவகிரஹறங்கள் ஆளுக்கொரு திசையிலே அவர் களுக்கான நியதிப்படி வக்கரித்துக் கிடந்தனர்!

பூபாரம் தீர்க்க ஓர் குருக்ஷேத்திரப் போர்வந்தது போல, உலகத்தைக் கழுவித்துடைத்து சுத்தம் செய்ய இப்படி ஒரு உற்பாதம் ஏற்பட்டு... அனைத்தும் அழிந்து மீண்டும் தழைப்பது தான் பொதுவிதி போலும்.

''விதி'' க்குக் கட்டுப்பட்ட நவகிரஹறங்களும்... இயல்பான சுழல் நிலையிலிருந்து முரண்பட்டு, வக்கரித்து இடம் பெயர்ந்து சஞ்சரித்தபடி... பூமியைப் பார்த்தனர்.

பூமியிலே அனைத்துப் பகுதியும் பூண்டற்றுக் கருகி வர, இடைக் காட்டுச் சித்தரின் ஆஸ்ரமப் பகுதி மட்டும் ஆவினமும், பால் வளமும், அமோகப் பசுமையுமாக... விளங்குவது கண்டு, விபரத்தை அறியும் பேராவலுடன் வக்கரித்த நிலையிலேயே ஒன்பது கிரக நாயகர்களும் பூமிக்கு வருகிறார்கள்.

அண்ட சராசரங்களையெல்லாம் ஆட்டிப் படைக்கும் கிரஹ தேவர்களைக் கண்டதும் வரவேற்ற இடைக்காடர், பால்கொடுத்து உபசரிக்கின்றார்.

''உலகமே வரண்டு வெடித்துக் கருகிக் கிடக்கும்போது, உங்கள் பகுதிமட்டும் இப்படி பசுமையால்... பாலாய் பொங்குவது எப்படி?'' என்று ஏக காலத்திலே ஒன்பதின்மரும் இடைக் காடரைக் கேட்க...

''பாலைப்பருகுங்கள் பதிலைப் பிறகு தருகிறேன்'' எனக் கூறி, ''ஏழை மாடோட்டிப்பித்தனின் எளிய விருந்தோம்பல்'' என்று எருக்க இலைகளைப் புசித்த பசுக்களின் பாலை... எல்லோர்க்கும் வழங்குகிறார்.

ஆவலோடு வாங்கிப் பருகிய அனைத்து கிரஹ தேவர்களும்... எங்கேயோ... தாவிப் பறப்பது போன்ற பிரம்மையில் தள்ளாடி... தன்னிலையிழந்து... வக்கரித்தபடியே அப்படி அப்படியே மயங்கித் தரையிலே சாய்ந்தனர்.

வக்கரித்து இடம் மாறிக் கிடந்த கிரஹங்களை, இயல்பான முறையிலே உடனடியாக மாற்றிக்கிடத்தினார் இடைக்காட்டுச் சித்தர்.

கிரஹங்கள் இயல்பு நிலை கண்டதும், வானம் பூமிக்கு வசமானது! வையகத்தின் துயர்போனது. அடை மழைக்காலம் அப்போதே தொடங்கியது. மேகம் திரண்டது! மின்னல் அதிர்ந்தது! இடிஇடித்தது மழைபொழிந்தது! குற்றால அருவியென வானம் கொட்டோ கொட்டெனக் கொட்டியது! மலைகள் குளிர்ந்தன! உலர்ந்து கிடந்த மாநதிகள், அலைகளோடு நெளிந்தன! காட்டாற்றிலே கூட வெள்ளம் கரைபுரண்டு ஓடியது! பஞ்சத்தின் சுவடுகளே இல்லாத பசுமைபெற்றது பாரத பூமி. நெஞ்சம் குளிர நிமிர்ந்து நின்ற இடைக்காடர், தொழுது வணங்கியபடி கிரஹதேவர்களைத் துயில் எழுப்புகிறார்.

மயக்கம் நீங்கி எழுந்த கிரஹ நாயகர்கள், சுற்றுச் சூழலைப் பார்த்தனர். ஞானச் சித்தரால் ''குட்டுப்'' பெற்றதை உணர்ந்தனர். உலகத்தைக் காக்க வேண்டும் என்ற இடைக்காடரின் தியாக உணர்வையும், தன்னலமற்ற தன்மையால், தபோ வலிமையால் மாநுடர்கள் விதியையும் வெல்லும் வித்தகம் கண்டு வியந்து நின்று, ஆசி கூறிப் பாராட்டி அனைவரும் மறைந்தனர்.

விதியை மதியால் வென்ற வித்தகச் சித்தர்... நதியோரம் நடந்தபடி புல்லாங்குழலின் மெல்லிசைப் பின்னணியிலே... பாடி நடந்தார்.

"அல்லல்வினை இல்லையென்று தும்பீபற
ஆனந்தம் கண்டோமென்று தும்பீபற.
தொல்லைவினை இல்லையென்று தும்பீபற - பரஞ்
ஜோதியைக் கண்டோமென்று தும்பீபற...!"

மனோபலமே மஹாபலம்!

கடவுளிடம் நம்பிக்கை வைத்துக் கடவுளுக்கு மட்டுமே அஞ்சி நடப்போமானால் எவருக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை.

நிலையான எந்தச் செயலையும் அல்லது உண்மையான எந்தச் செயலையும் சாதிப்பதற்கு, முதலாவதாக நமது நெஞ்சில் அஞ்சாமை வேரூன்றியிருக்க வேண்டும்.

- மகாத்மா காந்தி

பொம்மை போல் பிறந்த நம்மாழ்வார்



வைகுந்தத்து ஸ்ரீ பரவாஸு தேவனையும், அவனது ''நிழல்''களான நித்ய சூரிகளையும், நூற்றெட்டு திவ்ய தேசத் திரு மூர்த்திகளையும் ஒரு சேரக் கண்ட ஒரே புண்ணியச் சித்தர் ஸ்ரீ **நம்மாழ்வார்.**

தாமிரபரணி நதி தவழ்ந்து பாயும், திருக்குருகூரிலே வேளாளர்குல **காரியார் - நங்கை** தம்பதியர்க்கு பிள்ளையாய் தோன்றியவர் இவர்.

கலியுகம் பிறந்த 45-வது நாளில் கி.மு.3102 பிரமாதி வைகாசிப் பௌர்ணமிதான் அவரது அவதாரத் திருநாள்.

ஸ்ரீதர, கௌஸ்துப, சேனை முதலியாரின் அம்சமாகத் தோன்றிய பிள்ளை, அழாமல் அசையாமல், கண்திறவாமல், பால்பருகாமல் வெறும் ஜீவ **''பொம்மை''** யாய்க் கிடப்பது கண்டு பெற்றோர் வருந்தினர்.

இரவோடு இரவாகத் திடீரெனத் தோன்றி குடைபோல் கவிழ்ந்த புளியமரத்தின் நிழலிலே பிள்ளையைக் கிடத்தி அருகிருந்து காத்தனர்.

(திருமாலின் ''மஞ்ச'' மாகிய ஆதிசேஷனே புனிதப் புளியாகி, குழந்தை நம்மாழ்வாருக்கு நிழலானார் என்பது வைணவக் கோட்பாடு).

காரியார் மகன் பிறக்கு முன்பே.... அவரிடம் சீடராவதற்காகவே பாண்டி நாட்டுத் திருக்கோளூரில் **மதுரகவி** தோன்றி, துவாபரயுகம் முடிந்ததும் குருவைத் தேடித் திருக்குருகூர் புறப்படுகிறார்.

உரையாடலின்றி, உணவேதுமின்றி உலக நடைமுறைக்கு மாறுபட்டு வளர்ந்த குழந்தைக்குப் பெற்றோர் ''**மாறன்**'' எனப்பெயரிட்டனர். மாறன் என்கிற உயிர் பொம்மை, வளர்ந்து உயர்ந்தது.

தனது ''வெளியுறவுச் செயலர்'' சேனை முதலியை அனுப்பி... மாறனை ஞானியாக மாற்றியருள் புரிகிறார் ஸ்ரீமந் நாராயணன்.

ஞானம் கைவரப் பெற்ற நம்மாழ்வார், மோனத் தவத்திலே மூழ்கி விடுகிறார். உண்ணாமல், உறங்காமல், தன்மேனி குறையாமல் ஆதிசேடப் புளியமரத்து நிழலிலே... அவர் கொலுவீற்றிருந்த போதுதான்... மதுரகவிச்சீடர் குருவை வந்தடைகிறார். (பன்னிரு ஆழ்வார்களிலே பெருமாளைப் பாடாமல், குருவை மட்டுமேபாடித் திருநிலைகண்டவர் ஸ்ரீ மதுரகவியாழ்வார்)

நம்மாழ்வாருக்குப் பெற்றோர் வைத்த பெயர் மாறன், இவரது பாசுரமெல்லாம் வேதத்தின் சாரமாக விளங்கியதால் ''**வேதம் தமிழ் செய்த மாறன்**'' ஆனார்.

துவாபரயுகச் சீடரையும், கலியுக குருவையும் இணைத்தபின், பெரிய பிராட்டியோடு, தமது திவ்ய தரிசனத்தைத் தந்தருளுகிறார் வைகுந்தவாசன்.

நித்யசூரிகளையும், நூற்றெட்டு திவ்ய தேசத் திருமூர்த்திகளையும் லட்சுமி நாராயணனையும் ஒருசேரத் தரிசித்த சத்தியச் சித்தரான நம்மாழ்வார், சதுர் வேதங்களின் சாரமான **திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**... முதலான திவ்யப் பிரபந்தங்களைப் பாடிக்கொடுத்து, பரமபாகவத பக்தகோடிகளுக்கெல்லாம் பகவானைக் காணும் ராஜபாட்டையைத் தேடிக் கொடுத்தபிறகு, திருமாலின் நித்யசூரிகளுள் ஒருவராகி... ஒளியாகி, வெளியாகி... உருக்கரந்தார்.

வேதம் தமிழ் செய்த மாறன் முக்தியடைந்த நன்னாளே வைகுண்ட ஏகாதசியாகும்.

பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீ ரங்கயாத்திரை சென்று, பச்சைமாமலை போன்ற திருமேனியனை... பவளவாய் கமலச் செங்கண் கொண்ட பரப்பிரம்மனை, உச்சிமேல் கரமுயர்த்தி... உள்ளத்தால் தொழுதழுதால், நிச்சயம் நம் பாபங்கள் நீறாகும் வைகுந்த, அச்சுதனின் பேரருளால் ஆனந்தம் பெறலாமே.

"உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறு அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே."

- நம்மாழ்வார் திருமொழி.



திருமழிசைச் சித்தர்

காஞ்சி மாநகரத்துக் கடவுளாகிய பெருமாளையே, தன்னோடு அழைத்துக் கொண்டு புறப்பட்ட ஞானமா சத்தியச் சித்தர் ஸ்ரீ திருமழிசையாழ்வார்.

சென்ற துவாபரயுகத்திலே 8,62,900 வருடங்கடந்து கி.மு.4202-சித்தாத்ரி தைத் திங்கள் ஞாயிறு மக நட்சத்திரத்திலே, **பார்கவமுனி** வருக்கும் **கனகாங்கி** எனும் தேவமாதுக்கும், கை, கால், முகம் எதுவுமற்ற ஓர் பிண்டம், பிள்ளையாய்ப் பிறந்து, பூமியிலே கிடந்து துடித்தது.

''இறையருள் ''இதை'' க் காபப தாகுக'', எனத் தொழுதபடி பிண்டத்தை ஒரு பிரப்பம் பாயிலே கிடத்திவிட்டு, ''விதி''யை நொந்தபடி தவம்செய்யப் போயினர் பெற்றோர்.

துரும்பிலும் தூணிலும் பக்தர் விரும்பும் இடமெல்லாம் விளங்கிடும் ஸ்ரீ பரந்தாமன், அந்தப் பிண்டத்தைப் பேரழகுக் குழந்தையாக்கி, தனது சுதர்ஸன அம்சத்தையே தந்தருளி அந்தர் தியானமாகிறான்.

பிரப்பம் பாயிலே வீறிட்டு அழுத பிள்ளைக் குழந்தையை, **திருவாளன்** எனும் வேளாளன் எடுத்து வளர்த்து ஆளாக்குகிறான்.

பசிதாகம் எதுவுமே இல்லாமல் பாலப் பருவத்திலேயே மேலான நூலறிவு பெற்று, பரமாத்ம தத்துவ''தாக''த்தால் பற்பல மதாசார்யர்களை அணுகியும் தாகம் தணியாமல், சென்னைத் திருமயிலையிலே பேயாழ்வாரைக் கண்டு, பிறவிப் பயனை அடைந்து **திருமழிசையாழ்வார்** ஆகிறார்.

எழுநூறு ஆண்டுகள் யோக நிலைமேற்கொண்டு, ஈரேழு புவனங்களையும் இதயத்தில் ஸ்பரிஸிக்கும் பேரருட் சித்தராகிறார். அவருக்குச் சீடனாக **கணி கண்ணன்** எனும் புலவன் காஞ்சியிலே இணைகிறான்.

காஞ்சிப் பல்லவன், திருமழிசையின் சீடனாகிய கணி கண்ணனிடம், ''உமது குரு எமைப்பாட ஏற்பாடு செய்க'' என்றான், ''திருவைத்தவிர வேறு எவரையும் பாடாத தெய்வம், அவர்'' என்றதும் ''நீராவது நம்புகழைப் பாடி, ஏராள வெகுமதியைப் பெற்றுச் செல்க'' என்கிறான். ''மாநுடரைப் பாடும் மடமைக்கு ஆட்படோம்'' எனக் கூறிய கணிகண்ணனை மன்னன் நாடு கடத்துகிறான்.

''பாகவத அபசாரம் நிகழும் ராஜ்யத்திலே நானும் இரேன்'', என ஆலயவாசலுக்கு வந்த திருமழிசை யாழ்வார்...

''கணிகண்ணன் போகின்றான் காமருப்பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா!
துணிவுடைய செந்நாப் புலவனும்
போகின்றேன் - நீயுமுந்தன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்!''

எனப்பாடிவிட்டு... ஊரைவிட்டுச் சீடருடன் வெளியேற, பக்தன் சொன்ன வண்ணம் செய்த பெருமாளாகத் திருமழிசை ஆழ்வாரின் பின்னால், ஸ்ரீ தேவராஜப் பெருமானும் புறப்படுகிறான்.

கடவுளுக்கே கட்டளை இட்ட குருதேவரின் காலிலே விழுந்து மன்னன் மன்னிப்பு கேட்கிறான்.

"துணிவுடையசெந்நாப் புலவனும்
போக்கொழிந்தேன் - நீயுமுந்தன்
பைந்நாகப் பாய்விரித்துக்கொள்"

எனப்பாடிப் பரமனை மீண்டும் ஆலயத்துள் சேர்த்த மகத்துவச் சித்தர் திருமழிசையாழ்வார்.

பல ஆண்டுகள் தனக்குச் சேவை செய்த ஓர் மூதாட்டியின் ஆசைப்படி, தனது தபோ பலத்தால், அவளைப் பேரழகுப் பெண் ஆகச்செய்து, பல்லவ மன்னனுக்குப் பட்டத்தரசி ஆக்கி வைத்த பரமதயாளன்.

ஒரு சமயத்திலே... பிற சமயத்தவரின் சவாலை ஏற்று, காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாளையும் தாயாரையும் தனது இதயத்திலே பிரஸன்னமாக வைத்த வீரவைணவ விவேகச் சித்தர் இவர்.

நாலாயிர திவ்ய பிரபந்தத்திலே, **நான் முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்**, முதலான தேனமுதத் திவ்யத்தமிழ்ப் பாசுரங்களைப் பாடிக் கொடுத்ததால்... நித்ய சிரஞ்சீவியாக... திவ்ய தேசமெங்கிலும் ஒளியாய்

ஒலியாய்... வாழ்ந்து கொண்டிருக்கிறார் சத்தியச் சித்தரான ஸ்ரீ திருமழிசையாழ்வார்.

"நன்றிருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்ததேவ தேவனே
குன்றிருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெ:கணைக் கிடந்ததென்ன நீர்மையே."

- திருமழிசையாரின் திருச்சந்த விருத்தம்

ஆன்ம நேயம் வேண்டும்!

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிச் செய்த

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார, சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைபாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்!

-வடலூர் ராமலிங்கம்

தாயுமான தத்துவச் சித்தர்!



பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி 1701 - 1750 காலகட்டத்திலே... வாழ்ந்த ஒரு சமரச சன்மார்க்க ஞானச்சித்தர் **ஸ்ரீ தாயுமானவர்**. அவரது குடும்பத்துப் பூர்விகம் வேதாரண்யம். தாயுமானவர் பிறந்தது திருச்சிராப்பள்ளி, சமாதியானது இராமநாதபுரம். பெற்றோர்... **கேடிலியப்பர் - கஜவல்லி.**

வேதாராண்யம் கோயிலிலே ஆணையராக இருந்த கேடிலியப்பரை, முத்து கிருஷ்ண நாயக்க மன்னர், உயர் பதவிதந்து, திருச்சிக்கு அனுப்பினார். முதல் மகன் சிவசிதம்பரத்தைத் தம்பிக்குத் தத்துக் கொடுத்து விட்டதால் மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமான ஈஸ்வரனிடம் வேண்டிப் பெற்ற பிள்ளைக்கு ''தாயுமானவன்'' என்றே பெயரிட்டனர். அவர்தான் **ஸ்ரீ தாயுமானவர்.**

செல்வக் குடும்பத்துப் பிள்ளை, நிறை பொருளைத் தேடாமல், இறையருளைத் தேடும் திருவருட்செல்வராக வளர்ந்தார். வாலிபத்தையும் அடைந்தார். துணைவரை இழந்த தாயின் கட்டாயத்தால், **மட்டுவார்குழலி** எனும் மங்கையை மணந்து, மூன்றாண்டு இல்லறத்துள் ஓர் பிள்ளைக்குத் தந்தையுமானார்.

நாயக்க மன்னர்கள், மராட்டிய அரசர்கள்... இஸ்லாமிய ராஜாக்கள்... ஆகிய மூவர் பிடியிலும் சிக்கித் தமிழகம், நிலைகுலைந்து நிம்மதியற்றுக் கிடந்த காலத்திலே, தந்தையின் அரசுப்பதவி, சிந்தையெலாம் ''சிவ'' மாக வாழ்ந்த தாயுமானவரிடம் வந்தது.

அவரது நேர்மைக்கும், நியாய தர்மங்கட்கும் குறிப்பாக மன நிம்மதிக்கும் அரசுப் பதவி முழுத் தடையாக இருந்ததால், அதை உதறிவிட்டு... சைவ மடத்து மௌன குரு தேசிகர் என்பவரிடம் உபதேசம் பெற்றுச் சன்மார்க்கப் பாதையிலே நடந்தார்! சமுதாயச் சேவையிலே இணைந்தார்! அவரது உள்ளத்தைப் பிரதிபலிக்கும் அவரது பாடல் ஒன்று...

''அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே''

- பராபரக்கண்ணி(155)

எளியோரை முன்னேற்றும் ஏணியாக, இறைவனைக் கண்ட உயர் ஞானியாக... நற்றமிழ்க் கவிஞராய், நால்வேத வித்தகராய், பெற்ற தாய்த் திரு நாட்டின் பெயர் விளங்கச் செய்தவராய்... சிந்தனைச் செல்வராய், ஜீவன் முக்தராய்...த் திகழ்ந்த தாயுமானவரின் **''பராபரக் கண்ணி''**யும், **''தேஜோமயானந்த''**த் திருப்பாடல் களும்... படிப்பதற்கு மட்டுமல்ல; வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிப்பதற்குத் தேவையான தத்துவத் தமிழ்மணி மாலைகளாகும்.

அறிவுமயமாய், ஆனந்த ஒளியாய்த் திகழும் இறைவனைக் காண... மாநுடமானது, அன்பு நெறியிலே... செல்லவேண்டும்! அது எத்தனை கடினம் என்பதை கீழ்காணும் அவரது ''தேஜோமயானந்தம்'' தெரிவிக்கிறது...!

கந்துஉக மதகரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலி வாயையும்
கட்டலாம்; ஒருசிங்கம் முதுகின்மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்து ஆட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்
வேறு ஒருவர் காணாமல் உலகத்து உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமும் இளமையோடு இருக்கலாம்; மற்று ஒரு
சரீரத்தினும் புகுதலாம்
ஜலம்மேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்நிகர்இல் சித்தி பெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது, சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே.

இந்தப்பாடலுக்கான அர்த்தத்தை... எளிய நடையிலே புதிய முறையிலே, ஏராள கருத்துச் செய்திகளோடு... சிங்கம்பட்டி மன்னர் ஸ்ரீ டி.என்.எஸ்.

முருகதாஸ் தீர்த்தபதி அவர்கள் ''**சத்யகங்கை**'' யின் பிரவாகமாகவே வழங்கியிருக்கிறார், அது அப்படியே கீழேதரப்படுகிறது

- வே.கி.

1. **'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தாலம்'** (கந்துகம் - Tethering) முளை அறைந்து கட்டிற்குட்பட்டு வைக்கப்பட வேண்டிய யானையை, நாம் விரும்பியது போல் ஏவல் புரிய செய்யலாம்.

2. **'கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்'** காட்டுவழி செல்கிறவர்கள் இன்ன இன்ன இடம் எல்லை என்று மனதில் குறிப்பிட்டு, அதற்குட்பட்ட இடத்தை மாந்திரீகத்தால் ''கட்டி'' விட்டு உள்ளே புகுந்தால், துஷ்ட மிருகங்களின் தொந்தரவு உறுதியாக இராது. காட்டுவழி கழிந்தோ, அல்லது உள்சென்று மீண்டும் திரும்பிய உடன், ''கட்டை'' அவிழ்த்துவிட வேண்டும். இல்லையென்றால் அது மிகப் பெரிய பாவம். கட்டவிழ்த்து விடும்வரை அம்மிருகங்கள் உணவருந்தாது. இச்செயற்பாட்டை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். இதுவும் 64 கலைகளில் இந்திரஜாலம் மற்றும் மகேந்திரஜாலம் என்ற ஒன்றில் உள்ள முறையாகும்.

3. **ஒரு சிங்கம் முதுகிற்மேல் கொள்ளலாம் - ஸ்ரீ** வைகுண்டத்தைச் சார்ந்த (தற்போது சிதம்பரனார் மாவட்டம்) **ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள்,** மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், கந்தர் கலி

வெண்பா பாடியவர், மற்றும் கங்கைக் கரையில் சகலகலாவல்லி மாலை பாடி, காசிநகர் நவாப்புடன் பேசுவதற்கு என உடன் ஹிந்தி மொழி பேசும் ஆற்றல் பெற்றவர். காசி மாநகர் நவாப், சிம்மாசனத்திலமர்ந்து தன்னை மதிக்காத காரணத்தால், அவர், நினைத்த மாத்திரத்தில் சபையுள் ஒரு சிங்கம் நுழைந்து எல்லோரும் அலறிப் புடைத்தோட, இவர் இலாவகமாக சிங்கத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார். இதுவும் ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த உண்மையான நிகழ்ச்சி.

4. **கட்செவி எடுத்தாட்டலாம்.** நாகத்தை நம் சொற் கேட்டு நடக்கும்படி செய்யலாம்.

5. **வெந்தழலில் ரசம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்** - ஐந்து அடிப்படை பூதங்கள் முறையே நிலம், நீர், தீ, வளி, வெளி, இவ்வைந்து லோகத்தையும் வெந்தழலின் மேல் பாதரசத்தை வைத்து (Medium) இவை ஒன்றையும் அதன் மேற்கொண்டு வைத்து அதன் உள்ளடக்கியிருக்கும் ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாகப் பிரித்து இச்சித்தது போல் செயல்படுத்தலாம். லாட சாமியார்கள், அல்லது பைராகிகள் என அழைக்கப்படுகிறவர்கள் இம்முறைகளைக் கையாளுவார்கள் எனக் கேள்விப்படுகிறோம்.

6. **வேறு ஒருவர் காணாமல் உலகத்தில் உலாவலாம் -** திருவனந்தபுரம் ''மூலம் திருநாள்'' மகாராஜா

அவர்கள் காலத்திலே, அஞ்சனமை வைத்துக் கொண்டு மற்றவர்கள் கண்ணிற்குத் தென்படாமல் மகா ராஜா வழக்கமாக சாப்பிடும் இலைமுன் அமர்ந்து ஒருவன் உணவு உண்டதாகவும், நுண்மதி நுட்பம் படைத்த அமைச்சர் ஒருவர் சந்தேகித்து, சுடச்சுட உணவை பரிமாறச் சொன்னதாகவும், அந்த வெப்பத்தின் காரணமாக அவன் நெற்றியில் வைத்திருந்த அஞ்சனம் உருகி அழிந்து, ''காளி புலையன்'' என்ற மாயாவி பிடிபட்டதாகவும் காது வழிச் செய்தி உலகத்தில் நிலவுகிறது.

7. **விண்ணவரை ஏவல் கொள்ளலாம்**-எப்போதுமே விண்ணிலே கந்தர்வர்களும் வானவர்களும் உலவி வருகிறார்கள். **சாரதா திலகம், பிரபஞ்சச்சாரம்** போன்ற மந்திர சாஸ்திர நூல்களில் கூறியிருக்கிற சில மந்திரங்களை குரு வாயிலாகப் பெற்று, உருவேற்றி பிரயோகப்படுத்தினால், விண்ணவர்களின் நிழல் தரையில் படுமாறு நம் கண்ணுக்குப் புலப்படும். பின் நாம் ஓடிச்சென்று அந்நிழலில் நின்றோமானால் அவர்கள் கீழ் இறங்கி வந்து நம்மிடம் பேசுவார்கள். இதையும் சமீபகாலம் வரை நம்மிடையே இருந்த பெரியவர்கள் கையாண்டு, தீர்க்க முடியாத சிலருடைய வியாதிகளுக்குக் குணம் கண்டிருக் கிறார்கள்.

8. **சந்ததம் இளமையோடிருக்கலாம் - Paul Brunton** என்ற ஆங்கிலேயர், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி பெரியவாளின்

அறிவுரையின் பேரில், இரமண மகரிஷியை சந்திப்பதற்கு முன், சென்னை அடையாறு பாலத்தில் ஒரு தபசியை சந்தித்து அவரின் வயது சுமார் 40 இருக்குமாவென்று கேட்டபோது, அவர் தன்க்கு வயது 300 என்று குறிப்பிட்டாராம்!

9. **மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்** - தென் அமெரிக்காவில் Zombie என்று ஒரு அபூர்வ மந்திரவாத முறை இன்றளவும் கையாளப்பட்டு வருகிறது. அதாவது ஒருவனைக் கொன்று, இறந்தவன் உயிரை மேலுலகங்களுக்குப் போக விடாமல் தடுத்து, மீண்டும் இறந்த உடலிலேயே உட்புகுமாறு செய்வித்து, தனக்கு வேண்டாத எதிரிகளை அழிக்கும்படி செய்து, பின் அப்பிணம் யார் கையிலும் அகப்படாமல் கடலுள் கொண்டு சென்று அழித்து விடுவது. இச்செயல் முறையை யாரும் கண்டு விவரிக்க முடியாததால், புலன் விசாரணைகளுக்கு அடைபடவில்லையாம். மாடு மேய்க்கும் மூலன் உடலில் சுந்தரநாதர் அக்காலத்தில் யோக முறையின் அடிப்படையில் புகுந்தார் என்பது வரலாறு.

10. **ஜலமேல் நடக்கலாம்** - ஜலஸ்தம்பம், கங்கைக் கரையில் அமர்ந்து இருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் பார்த்துக் கொண்டிருக்க, ஒரு ஹடயோகி கங்கைப் பிரவாகத்தின் மேல் நடந்து வந்து ராமகிருஷ்ணரை சந்தித்தார். ''எத்தனை ஆண்டுகள் இதற்காக நீங்கள் பயிற்சி செய்தீர்கள்'' என

பரமஹம்ஸர் கேட்க, ''சுமார் 20 ஆண்டுகள் பயிற்சி செய்தேன்'' என்றார் அவர். ''நாலணாவைக் கொடுத்தால் தோணியில் கடந்து விடலாமே, நீங்கள் இதுகாறும் வாழ்நாளை வீணாக்கி விட்டீர்களே'' என்று வருந்தி உய்வு பெற அவருக்கு உபதேசித்தார் பரமஹம்சர் என ஒரு வரலாறு உண்டு.

11. **கனல் மேலிருக்கலாம்** - திருக்குறளுக்கு உரை எழுதியதாகக் கருதப்படும் பரிமேலழகரின் இளமைப் பெயர் அழகர். அவர் வெங்கலக் குதிரை ஒன்று செய்து அதனடியில் நெருப்பிட்டு, பின் குதிரை மேலமர்ந்து உரை எழுதியதாகச் சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு அரசனின் கட்டளையை ஏற்று நடந்த காரியமாகும்.

12. **தன்னிகரில்லா சித்தி பெறலாம்** - சித்தர்கள் எனப்படுவர் மக்களினத்தில் தோன்றியவர்களேனும், தம் தவயோக ஆற்றலால், அஷ்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள் அவையாவன...



அணிமா - அணுபோலச் சிறியதாதல்
மகிமா - மேரு போலப் பெரிதாதல்
இலகிமா - காற்றுப்போல் இலேசாதல்
கரிமா - பொன் போல் பளுவாதல்
பிராப்தி - எல்லாவற்றையும் ஆளல்
வசித்துவம் - அனைவரையும் வசப்படுத்தல்
பிராகாமியம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல்
ஈசத்துவம் - விரும்பியதைச் செய்து முடித்து அனுபவித்தல்

இறுதியாக தாயுமான ஸ்வாமி என்ன சொல்கிறார். இவ்வளவையும் செய்யும் ஆற்றல் படைத்த மனிதனுக்கு ஒன்றும் மட்டும் செய்வது அரிது என்கிறார். அதுதான் மனம், விழிப்புநிலை அல்லாத உறங்கும் நிலையிலும், ஸ்வப்பனத்தின் நடுவேயும் அலைபாயும், அடங்காது.

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது'' என்கிறார்'' ஸ்ரீ தாயுமானச்சித்தர்.

வள்ளலார் எங்கே வாழ்கிறார்?

வள்ளலார் ராமலிங்க அடிகள், 1874 - ஜனவரியில் தம் இறவா உடல் சித்தி எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு, நம்புவதற்கு அரிய வாக்குறுதிகளை அளித்துள்ளார். அவையாவன :- 1. நான் இந்த உடலில் இருக்கிறேன். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்து கொள்வேன். 2. நான் என் தனி அறையில் இருந்து கொண்டு என் உடலைக் காணாதபடி கரைத்து விட்டு அதேசமயம் எங்கெங்கும் எவ்வுலகிலும் இருப்பேன். 3. அருட் பெருஞ்ஜோதிப் பேராண்டவர் இந்நிலவுலகில் நேரடியாக வெளிப்பட்டு விளங்கும்படி வந்து நிலை கொள்வார். 4. அப்போது நானும் இறவா முத்தேக வடிவு உடலுடன் மறுபடி திரும்பி வருவேன். 5. மகான்களுக்கு சாகாவரமும் ஏனையோர்க்கு பக்குவம் வரும்படி பரிபாக நிலையும் அளிப்பேன் என்றார்.

திருவலச் சித்தர்!

அறுபத்து மூவருள் ஒருவரான திருக்குறிப்புத் தொண்டரின் அடிச் சுவட்டிலே வ்ந்த ஒரு குடும்பம், குடியாத்தம் தாலுகா, காரணாம்பட்டு **குள்ளப்பா அம்மணியம்மாள்** தம்பதியருக்கு வாரிசுகள், ஒன்பது. அதிலே ஒருவன் சின்னையா! மாடுமேய்க்கும் போதே காவடி எடுத்து ஆடி, பால முருகனின் தரிசனம் கண்டவன்.

ஸ்ரீராமாநுஜர் துறவு கொள்வதற்கு அவரது மனைவியைக் காரணமாக்கிய திருமாலின் மருகன், தானும் மாமன் வழிசென்று, சின்னையனை ஆண்டி யாக்கினான். ஆண்டியைச் சித்தராக்கினான். ''சித்'' என்றாலே அறிவு. சித்தை உடையவர் சித்தர்.

ஊரூராய்த் திரிந்து திருப்போரூரான் பெயர் கூறி வில்வ இலை விழுதோடு, விபூதியை மக்களுக்கு வழங்கினார் சின்னைய சித்தர். தீராத நோய் தீர்ந்தது, தெளியாத மதி தெளிந்தது. குணம் கண்ட பலர் பணமழை பொழிந்தனர்! மண்ணும் பொன்னும் ஒன்றே எனும் மஹாத்ம நிலை கண்ட சின்னையனைத் ''திருவலம் போ'' என ஆணையிட்டான் திருத்தணியான்!

திருவலம் ஊரிலே வில்வநாதேஸ்வரர் கோயில் பாண்டியர் காலப் பழமைச் சின்னம். பூண்டு முளைத்துப் புதர் மூடிச் சீண்டுவார் அற்றுக் கிடந்ததை, மௌன விரத்தை மேற்கொண்ட சித்தர்... மாபெரும் கோயில்

ஆக்கிக் கும்பாபிஷேகம் செய்தார். **சுவாமி சின்னையாச் சித்தர்**, பேசாவிரதம் நீடித்ததால், திருவலம் **சிவானந்த மௌன சுவாமிகளானார்**. 14 ஆண்டுகள் தொடர்ந்த மௌனம், நேருஜி மறைந்த (1964) காலத்தில், முடிந்தது.

அவர்தரும் வில்வமும், விபூதியும் தீராத வினைகளை... நோய்களை... பிசாசு பேய்களை, விரட்டியடித்ததால் பணமழை வெள்ளமாகப் பெருகிப் பொழிந்தது. கூடை கூடையாகப் பணம் திருவலம் சிவானந்து ஆஸ்ரமத்தில் கொட்டிக் கிடக்கும். **''சிவன் சொத்து குலநாசம்''** என்பதை திருவலம் சுவாமி நிகழ்த்திக் காட்டி... ஆலயத்திருப்பணிகள் பலவற்றை அடுக்கடுக்காய் முடித்தார். சீனப்படையெடுப்பு (1962) காலத்திலே, திருவலச் சாமி உயர்ந்த தேசியச் சாமியாகவும் திகழ்ந்தது! காலமெல்லாம் **புலால் உணவை எதிர்க்கும் அறப்போர்** செய்து மாநில அளவிலே மிகப்பெரும் வெற்றியும் பெற்றது.

திருவலச் சித்தரின் தாரக மந்திரம் **''ஓம்'' காற்றே சக்தி! அதுவே முதல்தெய்வம்!''** என்று, ஒன்றான தெய்வத்தைப் போற்றினாலும், ஞான ஏணியான கோயில் வழிபாட்டை நாளும் பேணியது. திருப்பதி திருமலை, சிதம்பரம், காஞ்சி, திருத்தணி, சித்தூர் என்று பல ஆலயங்களுக்கு, தேரும் திருவிழாவும் திருவலச் சித்தரால் ஏற்பட்டுப் பேறுபெற்றன.

டாக்டர்கள் கை விட்ட பல ''கேஸ்'' களை வாழவைத்தவர்! வெற்றிவடிவேலனருள் விபூதியால் புற்று

நோய்களை ''ப்பூ'' என ஊதியவர். தன்னைத்தானே ஒரே இடத்தில், ஒரே நேரத்திலே இருவராகக் காட்டியவர்! மின்னலை அழைத்து மழையை ஈட்டியவர்!! தன்னலமற்ற கோவணாண்டிக் கோடீஸ்வரத் திருப்பணிச் சித்தர்! மனமொழி மெய்யால் வணங்கிடலாமே, வருவினை தீர்ப்பார் ஜீவசமாதித் திருவலச்சித்தர்.

அருள் விருந்து

ஒன்றே. ஈசுவரன் அழிவற்றவர். அவர் நியதியும் அழிவற்றது. ஈசுவர நிதிக்கு உட்படுபவன் ஈசுவரனை அடைகிறான்.

அற்பச் செயல்கள் போன்று தென்படுபவைகள் சில வேளைகளில் மனிதனுடைய வாழ்க்கையையே மாற்றியமைக்க வல்லவைகளாகின்றன.

தன்னைப் பாபியென்று நினைப்பவன் பாபியாய் விடுகிறான். தன்னைத் தூயவன் என்று உறுதியாக நினைப்பவன் தூயவன் ஆகிறான். எண்ணத்துக்கு ஏற்ப வாழ்வு அமைகிறது.

வீடெங்குமுள்ள இருளைக் குறித்துக் குறை கூறுவதைவிட, ஒரு சிறு விளக்கேற்றி வைப்பது மேல். உலகெங்குமுள்ள கேடுகளைக் குறித்துக் குறை கூறுவதை விட, ஒரு சிறு நலன் செய்வது சிறந்தது.

- ஸ்ரீ மத் சித்பவானந்தர்



மச்ச முனி

போகரின் பிரதான சீடர் மீன்பிடிக்கும் ஜாதியர்
புண்ணிய மெல்லாம்பிறர்க்கு உதவுதலே என்றவர்
''திராவகம் எண்ணூறு'' எனும் மருத்துவநூல் தந்தவர்
''தேவவைத்யம் எண்ணூறு'' இவரேதான் செய்தவர்.

தன்வந்திரி

ஆயுர்வேதம் கற்றிடவே பூமியில் பிறந்தவர்
அனைத்தையும் குருத்துவாஜ முனிவரிடம் பெற்றவர்
நோயகற்ற ''தன்வந்ரி நிகண்டு'' ஒன்று தந்தவர்
நூறுநூறு நூறுவகை சித்தவைத்யம் கண்டவர்.

கபில்ர்

கடலலைமேல் அமர்ந்தபடி யோகம் செய்த மாதவர்
காண்பவர்க்கு தீஜ்வாலை மேனிகொண்ட கபிலராம்
இடைக்காடர் பாரிவள்ளல் ஔவையாரின் நண்பராம்
இந்திரனால் அமராவதிச் சிந்தாமணி கண்டவர்.

கருவூர்த் தேவர்

ராஜராஜ சோழனுக்கு நல்லமைச் சராம்இவர்
நஞ்சைக்கூட அமுதமாக்கும் சித்திபெற்ற சித்தராம்
வேதியர் குலம்பிறந்தும் ஜாதிமதம் நீத்தவர்
விண்ணளாவும் பெரியகோயில் லிங்கத்தையே
சேர்த்தவர்.

ஆலயச் சித்தர்கள் எத்தனையோ!

தஞ்சைப் பேராலய வளாகத்திலே அடக்க மாகியுள்ள கருவூர்த்தேவரைப் போலவே, ஏனைய பலப்பலநூறு சித்தர்களும், ஏதேனும் ஒரு வகையில் தெய்வத் திருக்கோயில்களோடு நேரடித் தொடர்பு உள்ளவர்களே. திருவண்ணாமலையிலே நூற்றுக் கணக்கான சித்தர்கள். புதுச்சேரியில் மட்டும் 35க்கும் மேற்பட்ட சித்தர் சமாதிகள் உள்ளன. தமிழக ''புட்டபர்த்தி''ஆன மேல்மருவத்தூரிலே 21-சித்தர்களின் ஜீவ சமாதியாம். இமாலய ரிஷிகேசத்தில் ஏராளச் சித்தர்களாம்.

புத்தபிரான் நிர்வாணம் (கி.மு.463-முக்தி) கண்ட பிறகு... பௌத்தமதம், **ஹீனயானம், மஹாயானம்** என இருப்பிரிவாகி, ஒரு பிரிவினர், மந்திர தந்திர சித்தாடல் களைக் கொண்ட 84 சித்தர், சித்தினிகளைக் கொண்டிருந்தனர் என்பதைச் ''சதுராசீதி'' ''ஸித்தபிரவிருத்தி'' நூலாதாரத்துடன், படங்களோடு வெளியிட்டிருந்தது. 1995-**ஓம் சக்தி** தீபாவளி மலர்

பிரேமா பிரசுர **''சித்தர் பாடல்''** பதிப்பாசிரியர் (1959) **ஸ்ரீ அரு. இராமநாதன்** அவர்கள், வடநாட்டிலே 'நாதமார்க்கம்' என்று யோகத்தை வளர்த்த 84 சித்தர்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே சித்தர்கள் தொகை கணக்கில் அடங்காதது, யாரும் கண்டறிய முடியாதது.

ஓடும் மூச்சையே ஹரிஹரனாகக் கொண்டு... ஆத்மபூஜை செய்யும் சித்தர்கள், சமுதாயப் பண்பாட்டின் முறையான வளர்ச்சியைக் கருதி, **ஆலயவழிபாடு தான் சாலச்சிறந்தது** என அறுதியிட்டுக் கூறினார்கள்.

கோயில் அமைப்பு, மூலவர் வடிவம், குடமுழுக்கு, பூஜை புனஸ்கார ஆகமநெறி முறைகள், ஆராதனை அர்ச்சனை முதலான அனைத்திலும் முழுஈடுபாடு கொண்டிருந்தனர்; கொண்டும் இருக்கின்றனர். பல சித்தர்கள்: பேராலயங்களிலேயே ஜீவ சமாதியும் ஆகியுள்ளனர்.

மாதிரிக்குச் சில க்ஷேத்திரங்களையும், சித்தர்களையும், அவர்தம் கோத்திரங்களையும் பார்ப்போமா.

ஆதிநந்தி	தேவகணம்	திருவாவடுதுறை
அகத்தியர்	வேளாளர்	அனந்தசயனம்
சட்டைமுனி	சிங்களவர்	ஸ்ரீரங்கம், சீர்காழி
கோரக்கர்	கள்ளர்	பேரூர்,
திருவள்ளுவர்	?	திருமயிலை
கருவூர் சித்தர்	அந்தணர்	திருக்காளத்தி, கரூர்
பதஞ்சலி முனிவர்	கள்ளர்	இராமேஸ்வரம்
இராமதேவர்	?	அழகர்கோயில்
அழுகணிச் சித்தர்	?	நாகப்பட்டினம்
மார்க்கண்டர்	?	கருவை நல்லூர்
காசிபர்	?	ருத்ரகிரி
வரதர்	?	தென்மலை



கன்னிச் சித்தர்	?.	பெருங்காவூர்
திருமூலர்	தேவர்-ஆயர்	சிதம்பரம்
கும்ப முனிவர்	?	திருவனந்தபுரம்
மச்சமுனி	செம்படவர்	திருப்பரங்குன்றம், திருவானைக்கா
கொங்கணச் சித்தர்	கன்னடர்	திருப்பதி, கோடித்துறை
பாம்பாட்டிச் சித்தர்	கோஷாயி	விருத்தாச்சலம், மருதமலை
பட்டினத்தார்	செட்டியார்	திருஒற்றியூர்
புன்னாக்கீசர்	ஆயர்	நாங்குநேரி
தன்வந்திரி	ஐயர்	வைத்தீஸ்வரன் கோயில்
போகநாதர்	?	திருக்கழுக்குன்றம்
விஸ்வாமித்திரர்	க்ஷத்ரியர்	திருவாவடுதுறை
நந்தீசர்.	சிவகணம்	காசி
வசிஷ்டர்	வேதியர்	வைத்தீஸ்வரன் கோயில்
காளங்கிநாதர்	சீனர்	காஞ்சிபுரம்
சுந்தரர்	ஐயர்	திருவாரூர்
கடுவெளிச்சித்தர்	?	திருக்கச்சி
கௌதமச் சித்தர்	?	திருவருணை
சேதுச்சித்தர்	?	திருவிடைமருதூர்
கமலமுனி	?	திருவாரூர்
சுந்தரானந்தர்	வேளாளர்	மதுரை
போகர்	?	பழனி, கதிர்காமம்





குதம்பைச்சித்தர்	யாதவர்	மாயூரம்
அகப்பேய்ச்சித்தர்	வேளாளர்	திருவையாறு
பூனைக்கண்ணர்	எகிப்தியர்	எகிப்து
வான்மிகர்	?	எட்டுக்குடி
காளாங்கிச்சித்தர்	?	திருக்கடையூர்
சிவவாக்கியர்	ஐயர்	காஞ்சிபுரம்
இடைக்காடர்	யாதவர்	திருவண்ணாமலை

உலகம் உங்கள் காலடியில்!

“உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்க்ம். நமது பெயர்களைப் பறையறைவ தன்று.

உங்கள் அனைவரிடத்தும் நான் வேண்டுவது ஒன்றே. உங்கள் தற்பெருமையை வளர்த்தலையும், ககஷி கட்டுதலையும் பொறாமையையும் என்றைக்கும் ஒழித்துவிட வேண்டும் என்பதே அது. பூமிதேவியைப் போன்று, அனைத்தையும் பொருப்பவராதல் வேண்டும். உங்கட்கு இதை அடையக்கூடுமேல், உலகம் உங்கள் காலடியில்.

கீழ்ப்படிதலை அறிபவன் கட்டளையிடுதலை அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். ஒன்றாகக் கூடிவாழ்தலே நமக்கு சிறந்த வலிமை. அதன் இரகசியமாவது கீழ்படிதலே”

- சுவாமி விவேகானந்தர்

சர்வக்ஞ ஆதி ஸ்ரீ சங்கரச் சித்தர்!



அதர்மம் மீறும்போது, தர்மம் சீறுகிறது! ஆழிசூழ் உலகிலே பற்பல அவதாரம் நிகழ்கிறது! அப்படி ஒன்றுதான் ஆதிசங்கர் ஜனனம்!

அன்றய தமிழ் மாநில (இன்றைய கேரளம்) ''காலடி'' யிலே **சிவகுரு - ஆர்யாம்பாள்**, மகனாகப்பிறந்து, ஐந்திலேயே குருகுல வாசம், ஆறாம் வயதிலே **''கனகதாரா''** பாடி, தங்க மழை பொழிய வைத்து, தானொரு அபூர்வப்பிறவி என்பதை நிரூபித்தார். எட்டு வயதிலே வேதாகம சாத்திர தோத்திரப் பூர்த்தி, பதினாறு வயதிலே பகவத்கீதை, பிரம்மசூத்ர, உபநிஷத பாஷ்யங்கள் (விளக்க உரை) எழுதிய ஸ்ரீசங்கரரின், பஜகோவிந்தம், சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரியெல்லாம் பக்தர்களுக்குத் தேவாமிர்தமாகும்.

சிவகுரு காலமாகி, அனைத்தும் மகனே என்று ஆர்யாம்பா இருந்தபோது, சன்யாச அனுமதி பெறுவதற்காக பூர்ணாநதி முதலை நாடகத்தை நடத்தி, நர்மதா நதிதீர கோவிந்த பாதரிடம் சன்யாசம் பெற்றார் ஸ்ரீஆதிசங்கரர்.

ஆஸேது இமாசலம் பாதயாத்திரை புரிந்து, ஆங்காங்கே சீறிக்கிளம்பிய உக்ர பைரவ, காபாலிக, ஊதாரித்தன நாத்திக, விதண்டா வாத... வெறி கொண்ட மதங்களையெல்லாம் ஞானத்தாலும், ஆழ்நிலை தியானத்தாலும், அட்டாவதானத்தாலும் வெற்றிகண்டு, பத்திரிநாத வியாசர் குகையிலே மகாபாரதத்து ஆதிகர்த்தா ஸ்ரீவியாச பகவானைக் கண்டு வணங்கி, திருக்கேதாரச் சிவபெருமானின் பேரருளைப் பூரணமாகப் பெற்றார் ஸ்ரீசங்கரச்சார்ய சுவாமி.

பத்மபாதச் சீடரால், உக்ரநரசிம்மரைக் கண்டது, பாதையிலே நின்ற ஞானப் புலையனால் **''அகம் பிரம்மாஸ்மி''** பாடத்தைப் பெற்றது, முப்பெரும் சக்திக்களை கொல்லூர் ஆலய மூகாம்பிகை ஆக்கியது, மண்டன மிஸ்ரர், சரசவாணியால் மாநுடமூல இலக்கணத்தைக் கூடுபாய்ந்து கற்றது! குமரிலபட்டர், அமரசிம்மனின் குலகுருவாய் ஆனது... முதலான பற்பல அற்புத - உண்மைகளை - பார்க்க முடிகிறது சங்கரவிகயத்திலே.

ஆன்மிக ஞான பாரதத்தின் அடித்தள நான்கு தூண்களைப்போல பூரி, சிருங்கேரி, பத்திரிநாத், துவாரகை ஆகிய நான்கு திசை க்ஷேத்ரங்களிலும் நான்கு திருமடங்களை ஸ்தாபித்து, பத்மபாதர், தோடகர், ஹஸ்தாமலகர், சுரேஷ்வரர் ஆகிய தனது பிரதான சீடர்களை ஆங்காங்கே பீடாதிபதி ஆக்கினார் சங்கரர்.

சர்வக்ஞ பீடம் கண்ட ஸ்ரீ சங்கராச்சார்யர், காலடி யிலே தாயின் முடிவை ஞான திருஷ்டியால் அறிந்து... ஓடோடிச்சென்று தாய்க்கடன் தீர்த்ததும், மீண்டும் தீர்த்தயாத்திரை புறப்பட்டார்.

கன்னியாகுமரி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், சிதம்பரம், திருஇடைமருதூர், காஞ்சி, திருப்பதி, ஸ்ரீசைலம், கோகர்ணம், சிருங்கேரி எனத் தொடர்ந்து, பத்திரிநாத், கேதார்நாத், அமர்நாத், காஷ்மீர், நேபாளம், சாளக்ராமம் என்று, முப்பத்தி இரண்டு வயதிற்குள்ளாக... மாத்ரு பூமியை இருமுறை பாதயாத்திரையாகவே வலம்வந்து, முன்னூற்று இருபதாண்டுகள் செய்ய வேண்டிய திருப்பணிகளை முடித்து... தனது உடலுக்கு ஓய்வு கொடுத்தார் ஸ்ரீஆதிசங்கரர்.

சங்கரர் சமாதிகள், கேதார்நாத், திருச்சூர், காஞ்சி இங்கெல்லாம் உள்ளதாம், மூன்றென்ன, நூறு இடத்திலே கூட ஸ்ரீ ஆதி சங்கரர் போன்ற சிவாம்சச் சித்தர்கள் ஜீவ சமாதியாக இருக்க முடியும்.

சங்கரரின் காலம், கி.பி 788 - 820 என்பது பள்ளி மற்றும் கல்லூரிப் பாடநூல்கள் சொல்வது. காஞ்சி மடம் சிருங்கேரி முதலான ஆதீன கேந்திரங்கள் ''இரண்டாயிர வருடத்திற்கு முந்தியவர் நமது பகவத் பாதாள்'' என முழங்குகின்றன. சங்கர விஜயம் உண்மை! சர்வக்ரு பீடம் உண்மை! மங்கல நூல்கள் உண்மை! மறைகளின் உரைகள் உண்மை!

அவர் தோன்றியது சரித்திர காலமா? இதிகாச காலமா? இதுபோன்ற ''பிசுறு'' கள் பொதுவாகவே நமது சமயாசார சான்றோர் மற்றும் சர்வக்ஞர்களின் வரலாறுகளிலே ஆங்காங்கே காணப் படுகின்றன! பிசுறுகளை நீக்கி, நமது பெருமைக் குறியவர்களின் வரலாறுகளைச் சரிசெய்ய வேண்டியது யார் கடன்? மக்கள் பணத்திலே கொழிக்கும் மடாலய முதற்கடன்!

காலம் மாறுமா? பக்தர்களின் கவலைகள் தீருமா?

ஜெயஜெய சங்கர ஹரஹர சங்கர!

தேசிய தெய்விக
ஸ்ரீ அரவிந்தர்



"எங்கோ சில சன்யாசிகள் மோட்சம் பெற்றிருக்கலாம், இந்திய ஜனங்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள்! சிலபக்தர்கள் பரவசத்தால் தமை மறந்து குதிக்கலாம்; மற்றவர்களெல்லாம் உயிரற்று மடமை இருளில் அழுந்தி இருக்கின்றனர்"

இது, 1920 - லே "மகரிஷி"ஸ்ரீ அரவிந்தரின் ஆவேசக் குமுறல் (அந்த நிலை இப்போது மாறிவிட்டதா?)

அந்த மகரிஷி 15-8-1872 - லே கல்கத்தா **கிருஷ்ணதனகோஷ் - ஸ்வர்ணலதா தேவியர்க்கு** மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

ஆரம்பக் கல்வி முதல், I.C.S. பயிற்சி முடிய லண்டனிலே வசித்தவர். நவநாகரிகச் சூழலில் வாழ்ந்தவர்! இவரது தந்தை தனது இளையமகனை "பாரின் துரை" யாகவே வளர்க்க வேண்டும் என்கிற பேராசை கொண்டிருந்தார்.

லண்டனிலே செயல்பட்ட தீவிரவாத இந்திய விடுதலை அமைப்பிலே, அரவிந்தர் திடீர் என்று ஓர் நாள் தொடர்பு கொண்டார்! தனது தாய்நாட்டின் அடிமைநிலையை அறிந்து துடித்தார்!

''இந்தப் பூவுலகிலே புனிதமான புண்ணியபூமி என்று ஒரு நாடு இருக்குமானால், மனித குலம் அன்பின் சிகரத்தை, பரந்த உள்ளத்தின் ''உச்ச நிலையை, ஆன்மிக உள்நோக்கின் சிகரத்தை எட்டிய ஒரு நாடு இருக்குமானால் அது நமது பாரதமேயாகும்''

எனும் பாரதிய ஞானச் சிங்கமாம் விவேகானந்த பரமஹம்சரின் கர்ஜனையை, லண்டனிலே புரிந்து கொண்ட மாவீர அரவிந்தர், தனது அன்னை பூமியின் தேசியத்திலும், தெய்விகத்திலும் தன்னை அங்கேயே அப்போதே முழுமையாக ஆட்படுத்திக் கொண்டார்.

பன்மொழிப் புலமையோடு 1893 - லே இந்தியா வந்த அரவிந்தர், 1906 - வரை பரோடா சமஸ்தானத்திலே கல்விப் பணியாற்றிக்கொண்டே, தேசியப் புரட்சியிலே பங்கேற்று, **''வந்தேமாதரம்'' ''இந்து பிரகாஷ்''** முதலான இதழ்களிலே தீவிரவாத இலக்கியப் பணியாற்றினார். விடுதலையை விரும்பிய, ஆரம்பகால காங்கிரஸ் இயக்கம் **தீவிர, மிதவாத** என இருபகுதியாகப் பிரிந்து கிடந்தது!(பிரிவினை வியாதி காங்கிரசிலே 100 ஆண்டுகளுக்கும் மேலாகவே தொடர்கிறதோ). திலகர் முதலான தீவிரவாதிகளோடு அரவிந்தர் இணைந்து பாடுபட்டார். **''பவானி மந்திர் அறிக்கை''** எனும் அவரது கொள்கை விளக்கத் தொகுப்பு மட்டும் ''தீவிரமிதவாதிகள்'' ஒன்றாக இணைந்து அன்று அமலாக்கப்பாடுபட்டிருந்தால் 1927 - லேயே நமது பாரதம் விடுபட்டிருக்கும்!

ரானடே முதலான மிதவாதிகள், அரவிந்தரின் விவேகமிகு வேகத்திற்கு தடைக் கற்களாக மாறினர்! **''எழுமின் விழிமின்''** எனும் விவேகானந்தரின் வீரகர்ஜனையை ஏற்று, விடுதலைப் போரிலே ஈடுபட்ட

அரவிந்தருக்கு, விடுதலை இயக்கத்தாலேயே தடைகள்! சினம் தவிர்த்த அவர் மனமுடைந்து போனார்!

'வந்தேமாதரம்' பத்திரிகையின் கனல்கக்கும் தலையங்க வீரமுழக்கம் நாடெங்கும் எதிரொலித்தது! போலீஸ் கெடுபிடி அரவிந்தரை நெருங்கியது! பூரண சுதந்திரப் பிரகடனத்தை தீவிரவாதிகள் உடனே கோரினர்! ஆயுதம் தாங்கிய புரட்சியை -நேதாஜி- போல - நடத்திட அரவிந்தர் விரும்பினார்! சில புரட்சியாளர் தங்குவதற்கு... தனது தோட்டத்திலே இடமளித்தார்! இந்த நெருக்கடி நிலையிலே... இரு புரட்சியாளர்களின் விவேகமற்ற வெறும் வேகத்தால், தண்டிக்கப்படவேண்டிய அராஜக வெள்ளைதுரை தப்பினார், நிரபராதிகள் மாண்டனர். அதன் விளைவு... அரவிந்தரும் கைது செய்யப்பட்டார்! சரித்திரப் புகழ் பெற்ற **அலிப்பூர் வழக்கு** (1908) அது.

''எனது தாய் நாட்டு மக்களுக்கு சுதந்திரம் எனும் லட்சியத்தை போதித்தது குற்றமானால், தாராளமாக எனை நீங்கள் தண்டிக்கலாம், கொலை முயற்சியிலே எனக்குத் துளியும் பங்கில்லை இது சத்தியம்'' என்ற அரவிந்தரின் உறுதியும், அவருக்காக வாதாடிய **ஸ்ரீ சித்தரஞ்சன்தாஸ்** அவர்களது வாதத்திறனும் அரவிந்தருக்கு (1909-ல்) அலிப்பூர் வழக்கிலிருந்து விடுதலை வாங்கித் தந்தன.

விரக்தியடைந்த நிலையிலே அரசியலுக்கு முழுக்குப் போட்ட அரவிந்தரை, வெள்ளை அரசு நாடு கடத்தத் திட்டமிட்டது! அதை முன்கூட்டியே அறிந்த அவர், 1910-ல் கல்கத்தாவை விட்டு, பாண்டிச்சேரி வந்து, தியான வேள்வியால் தேசியத்திற்குப் பாடுபட முடிவு செய்தார்! **(யோக சக்தியால் எதையும் செய்யமுடியும் எனும் உறுதியை அவர் 1900 ஆண்டிலே பெற்றுவிட்டார்)**

''பரமாத்மா என்று ஒன்று இருப்பது உண்மை யானால், அதை அடைவதற்கான வழியும் கட்டாயம் இருந்தாக வேண்டும். எப்படியும் **''அதை''**க் கண்டுவிடுவதென்று தீர்மானித்தும் விட்டேன்'' என... ஞானக் களத்திலே குதித்த அரவிந்தர், ஏக சிந்தனையால் யோக சாதனையால், முழுவெற்றி பெற்றார்! 1918-கால கட்டத்திலே அவரது மனைவி **மிருணாளினிதேவி** காலமானதும் இல்லறப்பற்று முற்றிலுமாகத் தீர்ந்தது.

புதுச்சேரியிலே, **அரவிந்த ஆஸ்ரமம்** தொடங்கி யதுமே, அதன்புகழ் பிரஞ்ச் நாட்டிலே எட்டியது. ஆன்மிக அருளற ''தாக'' முள்ள **''மீராரிச்சர்டு''** எனும் பிரஞ்சுமாது, 1914-ல் பாண்டிச்சேரிக்கு வந்து, அரவிந்தரின் பிரதான சிஷ்யை ஆனார். ''ஆர்யா'' எனும் பத்திரிகை தொடங்கியது. பிரான்ஸிலிருந்து அடிக்கடிவந்து போய் கொண்டிருந்த மீராரிச்சர்டு, 1920-முதல் அரவிந்த ஆஸ்ரமத்தையே தனது ''உலக'' மா்க்கிக் கொண்டார்!

உயர்தியானத்திலே அகண்ட சக்தி ஒன்று வந்து, அரவிந்தரை ஆட்கொள்ளும்! பரவச நிலையிலே அவரது பேனா நிதரிசன அற்புதங்களை எல்லாம் எழுதிக் குவிக்கும். காலச்சூழலிலே, தியான முதிர்ச்சியிலே தெய்வ எழுச்சியிலே எழுத்து, பேச்சு எல்லாவற்றையும் அரவிந்தர் குறைத்துக் கொண்டார். ஆஸ்ரமத்தின் அனைத்து நிர்வாக, மற்றும் வழிநடத்தும் செயல் முறை முழுவதற்கும் **''அன்னை''** தான் என்று ''மீராரிச்சர்டை'' ஆஸ்ரமத்தின் தலைவியாக அறிவித்தார். தியான மேனிலை கண்ட சர்வதேச சத்திய சொரூபமாக அரவிந்த ஆஸ்ரமத்தின் சகலமுமானார் அன்னை.

ஆன்மிக உணர்விலே (யோகத்திலே) முன்னேறியவர்கள் தீவிர மஹாசக்தியை அடைய முடியும். அந்த சக்தியால் எதையும் சாதிக்கலாம் என்பதை நடத்திக் காட்டியவர் மகரிஷி ஸ்ரீ அரவிந்தர். அவரே எழுதுகிறார்...

''எனது சக்தி, (பாண்டிச்சேரி) ஆஸ்ரம எல்லைக்குள் அடங்கிவிடவில்லை, போரின் சரியான திருப்பங்களுக்கும் (இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பம் 1939-செப்டம்பர்) **மனித உலகின் மாறுதலுக்கும் உபயோகப்படுகின்றது''**

ஜப்பானியத் தாக்குதல், வெள்ளையரை எதிர்த்து நடந்தவரை (அரவிந்த சக்தி) குறுக்கிடவில்லை, இந்தியாவைத் தாக்கி அடி பணியவைக்க நினைத்தவுடன், அவர் (அரவிந்தர்) தனது சக்தியை பயன்படுத்தியதுமே ஜப்பானியப்படை தோல்வியைக் கண்டது. இது மட்டுமல்ல... மூன்று காலங்களையும் ''அகக்காட்சி'' யாகக் கண்டு சொல்லும் தெய்விக ஆற்றலையும் ஸ்ரீ அரவிந்தர் பெற்றி ருந்தாராம்.

நம் காலத்திலே... நவீன விஞ்ஞான உலகிலே மெய்ஞ்ஞான முறையிலே சமுதாய சேவை மட்டுமல்ல சர்வஜன சேவையும் புரிந்த சத்தியச் சித்தரான ஸ்ரீ அரவிந்தர், தனது உடற்கூட்டை உதறிய நாள் 5-12-1950.

பாண்டிச்சேரி எங்கிலும் ஆங்காங்கே பூத்துக் குலுங்கும் நானாவித வண்ண மலர்களும் அவற்றின் நறுமணமும் உள்ள மட்டும் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் சிஞ்சீவிகள்.

ஜாதிசமய, சாத்திர கோத்திர, ஆகம அனுஷ்டான பேதங்களில்லாமல், சம்ரதாயச் சடங்குகள் ஏதுமின்றி

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே''

எனும் தாயுமானவரின் சமதர்ம கோட்பாட்டிலே... சித்தசுத்தம், ஆத்மசுதந்திரம், தெய்வ சமத்துவம் கொண்ட சாதகர்களை உலகெங்கிலும் பெற்று விளங்கும், அரவிந்த ஆஸ்ரமத்தின் பிதாமகர் அமரர் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்...

''தேசியம்தான் நமது சனாதன தர்மம். ஹிந்து தேசம் சனாதன தர்மத்துடன் பிறந்தது. அதனோடுதான் வளர்கிறது, வாழ்கிறது! சனாதன தர்மம் வீழ்ச்சியடைந்தால், தேசம் வீழ்ச்சி அடைகிறது! சனாதன தர்மம் அழியுமானால், இந்து தேசமும் அழியும்!!

தேசிய, தெய்விகச் சத்தியச்சித்தர் அரவிந்த மகரிஷியின் எச்சரிக்கையை... இந்தியர்கள் - உணர்ந்து நடந்தால்தான் எதிர்கால இந்தியச் சமுதாயம் ஓஹோ ஹோ! இல்லையேல்? தொல்லைதான்...!

எது நாகரிகம்?

நாகரிகம் மனிதனுடைய ஆக்கபூர்வமான சக்தியை மட்டும் பொருத்ததல்ல; மனிதனுடைய தார்மீகப் பண்புகளான கருணையையும் விநயத்தையும் சார்ந்தது.

-சர்வே பள்ளி டாக்டர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன்

ஸ்ரீ ரமண மகரிஷி



யுகயுகாந்திரப் பெரும் புகழ் பெற்றதும், புனித மாமலையுமான திருவண்ணாமலையைச் சிறப்பித்து...

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் பெண்ணாகிய பெருமான் மலை..."

என்று பெண்ணுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு அன்றே தந்த (அர்த்த நாரீஸ்வரர்) பெருமையை சம்பந்தப் பெருமான்பாடுகிறார். மணிவாசகர், திருநாவுக்கரர் முதலான தெய்வாம்ச திருத்தொண்டர்களின் பாடல் பெற்ற... திருவண்ணாமலையின் மகத்துவத்தை நூற்றுக்கணக்கான சித்தர் பெருமக்கள் வளர்த்துள்ளனர், விஞ்ஞானமிகு இருபதாம் நூற்றாண்டிலே உலக நாடுகள் அனைத்தையும் ஈர்த்த மெய்ஞ்ஞான கேந்திரமான ரமணாச்சிரமத்தின் மூலவராம் **ஸ்ரீரமண மகரிஷி**யின் வரலாறு, நம் காலத்திலே (அறுபது வயதுக் காரர்கள்) நடந்தவை.

கருவிலேயே திருவாகி பாலப்பருவத்திலேயே... யோகநிலைக்கான பக்குவத்தைப் பெற்ற ரமணரின் வரலாற்றைச் சற்று விரிவாகவே அறியலாம்.

ரமணமகரிஷி

பாரத நாட்டின் சுதந்திரத்திற்கு (1947) பிறகும் மூன்றாண்டுகள் இந்தப் புனித பூமிக்கு, மனித உடலிலே இருந்து சேவை செய்த மஹான்!

ஆன்மிக நெறிமுறைப் பற்றுள்ள அன்றய இன்றய முதியவர் அனைவருமே அவரைப் பார்த்து வணங்கும் பேறு பெற்றிருக்கிறார்கள்.

''உயிர்களிடத்தில் அன்பு வேணும்'' என்ற மகாகவி **சுப்ரமண்ய பாரதி**யின் பாப்பாப் ப்பாட்டுக்கு இலக்கணமாக வாழ்ந்த சித்தருட் சித்தர் ஸ்ரீ ரமணர்.

பால ரமணர்

முத்தமிழ்ச் சங்க மூதூராகிய மதுரையை அடுத்த **திருச்சுழி** எனும் கிராமத்திலே வக்கீல் **சுந்தரமையர் அழகம்மை** தம்பதியருக்கு இரண்டாவது மைந்தனாக... 29-12-1879-ல் பிறந்தவர். அண்ணன் நாகசாமி; தம்பி நாக சுந்தரம், தங்கை அலமேலு, சித்தப்பா சுப்பையர், தாய்மாமன் நெல்லையப்ப ஐயர்.

திருச்சுழியிலே ஆரம்பக் கல்வி; திண்டுக்கல்லிலே ஐந்தாவதுவரை. ஆறாவதுமுதல் மதுரை ஸ்காட்மிஷன் - மிடில் - ஹைஸ்கூல்களில் படித்தார். பெற்றோர் வைத்த பெயர் **வெங்கட்ராமன்.**

மதுரையில் படித்துக் கொண்டிருந்தபோது 1892-ல் தந்தையை இழந்தான்; சிந்தையிலே ஓர் சிறு சலனம்

1895-ம் ஆண்டு வெங்கட்ராமனின் வீட்டுக்கு வந்த உறவினர் ஒருவர், ''திருவண்ணாமலை சென்று வந்தேன்'', என்று பிரசாதம் கொடுத்துப் போனர்; அதே சமயம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு கூறும் பெரியபுராணமும் வெங்கட்ராமனுக்குப் படிக்கக் கிடைத்தது.

அறுபத்து மூன்று சிவபக்தநாயன்மார்களைப் போல, அன்பே சிவமாக வாழவேண்டும் என்ற சிந்தனை வெங்கட்ராமனின் மனதிலே அப்போதே ஆழப்பதிந்தது.

நான் யார்?

சிந்தனையின் முடிவாக **''நான்யார்?''** எனும் சித்தாத்ம நிலை உதித்தது! கேள்விக்குப் பதிலாக, தியானமெனும் மோனத்தால் மரணபயத்தை வென்று தெளிவு பெற்றான் பதினாறு வயது மாணவனாகிய வெங்கட்ராமன்.

செத்துப் பிழைத்த அந்தச் சத்தியமான சம்பவத்தைப் பின்னாளிலே ரமணமகரிஷி, கீழ்க்கண்டவாறு கூறினார்...

''பிணம் போல் நீட்டிப்படுத்தேன் உடம்பு செத்தது; ஆனால் நான், எனது தொனி அது அப்படியே இருந்தது! ஆத்மாவானது உடற்கூட்டிலே கட்டுப் படாதது என்பதை நிதரிசனமாக உணர்ந்தேன் மரணமிலா பெருவாழ்வு என்பது இதுதானோ?''

மரணத்தை வென்ற அனுபவத்திற்குப் பிறகு வேங்கட்ராமனுக்கு... வேண்டுதல் வேண்டாமைகள் மறைந்தன! கொடுத்ததைச் சாப்பிடுவான்! கூப்பிட்டால்

''ஏன்'' என்பான். தியானமும், மௌனமும் தெய்வ தரிசனமுமாய் சகமாணவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட நடையுடை பாவனைகளை மேற்கொண்டான்!

1896-ஆகஸ்ட் 20. பள்ளிப் பாடத்தை எழுதிக் கொண்டிருந்த போது, திடீரென ஏற்பட்ட தியானப் பரவசத்திலே மூழ்கி விட்டான். அதைக்கவனித்த அண்ணன் நாகசாமி, **''இப்படிப் பட்டவனுக்கு இதெல்லாம்** - படிப்பு - **எதற்காம்?''** எனச் சினந்து கூறிவிட்டார். அதையே கார்ண்மாகக் கொண்டு சம்சார (குடும்ப) பந்தத்திலிருந்து... தன்னை முற்றிலுமாக விலக்கிக் கொள்ள முடிவெடுத்தான்.

காலேஜுக்கு அண்ணன் பீஃஸ் கட்டச் சொன்ன ஐந்து ரூபாயிலே, மூன்று ரூபாயை எடுத்துக் கொண்டு... இரண்டு ரூபாயையும் ஓர் துண்டுக் கடிதத்தையும் வைத்து விட்டு... வீட்டை விட்டுப் புறப்பட்டான் மாணவப் பருவ வெங்கட்ராமன்... அந்தக் கடிதத்திலே...

''நான் என் தந்தையை - அதாவது, அண்ணாமலையானை-த்தேடிக் கொண்டு, அவரது உத்தரவுப்படி... இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன்; **''இது'' நல்லகாரியத்தில்தான் பிரவேசித் திருக்கிறது**; ஆகவே, யாரும் விசனப்பட வேண்டாம்... **இதைப் பார்ப்பதற்கு** பணமும் செலவு செய்ய வேண்டாம்...''

இப்படிக்கு.....

மதுரையைவிட்டு, திண்டிவனம், விழுப்புரம் என்று ரயிலிலே பயணித்து, காசு தீர்ந்ததால் நடக்கத் தொடங்கி, ''அறையணி நல்லூர்'' எனும் க்ஷேத்திரத்திலே சுவாமி தரிசனம் முடிந்ததும், பசி எடுத்தது. ஆலயப் பட்டரிடம் ''பசி'' என்றது. அவர் ''இல்லை'' என்றதும் ''அருணாசலா... அப்பா...'' என்றபடியே வெளியேறினான். கீழூரைச்சேர்ந்த மேளக்காரர் ஒருவர், கோயிலிலே, தன்பங்காக வந்த ''உண்டக்கட்டி''யை உண்ணக் கொடுத்தார். அண்ணாமலையார் தான் மேளக்காரர் வடிவிலே வந்து அன்னமளித்தாரோ!

அடுத்தநாள் கோகுலாஷ்டமி, கீழூர் பாகவதர் ஒருவர் வலியவந்து, வேங்கடராமனைப் பலகாரம் சாப்பிட வைத்து... வழி நடைக்குப் பெரிய பொட்டலமும் கட்டிக் கொடுத்தார். பாகவதரின் பரிவு வெங்கட்ராமனைப் பரவசப்படுத்தியது. ''திருவண்ணாமலைக்குப் போக வேண்டும்'' என்றான்; ''பணம் வேண்டுமா'' என்றார் பாகவதர், ''இதை வைத்து நாலு ரூபாய் வாங்கித் தர வேண்டும்'' என்று காதுக்கடுக்கனைக் கழட்டி அவரது கையிலே போட்டான்.

தெய்வத் தந்தை தரிசனம்!

1896-செப்டம்பர் முதல் தேதி, தேடிவந்த ''தந்தையை (ஸ்ரீ அண்ணாமலையாரை) திருவண்ணாமலை ஆலயத்து மூலத்தானத்திலே போய்... ஏகாந்தமாக தரிசித்தான்! ஆலயத்து ''அப்பா''வும், பால வெங்கட்ராமனும் என்ன பேசி... எந்த முடிவை எடுத்தார்களோ...!!

ஒரு நாழிகை நேரத்திற்கெல்லாம் திருவருணை ஐயன் குளத்தருகே வந்து நின்றான் வெங்கட்ராமன். ''முடி எடுக்கணுமா சாமி!'' என்ற குரல். ''ஆமாப்பா'' என்ற பதில்! மொட்டையானான் வெங்கட்ராமன்; மறுகணமே மேல் துண்டைக் கிழித்து, கௌபீன தாரியானான். பலகார பொட்டலம், மீந்தபணம், இடுப்பு வேட்டியின் எஞ்சிய துண்டுப் பகுதி இவை அனைத்தையும் படிகளிலே வீசியெறிந்து விட்டுப் புறப்பட்டான். ''சாமி! குளிக்கலையா?'' என்ற நாவிதரின் குரல் அந்த பால சன்யாசிக்குக் கேட்கவே இல்லை!

திடீரென வானம் இருண்டது; மேகம் திரண்டது! திருவண்ணாமலைத் தெருவெல்லாம் வெள்ளம் புரண்டது! கௌபீன தாரியான பால ரமண சுவாமி,'' கால மழையிலே குளித்தபடியே... கோயிலுக்குள் புகுந்து ஆயிரக்கால் மண்டபத்திலே அமர்ந்து... தியானத்திலே மூழ்கி விட்டான்.

பால சன்யாசி!

ஞானமும், பகவத் தியானமும், சர்வ சித்திகளையும் தரவல்ல யோகமுமாக... நமது பாலசன்யாசி, திருவருணை ஆலய வளாகத்திலே பல இடங்களில் மோனத்தவம் செய்ததுகண்டு, சாதுக்களும், பக்தர்களும் வியப்பு, சிறுவர் சிலர், பால சன்யாசியின் தியானத்திற்கு இறையூறும் விளைவித்தனர்.

ஏகாந்த இடமாகிய இருள் சூழ்ந்த **பாதாள லிங்கம்** உள்ள குகைக்குள் சென்று அமர்ந்து யோகத்திலே மூழ்கி

விட்டார் பால சன்யாசி. நாள், வார, மாதங்கள் ஓடின தேடிவந்தார் ஓர் தேவ தூதன். வாடிக் கிடந்த ஞானக் கொடியை எடுத்துப் படரவிட்டார். அவர் யார்?

ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்

காஞ்சிக்கு அருகேயுள்ள ''வாலூர்'' கிராமத்திலே, **வரதராஜன் - மரகதம்மாள்** தம்பதியின் அருந்தவப் புதல்வராக 22-1-1870 ல் **சேஷாத்திரி** பிறந்து, காஞ்சியிலே ஞானாலயச் சூழலிலே வளர்ந்தார்.

பால்குடியை மறக்குமுன்பே, பரம் பொருளை அறிந்தார். இளமையை அடையுமுன்பே ஈன்றவர்களை இழந்தார். ஈ, எறும்பு முதலான அனைத்திலுமே இறைவனைக் கண்டார். நீக்கமற எங்கும் நிறைந்துள்ள நீல கண்டனைச் சாக்கடையிலும் கண்டு புரண்டு ''கல கல'' வெனக் களித்துத் திரிந்தவர் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்.

இடதுகை திரிசூல ரேகையாளரான அவர், ஹஸ்த நட்சத்திரத்திலும் அவதரித்ததால், ஜோதிடப்படி தொட்டதெல்லாம் துலங்கிற்று. அவர் தொட்டால், பார்த்தால், சுவைத்த பிரசாதத்தால்... பிணிவறுமை தீரப்பெற்றோர் ஆயிரமாயிரம். அவர்காலத்திய **விட்டோபா சுவாமிகள்** 1909-ல் முக்தியானார். அவரது சூக்ஷம சரீரத்தை வானிலே கண்டு, ''போயிட்டு வாடா விட்டோபா'' என வாழ்த்தியனுப்பிய சேஷாத்திரி சுவாமிகள், ஸ்ரீ பார்வதி தேவியின் ''பூர்ணாம்சப் புனிதர்'' எனப் போற்றப் பட்டவர். பாதாளலிங்க குகையிலே

தவமிருந்த பாலரமணரைப் பாதுகாத்து உலகுக்கு அளித்தது போன்ற அவர் புரிந்த சமுதாய நலத் திருவிளையாடல்கள் பலப்பலவாகும். ஞான வழிச்சித்தாரன ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் முக்தியடைந்த நாள் 4-1-1929. ஆகும்.

பாதாளலிங்க குகையிலே பரமனைக் காணச் சென்ற **சேஷாத்திரி சுவாமிகள்** பால சன்யாசியைப் பார்க்கிறார்; பரிவுடன் வெளியிலே கொண்டு வந்து சேர்க்கிறார். மாதக் கணக்கிலான தபோ நிலையால், பதினாறு வயதுப் பால ரமணச் சன்யாசியின் உடம்பின் பிருஷ்ட பாகம், பூச்சிகளால் ஜீரணிக்கப்பட்டு... ரணமாகிச் சீழ் வடிந்தது! **''வாழ வேண்டிய ஞானியிவன், வைத்தியம் செய்யுங்கள்**, எனக் கட்டளையிட்டார். பொது மக்கள் சிலர் புண்ணுக்கு மருந்திட்டனர். **''கண்ணின் மணிபோல் இவனைக் காக்க வேண்டும். ஞான பூமியின் தியான நாயகன் இவன்''** என்று ''ரமண மகரிஷி''க்கு முத்திரை குத்தினார் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள். தேக நினைவே இல்லாமல் மாதக் கணக்கிலே தியான நிலை கண்ட பால சன்யாசி மீது, ஊராரும் கோயிலிலே இருந்த சாதுக்கள், மற்றும் பணியாளர்களும் பயத்துடன் கூடிய பக்தி கொண்டனர். மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட **பழனிச் சாமி** என்ற அன்பர், பாலயோகியை கவனிப்பதையே தனது முழு நேரப் பணியாகக் கொண்டு ரமணரைப் பாதுகாத்தார்.

பக்தர்களின் ஆர்வத்துடன் கூடிய அதீதமான கவனிப்பு, தவத்திற்கு இடைஞ்சலாக இருந்ததால்... இடங்களை... அவ்வப்போது மாற்றிக் கொண்டு, ஒரு குரு முகூர்த்த பிருந்தாவனத்திலே, ஒன்றரை ஆண்டு காலம் ஏகாந்த யோக சாதனை செய்தார் ரமணர். பழனிச் சாமியோடு, **உத்தண்டி நயினார்** என்கிற ஒரு சாதுவும் பாலயோகியின் பரம சீடர்கள் ஆனார்கள். இந்த இடத்தில்தான் ஒரு பக்தரின் உண்ணா விரதப் பிடிவாதப் போராட்டத்தை நிறுத்துவதற்காகத் தனது ஊரையும் பேரையும் எழுதிக் காட்டினார் பாலயோகி.

அம்மாவந்தாள்

''**வேங்கட்ராமன் - திருச்சுழி**'' என்று அவர் எழுதிக் காட்டியது, பக்தர்களின் பரவசத்தால் ஊர் தோறும் எதிரொலித்தது! மதுரைக்கு பிரசங்கம் செய்யவந்த திருவண்ணாமலை மடத்துத் தம்பிரான், பாலயோகி வெங்கட்ராமனைப் பற்றி மேடையிலே குறிப்பிடுகிறார். உடனே தகவல், அவரது வீட்டுக்கு எட்டுகிறது. சித்தப்பா சுப்பைய்யர் திருவண்ணாமலை சென்று மாந்தோப்பு வாசியாக இருந்த பால ரமண யோகியை வீட்டிற்கு அழைக்கிறார். ''**அது இனி முடியாது**'' எனப் பார்வையாலேயே பதிலளித்த ரமணரது மௌனத்தைக் கலைக்க முடியாத சித்தப்பா ஊருக்குத் திரும்புகிறார்.

சித்தப்பாவைத் தொடர்ந்து தாய் அழகம்மை, அண்ணன் நாகசாமி ஆகியோர் வந்து, ரமணரைக் கண்டு... அதே ஏமாற்றமுடன் திரும்புகின்றனர்.

மாதமொரு இடமாக மாறி மாறித் தவமிருந்த, பாலயோகியை... தானிருந்த விருபாட்ச குகையிலே தங்க வைத்து... டிக்கெட் போட்டு பக்தர்களிடம் பணம் வசூலித்தார் அந்தக் குகையின் ''பினாமி''ச் சாது!

இது விஷயம் தெரிந்ததும் உடனே வெளியேறி... திறந்த வெளியிலே தனது தபஸ்ஸைத் தொடங்கினார் பாலயோகி. இயற்கையின் விபரீத தண்டனையைப் பெற்ற விருபாட்ச குகையின் சாது... ஓடிவந்து பால சுவாமியிடம் மன்னிப்புக் கேட்டுத் திருந்திய மகத்துவமும் நடந்தது.

விருபாட்ச குகையருகே உள்ள முலைப்பால் தீர்த்தக் கரையிலுள்ள... மாமரத்துக் குகையிலே **''அருணாசல அக்ஷரமாலை''** எனும் தோத்திர நூலைப் பால முனிவர் ஸ்ரீ ரமணர் பாடியருளினார்.

1906-ம் ஆண்டு கால கட்டத்திலே **எச்சம்மா** என்ற ஓர் விதவை வந்து, பால சுவாமியைப் பார்த்தபடியே நின்று, அழுதார் தொழுதார் சுவாமியின் திருமுன்பு பலமணிநேரம் நின்று... அமைதியை வேண்டி எதையுமே கூறாமல் புலம்பிய அந்த அம்மையாரிடம்... **'கணவனும் பிள்ளைகளும் திடீரென அடுத்தடுத்துக் காலமாகி விட்டனர், அனாதை ஆகிவிட்டோமே என்று தானே கண்ணீர் விடுகிறாய்?''** என்று பாலயோகி கேட்டதுமே... அந்த அம்மாளின் பரவசம்! **''விதியை வெல்லும் மனிதர்களை ஆண்டவன் இன்னும் படைக்க வில்லை தாயே!,''** என்று ரமணர் சொன்னதுமே, எச்சம்மாவின் இதய பாரம் ''படா'' ரென இறங்கியது!

அன்று முதல் பல ஆண்டுகள் வரை பாலயோகியின் உணவுச் சேவையிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்த எச்சம்மாவின் மகிழ்ச்சிக்காக, பால சுவாமிகள் சிரித்ததும், அவளது சோகத்திற்காக தியான முனிவர் அழுது துடித்த லீலைகளும் எழுதி முடியாத தத்துவாதீதத் திருவிளையாடல்களாகும்.

இருபத்தாறு வயது வந்த பேரழகுப் பிராமண இளைஞன் வேங்கடராமன். திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்கே ஓர் புதிராகத் திகழ்ந்தார்!

ஆலயத்துள் சென்று அண்ணாமலையாரையும், உண்ணாமுலைத் தாயாரையும் தரிசித்தவர்கள், அடுத்துப் போய் வணங்குவது, வேங்கடராமயோகியைத்தான் என்றாகிவிட்டது!

''சன்யாசம் வாங்கு!''

ஏராள பக்தர்களின் பேரன்பைப் பெற்றுவிட்ட வெள்ளைக் கோவணத்து இளம் சன்யாசியைத் தேடி, ஒரு பிரபலமான மடாலயத்துக் காவி உடைச் சாஸ்திரிகள் ஒரு நாள், ஓடோடி வந்தார்.

''பிராமணனாகப் பிறந்து, இப்படி இளம் வயதிலேயே அனைவரையும் ஈர்க்கும் தவயோக மகரிஷியாகிவிட்ட உங்களை... எங்களது திருமடம் வாழ்த்துவதோடு... பீடம் கொடுத்து வரவேற்கவும் காத்திருக்கிறது'' என்றார்.

''புரியும்படி கூறுங்கள்'' என்ற நமது துறவியிடம்.

''நியதிப்படி... பலருக்குக் குருவாக விளங்கும் பிராமணன், சன்யாசம் வாங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவனது ஞானம் பூரணமாகும்...'' என்று கூற... ''காஷாய உடைகளை நான் விரும்ப வில்லை'', என்ற அவரிடம், ''வெள்ளைக் கௌபீனத்தைக் காவித் துணி ஆக்கினால் போதும்...'' உம்மை எங்களது ஆச்சார்ய வரிசையிலே வைத்துப் பூவாலும் பொன்னாலும் அர்ச்சிக்கக் காத்திருக்கிறோம்'', என்று கூறிப் பிடிவாதமாக அங்கிருந்து போக மறுக்கிறார்.

''தியானத்திற்கு நேரமாகி விட்டது,'' என்று இளம் துறவி எழுந்ததும், ''நான் சென்று சாயங்காலம் திரும்புகிறேன், உமது முடிவு சுபமாக அமையட்டும்'' என்று புறப்பட்டார் திருமடத்து சாஸ்திரி.

சாஸ்திரி போனதும் ''அருணாசலா! இது என்ன சோதனை?'' என ரமணர் அவர் பெருமூச்சு விடும் போது... மேல் மூச்சு வாங்கியபடி ஒரு வயோதிகர் வந்து... தன் கையிலிருந்த புத்தகக்கட்டை கீழேவைத்து'' இது இங்கேயே இருக்கட்டும், கீழேபோய் சாப்பிட்டு விட்டு சீக்கிரமே வருகிறேன்,'' என்று கூறியபடியே போய்க் கொண்டிருந்தார்.

புத்தகக் கட்டின் மேலாக இருந்தது **''அருணாசல மகாத்மியம்''** சமஸ்கிருத நூல்... அதைப்புரட்டிய மகரிஷி, அதிலே ஒரு பக்கத்திலே இருந்த விஷயத்தைப்

படித்ததும் ''திருவருணைப் பெருந்தேவே! எல்லாம் உன் கருணை'' என்றபடி புன்னகை புரிகிறார்.

தியானம் செய்யும் போதும், தேடிவரும் சாதகர்களுக்குக் உபதேசம் புரியும் போதும் மட்டுமே... குருமகானாக இருக்கும் மகரிஷி, மற்ற நேரங்களிலே... சாதாரண தோட்டக்காரனாக... சமையல் எடுபிடியாக... கூட்டிப் பெருக்கும் வேலையாளாகவே மாறி விடுவார். அன்று மாலை செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் வேளையிலே... காலையில் வந்த திருமடத்துச் சாஸ்திரி... சன்யாசத்திற்குத் தேவையான பொருட்களோடு திரும்பிவந்தார். ''இது என்ன ஓய்! தோட்டக் காரவேஷம்! வாரும் தீட்சையைப் பெறலாம்'' என்றதும் அவரை ஆசிரமத்துள் அழைத்துப் போய், அருணாச்சல மகாத்மிய நூலைக் கொடுத்து... குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக் காட்டி, ''அருள் கூர்ந்து இதைப் படியுங்கள். வேத ஆகம வித்தகரான தாங்கள் இதைப் படித்தபின்பு... எதைச் சொன்னாலும் அதை நான் முழுமனதோடு ஏற்கிறேன்'' என்றார் தியான மகரிஷி.

தீக்ஷை இன்றியே யோகியாகலாம்!

''இந்த அருணாசல மலை அருகிலே மூன்று யோசனை (25-மைல்) தூரத்திற்குள் வசிப்பவர் களுக்குத் தீட்சை ஏதும் இன்றியே பந்தம் அறுபடும்; என்னுள் ஐக்யம் கிட்டும் என்று உறுதியளிக்கிறேன்...''

என்று தொடர்ந்த சாஸ்திரிகளைத் தடுத்து, ''அண்ணாமலையாரே சொல்லுகிறார் தனியாக தீட்சை வேண்டாமென்று... இப்போது தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றதுமே'' சாஷ்டாங்கமாக விழுந்து, ரமணரை வணங்கி எழுந்ததும், மௌனமாக விடைபெற்றார் திருமடத்து மகாபண்டிதர்.

சன்யாசிகளுக்கான புறத்தோற்ற... நீட்டலும் மழித்தலும்... காவி, கமண்டல ருத்ராட்ச... விபூதி... சந்தன... குங்குமம் திருமண் ஜபமாலை முதலான வெளிச் சின்னங்களையெல்லாம் வெறுத்தவரல்ல மகரிஷி, ஆனால்... பாலப்பருவத்திலேயே ஈஸ்வர கிருபையால் அனைத்தையும் கடந்த மகாஞான நிலையை மதுரையிலேயே, அடையப் பெற்றவர்.

தூய்மையுள்ள ஓர் சன்யாசிக்கான இலக்கணம் பற்றி... நம் காலத்திலே வாழ்ந்திருந்த மகா பெரியவர் ஸ்ரீ காஞ்சி முனிவர் கூறியதாவது...

''எந்த மதமும் அதிலுள்ள தத்துவத்தினால் மட்டுமே வளர்வதில்லை! சாமான்ய ஜனங்களுக்குத் தத்துவம் பற்றிக் கவலையில்லை! நல்ல குணம், நல்ல பழக்கம் உள்ளவராக, கருணையும் சாந்தமும் கொண்ட ஒரு மகான் வந்தால், ஜனங்களுக்கு அந்த மதத்திலே நம்பிக்கை உண்டாகிறது...!

எந்தத் தத்துவத்தை அவர் சொன்னாலும், சரியாகத்தான் இருக்கும் எனும் திடமான

நம்பிக்கையுடன் அவரது மதத்திலே ஜனங்கள் சேருகிறார்கள். மாறாக... ஒரு மதத்தின் கோட்பாடுகள் எத்தனைதான் பரம சத்தியத்தை விளக்கினாலும், அந்த மதப் பிரதிநிதியாக இருக்கிற தலைவர்களிடத்திலே ஒழுங்கு தப்பி விட்டால் அந்தமதம் அழியத் தொடங்கி விடும்!...''

நமது இளம் மகரிஷி... தாம்கண்ட உண்மையை, தியானத்தால் விளையும் நன்மையை வாழ்ந்து காட்டி பக்தர்களுக்கு வழங்கினார். அவரது ஒவ்வொரு சொல்லும், அவரது செயலுக்கு முரண்படாதவை.

''வேதாகம வித்தகர்கள்'' எனும் சிறப்பு விருதுகள் பெற்றவர்கள் மட்டுமே ஞானியாகவும், ஆழ்மனத் தியானியாகவும் திகழ முடியும் என்றிருந்த ஓர் மாயக் கோட்டையைத் தகர்த்து, ஞானம் என்பது மாநுடராகப் பிறந்த அனைவரது பிறப்புரிமை என்பதைப் பூரணமாக அனுபவித்து உணர்த்தியவர் நமது ரமண மகரிஷி.

''நான்'' அடங்கினால் தபஸ் தொடங்கும்

1907-ம் ஆண்டு... **'காவ்ய கண்ட' கணபதி சாஸ்திரி** எனும் மகாதபஸ்வியும், மாபெரும் கவிஞருமாகிய பெருமகனார், நமது மகரிஷியின் பிரதான சீடரானார். வயதிலும் அனுபவத்திலும் கல்வியிலும் மிக மிக உயர்ந்தவரான கணபதி சாஸ்திரி, செயலாலும், உலக நலச் சிந்தனையாலும் மிக உயர்ந்த ரமண மகரிஷியிடம் சரணாகதியானார். ''எத்தனையோ... வேத இதிகாச

உபநிஷத்துக்களை நான் கற்றிருந்தும், விதவிதமான யாக யக்ஞங்களிலே பற்றிருந்தும் யோக மகா தபஸ் நிலை மட்டும் கூடிவரவில்லையே எனக்கு. நான் எப்படி உய்வது? நான் எதைத் துணை கொள்வது... நான் என்னதான் செய்வது?'' என்று மகரிஷியிடம் புலம்பிய அவரிடம்...

''நான் நான்... எனும் எண்ணம் எங்கே எழுகிறதோ, அதை ஊன்றிக் கவனித்தால் மனம் அங்கே அடங்கும்; மனம் அடங்கினால், ஆழ்நிலை தபஸ் தொடங்கும்! அமைதியில்லை... என்பதற்கு ஆதாரமே, சலனமுற்ற மனம்தான் காரணம்! எண்ண அலைகள் அடங்கினால் மனக்கடல் ஒடுங்கும்! மனக் கடல் ஒடுங்கினால்... ஆத்மசொரூப அமிர்தம் பளிச்சிடும்! **ஆத்ம சொருபத்தின் பேரொளியைக் கண்டு விட்டால்... அதுவே... ஜீவன் முக்தர்களான சித்தர் பெருமக்களின் சிரஞ்சீவித்வ நிலையாகும்... ''நான் யார்'' என்று பூரணமாக உணர்ந்து விடும் அந்த மகோன்னத நிலையைப் பெற்றுவிட்டால், அதுவே மரணமிலா பெருவாழ்வு! மற்றவர்களின் சேவைக்காக உன்னை நீ முற்றிலுமாகத் தத்தம் செய்தால், அங்கு, நீ இருக்க மாட்டாய் நாம் இருப்போம்''** எனக் கூறி முடித்தார் ஸ்ரீ ரமணர்.

காவ்ய கண்ட கணபதி முனிவருக்கு... அதுவரை புரியாதிருந்த வாழ்வுப் புதிரின் முடிச்சுக்கள் யாவும் தானே இற்று விழுந்தன! இருண்டு கிடந்த அவரது மனக்குகை, ஞான ஒளியால் பளிச்சிட்டது! ஆத்மார்த்த குருவாக

அவரை ஏற்று... ''**ரமணமகரிஷி**'' எனும் திருநாமத்தைச் சூட்டி மகிழ்ந்தார்.

முன்னால் முளைத்த காதுகளை விட, பின்னால் முளைத்து வந்த கொம்புகளுக்கு பலமும் கம்பீரமும் இருப்பது போல, பெற்றோர் வைத்த பெயரான வெங்கட்ராமனை விட... கணபதி முனிவர் சூட்டிய ''ரமண மகரிஷி'' எனும் திருநாமமே உலகப்புகழ் பெற்றதாகிறது.

''நீயிருக்க மாட்டாய் நாம் இருப்போம்'' என்ற ரமண மகரிஷியின் வாக்கை நிரூபிப்பது போல... ஓர் சம்பவம்.

1908-ம் ஆண்டு சென்னையை அடுத்த திரு ஒற்றியூர் கோயிலிலே... ''**சைவசித்தாந்த சதஸ்**'' ஒன்று நடந்தது'', அதிலே கணபதி சாஸ்திரியும் கலந்து கொள்ள வேண்டி வந்தது. சித்தாந்தத் தத்துவப் பிரச்சனை ஒன்று விடைகாண முடியாதபடி விஸ்வரூபம் எடுத்தது. 'ரமண மகரிஷி இருந்தால் பிரச்னை தீருமே' என்று கணபதி முனிவர் நினைத்த மறு கணமே... ஒற்றியூர் வடிவுடையம்மனின் ஆலய வளாகத்துள்ளே ரமண மகரிஷி வந்து, அபயக் கரத்தால், கணபதி முனிவருக்கு ஹஸ்த தீட்சை தந்து சித்தாந்தப் பேருண்மையை யாரும் அறியாவண்ணம் அவருக்கு உபதேசித்து மறைந்தார்.

ஆம், அதே வேளையில் ஸ்ரீ ரமண மகரிஷி திருவண்ணாமலை ஆஸ்ரமத்திலும் இருந்தார்.

இப்படிப்பட்ட ஒரு சில சித்தாடல்களை ஓரிருமுறை அவர் பயன்படுத்தியுள்ளார்.

பின்னாட்களிலே... மேலை நாட்டுச் சீடர் சிலர்... ''சித்து வேலைகளைத் தொடர்ந்து செய்தால் உலகப் புகழ் பெறலாமே'' எனச் சொன்னபோது... **''விளையாட்டால் முக்தி பெற நினைப்பது மதியீனம், கனவுப் பொருள் கை கூடுமா?** ஆன்ம விசார அனுபவ தபஸ் ஞானமே... முக்திக்கும் காரிய சித்திக்கும் வழிகாட்டுவதாகும். அதுவே நிரந்தரப் பரமானந்தப் பெரு வாழ்வைத் தருவதாகும். மாயா ஜால... மந்த்ரயந்த்ர தந்த்ரங்களால்... மனிதன் என்றுமே நிரந்தர அமைதியை, ஆனந்தத்தைப் பெற முடியாது'' எனக்கூறி... இறுதிவரை வெண்மை நிறக் கௌபீன கோவணாண்டிச் சாமியாகவே வாழ்ந்தவர், குருமஹான் ஸ்ரீ ரமண மகரிஷி.

காலப்புயலிலே ஆண்டுச் சருகுகள் பல உதிர்ந்தன. மகரிஷிகள் அவ்வப்போது புரிந்த உபதேசக் கருத்துக் கோர்வையாக **''ரமண கீதை''** யைத் தொகுத்து உருவாக்கினார்; கணபதி முனிவர்.

இன்கம்டாக்ஸ் ஆபீஸிலே அதிகாரியாக இருந்த சிவப்பிரகாசம் பிள்ளையென்பவர், வேதாந்த வித்தகர். மகரிஷிகளிடம் அடிக்கடி பல கேள்விகளைக் கேட்டு... பதில்களைத் தொகுத்து **''நான் யார்?''** எனும் வினா விடை நூலை வெளியிட்டார். ''நான் யார்'' எனும் நூலானது, ரமண மகரிஷியை... அவரது ஞான வழிகளைப் பாமரரும் புரிந்து கொள்ள உதவும் பவித்ரமான ஞானானுபவ பாலபாட இலக்கியமாகும்.

அனைத்து மாநில மக்களும் திருவண்ணாமலை ரமண மகரிஷிகளைப் பற்றியே பேசுமாறு, தனது பிரச்சார வன்மையால் மாற்றியமைத்த கணபதி முனிவர், 1910-காலகட்டத்திலே கல்கத்தா நகரை அடுத்த கரக்பூரிலே அமரர் ஆனார்.

புதுப்புதுச் சீடர்களும், இலக்கிய கர்த்தாக்களும் ரமணரைத் தேடி வந்த வண்ணமாகவே இருந்தனர். ஊரிலிருந்து அடிக்கடி வந்து மகானை - அருமை மகனை-பார்த்துத் திரும்பிய அன்னை அழகம்மாள், குடும்பத்திலே அடுத்தடுத்து ஏற்பட்ட உறவினர்களின் இழப்புகளால் 1914 - முதல் ஆசிரமத்தின் நிரந்தரப் பிரஜையானார்.

1916-ல் படிக்காத மேதையும், தீவிர ரமண பக்தனுமாகிய பாமரன் **கந்தசாமி**... கட்டிக் கொடுத்த ஸ்கந்தாஸ்ரமம், ரமண மகரிஷியின் இருப்பிடமானது.

அன்னையின் வருகையால் ஆஸ்ரமம் புதுப் பொலிவு பெற்றது. எண்ணிலா பக்தர் கூட்டம் அலைமோதியது. அனைவருக்கும் சுவையான உணவு தரும் அளவிலே... ஆஸ்ரமத்திற்கு அள்ளித் தரும் நன் கொடையாளர்களும் வந்து குவிந்தனர். அந்த கால, கட்டத்திலே திருவண்ணாம்லையிலே... நடமாடும் இரு சுவாமிகள் உள்ளனர் என்பது சம்ரதாயம், மூத்தசுவாமி சேஷாத்திரி, இளைய் சுவாமி ரமணர்.

''இளைய சுவாமியின் ஆஸ்ரமத்திலே ருசியான தின்பண்டங்களுக்கு குறைவே இருக்காது'' என்று சித்த

மகா புருஷரான மஹாயோகி சேஷாத்திரி சுவாமிகள் அடிக்கடி கூறுவார்களாம்.

சமபந்தி போஜனமும், ஆண் பெண் சம உரிமையும் 1917- காலகட்டத்திலேயே ரமணரின் ஆச்சிரமத்திலே கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டது.

1922-மே-9-ல் மகரிஷியின் அன்னையார், அண்ணாமலையாரின் திருவடி நிழலுக்கு ஒளியானார். மகனுக்குரிய கடனைச் சலனமே இல்லாது செய்து முடித்த ரமணர், அன்னையின் சமாதியை ''**மாத்ரு பூதே ஸ்வரர்**'' ஆலயமாக உருவாக்கினார்.

அந்த அன்னையின் திருமேனி அடக்கமான ஆலய எல்லைதான், பிற்காலத்திலே மிகப் பெரும் ஆன்மிகக் கலங்கரை விளக்கான ரமணாச் ரமமாக உருவானது.

பழனிச் சாமியால் மலையாள மொழியையும், ''கம்பீரம்'' **சேஷய்யா** எனும் தெலுங்குப் புலவரால், அந்த மொழியையும், ஏற்கனவே காவ்ய கண்டகணபதியால் சமஸ்கிருதத்தையும் அறிந்திருந்த ரமண மகரிஷி, பன் மொழிப் புலமை பெற்றுத் திகழ்ந்தார்...

விசாரசங்கிரகம்'' எனும் நூலை சேஷய்யா தொகுத்து முடித்தார். அது ஒரு அருமையான ரமண இலக்கியமாகும். இதுபோல பல நூல்களை பற்பல சாதகர்கள் உருவாக்கி... ஆச்சிரமத்திற்கு அழியாத தியான இலக்கியம் பலவற்றை அளித்துள்ளனர்.

ரமணரிடம் யாராவது வந்து ''சுவாமி! நீங்கள் மகாசித்தர்'' என்று வணங்கினால், ''இல்லவே இல்லை, உடம்புபற்றிய பிரக்ஞை கூட இல்லாமல் சதா சர்வகாலமும் அண்ணாமலையை வலம் வருகின்ற சேஷாத்ரி சுவாமிகளே பூரணச் சித்தர்'' என்பாராம்.

ஆஸ்ரமத்துள் திருடர்கள்!

ரமண மகரிஷியாலேயே... **''பூரணச் சித்தர்''** எனப் போற்றி வணங்கப்பட்ட **ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்,** திருவண்ணாமலைத் தெருத் திண்ணையிலே முக்தியடைந்த நாள் 4-1-1929 ஆகும். அக்கினி தீர்த்தக் கரையிலே அக்கினியோடு ஐக்கியமான சேஷாத்திரி சுவாமிகளின் பூத உடலுக்கு, ரமண மகரிஷியே வந்திருந்து அஞ்சலி செலுத்தினார்.

அருளால் பெருகித்ததும்பிய ரமணாச்சிரமம், பொருள் வளம் பெறாத... 1924-வது ஆண்டு ஒருநாள் இரவு, மூன்று திருடர்கள் ஆஸ்ரமத்துள் புகுந்து... கதவு ஜன்னல்களை உடைத்தனர் ''எதையும் சேதப்படுத்தாமல் எது வேண்டுமோ எடுத்துச் செல்லுங்கள்'' என்றார் மகரிஷி. சீடர்கள் திருடர்களை மடக்கிப் பிடித்தனர். மகரிஷியின் கட்டளையால் விடுவித்தனர். சீடர்களையும் ரமணரையும் அடித்துப் போட்டு விட்டு... கிடைத்த வெறும் ஆறு ரூபாய்களோடு திருடர்கள் வெளியேறினர். **''அடிபட வேண்டும் என்பது விதி! எய்தவனிருக்க... இவர்களை நோவானேன்?''** என்றார் மகரிஷி. புகார் ஏதும் தராமலேயே, அடுத்த மாதமே வேறொரு

வழக்கிலே அவர்கள் கைதாகி தண்டனை பெற்றார்கள். விடுதலை பெற்ற திருடர் தலைவன், ஸ்ரீ ரமண மகரிஷியின் பக்தனாகி காலமெல்லாம் அவரது புகழைப் பாடிக் களித்தான்.

1931-வது ஆண்டு காஞ்சி ஸ்ரீ மடத்து 68-வது சங்கராச்சார்ய சுவாமிகளான **ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்**, செங்கற்பட்டிலே முகாமிட்டிருந்தார்.

இங்கிலாந்து நாட்டிலிருந்து பாரதத்துக்கு வந்து, இந்திய ஞானியரை, அவர்தம் சேவைகளைத் தொகுக்க வந்தார் **''பால்பிரண்டன்''** எனும் ஓர் ஆங்கிலேயப் பேரறிஞர். செங்கற்பட்டு முகாமிற்குச் சென்று ஸ்ரீ மகா பெரியவரை தரிசித்தார். இந்திய நாட்டு வேத இதிகாச, கலை கலாசார, பண்பாடு... சமயம் முதலான அனைத்திலும் பல கேள்விகள் கேட்டார். குற்றால அருவிபோலத் தடையின்றிப் பதில்களைக் கொட்டினார் காஞ்சி முனிவர். ''சுவாமி! அடியேனைத் தங்களது சீடனாக ஏற்று உபதேசப் பாடமும் சிலகாலம் நடத்த முடியுமா?'' எனக் கேட்ட பால்பிரண்டனிடம்...

''திருவண்ணாமலையிலே உள்ள ரமண மகரிஷியைச் சந்தித்தால் உங்களது எண்ணம் பூர்த்தியாகும்'' என்றார் மகா பெரியவர்.

மேலைநாட்டுச் சீடர்கள்!

பால்பிரண்டன் அவர்கள், ரமண மகரிஷியைச் சந்தித்து, ஞான, தியான அனுபவங்களைப் பகிர்ந்து

கொண்டதால்தான், ஸ்ரீ ரமண மகரிஷியின் மகத்துவம், உலகெங்கும் பரவியது.

1935-பால் பிரண்டனின் ரமண மகரிஷி பற்றிய ஆங்கில நூலைப்படித்துத் தான் **''மேஜர் சாட்விக்''** எனும் மேலை நாட்டுச் சாதகர், திருவண்ணாமலை வந்து, மகரிஷிகளைக் கண்டு... அவருக்கே நிரந்தரச் சீடராகி... இறுதிவரை ரமணாச்சிரமத்திலேயே இருந்தவர். அவரது சமாதி ரமணாச்ரம மேற்குக் கோடியிலே உள்ளது.

பாரதத்தின் தலை சிறந்த தியான ஞான விதைப் பண்ணையாக உருவாகி, உலகின் பலநாடுகளிலும் மகரிஷியின் புகழ் பரவி, திருவண்ணாமலைக்கு வந்த வெளிநாட்டவர்களிலே... பிரஞ்சுப் பெண்மணி பாஸ்கவின் மாலெட்; பேரறிஞர் F.H.ஹம்பரீஷ்; மன இயல் விஞ்ஞானி - கார்ல்யுங்; மற்றும்... கிராண்ட் டஃப்; ஆர்தர் ஆஸ்பர்ன்; கார்டியன் பிரஸன்... இப்படியாக இன்றளவும் தொடரும் ரமணாச்ரமத்து வெளிநாட்டுச் சீடர்கள் தொகை ஏராளமாகும்.

பதினாலு வயதிலே மதுரைப் பள்ளித் தோழனாக பால வெங்கட்ராமனோடு ஆடிப்பாடித் திரிந்த தோழன் **அப்துல்வஹாப்**; பால்பிரண்டன் காலத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரலாகியும், மகரிஷி ரமணரிடம் அடிக்கடி வந்து அளவளாவுவார். இப்படியாக... இந்து முஸ்லிம், கிறிஸ்தவர்... ஆகிய எம்மதத்தவரும் நம்மதத் தவரே எனும் ஏக உலக ஒருமைப்பாட்டைப் பேணிக் காத்தவர் ஸ்ரீ ரமண மகரிஷி.

ஏராள இந்திய தலைவர்கள்!

1938-ம் ஆண்டிலே தேசப்பிதா **மகாத்மா காந்தியால்** அனுப்பப்பட்ட **பாபுராஜேந்திர பிரஸாத்தும், ஜம்னாலால் பஜாஜ், கவிக்குயில் சரோஜினி நாயுடு...** ஆகியோர்... மகரிஷியை தரிசித்து ஆசி பெற்றனர். விடைபெறும் போது ''மகாத்மாவுக்குத் தாங்கள் தரும் சேதி எது?'' என்ற அவர்களிடம்... ''இதயத்தோடு இதயம் பேசிக் கொண்டு இருக்கும் போது, வார்த்தைகளின் தேவை என்ன?'' என்று மகரிஷி மறுமொழி கூறி விடை தந்தார். மகரிஷியின் ஷ அருள் வாக்கால், **மகாத்மா காந்தியடிகளும் ஓர் ஞானச் சித்தர்தான்** என்பது தெளிவாகிறது.

1938-லிருந்து அடுத்த பத்தாண்டுக் காலத்திலே... ரமணாச்சமம் ஓர் உலக ஆன்மிக ஞானானுபவப் பல்கலைக் கழகமாகவே விளங்கியது எனலாம். பல நாடுகளின் ஆராய்ச்சியாளர்களும், ஏராள வரலாற்றுப் பேராசிரியர்களும், பத்திரிகையாளர்களும் பலாப் பழத்தை ஈக்கள் மொய்ப்பது போல, ரமணாச்சிரமத்தை முற்றுகையிட்டனர்.

டி.வி. கபாலி சாஸ்திரி, லட்சுமண சர்மா, அருணாசல முதலியார், பி.வி.நரசிம்ம ஐயர், யோகி ராமையா, ''மகரிஷி'' சுத்தானந்த பாரதியார், டி.எம்.பி. மகாதேவன் முதலான... ரமண இலக்கியங்களைப் படைத்த சான்றோர்களும்... ஏராளமான பாமரச் சீடர்களோடு... பாசமுள்ள **லட்சுமிப்பசு, சின்னக்கருப்ப**

நாய், குரங்குகள், அணில்... மயில்... இப்படியாக... அனைத்து உயிரினங்களும் ரமணரை நேசித்தன! அவரும் அவர்களிடம் - அவற்றிடம், இறுதிவரை அன்பை யாசித்தார் என்பது... இதுவரை எந்த ஒரு ஞானியரிடமும் காணாத அதீத அம்சமாகும்.

1-9-1946 ரமணர் திருவண்ணாமலைக்கு வந்து தியானம் தொடங்கிய ஐம்பதாண்டுப் பொன் விழா. விழாக்களை... அவர் விரும்பாவிட்டாலும்... அவரது ஜயந்தியிலே அன்னதான மகோத்ஸவமும், ஆண்டவன் ஆராதனையும் பக்தர்களின் அபிலாஷையாகும்.

1949-மார்ச் 17 - பத்தாண்டுகளாக கட்டப்பட்டு வந்த அன்னையின் கோயிலைப் பூர்த்தி செய்து, மகரிஷி கும்பாபிஷேகத்தை நடத்தினார்.

ஏப்ரல் மாதத்திலே, மகரிஷியின் மண்ணுலக வாசம் அடுத்த ஆண்டு, பூர்த்தியாகப் போகிறது என்பதன் ''சிக்னல்'' போல... இடது முழங்கையிலே தசைவளர்ச்சி, படிப்படியாக வளர்ந்து, **'புற்றுநோய்'** எனப்பெயர் பெற்றது. நவீன மருத்துவ சிகிச்சை களையும் பக்தர்களின் வேண்டு கோள்படி மகரிஷி ரமணர் ஏற்றுக் கொண்டார்.

1949-மே-14 திருவண்ணாமலை கோயிலுள்... பாதாளலிங்க குகை புதுப்பிக்கப்பெற்று... 17-வயதிலே... ரமணர் வந்து (1896) தியானத்தை மேற்கொண்ட நினைவுப் பலகையை... இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் **''சக்ரவர்த்தி'' ஸ்ரீ ராஜ கோபாலாச்சார்யர்** திறந்து வைத்தபின், ஆஸ்ரமத்திற்குச் சென்று மகரிஷியோடு அளவளாவித் திரும்பினார்.

1950-தொடங்கியதுமே மகரிஷியின் உடல்நோய் மிகுதியானது. கொடிய வேதனைகளையும் ''விதி'' எனக் கூறிச் சிரித்தபடியே... தொடர்ந்து... படுக்கையில் இருந்து கொண்டே தேடிவரும் பக்தர்களுக்கு தரிசனமும் உபதேசமும் புரிந்து வந்தார்.


1950-ஏப்ரல்-14 அகில உலகமும் இன்று போற்றி வணங்கும் புனிதமஹான், சித்தமஹாபுருஷர், மகரிஷி ரமணர், சிவ சொரூபமாகி... அண்ணாமலைச் சுடர்க் கடவுளின் அடி நிழல் ஆனார்.

ஆயிரக் கணக்கான அவரது உபதேசச் சுடர் மணிமாலைகளிலே ஓரிரு மணிகளை இங்கு பார்ப்போமா...

ஜெய் ஸ்ரீரமணா!

''பல விவகாரங்களை துருவித் துருவி ஆராய்வதால் மட்டுமே ஞானம் வந்து விடாது!

தெய்விக நிலையை நான் வானத்திலிருந்து வர வழைக்கிறேன் என்பதெல்லாம் வெறும் தந்திரம்! ஓடும் மூச்சிலே நான் இருக்கிறேன் என்றார் **ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.** கண்கண்ட சூரியனுள் இருப்பவன் எவனோ... அவன், ஒவ்வொரு மனிதனின் உள்ளும் இருக்கிறான் என்றார் **ராமகிருஷ்ண பரமஹம்சர்.** தனிப்பெரும் கருணைதான் அருட்பெரும் ஜோதியாகிய ஆண்டவவன் என்கிறார் **வள்ளலார்.** ''பரலோகம் உன்னுள்ளேயே இருக்கிறது'', சொன்னவர் **ஏசுநாதர்.**



"பயபக்தி உடயைவர்களிடம் அல்லாஹ் இருக்கிறார்"

-திருக்குரான்

எனவே, நமது மனக் குகைக்குள்ளே ஞான மனைத்தும் உள்ளது. அறியாமையால் இருண்டு கிடக்கும் இதயக்குகையிலே அறிவெனும் விளக்கினை ஏற்றி, அதைத் தூண்டி விடுபவர்களே சற்குருமார். அவர்களிலே 20-ம் நூற்றாண்டின் பிரதானமானவர் ஸ்ரீரமண மகரிஷி.

''சிவபெருமான் உன் முன்னே காட்சியளிப்பார் எனக் காத்திராதே, சிவனாகவே மாறுவதற்கு நீ ஆயத்தமாகு. உன்னிடத்தில் அகந்தை தேயத்தேய, ஒழுக்க உணர்வு பெருகப்பெருக சிவமாதல் நிகழுகிறது!. அனைத்தும் அன்புச் சிவமாகி விட்டால், துன்பமேது, துயரமேது? அதுவே முடிவான ஞானமாகும்.''

சத்தியச்சித்தரான ஸ்ரீ ரமண மகரிஷி, வேதாந்த சித்தாந்தத் தத்துவங்களையெல்லாம், இனிய முறையிலே எளிய நடையிலே இப்படிப் பாலபாடம் போல நமக்கு விளக்கியுள்ளார்கள்.

ஏராள நல்வழிகள் நமது எதிரிலேயே உள்ளன! போவதும் நிற்பதும் நம்விதி! ஜெய்ஸ்ரீரமணா!

ஞானமா க்ஷேத்திரமாகிய திருவண்ணா மலையின் ஆதிச்சித்தர்கள் சிலரை அடுத்து அறிவோமா.

அண்ணாமலை ஆதிச் சித்தர்கள்



''திருவண்ணாமலையெனப் போற்றப்படும் ''**தெய்வத் திருமலை**''யானது, ஐந்து சிகரங்களைக் கொண்டதாகும்; ஆகம முறைப்படி சிவபெருமானுக்கு ''**ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்**'' எனும் ஐந்து திருமுகங்கள் உண்டு.

இமயத்துத் திருமுடியான திருக்கைலாயத்திலே உமா மகேஸ்வரன், 29-மைல் சுற்றளவுள்ள பிரமாண்டமான **பனிலிங்கமாக** விளங்குகிறார்; திருவண்ணாமலையிலே, எட்டு மைல் சுற்றளவுள்ள ஐந்து சிகரங்களுடன் கூடிய ''தெய்வத் திருமலை'' - தீமலை இலிங்கமாகப் - பிரகாசிக்கிறார்.

அண்ணாமலையைச் சுற்றிலும் இந்திரன், அக்னி, வருணன், வாயு, குபேரன், நிருதி, யமன், ஈசானன் ஆகிய எட்டு திக்குப் பாலர்களும் தவமிருந்து, பூமண்டலத்தைப் பரிபாலிப்பதற்கான அதிகாரபூர்வ சர்வ வல்லமைகளையும் பரமேஸ்வரனிடம் பெற்றுள்ளனர்.

பூமண்டலத்தின் இதயப் பகுதி போல விளங்கும் திருவண்ணாமலை, கிருத யுகத்திலே ''அக்கினி'' மலையாகவும், திரேதா யுகத்திலே ''மாணிக்கக்''

குன்றாகவும், துவாபர யுகத்திலே தங்க மலையாகவும், நாம் வாழும் இந்தக் கலியுகத்திலே ஞானியர்கண்களுக்கு மரகத மேருவாகவும், பாமர மக்களுக்குக் கல் மலையாகவும் காட்சி தருகிறது.

''பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, பூமியிலே நிலக்கரிப் பாளங்கள் ஏற்படுவதற்கும் முற்பட்டதாக கோடானுகோடி ஆண்டுகள்; பூமி உருவான அன்றே திருவண்ணாமலை உருவானது, கடலிலே மறைந்து போன 'லெமூரியாக்கண்ட'த்தின் எஞ்சிய ஒரேபகுதி அருணாசலம்'' என்று ''Message from Arunachala'' எனும் உலகப் புகழ் பெற்ற ஆராய்ச்சி நூலிலே ''**பால்பிரண்டன்**'' எனும் மேலைநாட்டுப் பேரறிஞர், வரலாற்று ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

(எரிமலைக் குழம்புதான் இறுகிப் போய், அண்ணாமலையாக ஆகியுள்ளது என்று, இருபதாம் நூற்றாண்டின் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியும், நமது மெஞ்ஞான முடிவினை ஏற்று நிரூபிக்கிறது).

''தட்சிணகைலாயம்'' எனக் கொண்டாடப்படுகின்ற அண்ணாமலையிலே ஈஸ்வரன், ''அருணகிரியோகி'' யாகத் திகழ்வதாகப் புராணங்கள் கூறும்.

அருணகிரியோகியான ஸ்ரீ அண்ணாமலையார் நிழலிலே, சமுதாய மக்களுக்காகச் சித்தாடல் பலபுரிந்த - இன்றும் அரு உருவாய் - புரிந்து வரும் பலநூறு சித்தர்களிலே ஒருசிலயோகியரைப் பார்ப்போமா.

குகை நமசிவாயர்

"திருவண்ணாமலைக்கு வந்து ஞான குருவாக இரு" என்று ஸ்ரீ அண்ணாமலையாரின் நேர்முக அழைப்பினால் ஞானியானவர், மல்லிகார் ஜுனத்திலிருந்து திருவருணை வரும் வழியிலே ஓர் திருமண வீடு, வணங்கிய அனைவருக்கும் விபூதி தந்தார். அப்போது நடந்த வாணவேடிக்கையால் தீப்பொறிபட்டு... பந்தல் எரிந்து பாழானது. ''இந்தப் பரதேசிதான் காரணம்'' எனப் பழிபோட்டனர் பொதுமக்கள். சிந்தை நொந்து சிவனை நினைந்தார். வெந்து சாம்பலான பந்தல், வாழை கமுகு தோரணங்களோடு மீண்டும் ஜொலித்தது! ''இனி நான் தனியார் வீடுகளின் வாசலுக்குச் செல்ல மாட்டேன்'' எனத் திருவண்ணாமலைக் குகை வாசியானவர் ''**அருணகிரி அந்தாதி**'' முதலான பல நூல்களைப் பாடியவர். சீடரையே குருவாக்கிய செந்தமிழ்ச் சித்தர் **ஸ்ரீ குகை நமசிவாயர்.**

குருநம சிவாயர்

உண்ணாமுலை அம்மனிடமே ''**தாயிருக்கப் பிள்ளை தளருமோ?**'' எனப்பாடத் தொடங்கி, திரு அருணை இறைவியையே நேரில் கண்டு அன்னையின் திருக்கரத்தால் அமுது பெற்றவர். ''**அண்ணாமலை வெண்பா**'' முதலான பல அருட்பாவின் படைப்பாளர் தில்லைக் கோயில் திரைச்சீலையிலே தீப்பிடித்ததை,

திருவண்ணாமலையிலிருந்தே அறிந்து, தனது மேல் துண்டைத் தேய்த்து... சிதம்பரத் தீயை அணைத்தவர்.

குகை நமசிவாயரின் பிரதான சீடர் இவர். தில்லை நடராஜரையே குருவாக உருவகித்துப் பாடி, நடராஜரில் தனது குருவாகிய குகை நமசிவாயரைக் கண்டவர். தில்லைக் கூத்தன் கோயிலுக்கு ஏராள நிலபுலங்களைத் தேடிக் கொடுத்த தியானச் சித்தர் **ஸ்ரீ குரு நமசிவாயர்.**

தெய்வ சிகாமணி தேசிகர்

ராஜாவின் இறந்த குதிரையை ''**அல்லல் கெடுப்பன ஐந்தெழுத்துமே**'' எனப் பாடித்துதித்து உயிர்த்தெழச் செய்தவர்.

திருவண்ணாமலை ஆதீனத்தின் முதல் குருவாகி குன்றக் குடி ஆதீனத்தை தெய்வத் திருவருளோடு ஸ்தாபித்தவர் **ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்.**

(சிவகெங்கை மன்னரின் கோரிக்கையை ஏற்று, திருவண்ணாமலை ஆதீனம், குன்றக் குடியிலே நிறுவப் பெற்றது. 45-வது குருமகா சன்னிதானமாக 1952-ல் பட்டத்திற்கு வந்த **ஸ்ரீ குன்றக்குடி அடிகளார்** (11-8-1925 முதல் 15-4-1995) அகில உலக அளவிலே புகழ்பெற்ற தமிழ்த்துறவி. அகில இந்திய அளவிலே சமுதாயப் புரட்சியாக குன்றக்குடியை, தன்நிறைவு ''முன்மாதிரி'' கிராமமாக ஜொலிக்கச் செய்தவர், **சிரத்தா பக்தியோடு மக்களை உழைக்க வைத்து அவர்களை உயர்த்தியவர்)**

பாணி பாத்திர சுவாமி!

பிள்ளைப் பிராயத்திலேயே துறவு பூண்டு வல்வினையை வென்றவர். இவரது முதற்பெயர் **கிரிதேவர்**. வீரசைவ மடத்துத் தலைவராக இருந்து, தினசரி பூஜை முடிந்ததும், திருமடத்திற்கு வந்துள்ள, அடியார் தொகைக்கு ஏற்ப உணவுக்காக அண்ணா மலையார் இவருக்குப் பொற்காசுகளை ''படி'' அளப்பாராம்.

தீர்த்தக் குளத்துத் தண்ணீரையே திரட்டிக் குடமாக்கி - ''பானி''யையே பாத்திரமாக்கி - (1290) அதிலேலே நீர் முகந்து சென்று அண்ணாமலையாரை அபிஷேகித்ததால் இவரது காரணப் பெயர்தான் ''**பானி**'' **பாத்திர சுவாமி**''யாகும்.

சோணாசலத்தேவர்

மண்ணிலே புரண்டு விளையாடிய பருவமுதல், தொண்ணூறு வயது வரை, நாள் தோறும் திருவண்ணாமலையை வலம் வந்து... அந்தப் புண்ணியத்தால், பரமேஸ்வர தரிசனம் பெற்றவர். மக்களது மனநோய், பிணிகளையெல்லாம், திருவண்ணா மலையிலே விளையும் மூலிகைகளால் தீர்த்தவர்.

ஊமைகளைப் பேச வைத்த, குருடர்களைக் காண வைத்த சித்தமகா முருகச் சிவயோகியான திருப்போரூர்

சிதம்பர சுவாமிகளின் நேரடிச் சீடரான இவரை ''**மலைவலச் சித்தர்**'' என்றே கூறுவர். மக்கள் -சோணாசலதேவரை- வணங்கி, மனநோய், பிணிகளை மாற்றிக் கொண்ட மகத்துவங்கள் பலப்பலவாம்.

ஞானப் பிரகாசர்

இலங்கை (ஸ்ரீலங்கா) யாழ்ப்பாணத்திலே பிறந்து, தில்லைச் சபாபதியின் திருவருளால் அருணையம் பதியிலே சிவஞானம் பெற்றவர்.

திருவண்ணாமலையிலே பெற்ற தியான ஞானம் பிரகாசமாகி, மக்களுக்குப் பேரொளியை வழங்கி... தலையாத்திரை புறப்பட்டார். நிரந்தரமாக அவர் தங்கியிருந்து, மக்களை அறியாமை இருட்டிலிருந்து காத்த திருத்தலம் சிதம்பரமாகும்.

மகேசன் பூசையாக மக்களின் சேவையைத் தொடர்ந்த ஞானப் பிரகாசருக்கு... பொன்னம்பலத்தான் பெரும் பணப்புதையலையே பரிசளித்தான்.

''**ஞானப்பிரகாசர் மடம்**'' அமைத்து தியானத் தெளிவையும், தெய்விகப் பொலிவையும் பக்தர்கட்கு வழங்கியதோடு... தீராப்பிணியான ''**பசிநோய்**'' க்கும் மாறாத வகையிலே அன்னம் பாலித்து வந்த சத்தியச் சித்தர் **ஸ்ரீ ஞானப் பிரகாசர்.**

வீர வைராக்கியர்!

சவால்விட்ட பிற மதத்து மன்னனின் ஆணவத்தை அடக்குவதற்காக, ஆலய வளாகத்திலே இருந்த கல் நந்தியை, காளையாகித் துள்ளி எழச் செய்தவர்!

பாதகரைத் திருத்தி ஆட்கொள்வதற்காக, பழுக்கக் காய்ச்சிய இரும்புச் செருப்புகளை அணிந்து பலகாததூரம் நடந்தவர்! சர்வ தேவர்களின் சங்கம வடிவாகிய கோமாதாவை - பசுவை - இரு துண்டுகளாக்கிய மாபாவிகள் திருந்திடவே, தியானபலத்தால் பசுவை உயிர்ப்பித்து, பாலைக் கறந்து பாவியர்க்கும் பருகத் தந்து புனிதராக்கிய பெருஞ்சித்தர், **வீரவைராக்கிய மூர்த்தி சுவாமிகள்.**

அப்பைய தீட்சிதர்

வேலூரை ஆண்ட சின்ன திம்ம நாயக்கரின் அபிமான அரசவைப்புலவர். விதண்டாவாத வீண் சர்ச்சைகளிலே காலத்தையும் உழைப்பையும் விரயம் செய்து கொண்டிருந்த சமுதாய மக்களை சிந்திக்க வைத்து, ''எல்லாமதங்களும் ஒரே இறைவனைக் காணும் மார்க்கங்களே'' என போதித்தவர் 104-பக்தி இலக்கியங் களைப்பாடி - எழுதி - மக்களுக்குப் பொது வாக்கியவர் அண்ணாமலையையே, விஸ்வருப ஐம்முகச் சிவபெரு மானாகக் கண்டு பரவசம் கொண்ட சத்தியச் சித்தர்.

ஐநூறு சீடர்களைப் பாடுபட்டு உருவாக்கி, சைவத்தின் தொன்மையை, சாஸ்வதமான தெய்வத் தன்மையை சமய சாத்திர உண்மைய்யை உலகுக்கு வழங்கிய **ஸ்ரீ அப்பய்ய தீட்சிதர்** (கி.பி.1520 - 1592) அப்பழுக்கற்ற ஓர் இலக்கிய ஞானச் சித்தர்.

ஆதி சிவப்பிரகாசர்

திருத்தல யாத்திரையின் போது இரவுக் காலங்களிலே... காவிரியாற்றுத் தண்ணீரையே எண்ணையாக்கித் தீவெட்டிகளை கொழுந்து விட்டெறிய வைத்தவர். கல்லால் ஆன நந்திக்குக் கடலையைக் கொடுத்து உண்ண வைத்தவர்! பெரு நோயை தனது திருப் பார்வையால் தீர்த்தவர்! பிணத்தைத் தடவிக் கொடுத்து உயிர்பெற்று எழச்செய்தவர். தனது உடற் கூட்டை உதற வேண்டிய நாளை அறிந்து, பூமியிலிருந்து தீ ஜ்வாலையைப் பொங்கச் செய்து, தனது மேனியை அக்கினியில் கரைத்துக் கொண்டவர்! தூல உட்ம்பு போனதும், சூட்க்ஷும தேகத்தோடு இன்றும் திருத்தல யாத்திரை - அருவமாக - புரிந்துவரும் அற்புதச் சித்தர் **ஆதிசிவப்பிரகாசர்.**

தட்சிணாமூர்த்தி சுவாமி

ஊமையாய்ப் பிறந்து ''அருணாசலம்'' எனப் பெயர்கொண்டு, மலைப்பிரதட்சண மகத்துவத்தால் ''**பாடும்**'' திறனைப் பெற்றுப் புலவரும் ஆனவர்.

காவியத் திறனோடு ஞான திருஷ்டியையும் பரமனிடம் பெற்றவர். மானுடத் தோற்றமும் முடிவும் நிகழும் காலகட்டங்களை அறிந்தும், தேவரகசிய மாதலால் அதுவிஷயத்தில் மட்டும் மோன ''தட்சிணா மூர்த்தி'' யாகத் திகழ்ந்தவர். விராலிமலை முருகப் பெருமான் திருக்கரங்களால் பகலுணவு பெற்று உண்ணும் பாக்கியம் பெற்ற பரம முருகதாசர்.

பாம்பு தீண்டி மாண்ட ஐயர் வீட்டுக் குழந்தையை மீட்டவர், பற்றிய நெருப்பிலே சிக்கிக் கொண்ட ஐயங்கார் வீட்டு வாரிசை பத்திரமாகக் காத்தவர்.

தில்லையிலே ஆடல் வல்லானின் திருநடனம் கண்டு திளைத்து, திருவாரூர் தியாகேசர் சன்னதியிலே சிவனடிச் சோதிகண்டு அதிலே கலந்து ஒளியான முக்காலச் சித்தர் **ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள்.**

குமாரசாமிப் பண்டாரம்

16-ம் நூற்றாண்டிலே குருதேவர் மடத்திலே சிவ தீக்ஷைபெற்று, சிவப்பிரகாசர் எனும் ஞானியால் தியான நிலைத் தேர்வு பெற்றவர். வேளாள தீட்சா குருவான இவருக்கு, ஆலாலமுண்ட நீல கண்டனே வீரசைவ ஆகமத்தைத் தந்தருளி அனுக்ரஹித்தார். காணாமல் போன பூஜைப் பேழையை... அண்ணாமலையாரின் திருக்கரங்களாலேயே திரும்பப் பெற்றவர்.

சைவாகமச் சாத்திரங்களெல்லாம் கைவரப்பெற்று, மெய்வருந்திப் பாடுபட்டு மக்களின் மேன்மைக்காகவே முக்திவரை தியானித்துச் செயல்பட்ட சித்தமகான், **ஸ்ரீ குமாரசாமிப் பண்டாரம்.**

ஈசான்ய ஞான தேசிகர்

வேலூர் சைவ வேளாளர் குல நீலகண்ட தேசிகரின் ஒரே மகன் **கந்தப்பன்** கி.பி.1750-ல் பிறந்தான். மாணவப் பருவத்திலேயே தியான நிலைபெற்று... திருமணப் பந்தத்தை அணுகாமல் திருவண்ணாமலை கண்டவர்.

அந்நாளிலே திருவண்ணாமலைப் பேரூர் முதல், விருத்தாசலம்வரை, ஜில்லா கலெக்டர் ''**ஐடன் துரை**'' என்பவர். துரையின் தீராத காசநோயை விபூதியால் தீர்தருளினார் ஞான தேசிகர். பெண்ணையாற்றிலே புதுவெள்ளம்! அக்கரையிலே இருந்தார் ஐடன் துரை! அண்ணாமலைத் தேரோட்டம் காணத் துடித்தார். ஈசான்ய சிவாச்சாரியாரை மனதால் ஜபித்தபடி குதிரையோடு நதியில் இறங்கிவிட்டார்... மலைமேல் ஓடுவது போல் நதியிலே குதிரை பாய்ந்து குதித்து ஓடி நடந்து திருவண்ணாமலையிலே தன்னைச் சேர்த்த மகிமையை அறிந்து தேசிகரிடம் ''எத்தனை தங்கம், எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் கேளுங்கள் சுவாமி'' என்றார் துரை. ''எண்ணாயிரம் கோடி ஜீவராசிகளின் தந்தையான... பெரிய குடும்பஸ்தன் அண்ணாமலையான் அவனுக்குக் கொடுங்கள்'' என்று ஆலயத்தைச் சுட்டிக் காட்டினார் ஸ்ரீ அருள் ஞான ஈசான தேசிகர்.

அண்ணாமலையின் ஈசான்ய பாகத்திலிருந்த ஆஸ்ரமத்திலே வீற்றிருந்து உலகநலனுக்காகத் தவமியற்றியதால் ஈசான்ய ஞானதேசிகரானவர். சமுதாய நலத்துக்காக வாழ்வின் பெரும்பகுதியை சமாதி நிலை தியானத்திலேயே கழித்தவர்... ஆண்டுக் கணக்கிலே தொடரும் இவரது தவத்தின் போது... இவரது திருமேனிக் காவலர்களாக சிவதூதர்களே புலிகளாகி இரு புறமும் காவலிருந் துள்ளனர்.

இன்றும் அருளறத்தோடு, அன்ன தானத்திருப்பணி புரிந்து வருகின்ற திருவண்ணாமலை ஈசான்ய மடாலயத்தின் ஆதி குருவான இவர், 1829- ல் புகமுடம்பு பெற்றுப் பூரணமானார்.



சற்குரு சுவாமிகள்

கேரள மாநிலத்திலே பிறந்த அனந்த நாராயணன், பாரதமெங்கிலும் க்ஷேத்ராடானம் புரிந்து, அருளற, ஆன்மிக நெறியனைத்தும் உணர்ந்து, தியானத்திற்குகந்த திருவண்ணாமலையிலே வாழ்வுக்கோர் தீர்வு கண்டவர்.

மேட்மலை முருகனுக்குக் கோயில் அமைத்துவர். தனது தவயோக லாபத்தையெல்லாம் புவனத்து மாந்தர்க்குப் பகிர்ந்து கொடுத்தவர். வாழ்வனைத்தும் பாமர மக்களிடம் புகழ்மிகு ''பிதாமக'' ராகத் திகழ்ந்து... பிரச்னைகளுக்கு அவ்வப்போது தீர்வு தந்தவர்.

திரு அண்ணாமலையிலே காலமெல்லாம் சமாதி நிலைகண்டு ''ஸத்குரு'' ஆனவர் 1923-ல் தீக்கடவுளின் ஜுவாலையாகி திருவண்ணாமலைக்கு ஒளி சேர்த்தார். சற்குரு சுவாமிகள் தவமிருந்த ஆலமரத்துக்குகை, இன்றும், கொண்டாடப்படுகிறது. இதுபோல விருப்பாட்சி, குகை, (குகை) நமசிவாயர் குகை, மாமரத்துக்குகை, சடைச்சாமி குகை, அருட்பால் குகை முதலானவையும், சிற்சில அடர்ந்த புதர்களும் பற்பல ஞானியர்கள் மாதவம் செய்த இன்றும் செய்கின்ற - மகத்தான புனித இடங்களோடு... கலையழகு மிளிர்கின்ற வேடுவறி மண்டபம், கட்டுச் சோற்று மண்டபம், வருணலிங்க மண்டபம் முதலான பற்பல மண்டபங்கள் உண்டு திருவருணையிலே. ''வேடுபறி மண்டபத்துக்கருகே போய் நின்று, ''**உண்ணாமுலைத்தாயே!**'' என அழைத்தால், ''**ஏன்!**'' என்றும், ''**சோறு தருகிறாயா?**'' என்றால் ''**தருகிறேன்**''! என்றும் உமாதேவியார் பதில் தருவதைக் கேட்கலாம்'' என்று ''உலகம் சுற்றிய தமிழன்'' திரு. **A.K.**செட்டியார் ஒரு பிரயாணக் கட்டுரையிலே (1939) ஆதாரப் பூர்வமாகக் குறிப்பிடுகிறார்.

பழனிச் சாமிகள்

தென்பழனியிலிருந்து திருவண்ணாமலைக்கு வந்து பரம்பொருளைத் தேடியவர்! கம்பத்து இளையனார் சன்னதியிலே இருந்த ''**ரெட்டியார் சுவாமி**'' எனும் சித்தரிடம் சீடரானவர். சித்தரின் இலக்கணம், மக்களின்

சேவைதான் என்பதை குருவருளாகப் பெற்ற திருவாளர். அண்ணாமலைக் கோயிலுக்குள் புல்பூண்டுகளை அகற்றி... புனிதப் படுத்தி பொன்னாபரணம் போல அன்னாளில் ஆலயத்தைப் பொலிய வைத்தவர்.

அன்னக்காவடி சுமந்து வந்து, அடியார்களுக்கு இடைவிடாது அமுது படைத்தவர். பாதாள லிங்கக் குகையிலே சேஷாத்திரி சாமியின் கட்டளைப்படி பால ரமணரைப் பாதுகாத்த பரமதயாளர். காலமெல்லாம் பிறருக்காகவே வாழ்ந்த பக்திவழிக் கருமயோகச் சித்தர் **ஸ்ரீ பழனிச் சாமிகள்.**

தண்டபாணி சுவாமிகள்

திருநெல்வேலியிலே சைவ வேளாள **செந்தில் நாயகம் - பேச்சி முத்து** மகனாக 28-11-1839-ல் அவதரித்தவர். ஆரம்பப் பள்ளிப் பருவத்திலேயே புள்ளி மயில் வேலவனைப் பாடக்கற்றவர். வேல் பூஜையின் பலனாக ஆறுவகை இலக்கண நூல்களாக ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பக்திப் பாடல்களைப் பாடிக்குவித்தவர்.

திருநெல்வேலி பூமிகாத்தாள் ஆலயத்திலே தியானத்திலிருந்த போது, தவயோக தாகம் ஏற்பட்டு ஊரைவிட்டு திருவண்ணாமலைக்கு வந்தார். கம்பத்து இளையனாருக்கு (திருவண்ணாமலை ஆலயத்து முருகன்) வேல் கொடுத்து வாழ்த்திய இசைப்புலமைச் சக்கரவர்த்தி இவர்.

திருத்தலந்தோறும் அடியார்களை வழிநடத்தி அறநெறிகளைக் கற்பித்தவர். இறையருட்பாடல்களை எழுதி முடித்ததும், ஆண்டவன் திருமுன் பாடுவார். தெய்வ சம்மதத்திற்கான திருக்குறிப்புத் தோன்றாவிடில், ஆக்கிய பாடலை முற்றிலுமாக அழித்துவிட்டு, மீண்டும் புதுப்பாட்டு எழுதும் புலமைச் சித்தர். திருவாமாத்தூரில் பத்து ஆண்டுகள் யோக நிலைச் சாதனையாளராய்த் திகழ்ந்து... 5-7-1898-ல் கந்தன் திருவடி சேர்ந்தார் **ஸ்ரீ வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.**

அழகானந்தர்

சேலத்தை அடுத்த கரையாவூரிலே **நல்லன் - மாராயம்மாள்** மகனாகப் பிறந்து, வளர்ந்து வாலிபனாகும் வரை, உலர்ந்த மரக்கட்டைபோல் கிடந்து, 36-ம் வயதிலே துறவியாகி திருவண்ணாமலை மற்றும், தருமபுரிப் பகுதியிலே... ஏராளக் கோயில்களிலே திருப்பணிபுரிந்து, ஜீர்ணோத்தாரண குடமுழுக்குகளை நடத்தியவர்.

பாலமலை, கஞ்சமலை, திருச்செங்கோடு, சங்ககிரி, மலைகளிலெல்லாம் தவமிருந்து, அந்தத் தபோபலம் அனைத்தையும் பாமரர்களின், பசிப்பிணி, மனப்பிணி, உடற்பிணிகளைத் தீர்ப்பதிலேயே புங்கீடு செய்தவர்.

"சித்தம் தெளிந்து சிவமானோர் எல்லார்க்கும்
தொத்தடிமை ஆன குடிநான் பராபரமே"

என்கிற தாயுமான சுவாமிகளின் பாடலைப் பாடி அதன் படி இறுதிவரை வாழ்ந்து காட்டிய வைத்யச் சித்தர்.

ஊர்ம்க்களின் அத்தியாவசிய அவசரப்பணத் தேவைகளையெல்லாம், மூலிகை மருத்துவத்தால் வரும் காணிக்கைகளைக் கொண்டு பூர்த்தி செய்த சேவைச் சித்தர் **''தம்மணம் பட்டி'' ஸ்ரீ அழகானந்த அடிகள்.**

இசக்கி சுவாமிகள்

ஸ்ரீவைகுண்டம் தாலுகா, வித்திலாபுரத்திலே **செல்லப்பெருமாள்** பிள்ளை - **முத்தம்மா**வின் திருமகனாக 1917-ல் பிறந்தவர். முன்னோர்க்கும், சந்ததிக்கும் செய்யவேண்டிய கடமைகளை முடித்து ''அண்ணாமலையார்க்கே இனி நான் அடிமை'' என்று 1959-காலகட்டத்திலே திருவருணைக்கு வந்தவர்.

24 ஏக்கர் பரப்பளவுப் பேராலயம் (ஒரு ஏக்கருக்கு 18½ கிரவுண்ட்) ஏழு பிராகாரங்கள்; பத்துக் கோபுரங்கள் கொண்ட பேராலயத்திலுள்ள...

ஸ்ரீ அண்ணாமலேஸ்வரர் பிரதான சன்னிதி..., உண்ணாமலையம்மன் (அபீதகுஜாம்பாள்)..., கம்பத்து இளையார் (முருகன்)..., சர்வசித்தி விநாயகர்..., கோபுரத்து இளையனார், பழனி ஆண்டவர்..., காலபைரவர்..., அருணகிரி யோகீஸ்வரர்..., காளத்திலிங்கர்..., ஏகாம்பரேஸ்வரர்..., கல்யாண

சுந்தரர்..., ஜம்புலிங்கேஸ்வரர்..., சிதம்பரரேஸ்வரர்..., (5 மூர்த்திகள்) பிடாரி..., சப்த கன்னியர்..., அறுபத்து மூவர்..., வேணுகோபாலர்..., நவகிரஹங்கள்..., ருத்ர துர்கை..., மகாசரஸ்வதி..., மகாசக்தி..., வீரபத்திரர்..., தட்சிணாமூர்த்தி, பராசக்தியம்மன்..., சண்டிகேஸ்வரர்... என்று திருவண்ணாமலைப் பேராலயத்திலே உள்ள 318 மூர்த்திகளின் சன்னதிகளிலே சென்று நின்று திருவருளை வேண்டிப் பிரார்த்திப்பார் அப்போது ஒரு நாள்...''**மலைவலத்தால் நிலை மாறும்**'' என அசரீரி ஒலித்தது.

எட்டுமுறை மலையை அங்கப் பிரதட்சணமாகவும்; 1008 முறை பாதயாத்திரையாக வலம் வந்தும், சர்வேஸ்வரனின் பஞ்சமுக தரிசனம் பெற்ற பாக்யவான். திரிகால முணர்ந்த சித்தர்களும், தேவாசுர கந்தர்வர்களும் மலைவலம் வருவதை ஊனக் கண்ணால் காணும் பேறுபெற்ற ஞானச் சித்தர். வாழ்வின் இறுதிவரை மலைவலம் வரும் பக்தர்களின் தாகத்தைத் தீர்க்கும் திருத் தொண்டுக்கே (தண்ணீர்பந்தல்) தன்னை ஆளாக்கிக் கொண்டு விட்டவர் **ஸ்ரீ இசக்கி சுவாமிகள்.**

இரை சுவாமிகள்

திரு அண்ணாமலைப் பேராலயத்திலே... கீழராஜ கோபுரத்திலிருந்து கிரி(மலை)வலத்தைத் தொடங்கினால் விநாயகர், முருகன், அஷ்டலிங்கம், நந்திகள், ஸ்ரீ பாதமண்டபங்கள், ரிஷபம், முனிவர் சன்னதிகள்,

கண்ணப்பர், மாணிக்கவாசகர், அறுபத்து மூவர், (மடம்), அனுமன், பூத நாராயணன், வீரபத்திரர், முனீஸ்வரன், நவக்கிரகங்கள், மூன்று-ஐந்து சிகரங்களுடன் கூடிய அண்ணா...மலை தரிசனம், அருவுருவ விநாயகர், அருவுருவ அம்மன்... இப்படியாக தொண்ணூற்று எட்டுச் சன்னிதிகளை மலை வலத்திலே நாம் தரிசிக்கலாம்.

மலையில் மட்டுமா, திருண்ணாமலை ஊர் மண்ணிலே ஓரடிக்கு 1008 இலிங்கங்கள் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர். 1008 பஞ்சாட்சர (நமசிவாய) ஜபத்துடன் ஒவ்வொரு அடியாகக் கடந்து பலமுறை திருவண்ணாமலையைச் சுற்றிவந்தவர்.

சோமவாரம், மற்றும் பௌர்ணமி, நாட்களிலே இரை சுவாமிகளோடு அந்நாளில் கூட்டு வழிபாடு புரிந்தபடி பாட்டும் தியானமுமாக கிரிவலம் வந்த அடியார் திருக்கூட்டம் கோடி, கோடியாய் வளம் பெற்ற, உடல் நலம்பெற்ற வரலாறுகள் ஏராளம் உண்டு.

அகண்டாகாரப் பேரொளியிலே தான் இரண்டறக் கலக்கப் போவதை அடியார்களிடம் முன்பே கூறி::: தொண்டர் தம் பெருமையைக் கண்டு கொண்டே (அவலூர் பேட்டையில்) கூடிநின்ற அடியார்களெல்லாம் மெய்யன்போடு கை கூப்பி'' **அண்ணாமலைக்கு அரோஹரா**'' என முழங்க... ஒளியாகி வெளியாகி உருக்கரந்தார் **ஸ்ரீ இரை சுவாமிகள்.**

யோகி ராம் சுரத்குமார்

பறவையை விரட்டுவதற்காக வீசிய கல், அதன் உயிரையே வாங்கிவிட்டதால், கங்கைக் கரையிலே பிறந்த (1918) அவர், அமைதியைத் தேடி, பாவத்தைத் தீர்க்க காவிரிக்கரை வரை அலைந்தார்! கர்னாடக இராமதாஸர், புதுச்சேரி அரவிந்தர் - என்று ஓடி நடந்து, தேடியது கிடைக்காமல் முடிவிலே, ஸ்ரீ ரமண மகரிஷியிடம் சரணடைந்தார்! குருவருளால் அர்த்த நாரீஸ்வரரின் திருவருள் பெற்றார்! 1959 முதல் ''குடுகுடுப்பாண்டி'' போன்ற **திருக்கோலமுடன்** "விசிறிச்சாமி"யாகத் திருவண்ணா மலையிலே உலாவருகின்ற தியான மகா **சிவயோகி, ராம் சுரத்குமார்.**

யோகி (ஞானி) யரின் புறத்தோற்றத்தைக் கண்டு நாம் ஏமாந்துவிடக் கூடாது! சாக்கடையில் புரண்டு திரிவாராம் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள், ஆனால் அவரது திருமேனியில் சந்தனம் மணக்குமாம்! (15-11-91) திருவண்ணாமலை ஆலயத்துள் நடந்த உபந்யாத்திலே, **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்** சொன்னது, ஆறு வயதிலே சேஷாத்திரி சுவாமிகளை நேரில் கண்டவர் ஸ்ரீவாரியார்சுவாமிகள்.

(தெருக்கோடியிலும், தேரடியிலும் **''சித்தன் போக்கு சிவன் போக்கு''** எனத் திரிந்து... சுவாமி சேஷாத்திரிபோல் திருஅருணை வீதிகளிலே, வலம் வந்த யோகி ராம்சுரத்குமார்ஜிக்கு இப்போது, மாமணிமண்டப மிகப் பெரிய திரு மாளிகை அமைந்து உள்ளதாம்...

ஞானக்கிளியானது, ஆடிம்பர வலைக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்குமா என்ன? காலமே! பதில்சொல்!)

அருணாசலத்திலே இருந்த - இருக்கும் - ஞானியர் மற்றும் சித்தர்களின் தொகை, அளவிட முடியாததாகும்!

பன்னிரு ஆண்டுகள் தனிமையில் தொடர்ந்து அண்ணா மலைமேல் தவஞ்செய்த ராதாபாய் அம்மை. தலைச்சேரி லட்சுமிதேவி, மங்கையர்க் கரசியார், அம்மணியம்மாள், யோகினி லட்சுமி தேவி... இப்படி எத்தனையோ ''**காரைக்கால் அம்மை**''கள் அண்ணா மலைமேல உண்ணாமல், உறங்காமல் உலக நலனுக்காகத் தவம் செய்துள்ளனர். இன்றும் செய்துகொண்டு வருகின்றனர்! பதினைந்து! ஆண்டுகளாக மலைமேல் குகைகளை மாற்றிக் கொண்டு ஏகாந்தமாகத் தவம் செய்கிறார் ஓர் ''ஸ்விஸ்'' நாட்டவர்; அவர் பெயர் ''**வர்னர்**''. கேரளத்தைச் சேர்ந்த ''**வல்லிக்கா**'' எனும் சன்யாசி, யாரும் போக முடியாத ஓர் குறுகிய குகையிலே அருந்தவம் செய்கிறார்; அடுத்து, அருணகிரி நாதரையும், அடியவர்க்கு ''மகனாக'' வந்த அண்ணாமலையார்; திருவிளையாட்டையும் காண்போம்.


சிறுதுளி நிறைகுடம்

இந்தப் பெரிய காரியத்தை நம்மால் எப்படிச் செய்ய முடியும் என்று நினைத்து, நல்ல செயல்களைச் செய்யாமல் இருந்துவிடாதே!

நீர், துளித்துளியாகக் கொட்டியே குடம் நிரம்பிவிடும்.

- கௌதம புத்தர்

அருணகிரிநாதரும்
குழந்தையாய் வந்த
அண்ணாமலையாரும்



திருவண்ணாமலைப் பேராலய கீழராஜ கோபுரத்தைத் தாண்டி, ஆலயத்துள் நுழைந்து, கோபுர கணபதியை வணங்கியதும், கம்பத்து இளையனார் சன்னிதியைக் காண்கிறோம்.

இங்குதான் **சம்பந்தாண்டான்** என்கிற உக்ரகாளி உபாசகனை விதண்டா விவாதத்திலே வென்று, கம்பத்து இளையனாராக முருகனைக் காட்சி தர வைத்தார் **ஸ்ரீஅருணகிரிநாதர்.**

அடுத்துள்ள கிளிக்கோபுரத்துடன் தொடர்புடைய அருணகிரிநாதரின் தெய்விக வரலாற்றைச் சுருக்கமாக அறிவோமா.

"காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி
ஆசுக்குக் காளமுகி லானவனே - தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங்(கு) ஔவை எனக் கூறு."

எனச்சொல்லும் தனிப்பாடலின் உண்மைப்படி, **கருணையுள்ள அருணகிரியால்** தான், வில்லி புத்தூராரால் காதறுபட்ட புலவர்கள் மீட்கப்பட்டனர்! தனது உடலையே மறைத்துவிட்ட அதர்வண வேத

மந்திரவாதியான சம்பந்தாண்டானை, அன்பால் திருத்தினார். மானுடம் வாழ்வதற்குத் திருப்புகழைக் கொடுத்த திருமுருகச் சித்த அருணகிரியாரின் வரலாற்றின் தொடக்கத்தை, ''இதுதான்'' என்று இன்னும் தமிழர் சமுதாயம் உறுதி செய்யாத அவலத்தை யாரிடம் கூறி அழுவது?

சித்தர்களுக்கெல்லாம் நாதனாகிய சித்தநாதன் முருகனிடம், நேரடி உபதேசம் பெற்றவர்கள் மூவர். முதலாமவர், முக்கண்ணனாகிய **சிவபெருமான்**, இரண்டாமவர், கடலையே குடித்த **அகத்தியர்**, மூன்றாமவர் திருப்புகழ் பாடிய **அருணகிரியார்**.

வணிகர்குலத் தனிப் பெரும் திருநகராகிய காவிரிபூம்பட்டினச் செழிப்பிற்கும், அந்நாளய தேவதாசியரின் திருவண்ணாமலை வரலாற்றுப் பின்னணிக் கவர்ச்சியிலும் அவதரித்திருக்கிறார் அருணகிரியார்!

பெற்றோர் யார்? என்கிற "சம்சியம்" இந்தப் பெருஞ்சித்தர் வரலாற்றிலும் இருப்பது, கற்றோர்க்கு அழகல்ல! வாழ்ந்து கொண்டிருக்கும் ஓரிரு மூதறிஞர் சந்ததி முடியுமுன், இதுபோன்ற - வரலாற்று நாயக நாயகியரின் - சரிதங்களிலே உள்ள - தீதுகளைக் களையத் தமிழ்த் திருவிடத்தார் செயல்படப் பிரார்த்திக்கின்றோம்.

அருணகிரியின் பெற்றோர்கள் **அபிராமி அம்மை ராஜநாதரா, வெண்காடர் முத்தம்மையா?** எத்தனை தமிழப் பேரவைச் சங்கங்கள், ''எதிலும் தமிழ்! எங்கும் தமிழ்!!'' எத்தனையெத்தனை? அத்தனையில் ஒன்றாவது இது போன்ற தமிழனின் "தன்மான" அவசிய வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கக் கூடாதா?

15-ம் நூற்றாண்டிலே, திருவண்ணாமலையிலே தோன்றியவர்? அருணாகிரி. தாய் முத்தம்மை? யின் திரண்ட செல்வமும், தமக்கை "ஆதி" யின் அதீதமான செல்லமும் வாலிப அருணகிரியை வனிதையர் வெறியனாக்குகிறது! "காமவெறிதான் வாழ்வின் நெறி, வேசையின் நேசமே மாநுடப் பேரின்பம்" எனும் கோட்பாட்டிலே..பொழுதுதொரு லீலை, நாளொரு தாசி எனக் களியாட்டம் போட்டான் வாலிப அருணகிரி!

"ஸ்திரீலோலனாக அவர் ஆடித்திரிந்ததில்லை, பரத்தையரின் மனைபுகும் பாவியரைத் திருத்துவதற்கே அருணகிரிநாதர் அப்படிப்பாடினார்" எனக் கூறுவோரும் உண்டு.

''ஏட்டுச்சுரைக்காய்'' அல்ல அவரது பாடல்கள். எல்லாமே அனுபவத்திரட்டுகள்! ஆதாரத் தொகுப்புகள்.

'கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி... 'என்றும்

''சிவகலைகள் ஆகமங்கள் மிகவும்மறை ஓதும் அன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசைமிஞ்சி வெகுகவலையால் உழன்று
திரியும் அடியேனை உந்தன் அடிசேராய்...."

அந்நாளைய ''ரெட்லைட்'' ஏரியா ''சில்மிஷ''ங்களை இப்படிப் ட்டம் பிடித்துக் காட்டுகின்ற பாடல்களை, கற்பனைகள் தரமுடியாது! "நீதியைப் பாடும்போது, அநீதியைப் புலப்படுத்தி தருமத்தைப் பலப்படுவது ஒருவகை இலக்கணம்" என்று "சித்தாந்தச் செல்வர்" பேராசிரியர் ஸ்ரீ ப. இராமன் **M.A.** அவர்கள் பேசும்போது கேட்டிருக்கிறேன். ஏனோ அக்கருத்தை அருணகிரிநாதரின் விஷயத்திலே என்னால் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) ஏற்க முடியவில்லை! ஏனென்றால்?

ஆதிகாலத்துத் தெருக்கூத்துகளிலும், அடுத்துவந்த நாடக, மற்றும் புத்தகங்களிலும், 1937-ல் வந்த **அருணகிரிநாதர்** ....த்திலும், 1964-ல் டி.எம். சௌந்தராஜன் நடித்த **அருணகிரிநாதரி**லும், 1992-ல் நான் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) டைரக்ட் (துணை) செய்து வெளிவந்த **வரம்தரும் வடிவேலன்** படத்திலும் வாலிப அருணகிரியைப் பெண்பித்தனாகவே காட்டினார்கள் - காட்டினோம்.

பக்தி வரலாறுகளைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட ஆதீனங்களோ, பழனியப்ப முருகனைத் தன்னுரிமை கொண்டாடும் கௌமார மடாலயங்களோ, அருணகிரித் திருப்புகழ் சபாக்களோ, ஆன்மிக மன்றங்களோ, அர்ச்சனை மொழிக்குக் கச்சைகட்டும் அடியார்களோ இதுவரையாருமே எதிர்ப்புக் குரல் கொடுத்ததாக எனக்கு நினைவில்லை!

அருளற ஆன்மிக நமது ஞானியரை கடவுளரையெல்லாம், அவனவன் மனம்போல உருவாக்கி ஆடவிட்டும், பாடவிட்டும் வேடிக்கை காட்டுவதுசரிதானா? பீடியிலே பிள்ளையார், வெடியிலே மகாலட்சுமி - குடித்துவிட்டு வீசியும், வெடித்து விட்டுச் சிதறியும் பூட்ஸ்காலால் காலம் காலமாக கடவுளர் படங்களை (தெருவில்) மிதித்து வருகிறோமே இது முறைதானா?

ஈரோடு ஸ்ரீ **பெரியார்** பிள்ளையாரை உடைத்ததற்குச் சீறியெழுந்த பெரியோரே! நவநிதிநாயகியான லட்சுமியை தீபாவளி தவறாமல் நடு ரோட்டிலே நாமே - நமது பிள்ளைகளே - வெடியாகச் சிதறடிக்கிறோமே. தர்மந்தானா? இதுபற்றி நானும் 30 -

ஆண்டுகளாக அழுது - ஸாரி! - எழுதி வருகிறேன்! ஏனென்று கேட்கத்தான் நாதியில்லை! வேதனையை ஒதுக்கிவிட்டு, விடுபட்ட அருணகிரியின் விஷயத்திற்கு வருகிறேன்!

பெண்களைப்பழிப்பவர் என்றோ, பேரன்புமிக்க இல்லற வாழ்வுக்கு அருணகிரியார் எதிரி என்றோ நான் சொல்ல வரவில்லை! அனுபவரீதியாக, தகாத உறவால் தான் பெற்ற தண்டனை (நோய்) யைச் சொல்லி, அடுத்து வரும் காமுகரைத் தடுத்துத் திருத்தியுள்ளார்.

காமவெறிப்புயலில் சிக்கிச் சீரழிந்த அருணகிரி சீருடன், செல்வமனைத்தையும் இழந்து, பாவத்தின் தண்டனையாகத் தீராத நோய் கண்டு, அழுகிய பழமானான்! பட்டபின் தெளிந்தான், தமக்கையின் பாதத்திலே விழுந்தான்! பாசமுள்ள தம்பியின் தேக நலனுக்காக முருகாலயங்களிலே தவங்கிடந்தாள் அக்காள்! நோயின் கொடுமை தாங்காமல் திருவருணைக் கோபுரமீதிருந்து குதித்தான். பட்டுத் திருந்தியவனுக்குப் பலன் கொடுக்க முன் வந்தான் வெற்றி வடிவேலன்! சித்தநாதன் கரம் பட்டுச் சீர்பட்டான் அருணகிரி.

கொள்ளைக்கார வால்மிகி. இராமாயண இதிகாசம் எழுதியது போல, கூத்திப்பித்தனான அருணகிரியைத் திருத்தி.. "**முத்தைத்தரு**" அடியை எடுத்துக் கொடுத்து திருப்புகழைப்பாடவைத்தான் சிவசுப்ரமணியன்.

சிவன்டியாருக்கு உதவும் தேவாரத் திருத்தலப் பாடல்களைக் போல, குகனடியார்களுக்காக, 217 முருகாலயங்களுக்குச் சென்று 108 தாளங்களிலே 16 ஆயிரம் பாடல்களைப் பாடினார். அருணகிரிநாதர். காலத்தாலும், நமது முன்னோர்களின் கவனக்

குறைவாலும் அழிந்தவைபோக இன்று 1361-திருப்புகழ் பாடல்கள் மட்டுமே எஞ்சி யுள்ளன.


திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி, வேல்விருத்தம், மயில்வருத்தம், சேவல்விருத்தம், திருஏழுகூற்றிருக்கை, திருவகுப்பு பதினெட்டு. முதலானபற்பலவாம் அருணகிரிப்பாடல்கள்.

பழனியிலே ஜபமாலை, திருச்செந்தூரில் நடன கோலம், திருஏரகத்திலே (சுவாமி மலை) பிரணவ உபதேசம், திருத்திணியிலே இச்சாசக்தி, கிரியாசக்தி யருடனாய சித்தநாதனின் திவ்ய தரிசனம், விராலி மலையிலே அட்டமா சித்திகள்...இப்படியாகத் தனது ஒவ்வொரு திருத்தலத்திலும் பட்டுத் திருந்திய பாட்டுடைக் கவிஞனுக்குப் பலன்களைக் கொட்டிக் குவிக்கின்றான் குமரப்பெருமான்.

ஸ்ரீ சம்பந்தாண்டான் தூண்டிவிட, **பிரபுடதேவ மகாராஜன்** கேட்ட, தேவருக பாரிஜாத மலரைக் கொணர்ந்து முருகனருளை பூமியிலே மெய்ப்பிப்ப தற்காக... அருணகிரிநாதர் முருகன் அருளிய அட்டமா சித்திகளிலே ஒன்றான "பிரகாமிய" த்தால் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, கிளியின் உடலோடு போய் வெற்றியோடு திரும்பியபோது, தனது உடற்கூடு...துன்மதியாளர்களால் அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டும், அவர்கள் மேல் ஆவேசம் கொள்ளாமல், கிளி **வடிவிலேயே கந்தரனுபூதி, திருவகுப்பு**களைப் பாடிமுடித்த அருணகிரிநாதக்கிளி, பரவசமடைந்து வாழ்ந்திருந்த கோபுரம்தான் இன்றைய திருவண்ணாமலை ஆலயத்திலே உள்ள **கிளி கோபுரம்.**

பிற மதங்கள் பல. போட்டியிட்டு விளம்பரத்தால் புகழ்பெற்று நம்மவரை, மதம் மாற்றிப் பெருகி வந்த வேளையிலே... தமிழகத்து வைணவமும் சைவமும் பொறாமையுற்று தன்னைத் தானே சிதைத்துக் கொண்டபொல்லாத கால கட்டத்திலே (15-ம் நூற்றாண்டு) இணையற்ற நமது ஆதிப் பெரும்புகழை எடுத்துக் காட்டி, ஜாதிச் சமய, சனாதன வெறிகளைத் தணித்து, வெற்றிக் கொடி நாட்டிய வித்தகச் சித்தராக விளங்குகிறார் ஸ்ரீ அருணகிரிநாதர்.

பக்தர்களுக்கெல்லாம் தனது பாடலால் ஓர் கவசத்தையே வழங்கியுள்ளார் குருநாதர் - படியுங்கள்.. கந்தரலங்காரக் காவியப் பாடலை...



'நாளென் செயும் வினைதானென் செயும்
எனை நாடி வந்த
கோள் என் செயும் கொடுங் கூற்று என் செயும்
குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து
தோன்றிடினே.

'முத்தைத்தரு பத்தித்திருநகை...அத்திக்கிறை சத்திச் சரவண முத்திக்கொரு வித்துக் குருபர என ஓதும்...'

எனத் தொடங்கும் திருப்புகழ் பாடலை தினம் ஒரு முறை பாடி முடியுங்கள்...எண்ணமெல்லாம் செயலாகும், இதயநோய் என்பதே இல்லாமல் போகும்.

அடுத்து நாம், அண்ணா மலையார், குழந்தையான திருவிளையாடலின் அற்புதத்தைக் காண்போமா.

வேம்பத்தூர் கிருஷ்ணன்

அண்ணாமலைக் குழந்தை



ஒரு மானுடனுக்கு மகனாக, சிவபெருமான் உருமாறியதோடு, சிரார்த்தமும் செய்த - செய்யும்- மகத்தான திருத்தலமும் திருவண்ணா மலையே! அந்தத் திரு விளையாடலின் சுருக்கமாவது...

திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அப்பகுதியை (14-ம் நூற்றாண்டு என்பர்) **வல்லாள மகாராஜா** ஆண்டுவந்தார். அவருக்கு இரு மனைவியர் இருந்தும் நெடுங்காலமாகப் பிள்ளைச் செல்வம் இல்லாமலிருந்தது.

வளையாத செங்கோலுடன், நீதி தவறாமல் சகலவித தர்மங்களையும் குறைவின்றிச் செய்தபடி... ''எல்லாம் சிவனருள்'' என இருந்த வல்லாளனைச் சோதித்து, நல்லருள் தரத் தீர்மானித்தார் ஞானத்திரளாகிய சோணாசலர்!

''யார் எதைக் கேட்டாலும் இல்லையெனாது வழங்குவேன்'' என்று சற்று ஆணவத்துடன் அறிவித்திருந்த வல்லாள மகாராஜாவின் முன்னால், சங்கமர் (சிவனடியார்) வேடத்திலே வந்த ஈஸ்வரன், ''பன்னிரு ஆண்டு காலமாகப் பனிமலை இமயத்திலே ஞானத்தீயால் புடம் போட்டு எடுத்த எமதுள்ளம், காமத்தீயால் இன்று கனலாகிவிட்டது. .. **உணர்வுக்கு ''உணவு** தரும் தாசி ஒருவளின் துணையைத் தானமாக

உன்னால் எனக்குத் தர முடியுமா'' என்றார். (அந்நாளிலே கணிகையர் (தாசியர்) குலத்தொழில் அங்கீகரிக்கப் பெற்றிருந்தது. ''மகாபாக்கியம்'' என்ற மன்னன், அமைச்சர் மூலமாக...க் கட்டளை பிறப்பித்தான்!

பெரும் பொருளோடு அரண்மனைச் சேவகர், கணிகையர் தெருவுக்குச் சென்று, மன்னரின் கட்டளையைக் கூற, ''இன்று நாங்கள் யாருமே... அடியவரோடு உறவாட முடியாதபடி, ஏற்கனவே ஒவ்வொருவருக்கு அடிமையாகி விட்டோம்'' என்று அனைவருமே உண்மை நிலையைக் கூறிவிடுகின்றனர். பாலியல் வியாபாரத்திற்கும் நித்ய பதிதர்மம் அந்த நாளிலே உண்டு போலும்!

விபரம் அறிந்த வல்லாள மகாராஜா துடிக்கிறார்! வேடமிட்டு வந்த சங்கரரோ, காமாக்கினியால் தான் கருகிவிடப் போவதாக நடிக்கிறார்! கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலையிலே... இனியும் உயிரோடு இருப்பதா... என மன்னாதிமன்னன் தவிக்கும் போது... அவரது இரண்டாவது மனைவியான **சல்லமாதேவி,** கணவரின் துயரைத் தீர்க்க ஓர் மாபெரும் தியாக முடிவுக்கு வருகிறாள்! அதன்படி; ''உத்யானவன'' உல்லாச மாளிகையிலே ஏகாந்தமாகத் தங்கியிருந்த... சிவனடி யாரிடம் சந்ரோதயமானதுமே, பன்னீர் சந்தனம், பால் பழத் தட்டுடன், சர்வாலங்காரத்திருக் கோலமுடன் இளையராணி வந்து தயாராக நிற்கிறாள்!

ஆழ்ந்த ''தூக்கம்'' போலக்கிடந்த அடியார், விழிப்பதற்காக ஏதேதோ ஒலி கொடுத்தும் பயனில்லாத

நிலைகண்டு பதறினாள்! நள்ளிரவும் கடந்தது! கணவரின் வாக்குப் பொய்த்துவிடுமே என நடுங்கிய படியே ''தூங்கி''க் கிடந்த அடியாரைத் தூக்கித்தன் மடியிலே தாங்கிக் கொள்கிறாள் ராணி சல்லமாதேவி. **மறுகணமே சிவனடியார்வடிவம், ஐந்துமாதச் சிறுகுழந்தையாகி, ராணியின் மடியிலே தவழுகிறது**. அதிர்ச்சியால் அலறினாள்! ஓடிவந்த வல்லாள மகாராஜா, மனைவியின் கரங்களில் சிரிக்கும் குழந்தையைக் கண்டு திகைத்தார்! நடந்ததைக் கூறினாள் சல்லமாதேவி. ''ஈஸ்வரா! இது என்ன சோதனை?'' எனத்துடித்த மன்னனின் முன்னால், குழந்தையானது கோடிப் பிரகாசப் பேரொளிப் பின்னணியிலே ஈஸ்வரனாக மாறியது.

''**தரக் கூடாததைத் தரத் துணிந்த தருமராஜனே**! நீயும் உன் துணைவியரும் நெடுங்காலம் வாழ்வீர்களாக. உன் மனைவி சல்லமாதேவி எனக்குத் தாயும் ஆகிவிட்டதால் பிள்ளையில்லாதார் அடையும் ''**புத்**'' எனும் நரகம் இனி உங்கட்கில்லை! உனது அந்திமக் காலத்தே வந்து இருந்து, நாமே மகனாகி உனக்கான ஈமக்கடன்களை முடிப்போம்! நீயும் உன் சுற்றமும் நீடுழி வாழ்வீர்களாக...'' என அருள் பாலித்து மறைகிறார் ஸ்ரீ அண்ணாமலையார்.

(இன்றும் ஒவ்வொரு மாசியிலும் ''பள்ளி கொண்டாபட்டு'' எனும் ஊரிலே, அண்ணாமலையார் (உத்ஸவ மூர்த்தி) சென்று, வல்லாள மகாராஜனுக்குச் சிரார்த்தம் செய்யும் திருவிழா நடைபெறுகிறது).

பிள்ளைக்கறி ஏன் கேட்டார்!

"பிள்ளையின் தலைக்கறியோடு விருந்திடு, பிறந்த மேனியாய் வந்து சோறிடு" என்றனர் தேவ தேவர். எதற்காக? தங்கமான சிறுத்தொண்டரைத் தணலிலே போட்டார். அவர் ஒளிபெற்றுத் தரணியெலாம் ஜொலிக்கிறார். கற்பரசியின் ஆற்றல், மும்மூர்த்தி களையுமே வாட்டிவிடும் என்பதைக் காட்டுவதே மேற்படிக்கதைகளின் தத்துவம். அடுத்தவன் மனைவியை கடவுள் கேட்கலாமா? மடத்தனமான கேள்வியிது!'' எதைக் கேட்டாலும் தருவேன்'' என்ற அரசனின் ஆணவம் அழிந்தது! சல்லமாதேவியின் கற்பு நெறி ஜொலித்தது! அன்புடன் வழிபட்டால் கடவுள் நமக்கு அடிமையாகவும் வருவான், அழியாத பெருவாழ்வையும் தருவான் எனும் சத்தியத்தின் தத்துவ விளக்கங்களே நமது புராணங் களாகும்.

பார்வதி மலைச்சித்தர்கள்

தீயில் வெந்துதான் தங்கம் நகையாகிறது, சாணையில் தேய்ந்து தான் வைரம் ஒளிபெறுகிறது. அதுபோல நமது தகுதிகளை அறிவதற்கே துயர்களைத் தருகிறான் இறைவன். அதனை உணர்ந்து -

ஆனந்தமாகச் சோதனைகளை ஏற்று மன உறுதியோடு எதிர் கொள்பவர்கள்தான் சாதனைச் சித்தர்களாகிறார்கள், சரித்திர பக்தர்களாகிறார்கள்.

அந்தச் சத்தியச் சித்தர் தொகை, நமது பாரதத்திலே இமயமுதல் குமரிவரையிலே ஏராளமாகும்!

திருவண்ணாமலைக்கருகிலே உள்ள **தென்பாதி மங்கலம்** எனும் கிராமத்திலிருந்து பத்து கி.மீ தொலை விலே ''**பார்வதிமலை**'' உள்ளது. மலை முழுதும் அபூர்வ அற்புத சித்த மருத்துவ மூலிகைகளைக் கொண்டது.

அட்டமா சித்திபெற்ற பல ஞானியர் இம்மலையிலே அரு உருவநிலையிலே இன்றும் உலவுகிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட பிலத்துவாரத்துடன் கூடிய குகைகளாம்! சாதாரணமாநுடர் யாரும் எளிதிலே காண முடியாதபடி இயற்கையின் விசித்திரமான தடுப்புகளாம்.

அமாவாசை நாட்களிலே சித்தர்கள் புரிகின்ற சத்திய வழிபாட்டிலே... **கற்பக விருக்ஷத்தின் மகாஜோதி** மலைமேல் ஒளி வீசக் கண்ட முதியோர் பலர், இன்றும் அப்பகுதியிலே வாழ்கிறார்கள்.

அடிவாரத்திலே உள்ள புராதனப் பேராலய **மல்லிகார்ஜனசுவாமி, பிரம்ம ராம்பிகை** சன்னதியிலே...ஏற்றாத தீபங்கள் எரிவதும், எங்குமே காண முடியாத (இப்போது) **குங்கிலியம்**மணப்பதும்... இறைவனைப் போற்றிப் பணியும் சித்தர்களின் புறவெளிப்பாடாம்.

சித்த சுத்தியோடு அந்தச் சன்னிதியிலே நின்று... எத்தனை பெரிய வரம் கேட்டாலும் அத்தனையும் கைகூடும் அற்புதம் நிகழ்கிறதாம்!

''அற்புதங்கள் செய்வது முத்திக்கு ஆபத்து'' என்று வாழ்ந்த சண்முக கவசச்சித்தரை அடுத்துக் காண்போமா!



சண்முக கவச
பாம்பன் சுவாமிகள்

''சுவாமி குங்குமம் கொடுங்க" எனக்கை நீட்டிய சுமங்கலியிடம்...", ஓடு ஊருக்கு! யாரங்கே... மடத்துக் கார்லேயே... இவளை அவா ஊர்லே உட்டுடு'' என்றும்

''உன்னை பாக்கணுமே சாமி'' என்ற தொண்ணூறு வயது முழு அந்தக மூதாட்டிக்கு, ஒளியாய்ப் புலர்ந்து தெளிவாகத் தனது திருவருவைக் காட்டியும்...

''பொணணுக்கு கல்யாணம்; தோடு மூக்குத்தி தாலிக்குத் தங்கம்... பெரியவா அனுக்கிரகிச்சா...'' என்ற ஏழையிடம் ''11- மணிக்கு வா'' என்றார். 10.50க்கு வெள்ளித்தட்டிலே பழம்பூவுடன் ஆறு சவரன்களோடு வந்த ஒரு பிரமுகர், அதை பெரிவாளுக்கு காணிக்கை தந்தார். அடுத்திருந்த ஏழையிடம் ''எடுத்துப் போ'' என்றார் மஹா பெரியவர்.

இப்படி எத்தனை எத்தனையோ சித்தாடல்! அத்தனையும் சத்தியம்! எல்லாம் அறிந்த ''**அவர்**'', ''பூரணமாகும்'' வரை ஒன்றுமே தெரியாத பாமரனைப் போலவே காட்சிதந்தார் காமாட்சியின் பட்டினத்திலே!

அந்தப் பூரணச் சித்தரைப் போலவே ''**புத்திக்கு விக்னம் சித்துகள் புரிவது**'' எனக்கூறி வாழ்ந்தவர் **ஸ்ரீ பாம்பன் சுவாமிகள்.**

''அகத்தியர் நக்கீரர் ஔவையார் அருணகிரி
ஆதிமூலர், வள்ளலார், தாயுமான சாமிபோல்
இகபரத்து நலமனைத்தும் சொன்ன ஞான
ஈடில்லாச் சித்தர் ஸ்ரீ பாம்பன் சுவாமி''

''**குமரகுருதாசர்**'' எனும் பாம்பன் சுவாமிகளின் ஆதிப் பெயர் **அப்பாவு**. 1852 - கால கட்டத்திலே, ஸ்ரீ ராம சிவக்ஷேத்திரமாகிய இராமேஸ்வரத்திலே... **சாத்தப்ப பிள்ளை - செங்கமலத்தம்மாள்** திருமகனாகப் பிறந்தவர். கணக்கெழுதும் குலத்தொழிலை நாடாமல், கந்தனருட் புலமை பெறச் சிந்தித்தார்!

அருணகிரி நாதரை மானஸீக குருவாக ஏற்று, கந்தர் சஷ்டி கவசத்தைப் போற்றி... குருநாதரைப் போலவே முருகனை மட்டுமே பாடும் நியமம் பூண்டார்.

1878-ல் கட்டாயக் கல்யாணம்! இருகுழந்தைக்குத் தந்தையானதும், குடும்பத்திலே ஒட்டாமல்... துறவற தாகம் கொண்டார்! காவி உடையைத் தேடிய போதே கந்தனருள், குமரகுருதாசருக்குக் கூடிவந்தது. க்ஷேத்திரம் தோறும் ஓடிக்கொண்டே சிவசுப்ரமண்யனின் திருப்புகழைப் பாடத் தொடங்கினார்.

பாம்பன் சுவாமிகளின் 6666 பாடல்களைக் கொண்ட நூல்கள் அனைத்துமே... தனித்தனியாக ஒவ்வொரு காரண காரியஜெயத்திற்காகப் பாடப் பெற்றவை. சிரத்தா பக்தியோடு அந்தந்த நூல்களை அந்தந்தத் தேவைகளுக்குப் பாடிப் பலன் பெறவேண்டும்.

மரணபயம், பகை பாவம் பிணி நீக்கத்திற்கு ''**சண்முக கவசம்**'' நினைத்தது முடிய ''**பஞ்சாமிர்த வண்ணம்**'', மந்திர நூலாக மா-தவத்தின் பலனைத் தர வல்லது... ''**குமாரஸ்தவம்**''... இப்படித் தொடரும்.

குமரகுருதாச பாம்பன் சுவாமிகளின் நூல்கள் சிலவற்றின் பெயர்களை மட்டும் அறிவோமா.

அட்டாங்கலீலை, ஆறெழுத்து உண்மை, பொன் மயில் கண்ணி, போற்றிவிண்ணப்பம், அசோகசால வாசம், அமரர்கோ, அடைக்கலம், குந்துகால், கலிவிருத்தம், கதிர்காம வேலர் வண்ணம், சடாட்சர உபதேசம், சுப்ரமண்ய ரகஸ்யம், திருவுருமலை, பெருவேண்டுகோள், பெரியசாமி, **பரி பூரணானந்த போதம்** எனப் பலப் பலவாம்.

1894-பிரப்பன் வலசை சுடுகாட்டிலே... 35 நாட்கள் ஆழ்நிலை தியானத்திலே மூழ்கியிருக்கும் போது, அகத்தியர், அருணகிரியோடு ஆறுமுகப் பெருமான் நேரிலே வந்து, பாம்பன் சுவாமிக்கு உபதேசித்தார். உடனே புறப்பட்ட பாம்பன் சுவாமிகள், திருத் தலயாத்திரை புரிந்து காஞ்சியிலே குமரகோட்ட வளாகத்திலே ஸ்ரீமுருகதரிசனம் பெற்றார்.

1895-லே முற்றும் துறந்த முனிவராய், கற்றுத் தெளிந்த யோகியாய், காவி உடுத்திய சித்தராய் மீண்டும் ஒரு திருத்தல யாத்திரையை மேற்கொண்டார்.

1902-லே காவிரிக் கரையோர சிதம்பர, ஆரூர் தரிசனம் முடித்து, கங்கைக் கரை, வாரணாஅசி (காசி)

சென்று வந்ததும் சித்தர்களின் நாதனாகிய ஸ்ரீ முருகனின் பேரருளை முற்றுமாகப் பெற்று, பூர்ணானந்தச் சித்ராகிச் சென்னை நகரச்சாமியானார்.

1923-டிசம்பர் 27, குதிரை வண்டியால் ஏற்பட்ட ஓர் விபத்திலே, முழங்கால் எலும்பு இரண்டாக முறிந்தது! ''ஒடிந்த எலும்பு சேராது! உங்கள் கால் இனித்தேறாது'' என்றனர் மருத்துவர் பலர்.

''சண்முக கவசம் பாடுங்கள், அந்தச் சரவண பவனைக் கேளுங்கள்'' என்றார் தனது சீடரிடம் ஸ்ரீபாம்பன் சுவாமிகள்.

''அண்டமாய் அவனியாகி அறியொணா பொருளதாகி
தொண்டர்கள் குருவுமாகி துகளறு தெய்வமாகி
எண்டிசை போற்றநின்ற என்னருள் ஈசனான
திண்டிரள் சரவணத்தான் தினமுமென் சிரசைக்காக்க...''

எனச் சண்முகக் கவசத்தின் முதல்பாட்டில் தொடங்கி...

''இருமெனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டிகாக்க
தனிமையில் கூட்டந்தன்னில் சரவண பவனார் காக்க
நனிஅனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க இஃதைக்
கனிவோடு சொன்னதாசன், கடவுள்தான் காக்க வந்தே.''

எனும் சண்முக கவச முப்பதாவது பூர்த்திப் பாடல் வரை அனைவரும் பாடினர்... முருகனின் திருவருளால் அற்புதம் தேடினர்!

பொழுது விடிந்தது, மருத்துவ மனையுள் மயில் ஒன்று வந்தது! பூமணம் கமழ வேல் தோன்றி நின்றது! முறிந்த கால் மீண்டும் ஒன்றானது! மூவுலக அதிசயம் என்றானது.

(''சூமந்ரக்காளி! ஜீபூம்பா'' ரீல்'' விடுவதல்ல இது. சுத்தமான அரசுத் தரப்பு டாகுமெண்டுகளை இன்றும் ஜெனரல் ஆஸ்பட்டலில் காணலாம்.)

பரவசம் கொண்ட ஸ்ரீ பாம்பன் சுவாமிக்கு, பால முருகனின் ''**மயூர சேவா**'' தரிசனம் கிடைத்தது.

''முருகா! நீ இந்தக் கலியுகத்துக் கண்கண்ட தெய்வம் என்பதை உணர்த்தவே ஆறு மண்டல 6666 பாடல்களை உன்னருளால் பாடிச் சாசனமாக்கினேன்! கந்தப் பெருமானே! அழிவில்லா ஆனந்த சாயுஜ்ய வாழ்வைத் தந்தருள வேண்டும்'' என்ற அவரது போற்றி விண்ணப்பம் ஏற்கப்பட்டது.

மண்ணுலகிலே குமரகுருதாசனுக்கு ஓய்வு தந்து, தன்னுலகிலே சேர்த்துக் கொண்டார் ஸ்ரீ சிவ சுப்ரமண்யர். அந்தநாள் 30-5-1929.

ஏற்கனவே பாம்பன் சுவாமிகள் திருவான்மியூரிலே நிலம் வாங்கி, ஏற்படுத்தி இருந்த... மஹாதேஜோ மண்டலத்துப் புனித பூமியிலே, சாமியைச் சமாதி வைத்துக் கோயிலாக்கிய நாள் 31-5-1929.

மாதவம்செய்து ஸ்ரீ பாம்பன் சுவாமிகள், முருகனைக் கண்ட பிரப்பன் வலசை யிலும், மூவிரு முகத்தானின் முதற்படை வீடாகிய திருப்பரங் குன்றத்திலும், (பாம்பன் சுவாமிநகர்) திருவான்மியூரிலும் பாம்பன் சுவாமிகளின் தேஜோ மயானந்தத் திருவருள் **பூர்ணத்வம்** பெற்று விளங்குகிறது! அதற்குச் சான்றாக, மூன்று திருத்தலத் தீர்த்தங்களுமே ஒரே எடை ஒரே சுவை ஒரே தரம்!!!

பாடும்புலவனும், படம்போடும் கலைஞனும் தனைமறந்த நிலையிலே செயல்பட்டால்தான் படைப்புகள் சிரஞ்சீவித்வம் பெறும். ''புத்திக்கு விக்னம் சித்துக்கள்'' என்ற கொள்கையுடைய பாம்பன் சுவாமிகள்... தனை மறந்த நிலையிலே புரிந்த சித்தாடல் பலப்பலவாகும்.

அவரது பிரதான இன்றய சீடர்களும் அதை வெளிப்படுத்துவதில்லை! மன்றாடிக் கேட்டுப் பெற்ற ஒன்றிரண்டை இங்கே ''சாம்பிள்'' காட்டுகிறேன்.

1984-வரை திருவான்மியூர் மஹாதேஜோ மண்டலத்து செயலாளராக இருந்த குப்புசாமிச் செட்டியாருக்குப் பிள்ளையே இல்லை. சுவாமிகளோடு நெருங்கிப் பழகுவதால் அந்த உரிமையுடன் ''எனக்கொருமகன் அவசியம் சாமி, நீங்க அருள் செய்தே தீர வேண்டும்'' என அந்தநாளிலே மன்றாடினார்.

''**விதியை மீறும் விளையாட்டு இது!**'' எனப் பெரு மூச்சு விட்டபடி ''உனக்கொரு மகன் பிறப்பான், அவன் உலகிலும் நெடுநாள் இருப்பான்... ஆனால்... உனக்குப் பயன்படமாட்டான் என்றார் சுவாமிகள், 1930-ம் ஆண்டிலே குப்புசாமி தந்தையானார்... ஆனால் அவர் மைந்தன... அறுபது வயதைக் கடந்து விட்ட இந்த நாளிலும் செயல்களிலே தக்க முதிர்ச்சி இல்லாதவராக ஆலயத்தின் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

1929-ம் ஆண்டு பாம்பன் சுவாமிகள் சமாதியாகும் தருணத்திலே... அருகிலிருந்த ஜோதிட சிகாமணி

சுப்ரமண்யத்திடம், ''**வழக்கப்படி எனது உடலை மேற்கு முகமாக வைக்க வேண்டாம்; கிழக்கே பார்த்தபடி நான் - என் உடல்- இருக்க வேண்டும்** என்றுகூறி "இயற்கை" யானார்.

''திருமேனி'' ஆன சுவாமிகளைச் சமாதியுள் வைக்கும் போது... சுவாமி சொல்லுக்கு மாறாகவே மேற்கில் முகம் வைத்து... மூடிவிட்டனர். ''**செத்தும் சாமிக்குச் சக்தி உண்டா?**'' என அறியத் துடித்தது ஜோதிடரின் சலனபுத்தி! சமாதியைத் திறந்தார் பார்த்தார்! கொட்டிய உப்பு, விபூதி, கற்பூரம், மலர்கள் எல்லாம் அப்படியே குவிந்திருக்க; சாமியின் திரு மேனிமட்டும், கிழக்கு நோக்கித்-திரும்பி இருந்தது! அதிர்ந்தார் ஜோதிடர்! இடி இடித்தது! ''பளீர்'' என மின்னல் வெட்டியது! ஜோதிடரின் கண் பார்வை பறிபோனது!

குருமொழியை நம்பாதவர்க்கு ஏற்படும் விளைவை பாம்பன் சுவாமிகளின் 21-சீடர்களிலே பிரதான சீடரான ஸ்ரீ சுப்ரமண்யத்தால் ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் உணர்த்தியிருக்கிறாரோ! . இதுபோல் பாம்பன் சுவாமிகளின் சுமுதாய நன்மைக்கான சித்தாடல் எத்தனை யெத்தனையோ. மூலவராக அவர் வீற்றிருக்கும் திருவான்மியூர், பிரப்பன் வலசை, பாம்பன் சுவாமி நகர் (திருப்பரங்குன்றம்) சென்று, மூலவரின் திருமுன் நின்று... தூய பக்தியோடு வழிபட்டால் கேட்டது கிடைக்கிறது; நினைத்தது நடக்கிறது.

(பாம்பன் சுவாமி நகரிலே, ஆலயஸ்தாபகர், ஸ்ரீலஸ்ரீ இராமச் சந்திர சுவாமிகளால் பள்ளியும், மருத்துவமனையும் எல்லோர்க்கும் பொதுவாக இயங்குகின்றது.)

"ஐயனே அரசே போற்றி! அருமறைப் பொருளே போற்றி
துய்யனே துணையே போற்றி தூமணித் திரளே போற்றி
மெய்அருள் விளைவேபோற்றி வெற்றிவேல் ஏந்து பூவல்
கையனே போற்றி எங்கள் கடவுளே! போற்றி போற்றி

- பாம்பன் சுவாமிகள் போற்றிவிண்ணப்பம்.

அடுத்து, போற்றுதற்கு உரிய கருணையின் ஊற்றாகிய, சர்வசமய சமரசசன்மார்க்க ஏகதெய்வ ஸ்ரீ ஷீரடிசாயி பாபாவின் புனித வரலாற்றினையும் சற்று விரிவாகவே காண்போம்.

கீதாமிர்தம்

'எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கின்றதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அதை நீ வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது!
எதைக் கொடுத்தாயோ,
அதுவும் இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருக்
குடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறு
ஒருவருடையதாகிறது.
இந்த மாற்றம் உலகச் சுழலின் நியதி!'





ஷீரடி ஸ்ரீ சாயிபாபா

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஆதிச் சித்தரின் அருள் வாக்குப்படி வாழ்ந்து காட்டிய சத்தியச் சித்தர் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா.

குருமஹான்களிலேயே,-ஷீரடி பாபா பூர்ணத்வம் பெற்று விளங்கியவர். வெறும் உபதேசச் சன்யாசியாக இல்லாமல், வாழ்ந்து காட்டிய ஞானமூர்த்தி ஸ்ரீ சாய்பாபா.

அக்கினிவழிபாடு புரிந்ததால் அவர் ஓர் **பார்ஸி**; புத்தரின் சரணாகதித் தத்துவ் போதனையால் அவர் ஒரு **பௌத்தர்**; அனைத்துயிர்களையும் தனதாகக் கருதியதால் அவர் முழு **கிறிஸ்தவர்**; மகம்மது நபிகளின் திருக்குரான் நெறிப்படி நடந்ததால், அவர் ஒரு நல்லா **இஸ்லாமியர்**; கீதா சாரத்தையே வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு "அன்பே சிவ" மாக வாழ்ந்ததால் அவர் ஒரு **பூரண ஹிந்து**.

சர்வ சமய, ஏக உலக, ஒருமைப்பாட்டின் இணையிலாப் பிரதிநிதியாக விளங்கியவர் ஸ்ரீ சாயிபாபா. நதிமூலத்தையும், ரிஷிமூலத்தையும் மிகத் தெளிவாக அறிவதென்பது, நம் போன்ற சாதாரண மனிதர்களால் ஆகாதவிஷயம். சமீப காலத்திலே, நமது தாத்தாபாட்டிகள் எல்லோரும் பார்த்திருக்கக் கூடிய கால கட்டத்திலே,

''சித்தர்'' என்பதின் முழு இலக்கணமாகவாழ்ந்த ஷீரடி பாபாபோல் வேறுயாருமே இல்லையாதலால், சற்று விரிவாகவே அவரது புனித வரலாறு தரப்படுகிறது.

நிஜாம் ராஜ்யத்திலே உள்ள ''**பாத்ரீ**'' நகரிலே வேத நெறிதவறாத ஓர் அந்தணர் குடும்பம், பரமஏழ்மை. ஒரே மகன், கொடிய வறுமை! மனைவியும், சுற்றமும் குடும்பத்தலைவனை ஏசுதல்! ''**தரித்திரனுக்கு வாரிசு ஒரு கேடா!**'' அவச் சொல் தாங்காத அந்த வேதியர், ஐந்து வயதான தனது ஒரே மகனை தானம் தர முன்வந்தார். ஏற்போர் இல்லாமல் தவித்த போது, இஸ்லாமிய பக்கிரி தம்பதியர் எதிர்ப்பட்டனர். குழந்தையை ஏற்றனர்.

''**ரோஷன்ஷாமியா**'' எனும் இஸ்லாமியரிடம் சிறுவன் சாயி வளர்வது; நாலு வருடம் போனதும், பக்கீர் மரணம், அவர் மனைவி, சாயியை ''**சேலு**'' எனும் ஊரிலே, வேங்கடாசலபதியின் பரம பக்தராகவும், இல்லற ''ஞானியாகவும் விளங்கிய ''**வெங்கூஸா**'' எனும் கோபால்ராவ் தேஷ்முக்கிடம் ஒப்படைத்து விடுகிறாள்.

அட்டமா சித்திக்ளும் கைவரப் பெற்ற அந்த குருவிடம் துக்கோஜி, கஜானனன், போஸலே, மாதவராவ் எனும் நாலு சீடர்கள் இருந்தனர். புதிய சீடரான சாயியின் சிரத்தையான சேவையால், குரு வெங்கூஸாவின் பேரன்புக்கு உரியவனாகிறான், ஏனைய சீடர்கள் சாயிமேல் பொறாமை கொள்வது நால்வருள் முரடனான துக்கோஜி, குருவும், சாயியும் இருக்கும்போது சாயியை நோக்கி ஓர் முழுச் செங்கல்லை வீசி எறிகிறான்...

மலட்டுப்பசும்பால்!

பறந்துவந்த கல்லை, குருநாதர், உற்றுப் பார்க்க அது அப்படியே அந்தரத்தில் நின்றுவிடுகிறது. மூடன் துக்கோஜி மேலும் ஒரு கல்லை வீச, அதைகுரு, தனது தலையில் ஏற்பது; ரத்தக் காயம்! குருவின் தீப்பொறிப் பார்வை! துக்கோஜி, மாண்டு விழுவது, சீடரும் சாயியும் பதறிக்கதறி குருவிடம் வேண்டுதல்.

சாயிக்கு ஸ்பரிச தீட்சை தந்த குரு, ''என் சக்தி அனைத்தும் இனி இவனிடம், இவன் மன்னித்தால் - தொட்டால் - அவன் எழுவான்'' என்பது. சாயி, துக்கோஜியை எழுப்புதல்... ''சாயி! நான் நாளைக்கு காலம் ஆகிவிடுவேன், நீ அந்தரத்தில் நிற்கும் செங்கலை வைத்துப் பாதுகாத்துவா! எனது பூரண ஞானம் அனைத்தையும் உனக்கு தானம் தருகிறேன், வெளியிலே போய் அங்கு நிற்கும் பசுவின் பாலைக் கொண்டுவா'' என்கிறார் குருமகராஜ் வெங்கூசா.

வெளியே மலட்டுப் பசு. ''நீ அதன் மடியைத் தொடு'' எனகுரு கூறியதும் சாயி தொட்டதுமே, பால் பொழிந்தது. அதைப் பிடித்து தானம் தந்த குரு, ''மேற்கு திசையில் உள்ள பம்பாய் ராஜ்ய, அகமத்ஜில்லா... புனிதக்ஷேத்ரமாகிய **சீரடி (ஷிர்டி)** க்கு நீ போ, யாவர்க்கும் நன்மை விளையும் புறப்படு'' என்றதுமே 16-வயது சாயிபாபா 1854-காலகட்டத்திலே, கால்நடையாகவே புறப்பட்டார். கால்வலிக்கும்போது அமர்ந்து தவம் செய்தும், கண்வலிக்கும் போது தரையில் படுத்துத் தூங்கியும்... வயிர் பசித்தபோது??... பிராணன் போகும்

பசிநோயால் வனப்பகுதியிலே சாயி துடித்த போது... வனதேவதை போலவே வந்தாள் ''**பயாஜிபாய்**'' எனும் பெண்மணி. உணவும், மாற்று உடையும் தந்து, எதிர்காலச் சித்தனை இதய பூர்வமாக வாழ்த்தி வழி அனுப்பினாள்.

குருவின் கட்டளைப்படி புண்ணிய பூமியான ஷிர்டியில் சோலை நடுவே அமைந்திருந்த ''கண்டோபா'' கோயில் எனும் சிவாலயத்திலே சாயி தங்குதல். இந்த முஸ்லிம்பக்கிரி, சிவன் கோயிலை சேதப்படுத்தி விடுவானோ என பயந்த, அந்த ஆலயகுருக்கள் ''**மகல்ஸபதி**'' என்பவர், விரட்டி விடுகிறார் சாயியை.

வேம்படியில் கேனப்பக்கிரி!

பயில்வான் உடை, பக்கீர் நடையுடன் ஆடிப்பாடியபடி திரிந்த அவரை ''**கேனப்பக்கிரி**'' என அழைத்தனர். ஒரு வேப்பமரத்தடியைத் தனது நிரந்தர இருப்பிடமாக கொண்டார் சாயி. சிறியதோர் கனல் சட்டி, வேப்பிலைப்படுக்கை, நம்பிவந்த பலர் விரும்பியபடி சட்டியிலிருந்த சாம்பலை, வேம்பிலிருந்த இலைகளை வீசினார், அவர்கள் துயர் தீர்ந்தது... புகழ்... பரவியது... ஊர்கூடி அதிக உபத்திரவம் கொடுக்குமுன் திடீரென சாயி காணாமல் போனார். மூன்று ஆண்டுக்கு பிறகு ஷிர்டி குளக்கரையிலே மறுபடியும் தோன்றினார். ''**சாந்த்பட்டேல்**'' எனும் பெரிய தனவந்தரின் உயிரான குதிரை காணாமல் போய்... பலமாதம் ஆகியிருந்தது. அது இருக்குமிடத்தைக் கூறினார் சாயிபாபா. சாயியை மீண்டும் ஷிர்டி வேம்படியில் தக்க துணையோடு இருக்க வைத்தார் சாந்த் பட்டேல்.

சாயிவருவதற்கு முன்பே, ஷிர்டியில் உள்ள மாருதி கோயிலில் இருந்தபடி பல சில்லரைச் சித்து வேலை காட்டி, ஊராரை ''பேய், பிசாசு'' என மிரட்டி காசுகளைத் திரட்டி, படாடோபமாக வாழ்ந்து கொண்டிருந்தார் ''**தேவிதாஸ்**'' எனும் டாம்பிகச் சாமியார்.

வேம்படி பக்கிரியின் புகழ், தனது வருவாயை பாதிக்கும் என்று, வலியச் சென்று சாயியை ''**சித்துபெரிதா, பக்தி பெரிதா?**'' எனும் விவாதத்தைத் தொடங்கி... வேண்டுமென்றே பாபாவை வம்புக்கிழுத்து, முடிவிலே படு தோல்விகண்டு ஓடிவிடுகிறார் தேவிதாசன்!

அக்னி குண்டத்து ''தூனி''(சாம்பல்) கொடுத்து பலரது கொடிய நோய்களையும், குறைகளையும் சாயி தீர்ப்பது. தோல்விகண்ட தேவிதாஸின் கையாட்கள், ''இவர் சைவரா, வைணவரா, முஸ்லிமா, கிறிஸ்தவரா எனும் சர்ச்சையைப் புகையவிட்டு ''ஏமாற்றுச்சாமி'' எனத் தீர்மானம் போடுவது... அப்போது சாயிபாபாவால் நலம் பெற்ற ஒரு சைவர், ஒரு வைணவர், ஒரு முஸ்லிம், ஒரு கிறிஸ்தவர் ஆகிய நால்வரும் முன்வந்து... தத்தம் மதங்களின் மொத்த குரு அவர் என்று ஆதாரங்களுடன் நிரூபிப்பது. தேவிதாஸ் திருந்தி பாபாவைத் தேடி ஓடி வருகிறான்.

இடிந்த மசூதியில் இருட்டிலே பாபா இருப்பது. அகல் விளக்குகளை ஏற்றியபடி உள்ளே வந்த தேவிதாஸ், மன்னிப்புக் கேட்பது. ''**மகான்களின் சித்து வேலைகள், மக்கள் நலத்துக்காக மட்டுமே இருக்க வேண்டும்; துறவிகள், வேடம் போடும் நிலை கூடாது! நமது தவம்,**

சொல், செயல் எல்லாமே சமுதாய நலனுக்கே அமையவேண்டும்! உலகமே நமக்கு வீடு, வானமே கூரை! எல்லா உயிர்களுமே... நமது உறவினர்கள்தான்! நம் போன்ற துறவிகள் உலகத்து மக்கள் அனைவருக் குமான காவல்காரர்கள்"என்று பலப்பல தர்மங்களைக் கூற; தேவிதாஸ் ஞானம் பெறுவது. மக்கள் மசூதியில் ஒளிவிளக்குகளை தவறாமல் ஏற்றி வைப்பது. பக்தர் கூட்டம் பாபாவின் மசூதியிலே அலைமோதுவது.

"காலராவுக்கு கோதுமை மா!"

எதையும், யாரிடமும் கேட்டுப் பெறாத - கேட்க விரும்பாத - பாபா... திடீரென பணக்கார பக்தர் சிலரிடம் ''கோதுமை வேண்டும்'' என்றார். பலமூட்டைகள் குவிந்தன. அவற்றை பாபா பத்திரமாக சேமித்தார்.

அகமத்நகர் தாலுகா முழுதும் பஞ்சம்! ஷிர்டியில் இருந்த பாமர, ஏழைகள் பசியால் தவிப்பு! கோதுமையை மாவாக்கி அனைவருக்கும் பாபா வினியோகம் செய்து ஏழையர் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறார்.

பஞ்சம் குறைந்ததும், ஊரெங்கும் காலரா பரவியது... நள்ளிரவிலே திருகையில் அமர்ந்த பாபா, கோதுமை மூடைகளை மாவாக்குதல். பலர் ஓடிவந்து அவருக்கு உதவுதல். மலைபோல் மாவு குவிந்தது. விடிந்ததும், வேலை செய்தவர்கள் சிறிது மாவுகளை எடுத்து போக முனைதல், சீறிய பாபா, ''அனைத்தையும் கீழே போடுங்கள்'' என கர்ஜிப்பது. முடிவில் ''எல்லா

மாவுக்களையும் அள்ளிச் சென்று ஷிர்டி நகர எல்லை முழுதும் இடைவிடாத வட்டக் கோலமாகப் போட்டுக் குவியுங்கள்'' என்கிறார். புரியாவிடினும் பாபாவின் கட்டளையை மக்கள் பயபக்தியோடு செய்து முடித்தனர்.

தீபங்களுக்கு எண்ணை இல்லாததால் பாபா இருளில் இருப்பது. அங்கே கூடிய கடைக்காரர்கள், ''மக்கள் பட்டினியால் துடிக்க, மலைபோல் கோதுமை மாவை இவர் வீணாக்கியதால், இனி தீபம் ஏன் இங்கே'' எனப் போவது - ''ஹரேராம்ரஹீம்'' என்றபடி தண்ணீர் குவளையை அகல்களிலே கவிழ்த்தார் பாபா. நீரால் தீபங்கள் ஜாஜ்வல்யமாக எரியத் தொடங்கின.

அஹமத்நகர் தாலுகா ஆபீசிலே அதிகாரிகள் சர்ச்சை! ஜில்லா முழுவதும் காலரா தீவிரமாகும் போது, ஷிர்டியில் மட்டும் இல்லாமல் போனது எப்படி? என வியப்பு. சாயியின் கிறிஸ்தவ பக்தர் ஒருவர்... விளக்கம் கூறுகிறார். பாபா மந்திரித்து ஊரைச் சுற்றிப் போட்ட கோதுமை மாவுக்கோலம், காலராவை விரட்டியது இது சத்தியம் என்பது கலெக்டர் துரை வியப்பு.

மசூதியிலும், சாவடியிலும் மாறிமாறித் தங்கி பாபாவுக்கு உறுதுணையாக, சிவன் (கண்டோபா) கோயில் பூசாரி மகல்ஸபதி இருந்து பிரதான சீடர் ஆனார்.

1886-ம் ஆண்டு ''**கடவுளைக் காண நான் போகிறேன், மூன்று நாளில் மீண்டும் வருவேன்**'' என பாபா கூறி, ஆவியைவிட, ஊரார் கூடி ''சவ அடக்கம்''

என்பது. மகல்ஸபதியின் கண்டிப்பு! ஊரார் எதிர்ப்பு. சீடனின் முழு நம்பிக்கை! மூன்றாம் நாள் பாபா உயிர்த் தெழுவது. (அடுத்து 38-ஆண்டு வாழ்ந்தார்) கூடுவிட்டு கூடுபாயும் சித்தியால் வெளிநாட்டிலே, பாபா ஓர் குடும்பத்தின் இடரைத் தீர்ப்பதற்காக நடந்த சம்பவம் இது.

1910-இந்தூர் சமஸ்தான பிரமுகர் ஒருவரின் பிள்ளை ''**ரேகே**''. பிராமணர். விஞ்ஞானத்தை நம்புபவர். ''மனித வடிவில் தெய்வம் பாபா'' என்பதை நம்ப மறுத்தவர். கனவிலே துர்கை தோன்றி ''ஷிர்டி போ, மனிதக் கடவுளைக் காண்பாய்'' என்றதும் அதிர்ச்சி. ''ஷிர்டி எங்கே, யார் அந்தக் கடவுள்?'' என்று திகைக்கும் போது... அவரது ஊரின் கோயில் மண்டபத்திலே ''**தாஸ்கனு மகராஜ்**'' எனும் புராணப் பிரசங்கியால் ''பாபாவின் பெருமை'' எனும் உபன்யாசம் கேட்க நேரிட்டதும், ஷிர்டி புறப்பட்டு பாபாவின் காலில் போய் விழுந்தார். காலை உதறினார் பாபா. மண்ணில் புரண்டு கதறினார் ரேகே. அள்ளி அணைத்தார் பாபா. மின்சாரம் பாய்ந்த பரவச உணர்வினைப்பெற்றார். யுனிவர்ஸிட்டி கல்வியை முடித்த பட்டதாரியான ரேகே.

1914 - திருமணமான ரேகே, முதல் ஆண் குழந்தையை பாபாவிடம் சமர்ப்பித்தார். சிலநாளில் குழந்தை மரணம், பெற்றோர் கதற, ''குழந்தை எனக்கு, இந்தூர் ஹைகோர்ட் ஜட்ஜ்பதவி உனக்கு'', அதோடு அடுத்து உனக்குப் பிறக்கப்போகும் பெண் குழந்தை உனது முதுமையிலும் உதவுவாள் என்றார் பாபா. (1970 - வரை ரேகேயின் மகள் சாந்தா தந்தைக்கு உதவியாக இருந்தாள்).

சாயிபாபா வரலாற்றிலே... **சுந்தரிபாய்** - எனும் ''ராதாகிருஷ்ண ஆயி''க்கு ஓர் முக்கிய இடம் உண்டு. 1907-ல் ஷிர்டிக்கு வந்தவள், இருபதில் திருமணமாகி இருபத்தி இரண்டில் விதவையாகி, சாயி பாபாவின் திருவடியைச் சரணடைந்தவள். இருவரிடையே பரமாத்ம ஜீவாத்ம பந்தம் இருந்தது. மீராபாய் போல் இனிமையான நாம சங்கீர்த்தனம் பொழிவாள், மசூதி, சாவடிகளை சுத்தம் செய்வது, பிட்சையாக பாபா கொண்டுவரும் பொருளைப் பங்கீடு செய்வது முதலான அனைத்துமே ராதாகிருஷ்ண ஆயிதான். (சாயி சமாஜ(ஆலய) அமைப்புக்கு அடித்தளத் திட்டங்களை அமைத்துக் கொடுத்ததும் இந்த மாதரசியே)

உழைத்துக் தளர்ந்த ஆயி, தனிக் குடிசையில் இருந்தாள். ரேகே வந்ததும் முதலில் பாபா அவரை ஆயியிடம் கூட்டிப்போய். ''இவள் தான் உனக்கும் எனக்கும் தாய்'' என்பது. ஒரு சமயம் ஆயிக்கு மலேரியாஜுரம்; ஏணியில் பாபா ஏறி இறங்கினார் மலேரியா ஓடிப் போனது. அந்தத்தாயின் இறுதிக்காலம் மர்மமானது! சாயிபாபாவுடன் இரண்டறக் கலந்தாள் என்றும், தற்கொலை செய்து கொண்டாள் என்றும் துஷ்பிரச்சாரம். ரேகே வந்து ஆயி விஷயம் கூறி பாபாவிடம் கதற... ''நமது தாயான அவள் என்னிடம் வந்து, கர்மாவிலிருந்து எனக்கு விடுதலை கொடு'' என்றாள். நான் கொடுத்தேன். இதோ"... என்றபடி இதயத்தைப் பிசைந்து வெறும் கையை வானவெளியிலே வீசுவது... அந்தக் காற்று ஒளியாகி ஒளி, ராதாகிருஷ்ண ஆயியின் தேஜோமய திரு உருவமாகிறது. ரேகே பாபாவை வணங்குவது?

மத இன மொழி பேதமற்று ஷிர்டி மசூதியிலே பக்தர் வெள்ளம் பெருகித் ததும்புகிறது. கிறிஸ்தவர்கள், முஸல்மான்கள், ஹிந்துக்கள், சீக்கியர்கள்... இப்படியாக அனைவரும் பாபாவை ஆராதனை புரிந்து - அபிஷேகம் செய்து - தீபம் ஏற்றி... தத்தமது இஷ்ட தெய்வங்களை பாபாவின் வடிவிலே தரிசித்துப் பரவசம் பெற்றனர். ஏசுவாக, முகம்மது நபியாக, குருநானக் ஆக ஸ்ரீ ராமச் சந்திரமூர்த்தியாக பற்பல தோற்றத்திலே சாயிபாபா உருமாறி பக்தர்களைப் பரவசப் படுத்தித் திருவிளை யாடல் புரிந்த உண்மைகள் பலப் பலவாம்!.

அடுப்புக்கரி லட்டு ஆனது!

ஒரு முஸ்லிம் தம்பதியர் பாபாவிடம் வந்து, ''தாங்கள் வழங்கிய தூனி'' விபூதியால் 20 வருடங்கட்குப் பிறகு நாங்கள் பெற்றோர், ஆனோம், இன்று மகன் பிறந்த நாள், இந்த பால் கோவாக்களை கொண்டு வந்தோம், என்று, இனிப்பு அண்டாவை பாபாமுன் இறக்குவது. ''இன்று ஸ்ரீராமநவமி, எதிரில் உள்ள வீர மாருதி ஆலயத்திலே ஏகப்பட்ட பக்தர்கள். அங்கே இதை எடுத்துச் சென்று எல்லோர்க்கும் வழங்கு'' என்று பாபா சொன்னதும், ''நான் முஸ்லிம்... அது ஹிந்துக் கோயில்...'' என்று அவர் இழுக்க... "அப்படியா எங்கே பால்கோவாவைப் பார்க்கலாம்" என்றபடி மூடியைத் திறந்து, அண்டாவின் உள்ளே இருந்ததை எ்டுக்க, அதுவெறும் அடுப்புகரித் துண்டுகளாக இருப்பது! தம்பதி அலறல்.

கல்யாண் நகரைச் சேர்ந்த தத்துவப் பேராசிரியர் ''நானாசாகிப் சந்தோட்கர்'', முஸ்லிம் பெரியவரிடம்'' ''அய்யா! குருமகான் சொன்னது போல, இந்த அண்டா,

மாருதி கோயில் வாசலுக்குப் போகட்டும் அங்கே போய்ப் பாருங்கள்'' என்கிறார்.

முஸ்லிம் ஸுபிகளிடையே, பீர்-ஓ-முர்ஷத் அல்லது குருவாகிய கடவுளைப் பணிவது... ஆத்மசுகத்துக்கு அவசியமானது. சமீபகால மகான்களான கபீர்தாஸர், நாமதேவர், குருநானக், யோகிவேமனா, பஸவேஸ்வரா ஆகியோரும், குருவே முதல் தெய்வமெனக் கூறியுள்ளனர். சர்வமதத்தவர்களுக்கும் குருவாக, சாட்சாத் கடவுளாக விளங்கியவர் சீரடி சாயிபாபா.

மாருதி கோயில் வாசலிலே அண்டாவைத் திறப்பது அண்டா முழுதும் பால்கோவாவாகவே இருப்பது. ஊரார் அனைவருக்கும் விநியோகம். பாபா வருதல் ஆனந்தக் கண்ணீருடன் முஸ்லிம் தம்பதியர் வணங்குவது. ''**ஒரே மாவிலே பணியாரம், ரொட்டி, அப்பம் என்பது போல, நாம் வசிக்கும் இடம் பொருள் ஏவலுக்கேற்ப... ஒன்றான தெய்வத்தைப் பல உருவில், ஆங்காங்கே கண்டானந்தம் கொண்டு களிப்பது நம்பண்பாடு**. என்று ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றிய பலதரப்பட்ட மேற்கோள்களை இனிமையாக எடுத்துச் சொன்னார்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருங்கே நின்று ''**ஜெய் ஷீரடிபாபா**'' என்று வணங்கியது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. சில நாள் போனதும் மீண்டும் மதப்பூசல் எழுந்தது! அதற்கு விடையாக... ''**கண் கண்ட தெய்வம்**'' என்ற சாயிபாபா வரலாற்றிலிருந்து சில வரிகளைப் பாருங்கள்.

தேவார பைபிள் திருக்குரான்பக்தர்



"பித்துக்குளிப் பக்கிரி, பூஜிக்கும் தெய்வமாக மாறிவிட்டார். சீரடி கிராமத்திலுள்ள சில இந்துக்கள் தங்கள் சம்பிதாயப்படி சந்தனம், புஷ்பம், தூபதீபாதிகள் முதலியவற்றுடனும், வாத்தியம், மணியோசை ஆகியவற்றுடனும் பாபாவை வழிபடத் தொடங்கினர். ஆரம்பத்தில் பாபா இவைகளை விரும்ப வில்லை யாயினும், பக்தர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு அவர்களுடைய வழி பாட்டை ஏற்றுக் கொள்ளலானார். ஆனால் கிராமத்திலுள்ள் முகம்மதியர்கள் இதைச் சற்றும் விரும்பவில்லை. முகம்மதியர்கள் கடவுளை, அதாவது அல்லாவை, உருவமும், குணமுமில்லா, நிர்குண், நிராகார ப்ரஹ்மமாகவன்றோ வழிபட, அவர்களது வேதமாகிய குர்ஆன் போதிக்கிறது. முகம்மதியரான பாபா, மசூதியிலிருந்து கொண்டு தம்மை இந்துக்கள் கடவுளாகக் கருதி வழிபட அனுமதிப்பது, மதத்துரோகம் செய்வதாகாதா? இதற்கு அவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். தாணாவிலிருந்து வந்த **அப்துல் ரங்காரி** என்பவர், பாபாவின் நெற்றியில் இந்துக்களால் தடவப் பட்டிருந்த சந்தனத்தைக் கண்டு திடுக்கிட்டு பாபாவை

நோக்கி ''என்ன இது? இந்துக்கள் உம்முடைய நெற்றியில் சந்தனத்தைத் தடவுகின்றனரே? இது நம்மிடையே (முஸ்லீம்களிடையே) இல்லாத வழக்கமாயிற்றே?'' என்று வினவினார். ''**ஜைஸா தேஷ், ஐஸா வேஷ்**'' அதாவது, ''ரோமில் இருக்கும்போது ரோமர்கள் செய்வதைப் போல் செய்ய வேண்டும்'' என்ற ஆங்கிலப் பழமொழிக் கொப்ப, பெரும் பான்மையேரரான இந்துக்களிடையே இருக்கும் போது அவர்கள் பழக்க வழக்கங்களை அனுசரித்து நடக்க வேண்டிய அவசியத்தைக் கூறி பாபா அவரை சமாதானப்படுத்தினார். தம்மை வழிபடுவது இந்துக்களுக்கு மகிழ்ச்சியைத் தருமேயாகில், தாம் அவர்களை அவ்வாறே வழிபட அனுமதிப்பதில் தவறு என்ன? தவிர, ஒரு மசூதியில் முகமதியனான தம்மை இந்துக்கள் வழிபடுவதால் நஷ்டம், ''இந்து மதத்துக்கேயல்லாது, இஸ்லாம் மதத்திற்கல்லவே!'' பாபாவுடைய இந்த வாதம் சில முஸ்லீம்களுக்கு நியாயமாகத் தோன்றினாலும் பலருக்கு அவரது உபதேசம் சமாதானமளிக்க வில்லை. மதத் துரோகமான இந்தப் பழக்கத்துக்கு எப்படியாகிலும் முடிவு காணத் தீர்மானித்தனர்.

(பாபாவின் இறுதிக் காலம் வரை அவர்களது தீர்மானம் செயல்வடிவம் பெறவே இல்லை!; எல்லோர்க்கும் உரியவாய், ஏகதெய்வ உபா சகராகத்தான பாபா ஜீவ சமாதியானார்.)

பாபா படித்தார் திருக்குர்ஆன்!

பாபா இந்துவா, முஸ்லீமா? அவருடைய தேகத்தின் அங்க அடையாளங்களைக் கொண்டும், நடையுடை பாவனைகளைக் கொண்டும் எது என்று ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. எதுவாக இருந்தால் என்ன? இந்து முஸ்லீம் சமுதாயங்களிடையே ஒற்றுமையையுண்டாக்கி, அடிப்படையில் எல்லா சமயங்களின் குறிக்கோளும் ஒன்றே என்ற உண்மையை விளக்கவே பாபா உலகில் தோன்றினாரன்றோ? ஏற்கனவே வெங்கூசா என்ற இந்து குருவிடம் சீடராக இருந்து சேவை செய்து, இந்துக்களுக்கும் தாம் ஒரு வழிகாட்டியாக இருக்க பாபா தயாரானார். அதைபோல் முஸ்லீம்களால் பின்பற்றப்படுவதற்கு, இஸ்லாம் மதத்தில் தேர்ச்சி பெறுவதற்கு ஒரு முஸ்லீம் குருவிடம் சிறிது காலம் இருப்பதற்கு பாபா சங்கல்பம் செய்து கொண்டார்.

சென்ற நூற்றாண்டிலே ரஹாதாவில் வசித்து வந்த மௌலான **ஜாவர் அலி** என்பவர், முஸ்லீம்களால் பெரிய குருவாக மதிக்கப்பட்டு வந்தார். அபரிமிதமான அறிவும், சக்தியும் படைத்தவர். ஆனால் ரஹாதா முஸ்லீம்களுடன் அவர் ஒத்துப் போகவில்லை. இந்த மௌலானா ஒரு சமயம் சீரடிக்கு வந்தார். மசூதியில் முஸ்லீமான பாபா, பல இந்துக்களால் பூஜிக்கப்படுவதையும், போற்றப் படுவதையும் கண்டார். பாபாவைக் கூப்பிட்டு, ''நீ குர் ஆனையும், ஷரியத்தையும் (இஸ்லாமிய வேதங்கள்)

படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். பாபா தாம் இரண்டையும் கற்றதில்லை என்று பதிலளித்தார். ஜாவர் அலி, பாபாவைத் தம்முடன் ரஹாதாவுக்கு வரும்படி உத்திரவிட்டார். பாபா அவ்வாறே ரஹாதா சென்று, ஜாவர் அலியுடன் இரண்டு மாதங்கள் தங்கினார். இஸ்லாமிய மதத்தின் தத்துவங்களையும், கொள்கைகளையும், பேருண்மைகளையும் மௌலானாவிடமிருந்து கற்றறிந்தார். இவ்விரண்டு மாதங்களும் பாபா இடையறாது குரு சேவை செய்து வந்தார். தண்ணீர் கொண்டு வருவது, விறகு வெட்டி எடுத்துக் கொண்டு வருவது இன்னும் பலவிதமான வேலைகளையும் சற்றும் மனங் கோணாமல் சீடன் என்ற முறையில் பாபா செய்து வந்தார். பாபாவைப் பூஜித்து வந்த சீரடி (இந்து) பக்தர்களுக்கு இது பொறுக்கவில்லை. கதறிப் புலம்பினர். ''**சாந்தீபினி மகரிஷியிடம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா குரு குலவாசம் செய்யவில்லையா அதுபோல் தான் இதுவும்**'' எனக் கூறிச் சிரித்தார் சாய்பாபா.

எல்லா மதங்களும் கடவுளாகிய ஒரே கடலைத் தேடித்தான் ஓடுகின்றன. கங்கையும் ஜீலமும் கடலிலே வந்தபின் வேறுவேறு தண்ணீராகி விடுமா என்ன!

சாதுக்களுக்கான தர்மத்திற்கு ஏற்ப, அன்றாடம் ஒவ்வொரு தெருவிலே ஐந்து-வீடுகளில் பாபா பிட்சை ஏற்பதும், பணம், உணவுகளைப் பலர் அவருக்குப் போட்டு வணங்குவதும் அன்றாட வழக்கம்.

மும்மூர்த்தி அம்ச பாபா!

ஒரு நாள், ஆட்டு மந்தை ஒன்று வருவது. அங்கு வந்த பாபா, மந்தையில் இரு ஆடுகளைப் பிடித்து அணைப்பது. மேய்ப்பவனிடம் பணம் கொடுத்து, இந்த இரு ஆடுகளை வெட்டக் கொடுக்காதே... என்று கூறி பழம், ரொட்டிகளை ஆடுகளுக்கு தந்து...இரண்டையும் அணைத்தபடி ''அடுத்த பிறவியிலாவது கொலை, பகை வெறி இல்லாமல் வாழுங்கள்'' என்று ஆடுகளைத் தெருவிலே விடுவது. (ஆடுகள் இரண்டும் போன ஜன்மாவில் அண்ணன் தம்பி, சொத்து தகறாறு! வெறி. கொலை. ஆடுகளின் போன ஜன்மாவை அறிந்தவர் பாபா. (இதுபோல பல்லிகளின் வரலாறு ஒன்றும் உண்டு).

இந்தூரில் ஓர் பிரபு வீடு. அந்த மாளிகையின் சமையல்காரர் பிராமணன் மேகா. ஓய்வு பெற்று சேத்ராடானம் புறப்படல். குருவருளுடன் பயணம் தொடரட்டும் ஷீர்டி பாபாவை தரிசனம் செய்'' என பிரபு கூற... ''அவர் ஓர் முஸ்லிம் பக்கிரியாச்சே.... நான் பிராமணன்... '' என்றதும், " **சிவன் விஷ்ணு பிரம்மா மூவரும் இணைந்த தத்தாத்ரேயர் ஷீரடிபாபா**, என்று பிரபு கூற... வேண்டாவெறுப்புடன் மேகா... ''சரி'' எனப் புறப்படுகிறான். சீரடியின் திக்கை வணங்கியபடி, ''ஜெய்ஸ்ரீபாபா! அறியாதவன் பொருத்தருள்க'' என்று மானசீகமாக சாய்பாபாவிடம் பிரார்த்திக்கிறார் பிரபு.

சாவடியிலே பாபாவின் தர்பார். கூடியிருந்த பணக்காரபக்தர், ஏழையர், பாமரர் அனைவருக்கும்

பாபா...பணம், பழம் பிரசாதங்களைத் தருவது. மேகா வருவது, அனைவரும் பாபாவை வணங்குவது கண்டு, கரங்களை உயர்த்த நினைத்த அவனால் முடியவில்லை. அதிர்ச்சி ''இரு இரு.. மேகா! நீ பிராமணன், நான் இஸ்லாமிய பக்கிரி..ஏன் கும்பிட நினைக்கிறாய்..'' என பாபா கூற..பாபாவின் ஞான திருஷ்டியைக் கண்டு மேகா கதறியபடி அவரது காலடியில் விழுந்து வருந்துவது. மேகாவை ஆதுரத்துடன் தழுவியபடி அருகில் இருந்த கண்டோபா சிவன் கோயிலின் தர்மகர்த்தாவிடம், ''இன்றைக்கே பூசாரி தேவை என்றீரே! தருவதாக வாக்குத் தந்தேனே'' இதோ இந்தூர் பிராமணர் மேகா!" என்றதும் அனைவரும் வியப்பு. மேகாவின் ஆனந்தக் கண்ணீர். திடீரென்று பாபா மேல் நோக்கிப் பார்த்தபடி... ''**அழாதே இமாம்பாய்! இதோ வருகிறேன்**'' என புறப்படல். வேப்பமரத்தை அணைத்ததும் பாபா மறைந்து விடுவது.

காட்டாறு. திடீர் வெள்ளம் இமாம்பாய் நடுவில் சிக்கிக் கொண்டு... ''**பாபா...! காப்பாற்றுங்கள்**'' எனக் கதறுதல். எதிர்க் கரையில் இரு நாய்களுடன் ஓர் புலையன் வெள்ளத்தின் மேல் நடந்து வருவது. இமாம்பாயை அந்தப் புலையன் பத்திரமாகக் கரைச் சேர்ப்பது. புலயனை இமாம் பார்க்கிறார். பாபா ஆவது. ''தங்கள் கட்டளையை மீறி வந்ததால் இந்த ஆபத்திலே..நான்..'' என்று இமாம் கதற. அது மட்டுமல்ல. உனது கல்லூரியிலே உள்ள கிறிஸ்தவப் பேராசிரியரை, நீ அவமதித்ததற்கான தர்மத்தின் தண்டனையும், இது "என்றதும் இமாம்பாய் திருந்தி வருந்தி வணங்கி விடைபெறுதல்.

கண்டோபா சிவன்கோயில், அபிஷேகம் நடப்பதற்கான மணி முழக்கம். எதிரில் உள்ள பாறைமேல் பாபா வந்து அமர்வது. திடீரென பாபாவின் தலைமேல் சந்தனக் குழம்பு வழிந்தோடுவது. சீடர் நானா ''என்ன பாபா'' என்றதும், ''ஆலயத்துள்ளே, அர்ச்சகர் மேகா சிவலிங்கத்துக்கு சந்தனாபிஷேகம் செய்கிறான். அடி மனதிலே நான் இருக்கிறேன், ஆத்மபூஜை இப்படி வந்து என்மேல் அபிஷேகமாகிறது''. என்றவர், திடீர் பெருமூச் சுடன்..''**நாளை மறுநாள் மேகா வுக்கு அந்திமச் சடங்கு விருந்துக்கு பொருள் தேவை கவனி**'' எனக்கூறி, "ஹரிஹர அல்லாவே எல்லாம் உன் செயல்" என்றபடி எழுந்து போவது. நானாவின்...அதிர்ச்சி.!''

குருவருள் செங்கல் உடைந்தது!

அதிகாலை மெல்லிய இருளிலே, அக்கினி குண்டத்தை வெறித்தபடி பாபா, ஹுக்கா பிடித்து ஊதி.!! ''எல்லாமே புகையாகப் போவதுதான்'' எனும்போது கண்டோபா கோயில் தர்மகர்த்ததா ஓடிவந்து..!! ''பாபா! மேகா...'' என்றதும் ''**அவனுக்காக நேற்றே நான் அழுதுவிட்டேன் அங்கே போகலாம்**'' எனப் புறப் படுகிறார். அவரது மேல் துணிபட்டு, குரு தந்த அந்தரச் செங்கல் கீழே விழுந்து உடைவது. பெருக்கும் பையனான மாதவ் பாஸ்லே..வெளியே வந்து பாபாவிடம் விபரம் கூற..''**செங்கல் உடைந்ததா, என் உடம்புக்கும் ஓய்வு வரப்போகிறதா**'' என்றபடி புறப்படல். கூடியிருந்த, சீடர்கள் துடிப்பது. ''**சுப்ரபாதம்**'' பாடி பாபாவை எழுப்ப வந்த பக்தர்கள், நானாவின் மூலமாக விபரம் அறிந்து, அகண்ட நாம பஜன் செய்து ''சத்யசாயிமாதாவே'' எனக் கதறி அழுவது.

மேகாவின் உடலுக்கு இறுதிச் சடங்கு நடப்பது, அங்கு வந்த பாபா, மலர் தூவி அஞ்சலி செலுத்துவது. **''இன்று நீ, நாளை நான்..நாம் இங்கு நிலைப்பதில்லை, ஆனால் நாம் செய்யும் நல்லவை நிலைக்கின்றன! யா அல்லா..! ஹரி ஹர சங்கர மகாதேவ...''** என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே எழுந்து ஊருக்குள் வேகமாக ஓடுகிறார் சத்தியச் சித்தர் சாயிபாபா.

இடையிலே ஒருநாள் திடீரென்று குதிரை வண்டியில் தூலியா நீதிமன்ற கமிஷனர் மற்றும் போலீசார் வந்து...சாவடி வாசலில் இறங்கி உள்ளே செல்வது.

முக்கிய பக்தர்கள், வெளியூர் பிரமுகர்கள், சீடர்கள் அனைவரும் சூழ்ந்திருக்க, நடு நாயகமாக பாபா வீற்றிருப்பது. வந்த கமிஷனர்..."திருடன் ஒருவன் வைத்திருந்த வைர நகைகளை, பாபா! நீங்கள் கொடுத்ததாகக் கூறுகிறான். அது விஷயமாக சம்ரதாய விசாரணைக்கு..." என்றதும் ''ம்..! ஆகட்டும்'' என்று பதில்கூறத் தயார் ஆகிறார் சீரடிபாபா!



''உமது பெயர் என்ன?''

''என்னைச் சாயிபாபா என அழைப்பார்கள்''

''உமது தந்தையின் பெயர்?''

''அதுவும் சாயிபாபாதான்!''

''உமது குருவின் பெயர்?''

''வெங்கூஸா..!''

''உமது கோட்பாடு, அல்லது மதம்?''

''கபீர்!''

''ஜாதி..?''

''பர்வர்திகார்'' அதாவது கடவுள்!

''வயது?'' என்றதும் "லட்சக்கணக்கான ஆண்டுகள்'' என பாபா, கர்ஜித்த உறுதியான பதிலிலே கதி கல! ;கிய கமிஷனர் வணங்கியபடி புறப்படல். நேரம் நெருங்குவதை உணர்ந்த பாபா, பல உபதேசங்களை விரிவாக பக்தர்களுக்கு வழங்குவது. அவற்றுள் சில...

''குருவைப் பூரணமாக நம்பு: குருவே அனைத்து தெய்வங்களும் ஆவார்!''

''இலவசமாக மற்றவர்களது உழைப்பையோ, உடமையையோ பெறாதீர். இதுவே வாழ்வின் விதியாக இருக்க வேண்டும்.''

''அரசனாக இருந்து கொண்டு, ஆண்டிபோல வாழ்பவனே உண்மையான மனிதன்.''

''என்னை நினையாமல் எவர் ஒருபோதும் உண்ண மாட்டாரோ, அவருக்கு நான் அடிமை!''

''பிரம்மமே எனது தந்தை, மாயை எனது தாய். இருவரும் நின்றுகூடவே, நான் இந்த உடலைப் பெற்றேன். நான் கடவுள்: ஷீரடியிலும் எல்லா இடங்களிலும் நான் இருக்கிறேன்.''

இப்படியாகப் பற்பல நீதி, நெறி தர்மங்களைப் போதித்து..இந்த ஆண்டு விஜயதசமிக்கு இன்னும் ஏழு நாட்கள் உள்ளது: கல்வி, செல்வம், வீரம் எல்லாம் பெற

நல்லவர்களாக எல்லோரும் வாழுங்கள்'' எனக் கூறி முடிக்கும் வேளையிலே பல முரடர்கள் கம்பிக் கூண்டிலே வேதனையால் உறுமும் ஒரு புலியைத் தூக்கி வந்து...

பாபாமுன் இறக்கி வைத்து'' பக்கீர்சாமி! இந்தப் புலி வலிப்பு நோய் வந்து துடிக்குது. நீ விபூதி போட்டு குணப்படுத்து..'' எனக் கூற...''காட்டிலே வாழும் இந்த ஜீவன் ஏனப்பா..உனது கூண்டிலே கிடந்து கதறுகிறது.'' என்ற பாபாவிடம்...''இதை வைச்சு வித்தை காட்டி...தீப்பந்த வளையத்திலே குதிக்க வைத்து, ரூபா சம்பாதிக்கணும். உடனே குணப்படுத்து சாமி! காணிக்கையா பத்து ரூபா உனக்குத் தாரோம்'' என்பது. ''குணப்படுத்துகிறேன்'' என்றபடி தூனியை (விபூதி) எடுத்து ஊதிவிட்டு...புலியை உற்றுப் பார்க்கிறார் பாபா. சில விநாடி. வாலால், காலால் மூன்றுமுறை பூமியில் அடித்ததும் புலி, கூண்டுக்குள் விழுந்து விடுவது. ''யா அல்லா..பிஸ்மில்லா..ஹரி ஹர ஜெய்சக்தி'' என பிரார்த்தனை செய்து புலியின் ஆன்மாவுக்கு விடுதலை கொடுக்கிறார் பாபா.

1918 அக்டோபார் 15-ம் தேதி விஜயதசமி. காளிகோயிலிலே நவராத்திரி பூஜை கொண்டாட்டம். மக்களின் பரவச ஆட்டம் பாட்டு.

மசூதியில் பக்தர் மற்றும் சீடர்கள் நடுவிலே..பாபா துவண்ட நிலையில் அமர்ந்தபடி...பணம், பழம், பிரசாதம், விபூதிகளை அனைவருக்கும் தந்து முடித்து...எதிரில் உள்ள திருமதி லட்சுமிபாய், பகோஜி, பாயாஜி, பாலாஷிம்மி, நானா சாகேப், நிமோன்கர்.. போன்ற அனைவரையும் மாறி மாறிச் சிறு குழந்தைபோல

''திருதிரு'' எனப்பார்த்து விழித்து முடித்து, தெய்விகக் குறுநகையோடு கையை உயர்த்தியபடியே... பாயாஜியின் தோள் மேல் சாய்ந்தபடியே, உயிரைப் பிரித்துக் கொண்டார்! பாபாவின் உடல் மண்ணிலே சாய்ந்தது!

அழுகையும் ஆவேச பஜனையும், சர்வமத சமரச பிரார்த்தனா வேதமந்த்ர ஒலிகளும், ஷீர்டி நகரெங்கும் முழங்கியவண்ணம் இருந்தது.

, ஏற்கனவே பாபா திட்டமிட்டுக் கூறியபடி, பூட்டிவாடா மண்ணிலே சாயிபாபாவின் சமாதி ஏற்படுகிறது. சமாதியின் மேல், ஆரம்ப காலத்திலே சாயி பாபாவின் திருவுருவப்படம் வைத்து பக்தர்களால் ஆராதிக்கப் பட்டது. .

1956-பளிங்கால் ஆன பாபாவின் முழுஉருவ மூலவர் சிலை, ஸ்தாபிதம். தற்போதைய ஷிர்டி சாயி சமஸ்தானம், அற்புதமான பளிங்கால் ஆன மிகப் பெரிய ஆலயத்தை அமைத்துள்ளது! பார்க்கப் பார்க்கப் பரவசம். தருகிற அப்படி ஒரு பவித்ரமான பேராலயம்.

1978-செப்டம்பரில் ''**சுப்ரபாதம்**'' எனும் தமிழ்த்திரைப்பட துணை டைரக்டராக. இமய முதல் குமரி வரை மும்முறை அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) வலம் வந்தேன். சித்தோட்டகர் மீரா கோயில்-கோட்டை-செல்லும்போது, வழியில் ஷீரடி சென்று ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் ஜீவ சமாதியின் மேல் அமைந்துள்ள உயிர்த் துடிப்புடன் கூடிய பளிங்கால் ஆன பாபாவின் திருவுருவ தரிசனம் கண்டேன்.. இனமொழி ஜாதி மதபேதமற்று எல்லோரும் வந்து வழிபடுவதைக் கண்டு

பரமானந்தம் கொண்டேன். ஷீரடிபாபாவை அவரது ஜீவசமாதியிலேயே போய் தரிசித்த பலனாக ஜெய்ஸ்ரீ பிக்சர்ஸின் T.V. தொடரிலே அவராகவே நடிக்கும் பேறு பெற்றேன் (1998) அனைத்திற்கும் மேலாக...இந்தச் ''சத்தியச் சித்தர்கள்'' நூலிலே, சர்வமதச் சித்தராக இந்தப் புனிதர் வரலாறு அமைந்தது, எனது பூர்வ ஜென்ம புண்ணியமாகும்.


T.Vயில் பாபாவாக வேம்பத்தூர் கிருஷ்ணன்

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ முதலான பற்பல மதா சாரங்களின் ஏக வடிவாக வாழ்ந்தார் சிரடி சாய்பாபா.

இந்து குருவும், இஸ்லாமியச் சீடரும் சுந்தரத் தெலுகு தேசத்தை சுபீட்சம் செய்த வரலாற்று நாயகனான விஸ்வகர்ம "ஸ்ரீ· வீர பிரம்ம"த்தை அடுத்துப் பார்ப்போமா!

நம்பிக்கை வை!


''தெய்வத்தின் மீது நம்பிக்கை வை. உன்மீது நம்பிக்கை வை. மனிதர்கள் மீது நம்பிக்கை வை. உலகின் மீது நம்பிக்கை வை. எல்லாவற்றிற்கும் மேலாக 'நம்பிக்கை' என்பதில் நம்பிக்கை வை! நம்பிக்கை என்பது ஒரு அதிவிரைவான ஆக்க சக்தி.''

-புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாயி

விஸ்வகர்ம வீரப்பிரம்



சுந்தரத் தெலுங்கைத்தாய்
மொழியாய்க் கொண்டு
ஜோதிராம லிங்கசுவாமி
வழியில் நின்று
பந்தபாசம் எல்லாமே
உலகம் என்று
பாடுபட்ட ஞானமுனி
வீரப் பிரம்மம்



''மான் வயிற்றுப் பிள்ளையான ருஷ்யசிருங்கர், முயலுக்குப் பிறந்த கௌதமரிஷி, நரியின் புத்திரராகிய ஜம்புகரிஷி, தவளையின் மகன் மாண்டவீயர், கழுதையின் கற்பத்திலிருந்த காங்கேயர், குடுவையில் தோன்றிய அகத்தியர், மீன்காரி பெற்ற வியாசரிஷி, தாசிமகன் வசிஷ்டர், நாய்களால் ஜனித்த சனகாதி முனிவர்கள், க்ஷத்திரிய குலத்துதித்த விஸ்வாமித்திரர்... முதலான இவர்களெல்லாம் வேதாகம வித்தகர்களாக, விண்ணுலகையே நடுங்க வைத்த பிரம்மரிஷிகளாக ஆகியுள்ள போது, விஸ்வகர்ம குலத்தவனாகிய நான் ஏன் வேதம் ஓதக் கூடாது? பிராமணியம் என்பது ஜாதியல்ல! நீதி நெறியுள்ள யாவரும் பிராமணரே! ''விவேகமுள்ள எவனுமே வேதம் படிக்கலாம்'' என்று ஆதிநாயகனாகிய ஸ்ரீ பரமேஸ்வரன், மகாபாரத சாந்தி பருவத்திலே கூறியுள்ளதை அறிவீர்களா?

சிவனை பூசிப்பவர்கள் சைவர், விஷ்ணுவைத் தொழுபவர் வைணவர், அதுபோல் பிரம்மஞானத்தை அறிந்தவன் பிராமணன்! வெறும் பிரம்ம **குலத்தவராக** மட்டும் இருந்தால் போதாது! பிரம்ம **குணத்தவராகவும்** இருக்க வேண்டும்'' என்று. ஆணவம் கொண்ட சில அக்ர ஹாரத்தவரை அன்புடன் சாடி நாணமுறச் செய்து... முடிவில் அவர்களையும் பண்புடன் ஆட்கொண்ட வித்தச் சித்தர் **ஸ்ரீ வீரபிம்மம்.**

கி.பி. 1593-ல் பொற்கொல்லரான **பரிபூரண ஆசாரி - பிரக்னதாம்பா** தம்பதியர் மகனாக ஆவதரித்தவர். பிறந்ததுமே வேதன் விதித்தபடி ஈன்று வளர்த்த பெற்றோரை இழந்தவர்.

பாபாக்னி மடத்து வீர ஆச்சார்ய தம்பதியால் வளர்ந்து ''**வீர பொட்லையா**'' எனும் பெயரோடு ஆதியிலே வாழ்ந்தவர்.

பால்யப்பருவத்திலேயே நால்வேத ஆறு சாத்திர, பதினெண் புராண சாரங்களை யெல்லாம் கிரஹித்து ''**போத்தலூரி வீரப்பிரம்மம்**'' ஆகி, ஞானானந்தராக ஊரெங்கும் வலம்வந்தார். கால வெள்ளத்திலே, எடுத்து வளர்த்தவர்களையும் இழந்து, துறவியாகி ஊரூராய்த் திரிந்தபோது, ''பனகான பள்ளி'' எனும் ஊரிலே **அச்சம்மா** எனும் மாதரசியால் ஆதரிக்கப்பட்டு, மாடுகளை மேய்த்துக்கொண்டே, ஞானத்திருஷ்டியால் ''**காலக்ஞானம்**'' எனும் காவியத்தை எழுதி முடித்தார்.

வீரபிரம்மத்தின் ''காலக்ஞானம்'' கூறுகின்ற, நாலுயுக தர்மங்களோடு, மாநுட நடைமுறை செயல்திறன், ஆக்கல் அழித்தல், நடக்கப்போகும் - நடந்து கொண்டிருக்கும் - அகில உலக அராஜக நிர்மூலம்,

எதிர்காலப் பிரளயம்...முதலான அனைத்து விபரங்களையும், பதினெட்டுப் புராணத்திலே ஒன்றான **''பவிஷ்யபுராணமும், சித்த்ர்களின் தீர்க்கதரிசனமும்** கூறுகின்ற கலியுக நலிவுகளையும் கவிதை வடிவிலே தந்துள்ளேன் படித்துப் பாருங்கள் - வே.கி.

பவிஷ்ய புராண ''காலக்ஞான'' பரிதாபங்கள்!



அன்பும் பண்பும் ஆலாய்ப் பறக்கும்
ஆலயம் எல்லாம் பாழாய்க் கிடக்கும்
எங்கும் யந்திர வாகனம் பெருகும்
இரும்புப் பொருள்கள் நீரில் மிதக்கும்!

“கடவுளா? யாரவன்?” கோரஸ் முழங்கும்!
காசும் பணமும் கடவுளாய் விளங்கும்
புடவையும் வேட்டியும் படிகளைத் தாண்டும்!
போட்டி பொறாமைகள் பலிகளை வேண்டும்!

சத்ரிய வம்சமே பூண்டற்றுப் போகும்!
சாதனை என்பது, சதியென மாறும்!
கத்தரிச் செடிகளில் இளைப்பாற நேரும்!
கணிதமா ஜோதிடம் காசுக்குப் பேசும்!

முடிமன்னர் ஆட்சி திடுமென ஓடும்!
மோசமும் வேஷமும் மணிமுடி சூடும்!
படித்தவர் பண்டிதர் பட்டினி கிடப்பர்!
பஞ்சமா பாதகர் பால்பழம் குடிப்பர்!

வள்ளலார் கருணைகள் இல்லாமல் ஆகும்
வான்மழை தீயாய்ப் பூமியில் பாயும்!
பிள்ளைகள் பெற்றோரை தெருவிலே வீசும்!
பேய்களும் நாய்களும் சாத்திரம் பேசும்!



கலியிலே திருமணம் மணல்வீடு ஆகும்!
காவலாம் வேலியே பயிர்களை மேயும்!
பலசாலி உளறலே சட்டங்கள் ஆகும்
பாரத மனுதர்மத் திட்டங்கள் தீயும்!

குருசிஷ்ய நெறிமுறை அரிதாகிப் போகும்!
குலமங்கை பொருளுக்குத் தடுமாறல் ஆகும்!
அருள்விலைப் பட்டியல் ஆங்காங்கு தொங்கும்!
ஆலயக் கொள்ளையின் திருவிழா எங்கும்!

வியாபார நேர்மைகள் காணாமல் போகும்
வீடெல்லாம் சோரங்கள் ஓடோடி வாழும்!
பூபாரம், ஆயுதப் போட்டியால் தீரும்!
புல்லர்தம் சொல்லெலாம் கல்வெட்டு ஆகும்!

உள்ளமுடல் ரெண்டுமே பிஞ்சிலே தீயும்!
ஊரெலாம் பக்தியின் வேடங்கள் மேயும்!
கள்ளக் கணக்கோடு கொலைகளவு மீறும்!
கடமையும் கண்யமும் பேப்பரில் வாழும்!

வேதாகமம் யாவும் வியாபாரம் ஆகும்!
வீண்ஜாதி மோதலால் விபரீதம் சோகம்!
நோய்களின் எண்ணிக்கை நாள்தோறும் கூடும்!
நுண்கலை இயலிசை நாடகம்

நிதமொரு கட்சிகள் பேரணி கூட்டும்!
நேர்மையை தியாகியை பசிப்பிணி வாட்டும்!
விதம்பல நூதன கள்ளக் கடத்தல்!
வேலைக்குச் சரிபாதி லஞ்சம் கொடுத்தல்!

பொய்நிஜம் நிஜம்பொய் என்றாகும் நாட்டில்!
போதைம ருந்துதான் பகலுணவு வீட்டில்!
அய்யரின் ஜோதிடம் பொய்யாகிப் போகும்!
அடிக்கடி மாநில ஆட்சிகள் மாறும்!

தானியம் குறையும்த ரித்திரம் நிறையும்
தருமமும் பொருமையும் தற்கொலை புரியும்!
ஆணுக்கு ஓரேழு பெண்ணெனக் கூடும்!
அடிக்கடி உறவுகள் அறுபட்டு ஓடும்!

இத்தனை கொடுமைகளோடும் எதிர்நீச்சல் போட்டுக் கலியைவெல்லும் வழிகளும் உள்ளன!

மும்மூர்த்தி அம்சமான ஸ்ரீ வீரப்பிரம்மம் அருளியுள்ள மந்த்ரங்களையும், தேவார, திவ்யப்பிரபந்த யந்த்ரங் களையும், திருமூலர் முதலான சித்தர் பெருமக்களின் ஞானக்கோவை சொல்லும் தந்த்ரங் களையும் கற்றுணர்ந்து, மந்ர, யந்ர, தந்ரங்களின் வழிநடந்தால் கலி காலத்திலே விதியையும் வென்று விடலாம், வாழ்விலே வெற்றி மேல் வெற்றி பெறலாம்.

இப்படியாக **''காலக் ஞான''** த்தின் கருத்துக்களைக் கேட்டறிந்த அச்சம்மாவின் பரவசநிலை! ''காலக்ஞானத்''தைப் படைத்த வீரப்பிரம்மத்தைக் கையெடுத்துக் கும்பிட்டபடி, பார்வையற்ற தனது ஒரே மகனின் குறைதீரப் பிரார்த்திக்கின்றாள்.

சோறு கொடுத்த அச்சம்மாவின் வாரிசுக்குப் பார்வை கொடுத்ததுதான் வீரப்பிரம்மத்தின் முதல் சித்தாடல். தன் மகன் பார்வை பெற்றதுமே, கண்கொடுத்த ஞானமுனிவர் ஸ்ரீ வீரபிரம்மத்தின் பெருமையைப்பாடும் பெண் துறவியானர் அச்சம்மா.

அந்த நாளிலே ஆந்திர மாநிலப் பல பகுதிகளை சில நவாபுகள் ஆண்டனர்! அதிலே ஒருவர் வீரபிரம்மத்தை ''வம்பு''க்கிழுத்து, அதனால் வேதனைப் பட்டு, இறுதியிலே அவரது சீடராகவே மாறிய வரலாறும் உண்டு.

நவாபுகளிடம் வீரபிரம்மம் நடத்திய சித்துக்களிலே... குதிரையின் வயிற்றிலே இருந்த குட்டியை தாய்க்கும் தெரியாமல் வெளியே எடுத்து, அதை மீண்டும் குதிரையின் கர்பத்திலே சேர்த்ததாகும்!

தன் இனத்துத் தட்டார் வீட்டிலே தாகத்துக்குத் தண்ணீர் கேட்டார், ஸ்ரீ வீரபிரம்மம், ''நீர்தான் பெரிய யோகியாயிற்றே வெறும் தண்ணீரையா பருகுவது, இதோ இதைக் குடிக்கிறீரா?'' என்று ''மூசே''யில் கொதித்துக் குழம்பாகிக் கொண்டிருந்த தங்கக் கரைசலைக் காட்டி குறடால் எடுத்துநீட்ட, பழுக்கக்காய்ந்த அந்தக் குடுவையை இரு கரத்தால் வாங்கி ''கட கட'' வெனக் கொதிக்கும் தங்கக் குழம்பை பானகம் போலக் குடித்து முடித்தார் வீரபிரம்மம். காழ்ப்புணர்ச்சியால் வெகுண்ட ஆச்சாரிகள், அவரது காலடியிலே வீழ்ந்து பணிந்தார்கள்.

திருத்தல யாத்திரையாக...தமிழ்நாடு, கர்நாடகம், தெலிங்கானா முதலான தட்சிணபூமியெங்கும் வலம் வந்த போத்தலூரி வீரப்பிரம்மம், ... ஆங்காங்கே...மதாச்சார மகத்துவமறியாத ஆத்திரக்காரருக்கும், நாத்திக அராஜக நலமற்ற மூடர்கட்கும், சாத்திரத்தின் தாத்பர்யம் தெரியாமல், வெளிவேடமுடன் தன்னைத்தானே ''மஹா வேதாந்தி'' எனத் தம்பட்டம் அடித்துக் கொண்ட சில அந்தணர்க்கும், **''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''** என்பதை நன்றே உணர்த்திய நாயகமாகத் திகழ்ந்தார். போகுமிடங்க ளெல்லாம் கற்பனைக்கும் எட்டாத அற்புதங்களை ... ஏராளமாகச் செய்து...தான் ஒரு பிரம்ம

விஷ்ணு சிவாம்சன் என்பதை ஞானியர்க்கும், பாமர நல்வர்க்கும் உணர்த்தியருளினார்.


''**பெதகொமர்லா**'' எனும் கிராமத்திலே, ''சிவ கோட்டையா'' என்பவரின் தவச் செல்வி **கோவிந்தம்மாள்,** ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள், ஸ்ரீரங்க ராஜனை வரித்தது போல, ஸ்ரீ வெங்கடேச அம்சனே தனது வீட்டுக்காரனாக வர வேண்டுமென்று வெகுநாட்களாகக் காத்துக் கிடந்தாள். ஆத்மார்த்த ஈர்ப்பினால் அந்த ஊருக்கு வந்த வீர பிரம்மத்தை விதிப்படி மணந்து, ரிஷி பத்தினியாக மாநுடசேவையிலே, கணவரின் நிழலாகி நாடெங்கும் அவரோடு வலம் வருகிறாள்.

''மடுமாலா'' எனும் கிராமத்து ''**பீர்ஸாகேப்**'' என்கிற இஸ்வாமியருக்கு, வெகுகாலமாகப் பிள்ளை இல்லாதிருந்து, அல்லாவின் அருளாலும், வீரபிரம்மத்தின் ஆசியாலும் ஓர் பிள்ளை பிறந்தான். சித்தமெல்லாம் ''பிள்ளை பிள்ளை'' என ஏங்கிக்கிடந்ததால், மகனுக்கு ''**சித்தையா**'' எனப் பெயரிட்டனர் பெற்றோர்.

ஊர்தோறும் நலம்தந்த வீரப்பிரம்மம், ''மடுமாலா'' வுக்கு மீண்டும், வருகிறார், உண்மையை அன்பை, உதவிடும் பண்பை வந்தவர்க்கெல்லாம் தருகிறார்.

வீர பிரம்மத்தின் பக்தி வழியிலே லயித்த பீர்சாகேப் மகன் சித்தையா, அவரது பரம பக்தனாகிறான்!

இந்து முஸ்லிம், பார்ஸி, சமணன், பௌத்தன் கிறிஸ்தவன், சைவன், வைஷ்ணவன், சாக்தன் என்பதெல்லாம் நடமாடும் உடலுக்கா, அதை



ஆட்டிவைக்கும் ஆன்மாவாகிய உயிருக்கா? ஈ எறும்புகள் முதலான எண்ணாயிரம் கோடி ஜீவ ராசிகளுக்குள் இருக்கும் ஜீவாத்மா ஒன்றுதானே! உருவங்கள் மாறுபடலாம், மனித உள்ளங்கள் வேறுபடலாமா? பலதுருவங்களாக இருக்கும் மத உணர்வுகள், ஒருமைப் பாட்டிலே இணையவேண்டும், ''**யாதும் ஓரே யாவரும் கேளிர்**'' என்று ஆன்மிகத் தென்றலாக நர்டெங்கும் தவழ்ந்து நல்லுபதேசம்புரிந்து இனமதக் கலவரங்களை, மொழிவெறிகளை இல்லாமல் செய்தார் (அந்தநாளில்) ஸ்ரீ வீர பிரம்மம்.

சபரிமலை ஐயப்பனுக்கு வாபர் எப்படியோ, அப்படியாக வீரபிரம்மத்திற்கு சித்தையா என்றானது. அவர் சமாதியாகு முன்பாக... தனது தாபோ பலச் சின்னங்களான தண்டு, கமண்டல, கைப்பிரம்பு களையெல்லாம்... சித்தையாவிடம்தான் ஒப்படைத்தார். சித்தையாவும் அவற்றின் மகத்துவத்தால் **சித்தேஸ்வரச்சித்தர்** ஆகி இந்துமுஸ்லிம் மக்களின் ஏக குருவடிவாக இன்றும் அங்கே (சிலைவடிவிலே) விளங்குகிறார்.

வீரப்பிரம்ம விவேகச்சித்தரின் ''காலக் ஞான'' எச்சரிக் கையால்... மக்கள் நல்வழிப்பட்டனர், மகான்கள் அகந்தையைவிட்டனர்! அரசர்கள் ஆன் மிகம் கற்றனர்! ஆண்டிகள் ஞானத்தைப் பெற்றனர்.

16-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த வீரபிரம்மம், 21-ஆம் நூற்றாண்டின் ''நவீன மானுடத்தை''...''எக்ஸ்ரே'' எடுத்து அதைப் ''பிரிண்ட்'' போட்டே நமக்கு வழங்கியுள்ளார்.

திக்விஜய காலத்தில், புஷ்பகிரி அக்ரஹாரத்திலே வீரப்பிரம்மம் காட்டிய பிரம்ம குலப் பெருமையையும், பிரபஞ்ச அருமையையும், மராமரா ராமனும், மகாபாரத கிருஷ்ணனும் போதித்ததருமமும், குருக்ஷேத்ர மர்மமும் ஸ்ரீருத்ர விரிவுரை, ஸ்ரீவித்யா தெளிவுரைகளையெல்லாம், பாலபாடமாக வீரபிரம்மத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆந்திரப்பெரு மக்கள் மஹா அதிர்ஷ்டசாலிகளே.

ஆன்மிக ஞான மழையாகத் தேசமெங்கும் அருளறப் பயிர் வளர்த்த வீரப்பிரம்மம், **''கந்திமல்லயப் பள்ளி''** எனும் ஊரிலே ஓர் ஆசிரமம் அமைத்தார்.

மாதவச்சபரியன்னை வணங்கிய மணிகண்டனுக்கு காவல் தேவி **மஞ்சமாதா**, மந்த்ராலய மஹான் ஸ்ரீ ராகவேந்திரரின் கிராம தேவதை **மாஞ்சாலியம்மன்;** சாதனைச்சித்தர் வீரபிரம்மத்தின் சரித்திரத்திலே, அவரது காவல் தெய்வத்தின் பேர் **போலேரம்மா!**

150 ஆண்டு காலம் உத்ஸவ மூர்த்தியாகச் சுழன்ற அவர், ஒரே இடத்து மூலவரானார். மூத்த மகன் கோவிந்த சாமியை ஆதீனத்தலைவராக்கினார். அடுத்த நூற்றாண்டிலே (18) பெண்வழிதான் பட்டத்திற்கு வரும் என்றார். (அதன்படியே நடந்தது).

கி.பி. 1768 - காலகட்டத்திலே, சீடன் சித்தையாவின் பெருமையை உணர்தது வதற்காக அவனை 100 மைல் தாண்டிப் போய் ''பூஜாமலர்'' கொண்டு வா என்றனுப்பி விட்டு ஜீவ சமாதியானார். மலரோடு வந்த சித்தையா, குருதரிசனம் பெறாமல் நானினி உயிர் வாழேன் என்று தீயில் குதிக்க முனையும் வேளையில் சமாதி வெடித்தது! வீரபிரம்மம் உயிர்த்தெழுந்து வெளியே வந்து சீடருக்கு ஆசிதந்து...அவனது சிரத்தா பக்திக்காக சிரஞ்சீவி மந்திரம் சிலவற்றைத் தந்தருளி மறைந்தார்.

திருக்கோஷ்டியூரிலே அரிதாக வந்த மந்திரத்தை ஸ்ரீ ராமானுஜர், ஊராருக்கு வழங்கியது போல, குருநாதர் தனக்களித்த சிரஞ்சீவி மந்திரத்தை தேசமக்கள் யாவர்க்குமாக்கினார் சித்தையா. அந்த வீரப்பிரம்ம மந்திரங்களை சிரத்தாபக்தியோடு போற்றிப் பாடித் துதிப்போர்க்கு, கலியுகநலிவுகள் இருக்காது; கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும்.

கந்திமல்லயப்பள்ளி வீர பிரம்ம மடாலயத்திலே ஆராதனை வழிபாடுகள் ஆண்டு முழுவதும் சீராக நடைபெறுகின்றன. நம்பிக்கையோடு அங்கு செல்வோர்க்கு நலமும் வளமும் நாளும் நிறைகிறது.

ஆந்திரப்பிரதேச வீரபிரம்ம மடத்திலிருந்து, தமிழக தஞ்சை மாவட்டத்திலே உள்ள தருமபுர, திருவாவடுதுறை ஆதீன மடாலயங்களுக்குப் போகலாம் வாருங்கள்.

மழைதந்த கந்தப்பர்!

தமிழகத்திலே மட்டும் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆதீன மடாலயங்கள்! அதிலே பாதிக்குமேல் அன்றாடம் காய்ச்சிகள்! மீதியெல்லாம் லட்சோப லட்ச கோடானு கோடி செல்வச் செழிப்புள்ளவை! அத்தனையும் பொதும்க்கள் போட்ட அன்புக் காணிக்கைகள்!

1400 - வருடங்களுக்குமுன் திருஞான சம்பந்தரை முதல் குருமகாசன்னிதானமாகக் கொண்டு, மதுரை ஆதீனம் தோன்றியுள்ளது. நடப்பு ஆண்டுவரை 292 குருமார்களைக் கண்டு விளங்கி வருகிறது.



தருமபுர ஆதீனத்துப் 14-வது தலைவர் ஸ்ரீ **கந்தப்பதேசிகர்** (1840-1842) ஆட்சி காலகட்டத்திலே திருநெல்வேலியிலே முகாமிட்டிருந்தார். மழையில்லா வரட்சியால் பகுதி மக்கள் 'காய்ந்து' கிடந்தனர். அந்தக் கொடுமையிலும் வெள்ளையர் நிர்வாகம் வரிவசூல் கெடுபிடி செய்தது! பாமர மக்கள் கலெக்டரிடம் முறையீடு! 'உங்கள் பாதிரி' - ஆதீனத் தலைவர் - இங்கே முகாமிட்டிருக்காரே, அவரிடம் போய் கதறுங்கள்! வானம் பொழியட்டுமே, பூமி விளையட்டுமே, உங்களது வறுமை ஒழியட்டுமே!, எனக் கிண்டல் செய்தார்.

தேசிகரி ம் ஓடிய ஊர் மக்கள், லண்டன் துறையின் ண்டல் மொழிகளைக் கூறிக் கதறினர்! கையமர்த்திய தேசிகர், மன மெய்வழி தியானத்தால் ஸ்ரீ பரமேஸ்வரனைத்தொழுது முடித்ததும் பாடினார் ஒரு பாட்டு...!

'சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில் -
ஐவரைவென்று
ஆனந்த வெள்ளத் தழுத்துவதே முத்தியெனில்
வானங்கள்! பெய்க மழை!'

பாடல் முடிந்ததும், மேகம் திரண்டது, வானம் பொழிந்தது! பூமி குளிர்ந்தது கருகிய உயிரெல்லாம் மீண்டும் பெருகி வளர்ந்தன! தெய்வத் தமிழின் திறன் கண்ட லண்டன் துரை, ஓடோடி வந்தார்! தான் கூறிய தவறுக்காக நூறு வராகனை அபராதமாகக் காணிக்கை செலுத்தியதும் தேசிகரை வணங்கிவிட்டுச் சென்றார்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் வெள்ளையர் நிர்வாகத்திலே இருந்த நம்மவரின் பேராலயங்கள் பல, இவரது ஆட்சிக் காலத்திலே (1841) ஆதீன ஆளுகைக்கு மீண்டும் வந்தன.

கொள்ளிடம் உடைப்பெடுத்து, திருப்பனந்தாள் முழுதும் வெள்ளம் ஓடியது. மக்களின் துயரைப் பொருளாலும் அருளாலும், நேரடிப் பூரண உழைப்பாலும் தீர்த்துப் புகழ் கண்டவர் ஸ்ரீ கந்தப்ப தேசிகர். இன்னொரு ஆதீனகர்த்தர் ஒருவர், ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகரை விஞ்சியிருக்கிறார். திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீ வேலப்பர்! அவர் நடத்திய ஓர் சித்தாடல், வரலாற்றுப் புகழ் கொண்டதாகும்.

மானம் காத்த வேலப்பர்

வெள்ளையரை எதிர்த்து முதலிலே வீர கர்ஜனை புரிந்தது... வீரபாண்டிய கட்டபொம்மனா, மாவீர மறவ பூலித்தேவனா? நடிகர்திலகம் நடித்துப் படமாக வந்து விட்டதால் கட்டபொம்மன் முதல்வனாகிவிட்டான்! சட்டப்படி பூலித் தேவனே (1755) வெள்ளையரை எதிர்த்த ஆதி முதல் புரட்சியாளன்! (கட்டபொம்மனின் கர்ஜனை 1799)

சித்திரபுத்ரதேவன் - சிவஞானநாச்சி மகனாக 1715-ல் பிறந்தவன் பூலித்தேவன், சங்கத்தமிழையும் சன்மார்க்க நெறியையும் **இலஞ்சி ஸ்ரீ சுப்ரமண்ய பிள்ளை**யிடம் கற்றான். ''நெற்கட்டான்செவ்வல்'' கோட்டையின் அதிபதியாக விளங்கிய அவனிடம்... வரிகேட்டனர் வெள்ளையர்; முடியாதென கர்ஜித்தான் **பூலித்தேவன்.** முற்றுமையிட்டனர் கோட்டையை! கட்டிக்காத்தான் மாவீரன்!

புலவர் **ஸ்ரீ நா-ராசையா** அவர்களின் சிலவரிகள் வேலப்பச் சித்தரின் வரலாற்றுடன் தொடர்புடையவை... அதை முதலிலே படியுங்கள்...

''1767-ல் பிரிடீஷ் தளபதி **''டொனால்டுவிடன்''** பெரும்படையால், நெற்கட்டான் செவ்வல் கோட்டை இடிந்தது! மாவீரன் பூலித்தேவனைக் கைது செய்து பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லும் வழியிலே, சங்கரநயினார் திருக்கோயிலின் வாசலிலே, இறைவனை வழிபட பூலித்தேவனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கோயிலுக்குள் சென்ற பூலித்தேவனை, அதன்பின் பிரிட்டீஷார் பிடிக்கவே முடியவில்லை. **இந்த உலகுக்கும் அவன் தென்படாமல் மாயமாக மறைந்தான்!''**

மேற்காணும் வரிகளை நினைவிலே வைத்துக் கொண்டு இறையருட் செல்வரான ஸ்ரீவேலப்பதேசிகரின் வரலாற்றுக்கு வருவோம்.

ஆதித்திருமூலரை அடித்தளமாக வைத்து ''திருக்கையிலாய பரம்பரை'' என உருவாகிய... திருவாவடுதுறை ஆதீனத்திலே...திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர் முதலான ஞானியர் வரிசையில் 10-வது குருமகா சன்னிதானமாக 18-ம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர், **ஸ்ரீ வேலப்பதேசிகர்**.

நெல்லையில் உள்ள திருவாவடுதுறைக் கிளை மடத்தோடு, வேலப்பதேசிகர் நெருங்கிய ஈடுபாடு உடையவர். சங்கர நயினார்கோயில் மூலவர்களை ஆத்மாத்தமாகப் பூஜிப்பவர். அடிக்கடி சங்கரன் கோயிலிலே, முகாமிட்டுத் தங்குவார். அப்பகுதியை ஆண்ட பாளையக்காரன் ஸ்ரீ பூலித்தேவன், வேலப்ப தேசிகரை ஆதர்ஸ குருவாகக் கொண்டவன்.

பூமிக்குள் தவமிருந்து சமாதி கொள்ளத் தீர்மானித்த ஸ்ரீ வேலப்ப தேசிகர், தனது சீடன் பூலித் தேவனிடம் கூறி, மேலவீதியிலே, ஒரு குருமுகூர்த்தம் (சமாதி) அமைக்கச் செய்து அதனுள் அமர்ந்து, தியானத்திலே மூழ்கிவிட்டார்.

''நடுவீதியைச் சுடுகாடு ஆக்குவதா?'' என்று ஊரார் எதிர்ப்பு! பூலித்தேவன் திகைப்பு! திடீரென்று சமாதி வெடித்து, வெளியே வந்த ஸ்ரீ வேலப்ப தேசிகர்... ''சுடுகாட்டிலே பிணம் இருக்கும், நான் நிஜமய்யா நிஜம்'' என்று கூறிவிட்டு மீண்டும் சமாதியுள் சமாதியானார்.

நெற்கட்டுச் சேவல் கோட்டை தகர்ந்து, பூலித் தேவன் கைதியாகி மேலவீதி வழியே இழுத்து வரப்பட்ட போது குருமுகூர்த்தம் அருகே நின்று கை கூப்பி... **''குருவே! வீணர்கள் கையால் மடியாமல், மானத்தோடு நான் வானம் செல்லுதற்கான வரத்தைத் தந்தருளுங்கள்...''** என வேண்டினான்.

சூட்க்ஷும உடலோடு உடனே வெளிவந்த வேலப்ப தேசிகர், பூலித்தேவனுக்கு மட்டுமே தென்பட்டார். ''தேவனே! வா என்னோடு'' என முன்னால் செல்கிறார்...பின்னால் நடந்தான் மாவீரன்.

ஆலயவாசல், 'சாமிகும்பிட' ''என அனுமதி பெற்றான் வெள்ளையரிடம். உள்ளே போன குருவின் பின்னே ஓடிச் சென்றான். சுவாமி சன்னதி அருகே...நாற் சதுர மந்த்ர வேலியிட்டு'' அதனுள் அவனை நிறுத்தி வைத்ததும், ''**பூலித்தேவா! இனி நீயார் கண்ணிலும் படமாட்டாய், உடலோடு சொர்க்கம் சேர்வாய்**'' என்று தியானத்திலே மூழ்கினார். அருவநிலை வேலப்பர்! குருமொழிக்கு ஏது மறுமொழி.

வெள்ளைப்பட்டாளம், ஆலயம் முழுவதும் ''சல்லடை'' போட்டுச் சலித்தது! பீரங்கியும் துப்பாக்கியும் பிரணவத்தை வெல்ல முடியுமா என்ன!

('ஏதோ ஒரு பிணத்தைக் களத்துமேட்டிலே வைத்துத் தீயிட்டு ''இதுதான் பூலித்தேவன்'' என்று அவனது ''பைலை'' குளோஸ் செய்தது நிர்வாகம்' என்பது ஆதாரமுள்ள ஓர் செவிவழிச் செய்தியாகும்).

பிரம்மரிஷி விஸ்வாமித்திரரால் கூட திரிசங்கு விற்கு நிரந்தர சொர்க்கத்தைத் தர முடியவில்லை! திருவாவடுதுறை ஆதீன வேலப்பதேசிகர், பூலித் தேவனை கூண்டோடு சொர்க்கம் சேர்த்த அடையாளச் சின்னமாக...சங்கர நாராயணர் ஆலயத்திலே சாமி சன்னதி முன்னால் ''**பூலித்தேவர் உடலோடு மறைந்த இடம்**'' என்ற கல்வெட்டு - போர்டுடன் - கூடிய சப்பரம் ஒன்று இருப்பதை இன்றும் காணலாம்.

ஸ்ரீ கோமதியம்மன் பீடத்திலே ஸ்ரீ சக்கரம் அமைத்து, பில்லி சூனியம், பேய் பிசாசுகளையெல்லாம் இல்லாமல் விரட்டியவர்; வேப்பிலைகளையும், வில்வ இலைகளை விபூதியுடன் வழங்கியும், பாமர மக்களின் பற்பல நோய் நொடிகளைச் சொல்லாமல் ஓட வைத்த சத்தியச் சித்தர் **ஸ்ரீ வேலப்பதேசிகர்**.

இவரைப்போல் சக்தி வாய்ந்த இன்னும் எத்தனையோ கர்த்தர்கள் ஆதீன மடாலயங்களிலே இருந்துள்ளார்கள்! ஆனால் அவர்களது தெளிவான வரலாறுகள்...எந்த ஆதீனத்தால்...எந்த மடத்தால்... எப்போது நூலாக வெளியிடப்பட்டன? எங்கே கிடைக்கும்? இப்போது விற்பனையில் உள்ளதா? எல்லாமே ''சஸ்பென்ஸ்'' ஆக இருக்கும் இந்தப் பொல்லாத கால நிலை மாறட்டும். புனிதமிகு ஆதீனச் சித்தர்களின் வரலாறுகள் பொதுமக்கள் கையிலே மலிவு விலையிலே இனிமேலாவது வந்து சேரட்டும்!

''எந்தரோ மஹாநு பாவலு..! அந்தரிகி வந்தனமுலு...'' என்று பாடிய **ஸ்ரீ தியாகராஜ சுவாமி**களை வணங்கியபடி - அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள பலநூறு சித்தர்களிலே அடியேனது சிற்றறிவிற்கு எட்டியபடி புண்ணியச் சித்தர் சிலருக்குப் போற்றி மணிமாலை பாடியிருக்கிறேன்.

சித்தர்களின் வரலாறுகளும், அவர்களது பாடல்களும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலே இடம்பெற வேண்டும்; நிதிவளமிகுந்த ஆதீன, மடாலய அறக்கட்டளைகள் இத்திருப்பணிக்கு அவசியம் உதவ வேண்டும். சித்தர் இலக்கியங்களால், நமது இளைய தலைமுறை நலம்பெற வேண்டும். இந்தச் **''சத்தியச் சித்தர்கள்''** நூல், ஒரு கை காட்டியாக அமைய வேண்டும் என்பதே 66-வயதான வேம்பத்தூர் கிருஷ்ணனாகிய அடியேனது பிரார்த்தனை. வைய மெலாம் புகழ, எல்லோரும் **வாழிநலம் சூழ.**

தெய்விகமில்லா தேசிய நீசம்!

...தேசியமும், தெய்விகமும் வெவ்வேறல்ல. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கக்கூடாது. பிரித்தால் இரண்டுமே அதனதன் அசல் தன்மையை இழந்து கெடும். தெய்விகமற்ற தேசத்தில் நீசத்தன்மைதான் பெருகும். நீசத்தன்மை பெருகிய தேசத்தில் நல்லவர்கள் மைனாரிட்டி ஆகிவிடுவார்கள்! நல்லவைகளையும், நல்லவர்களையும் உண்டாக்கி தேசியத்திற்கு விநியோகிக்கும் சக்திதான் தெய்விகம். இந்த தெய்விக சக்தியை வேண்டாத தேசியம் தேசியமாகாது உணர்க!

-பசும்பொன் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர்

புண்ணியச் சித்தர்கள் போற்றி மணி மாலை



ஆதிச் சித்தர் நந்தீசர், அகத்தியர் போற்றி
அண்டசரா சரம்கண்ட திருமூலர் போற்றி
மாதவவிஸ் வாமித்ர மகரிஷி போற்றி
மச்சமுனி கஞ்சமலைச் சித்தர்கள் போற்றி

அவ்வையார் காரைக்கால் அம்மையே போற்றி
அகப்பேயர் போகநாதர் நக்கீரர் போற்றி
திவ்விய புலிப்பாணி ஜமதக்னி போற்றி
திருவள் ளுவர், ஜனகர் தேரையர் போற்றி

அறுபத்து மூன்றுசைவ நாயன் மாரும்
ஆண்டவனை அன்பினிலே கண்ட சான்றோர்
உருவமொழி வேறு வேறு ஆனால் என்ன,
“ஓம்” அறு பத்துமுவர் பதங்கள் போற்றி

வைணவத்து ஆழ்வார்கள் எல்லாம் சித்தர்!
வாசுதேவ நாரணனின் அன்புப்பித்தர்!
மெய்யன்பால் இறையருளைப் பெற்ற பக்தர்!
மேலான ஈராறு ஆழ்வார்கள் போற்றி.

குதம்பைச் சித்தர், சத்யா நந்தர்கள் போற்றி
கொங்கணர் தன்வந்திரி கோரக்கர் போற்றி
கைலாயக் கம்பளிச் சட்டைமுனி போற்றி
கணபதி தாஸர், சிவ வாக்கியர் போற்றி



இடைக்காடர் கும்பமுனி அழுகண்ணர் போற்றி
இராமதே வர், கபிலர் யூகிமுனி போற்றி
கடுவெளிச் சித்தர்,உயர் வான்மிகர் போற்றி
காகபு சுண்டருடன் கமலமுனி போற்றி

புலத்தியர் காலாங்கி நாதர்கள் போற்றி
புன்னாக் கீசர், பூனைக் கண்ணரே! போற்றி
பதஞ்சலி சுந்தரா நந்தர்கள்...போற்றி
பாரதம் எழுதிய வியாசரே.....போற்றி

பட்டினத் தார்ஆன வெண்காடர் போற்றி
பாம்பாட்டிச் சித்தர், பீர் முகம்மது போற்றி
சட்டைமுனி ரோமரிஷி கருவூரர் போற்றி
சாம்ராஜ்ய பத்ரகிரிச் சன்யாசி போற்றி

முக்திதரும் குருநம சிவாயரே! போற்றி
முழுஞான சேஷாத்திரி சுவாமியே போற்றி
சித்தர்புகழ் அருணகிரி நாதரே போற்றி
சிவனருள் குகைநாம சிவாயனே போற்றி

"எல்லாம் சிவம்" என்ற சிவசாமி போற்றி
ஈசனருள் திருவருணைச் சடைச்சியே போற்றி
பொல்லாக் கலியை வென்ற ரமணரே போற்றி
புரியமுடி யாத,ராம் சுரத்குமார் போற்றி

திருவாச கஞான மணிவாசகர் போற்றி
திருமலைப் பா-அன்ன மாச்சர்ய போற்றி
நிறைவாழ்வு கண்ட சுக முனிவரே போற்றி
நீள்வைய வான்துருவச் சிறுவரே போற்றி



ஆதிசங் கரபகவத் அமுதனே போற்றி
ஐயப்ப சுவாமியருள் வாபரே போற்றி
சாதனையின் புனிதையாம் சபரியே போற்றி
சாஸ்தாவின் கருப்பண்ண சாமியே போற்றி

“அம்மையப் பா”என்று அழுதவா! போற்றி
அப்பராய் ஆனநாவுக் கரசரே போற்றி
“எம்மைஆட் கொள்”என்ற சுந்தரா போற்றி
இணையிலா நம்பியாண் டார்நம்பி போற்றி

ஈசனருட் கங்கை தந்த பகீரதன் போற்றி
எண்ணத்தால் ஞானநிலை ஏகலைவன் போற்றி
ஆதிநா தர்சத்ய நாதனே போற்றி
அக்னிகோத் ரமுனிச் சித்தனே போற்றி

சைவசித் தாந்தத்துச் சேக்கிழார் போற்றி
சாத்திரம் படைத்தமெய் கண்டசிவம் போற்றி
உய்யவந்த தேவர், அருள் நந்தி போற்றி
உலகெல்லாம் புகழ்குமர குருபரர் போற்றி

போதிமர நிழல்ஞான புத்தனே போற்றி
பூரணச் சித்தர்நபி நாயகம் போற்றி
நீதியன்பு வடிவான ஏசுவே போற்றி
நெறிமிக்க குருநானக் மகாவீர் போற்றி

காங்கேயன் என்றஸ்ரீ பீஷ்மரே போற்றி
கச்சியப் பசிவா சாரியர் போற்றி
ஸ்ரீ ரங்க கோபுர ஜீயரே! போற்றி
செஞ்சோற்றுக் கடன் காத்த விதுரரே போற்றி



சக்குபாய் மீராபாய் சாவித்ரி போற்றி
ஜயதேவ சுவாமி, நாம தேவரே! போற்றி
துக்காராம் புரந்தர தாஸரே போற்றி
துளசிதா சர், கபீர் தாசரே போற்றி

பத்ரா ஜலராம தாசரே! போற்றி
பானுதா சர், கோரா கும்பரே! போற்றி
சத்ரபதி குருராம தாஸரே! போற்றி
ஜெயதேவர் ஸ்ரீ வீரப் பிரம்மமே! போற்றி

மறைஞான சம்பந்த மாதவா! போற்றி
மஹான்நபி நாகூரின் ஆண்டவா! போற்றி
அருள்நந்தி சிவமான ஆச்சார்ய! போற்றி
ஆதிசேஷ அம்ச பதஞ்சலி! போற்றி

கம்பரா மாயணக் கர்த்தரே! போற்றி
காளிதா சன்எனும் கவிராஜ! போற்றி
நம்பியாண் டார்நம்பிச் சித்தரே! போற்றி
நடராஜ உமாபதிச் சிவயோகி! போற்றி

அன்னதா னமணி மேகலை போற்றி
ஆயுரா ரோக்கியதன் வந்திரி போற்றி
கன்ப்யூஷ சமயகுரு காங்கப்யூத்! போற்றி
காருண்ய யூதமத மூஸாவே! போற்றி

பரம்புமலைப் பாரிஉயிர்க் கபிலரே! போற்றி
பாடல்புகழ் அபிராமிப் பட்டரே! போற்றி
திருவருட் பாரம லிங்கமே! போற்றி
தெய்வச் சதாசிவ பிரம்மேந்த்ர! போற்றி



ஹரிஹர ஸ்ரீதர அய்யாவாள்! போற்றி
அலைமேல் நடந்தபத்ம பாதரே! போற்றி
நிறையருள் நீலகண்டதீட்சிதர்! போற்றி
நேர்வழிக் காஞ்சிமா முனிவரே! போற்றி

சேந்தனார் திருமாளி கைத்தேவர்! போற்றி
சேஷாச்சர் வீரேந்த்ர ஹெக்கடே! போற்றி
சிவானந்த ரிஷிகேச மகரிஷே! போற்றி
சீரடி சாய்பாபா, சங்குமுனி! போற்றி

ஸ்ரீபெரும்பூ தூர்ரா மானுஜர்! போற்றி
ஜெகந்நாத தாஸஸ்ரீ மத்வரே! போற்றி
மாமுனி காசிபர், வசிட்டரே! போற்றி
மந்த்ரா லயராக வேந்திரர்! போற்றி

சிவதாஸ சேரமான் பெருமாள்! போற்றி
ஸ்ரீஹரியின் நாரணபட் டாத்திரி! போற்றி
தவராஜ கவிசுவாதித் திருநாளே! போற்றி
திருவோண மாபலித் தியாகியே! போற்றி

சிரஞ்சீவி வீராஞ்ச நேயரே! போற்றி
ஸ்ரீராமச் சேவைச் சடாயுவே! போற்றி
நரேந்திரரா மகிருஷ்ண சாரதா! போற்றி
நந்தன்திருப் பாணாழ்வ நம்பிகாள்! போற்றி

பூண்டிமகான், போதேந்திர சுவாமிகாள்! போற்றி
புதுச்சேரி அரவிந்தர் பாரதி! போற்றி
மாமதுரை குழந்தையா னந்தரே! போற்றி
மங்கலச் சின்மயா நந்தமே! போற்றி



புதுச்சேரிக் கழுவெளிச் சித்தரே! போற்றி
பூரணச் சிவஞான பாலையர்! போற்றி
மௌலானா மஹான்படே விட்டோபா போற்றி
மண்ணுருட் டிச்,சட்டிச் சாமிகள்! போற்றி

தெள்ளுதமிழ்ப் பா-முத்துத் தாண்டவர்! போற்றி
ஸ்ரீராமச் சங்கீதத் தியாகையர்! போற்றி
கல்லணையின் சிரஞ்சீவிக் கரிகாலன்! போற்றி
கண்ணகியைச் சொன்னகவி இளங்கோ! போற்றி

சக்திசிவ கிரி கொணர்ந்த இடும்பனே! போற்றி
சாகாத சேவல்மயில் சூரபத்ம! பேர்ற்றி
முத்தர்வண் ணச்சரப தண்டபாணி! போற்றி
மூவேந்தர் புகழ்வென்ற பாரியே! போற்றி

சொல்லால் சிவம்கண்ட கல்லாடர்! போற்றி
சுகச்சித்தர்சிற்றம் பலநாடி! போற்றி
வில்லிபா ரதத்தமிழ்ச் செல்வரே! பேர்ற்றி
வேதாந்த கவியோகி வேமனா! போற்றி

பரஞ்சோதி எனும்சிறுத் தொண்டரே! போற்றி
பாம்பன் சாமிகுமர குருதாசர்! போற்றி
பெருஞ்சித்தர் வள்ளிமலைச் சாமியே! போற்றி
பெருமாளைக் கண்டஏக நாதரே! போற்றி

நஞ்சுண்ட ஸ்ரீ சந்த்ர குப்தனே! போற்றி
நாடாளா மாமன்னர் சாணக்கிய! போற்றி
பஞ்சபாண் டவர்நீதிச் சகதேவர்! போற்றி
பரமனே தஞ்சமென்ற மார்க்கண்டர்! போற்றி

வீரசைவ கர்நாடக பஸவேஸ்வர்! போற்றி
வேல்முருக பொய்யாமொ ழிப்புலவர் போற்றி
வான்மழை தரும்ருஷ்ய சிருங்கரே! போற்றி
வைகுந்தம் போய்வந்த துர்வாசர் போற்றி

ஆலயம் பல செய்த அகல்யாபாய்! போற்றி
அரவிந்தர் நிழலான அன்னையே! போற்றி
பாரதியா ரின்குள்ளச் சாமியே! போற்றி
பைந்தமிழ் வேதாந்த தேசிகா! போற்றி

மாமுனிவர் தயானந்த சரஸ்வதி போற்றி
மகரிஷிசுத் தானந்த பாரதி போற்றி
ஈசான்ய ஸ்ரீஞான தேசிகர் போற்றி
எமனையே ஜெயித்த ஸ்ரீ நசிகேதன் போற்றி

மும்முடி வரம்பால யோகியே போற்றி
மூலிகையின் ஐந்தருவிச் சங்கரா போற்றி
அன்பான திருவலம் சுவாமியே போற்றி
ஹரிநாமச் சித்தராம் துக்காராம் போற்றி

அருள்மொழித் திருமுருக வாரியார்! போற்றி
அப்பைய தீட்சிதர் அனந்தராம்! போற்றி
திருப்பராய்த் துறைசித் பவானந்த! போற்றி
தெய்வத் தமிழ்த்தூய திருவிக! போற்றி

புதுக்கோட்டை அதிஷ்டான ஜட்ஜே! போற்றி
போரூர் சிதம்பர சுவாமியே! போற்றி
உடையா பட்டிச் சாந்தா நந்தரே! போற்றி
ஒற்றுமை ராம்ரஹீம் காந்தியே! போற்றி





வடபழனி விதைஅண்ணா சாமியே போற்றி
வாரிசாய் வந்த ரத்ன சாமியே போற்றி
நடையோகி பாக்யலிங்கத் தம்பிரான் போற்றி
நடனகோ பாலஸ்ரீ நாயகி! போற்றி

சத்யம் சிவம்சுந்த ரம்சாயி போற்றி
சான்னித்ய மயிலைமா முனிவரே! போற்றி
சித்தர்கோ யில்வரத ராஜரே! போற்றி
தேவிகரு மாரியின் தாசரே! போற்றி

குருமுருகன் கோயிலின் சித்தரே! போற்றி
கோலமயில் பாலமுரு கன்அடிமை போற்றி
திருச்சியின் ஞான "கவி தாமணி!" போற்றி
தேன்தமிழ் "கலைமகள்" ஜகந்நாத! போற்றி

சிரவண தீபஒளி சீதாராம்! போற்றி
ஸ்ரீகிருஷ்ண மந்திர்பர மேஸ்வரா! போற்றி
அருள்நிறை கலவைசச் சிதானந்த! போற்றி
ஆதிபரா சக்திபங்கார் அடிகளே! போற்றி

'திரு மால்" வளர்க்கின்ற "சேரா" போற்றி
ஸ்ரீ முத் துக்குமார சுவாமியே போற்றி!
பரமாசார்ய ஸ்ரீமடத்துச் ஜெயவிஜயர் போற்றி!
பாம்பன்கோ யில்ராமச் சந்திரசாமி போற்றி

ஒன்றேகுலம் என்று உணர்த்துகின்றோர்
உண்டென்று தெய்வத்தை வணங்குகின்றோர்
என்றென்றும் அன்புவழி செல்லுகின்றோர்
யார்யாரோ, அவர்பாதம் போற்றி போற்றி.

★★★

''சத்தியச் சித்தர்''களை எழுதப் படித்த பலவற்றுள், பயன்தந்த .....சில நூல்கள்



1. பதினென் சித்தர்கள் பெரிய ஞானக் கோவை
2. திரு.மீ.ப. சோமசுந்தரம் எழுதிய
   சித்தர் இலக்கியம் (மூன்றுபாகம் -
   அண்ணாமலை பல்கலைக் கழக வெளியீடு)
3. திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் எழுதிய
   அபிதான சிந்தாமணி
4. திரு. மகரிஷி. தயானந்த சரஸ்வதியின் -
   சத்தியார்த்தப்பிரகாசம்
5. திருவள்ளுவ நாயனாரின் - ஞானவெட்டியான்
6. மாணிக்கவாசகரின் - ஞானத்தாழிசை
   (விளக்கவுரை - குற்றாலம் ஐந்தருவிச்சித்தர்
   சுவாமி ஸ்ரீசங்கரானந்தா)
7. பாலூர்கண்ணப்ப முதலியார் - தமிழ் நூல் வரலாறு
8. சுடர்மணிப் பதிப்பக வெளியீடு - ஆலய மணிகள்
9. ந.ரா. முருகவேள் - வடபழனித் திருக்கோயில்
10. பிரேமா பிரசுரம் வெளியீடு - சித்தர் பாடல்கள்
11. தமிழில் ''குகப்பிரியை'' வழங்கிய -
    ஸ்ரீ மஹாபக்த விஜயம்
12. புதுச்சேரி ஓங்கார ஆஸ்ரம வெளியீடு - ஞானபூமி
13. பூம்புகார் பிரசுரத் தொகுப்பு - சித்தர் பாடல்கள்
14. அ. பாண்டுரங்கனார் - அருள்நிறை அண்ணாமலை
15. விவேகானந்தா கேந்திரம் புத்தக மாலைகள்
16. சாயிசுதா புக்சென்டர் - கண்கண்ட தெய்வம்
17. குருபாதுகாபப்ளிகேஷன் - E. பரத்வாஜா M.A
    ஸ்ரீ சாயிதிருவிளையாடல்
18. சுத்தானந்தபாரதியின் - ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்



19. ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் வெளியீடு-
ஜகத் குருவின் உபதேசங்கள்
20. ஸ்ரீ கிருஷ்ண மந்திர் ஸ்ரீ பரமேஸ்வரானந்தர் -
ஹிந்து தர்ம பரிசயம்
21. சுதேசமித்திரன் வெளியீடு (பி.ஸ்ரீ) ஸ்ரீ ராமானுஜர்
22. ஸ்ரீ ஸ்ரீநிவாஸநிகேதனம் - அருள்தரும் ஆலயம்
23. கவியரசு கண்ணதாசன் - பாடிய ஏககாவியம்
24. சர்வோதயப் பிரசுராலயம் - உலகச் சமயங்கள்
25. தமிழ்நாட்டு மக்கள் மரபும் பண்பாடும் -
(திருவாளர் "சோமலெ" தொகுத்தது)
26. திருமூலர் அருளாட்சி மன்றம் - திருமூலர்
27. திருமதி அகிலாண்டேஸ்வரி திருவாவுக்கரசு
வெளியிட்ட வேம்பத்தூர் கிருஷ்ணனின்
"சித்தர்மணிமாலை"
28. "காலக்ஞான" வீரப்பிரம்மம்
29. "ஓம்சக்தி" பகீரதனின் - திருவலத்துத் தீபம்
30. மதுரை - தமிழ் சங்கப் பொன்விழாமலர் (1956)
31. திருமண (சிங்கப்பூர்) மலர் "தமிழ் மகுடம்"
32. ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்
மகா கும்பாபிஷேக மலர் (1969)
ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் வெளியீடு

"சித்தமகா தத்துவத்தை நமக்கு ஊட்டும் மேற்படி சிறந்த நூல்களை வெளியிட்டுள்ள உத்தமர்க்கும், இரவு பகலாகப் பாடுபட்டு எழுதிப் படைத்திட்ட எழுத்தாளச் சித்தர்கட்கும்" உளமார்ந்த நன்றியுடன், பணிவன்பான எனது வணக்கமும் உரித்தாகுக.

வையமெலாம் புகழ எல்லோரும் வாழி நலம் சூழ

"ஆன்மிகரத்னா" எனும் வாரியார் விருது (1996) பெற்ற
"சுடர்மணிக்கவிஞர்"
வேம்பத்தூர் கிருஷ்ணன்

எமது வெளியீடுகளில் வந்த நூல்கள்

'ஞானபாரதி' வார்த்தை சித்தர் வலம்புரி ஜான் எழுதிய நூல்கள்

1.	ஒரு நதி குளிக்கப் போகிறது	....	40. 00
2.	காதல் கடிதங்கள்	....	20. 00
3.	விதைகள் விழுதுகள்	....	36. 00
4.	தாகங்கள்	....	25. 00
5.	உள்ளதை சொல்லுகிறேன்	....	20. 00
6.	எல்லா ராத்திரிகளும் விடிகின்றன	....	55. 00
7.	காற்றின் சுவாசம்	....	30. 00
8.	நான் விமர்சிக்கிறேன்	....	30. 00
9.	சிந்திக்க தெரிந்த சிலருக்காக	....	55. 00
10.	சொர்க்கத்தில் ஒரு நாள்	....	25. 00
11.	பற்றி எரிகிற பனி நதிகள்	....	30. 00
12.	சீனம் சிவப்பானது ஏன்?	....	25. 00
13.	இரண்டாவது அலைவரிசை	....	90. 00

சௌந்தர் எழுதிய சிறுவர் நூல்கள்

1.	நல்ல கைகள்	....	
2.	சிறுவர்களின் சிந்தனைக்கு சின்னசின்ன கதைகள்	....	30. 00
3.	வெள்ளையரை விரட்டிய வீரச் சிறுவன்	....	
4.	பெரிய மருது – சின்ன மருது	....	20.00
5.	விடுதலை வீரர்கள்	....	30. 00
6.	மாய மோதிரம்	....	31. 00
7.	செங்கரும்பு	....	30. 00
8.	இவர் யார்?	....	32. 00
9.	மூன்று சக்கர வண்டி	....	26. 00

பூவை அமுதன் எழுதிய நூல்கள்

1.	அயல்நாட்டு அழகிகளின் அந்தரங்க கதைகள்	....	25. 00
2.	எல்லாருமா கெட்டவர்கள்?	....	25. 00
3.	ஓடி வந்தவள்!	....	25. 00
4.	படிக்கப் போனவள் !	....	25. 00

பக்தி நூல்கள்

1.	விநாயகர் துதிப்பாடல்கள்	வேம்பத்தூர் கிருஷ்ணன்	7. 00
2.	முருகன் மணிமாலை	" "	7. 00
3.	ஸ்ரீ ஐயப்பன் பக்தி பாடல்கள்	" "	7. 00
4.	அம்மன் அருள் பாடல்கள்	" "	7. 00
5.	சத்திய சித்தர்கள்	" "	45. 00
6.	மாதர்குல சித்தர்கள்	" "	45. 00
7.	ஸ்ரீ சந்திரசேகரந்திய சதகம்	சக்தி சீனிவாசன்	7. 00
8.	சனிப் பெயர்ச்சி	எம்.எஸ். ராமலிங்கம்	
9.	1999ம் ஆண்டு குரு பெயர்ச்சி	" "	7. 00

அச்சிட்டோர் : அலங்கார் ஆப்செட் பிரஸ், சென்னை – 24. போன் : 472 97 46